
J1
Y15 m2, N2
N28.5.3-1
190384


சிந்தாமணி
Vol 5
வருட
சந்தா
உள் நாடு
5 ரூபா
வெளிநாடு
$4
CHINTAMANI
1928
சகோதரி V. பாலம்மாள்

# HINTHAMANI.

**A HIGH CLASS TAMIL MONTHLY.**

*(…oted mainly to the cause of Indian Women.)*

EDITOR . . SISTER V. BALAMMAL.

**Vol. V.]** **October–November 1928.** **[No. 3–4.**


10 JAN
MADRAS

श्री शारदायै नमः ।



# சிந்தாமணி

## சுபோத ராம சரிதம்.


COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
*Late Dr. A. B. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.*



(*All Rights reserved by the Authoress*)


सुबोधरामचरिते

॥ सुन्दरकाण्डः ॥

सप्रणाममिदं वाक्यमुक्तवन्तं कृताञ्जलिम् ।
मारुतिं वीक्ष्य सा सीता शशङ्के रावणं तदा ॥ २३ ॥

सा அந்த सीता சீதை सप्रणामं நமஸ்கார பூர்வமாக इदं இந்த वाक्यं வார்த்தையை उक्तवन्तं சொல்லுகிறவாயும் कृतांजलिं கைகூப்பி நிற்பவராயும் உள்ள मारुतिं ஆஞ்சனேயனை वीक्ष्य பார்த்து तदा அச்சமயம் रावणं (மாறுவேடந்தரித்த) ராவணன் என்று शशंके சந்தேகித்தாள் ॥ २३ ॥

तेन दत्तं ततो दृष्ट्वा रामनामाङ्गुलीयकम् ।
मुमूर्च्छ तत्क्षणं सीता पतिदर्शनलालसा ॥ २४ ॥

पतिदर्शनलालसा பர்த்தாவைக் காணவேண்டுமென்று தவித்துக் கொண்டிருக்கும் सीता சீதை ततः அச்சமயம் तेन ஆஞ்சனேயரால் दत्तं அளிக்கப்பட்ட रामनामांगुलीयकं ஸ்ரீ ராமபிரானின் பெயர் வரைந்துள்ள கணையாழியை दृष्ट्वा கண்டு तत्क्षणं உடனே मुमूर्च्छ மூர்ச்சையடைந்தாள் ॥ २४ ॥

समाश्वास्य तदा सीतां दुःखितामञ्जनासुतः ।
क्षिप्रं नेष्यति रामस्त्वां शोको मास्त्वित्युदैरयत् ॥ २५ ॥

तदा அப்பொழுது अञ्जनासुतः மாருதியானவர் दुःखितां துக்கப்படும் सीतां ஜானகியை समाश्वास्य சமாதானப்படுத்தி रामः ஸ்ரீராமர் त्वां தங்களை क्षिप्रं வெகுசீக்கிரத்தில் नेष्यति மீட்டுக்கொள்வார் शोकः விசனம் मास्तु வேண்டாம் इति என்று उदैरयत् உரைத்தார் ॥ २५ ॥

चूडामणिं तया दत्तं गृहीत्वा वानरर्षभः ।
प्रणम्य जानकीं प्रह्वः प्रतस्थे हृष्टमानसः ॥ २६ ॥

प्रह्वः வணக்கத்துடன் கூடிய वानरर्षभः கபி சிரேஷ்டராகிய ஹனுமான் तया சீதையால் दत्तं அளிக்கப்பட்ட चूडामणिं சூடாமணியை गृहीत्वा பெற்றுக்கொண்டு जानकीं ஜானகியை प्रणम्य நமஸ்கரித்து हृष्टमानसः சந்தோஷத்துடன் கூடியவராக प्रतस्थे புறப்பட்டார் ॥ २६ ॥

(*To be continued*)

# சிந்தாமணி


தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் — சகோதரி வி. பாலம்மாள்.

மலர் V.] விபவ—ஐப்பசி—கார்த்திகை. [இதழ் 3-4.


## பெண்கள் விவாகவயதும் வரதட்சிணையும்.

(பத்திராதிபர்.)

தற்சமயம் பெண்களின் விவாக வயதைப் பற்றி எங்கும் விசேஷமாகப் பேசப்படுகின்றதைப் பத்திரிகைகளிலும் பிரசங்கங்களிலும் காணலாம். பெண்களுக்கு விவாகம் அவசியமா, பெண்கள் ஆடவர்களுக்காகவே படைக்கப்பட்டனரா, பெண்கள் ஆடவனை யணக்காது தனியே ஜீவிக்க முடியாதா? என்ற விஷயங்களைப் பற்றி இவ்வியாசத்தில் நாம் ஆராயப் போவதில்லை. பாலிய விவாகத்தினால் விதவைகளின் தொகை பெருகி வருவதால் விவாக வயதை உயர்த்தவேண்டு மென்று சிலர் நிரூபிக்கின்றனர். விவாக வயதை உயர்த்துவதால் மட்டும் பெண்கள் விதவையாகாமல் தடுத்து விடலாமென்று [illegible] நமக்கில்லை. பெண்களின் விவாக வயதை உயர்த்த முடி[illegible] பாமலுள்ள சில காரணங்களை மட்டும் கவனிப்போம். ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்தால் தக்க வயதடைந்து வாலிபனான பின்பும் அவன் படிப்பிற்காகவோ பொருளீட்டுதல் நிமித்தமோ பிரிந்து செல்லச் சகியாத தாய் தந்தையர் தம் வயற்றிற பிறந்த பெண்மகவுக்கு மட்டும் சீக்கிரம் மண முடித்து அப்பெண்ணைப் பிறன் பொருளாகச் செய்வதில் ஆத்திரப் படுவதேன்?

பெண்மகளை அவளுக்கேற்ற கணவனுக்களித்தாலல்லது தங்கள் கடமை செவ்வனே நிறைவேற்றப்படமாட்டாது என்ற காரணத்தினால் பெண் பிறந்தது முதல் கலியாணப் பேச்சைப்பேசி தக்க வரன் கிடைக்கும் சமயம் விவாகத்தை முடித்து விடுகின்றனர். பெண் [illegible]ருவமடைவதற்கு முன் விவாகம் முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை சில சமூகத்தின

ரிடம் மதக்கட்டளையாக ஏற்பட்டு மிருக்கின்றது. பெரியோர்கள் கண்டு களிக்கவேண்டுமென்ற காரணத்தினுல் பலர் தம் மகனுக்கு விரைவில் விவாகம் முடிக்கின்றனர். ஆங்கிலக் கல்வியும் அயல் நாகரிகமும் நம்மிடையே பாவியகாலத்து, தக்க இடமும் படித்த மருமகனும் கிடைத்த சமயத்தில் அதைத் தவறவிடாது பெண்களுக்குச் சின்ன வயதில்தான் விவாகம் முடிப்பதென்ற தீர்மான மின்றிப் பெண்ணுக்கு விவாகம் நடத்துவது சகஜமாயிற்று. ஒரு பெண்ணை விவாகம் செய்விப்பதென்ருல் அப்பெண்ணின் நல்வாழ்க்கைக்கும் ஒரு குடும்ப ஸ்தாபனத்திற்கும் இல்லறத்திற்கும் விவாகம் முக்கியமென்ற தத்துவம்போக ஆண்மகனின் படிப்பிற்கும் அப்படிப்பின் செலவிற்குமாகவே விவாகமென்பது ஒரு வருமானமாக ஏற்பட்டு விட்டது.

ஒன்ருவது பாரம் படித்தால் இன்னவிலை, ஒன்பதாவது படித்துக் கொண்டிருந்தால் இன்ன கிரயம், பி. ஏ. படித்து விட்டால் இவ்வளவு வரையில் ரொக்கம், உயர்தரப் பரீட்சை தேறிவிட்டால் உயர்ந்த விலைக்கே ஏலம் என்றிவ்வாறு ஆண்பிள்ளைகளுக்குக் கிராக்கி ஏற்பட்டுப் பணம் வருவாயையே முக்கியமாகக் கொண்டு விவாகம் நிச்சயிக்கப்படுகின்றது. படிப்பு உயர உயர வரதட்சிணை உயர்த்தப்படுமாதலால் இந்த ஒரு காரணத்தை முன்னிட்டே பெண்களின் விவாகத்தில் பெற்ருேர் பெரிதும் அவசரப்படுகின்றனர் என்ற உண்மையை ஒளிக்கமுடியாது. வரதட்சிணை யென்பது பெண்ணைக் கட்டும் மருமகனுக்கு ஏற்பட்ட கிரயமாகும். இந்தக் கிரயத்தைப் பலர் பலவிதமாக வாங்குகின்றனர். மருமகன் கையில் ரொக்கமாக அளித்தல், வரிசைகளாகச் செய்தல், மேற் படிப்பிற்கு மாதாமாதமனுப்புதல் இவை போன்றதுடனல்லாது பெண்ணுக்[illegible] இவ்வளவு நகை யளிக்கவேண்டும், இவ்வளவு நிலம், வீடு போன்றவை கொடுக்கவேண்டுமென்றும் ஏதேனும் ஒருவிதத்தில் இவ்வரதட்சிணை வசூலிக்கப்பட்டு விடுகின்றது.

ஆங்கிலக்கல்வி நம்மிடையே வராததற்கு முன் பெண்ணுக்குப் பரிசுப் பணமளித்து ஆடவன் விவாகம் செய்துகொள்வதென்ற பழக்கமிருந்ததென்பதை மறுக்கமுடியாது. பரிசளித்து ஒரு பெண்ணைத் தேடவேண்டியிருப்பதால் தக்க வயதடைந்த பெண்ணையே விவாகம் முடிப்பதென்ற வழக்கமு மிருந்தது. பொருள் தேடக் கூடிய சக்தி வந்தபின்பே கலியாணம் செய்து கொள்ளவேண்டு மென்று அக்காலத்திய ஆடவர் நினைத்தனர். தன் சக்திக்கும் அறிவுக்கும் ஏற்றபடி பயின்று ஏதேனுமொரு தொழில் முறையில் பொருளீட்டுதலென்ற வழக்க மிருந்ததால் அவர்கள் படிப்பிற்கு அதிகச் செலவுமில்லை, அச்செலவைப் பெண் வீட்டாரிடமிருந்து வசூலித்தாக வேண்டுமென்ற கஷ்டமும் அவர்களுக் கிருந்ததில்லை. இக்காரணங்களால் முற்காலத்தில் பெரும்பாலும் ருதுமதி விவாகமே நடைபெற்று வா எது விருந்தது. இக்காலத்திலோ படிப்பு ஏற ஏற நல்லபாம்பின் விஷமேறுவதுபோல ஆடவனுடைய வரதட்சிணையும் ஏறிவிடுவதால் கூடிய சீக்கிரம் குறைந்த விலையில் மருமகன் தேடுவதில் பெண்ணைப் பெற்ருேர் துரிதப்படுகின்றனர்.

இக்காரணத்தால் பெண்களுக்குப் பாலிய விவாகம் ஏற்படுகின்றது என்பதுண்மை. இதைக்கண்டு தீவிர சீர்திருத்தக்காரர்கள் பெண்களின் விவாக வயதைச் சட்ட மூலமா[illegible] நிர்ணயம் செய்ய வேண்டு மென்று மன்ரு[illegible] கிருர்கள். இவ்வாறு சட்டமியற்றல் எங்கள் [illegible] தென்று சிலரும் [illegible] போன்ற விஷயங்க[illegible] அரசாங்கச் சட்ட-

915-2, N2X
N28.5-3-4
190384



திற்குட்படுத்துதல் தகுதியன்றெனச் சிலரும் ஓலமிடுகின்றனர். எப்படியிருப்பினும் தக்க வயது வந்த பின்பே பெண்மகளுக்கு விவாகம் முடிப்பதென்ற கட்டுப்பாடுள்ளவர்கள் இதைப் பெரிதும் ஆமோதிக்கின்ருர்கள். பாலிய விவாகம் சாஸ்திர முறைப்படிக்காளுலும் அல்லது சமூக சம்பிரதாயமாக இருந்தாலும் சிறிது நாளில் பாலிய விவாக மென்பது தானுகவே நின்று விடுமென்பதில் தடையில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுவதிலிருந்து பெண்களுக்கு இனி நல்ல காலமென்றே நிச்சயிக்கலாம். கூலி வேலை தேடிக் கங்காணி மூலமாக வெளிநாட்டில் பொருளீட்டலாமென்று ஏழை மக்கள் ஏராளமாகக் கப்பலேறிய காலம் போக, கையிலுள்ள பணத்தைப் படிப்பிற்குச் செலவழித்து விட்டு வேலை கிடைக்காது, ஜீவனுேபாயம் தேடி வெளிநாடுகளுக்கு ஈசல் புற்றைப் போல் தொடர்ந்து செல்லும் வாலிபர்களின் கூட்டம் கப்பலுக்குக் கப்பல் அதிகரித்துக் கொண்டிருப்பதால் படிப்பை மதிப்பிட்டு வரதட்சிணை ஏலம் போடுவதென்பது இனி முடியாத காரியமாகும். படித்தவனுக்கு உள்ளூரில் வேலை கிடைக்குமென்ற நம்பிக்கை இல்லாததால் பெண்ணைப் பெற்ருேர் இனி படித்த மருமகனைத் தேடிப் பெண்ணுக்குச் சீக்கிரம் விவாகத்தை முடித்து வரதட்சிணைச் செலவை குறைத்துக் கொள்ளவேண்டு மென்று அவசரப்படப் போவது மில்லை. பாலிய விவாகத்தையும் வரதட்சிணைக் கொடுமையையும் ஒழிக்க வேண்டு மென்று எண்ணும் உண்மைச் சீர்திருத்தக்காரர்களின் நன்னேக்கத்தை வேலையில்லாத் திண்டாட்ட மென்ற நற்காலம் கூடிய சீக்கிரம் நிறைவேற்றி வைக்குமென்பதில் அணுவளவும் ஐயம் கிடையாது. இந்தியத் தாயின் நற்காலத்திற்கு இதுவே முதற்படியாகும்.

சுபம்

# சந்திரவர்மா.

ஓர் நாடகம்.

(ஸ்ரீமான் R. நாராயணசாமிராவ், B.A.)

(127-ம் பக்கத் தொடர்ச்சி)

**அங்கம் 2. களம் 1.**

பவநகர். ஸதாநந்தருடைய கிரகம்.

காலம்—காலை

(ஸதாநந்தர் பிரவேசித்தல்.)

ஸதாநந்தர்:—பத்மாக்ஷி! பத்மாக்ஷி! இன்று பொழுது விடிந்த நேரம் நல்ல நேரம் தான். அந்த மகாலக்ஷ்மி கமலரேகை நம் கிரகத்திற்கு வந்து சேர்ந்தது முதற்கொண்டே நமது கஷ்டங்களெல்லாம் நீங்கி நமக்கு நல்ல காலம் பிறந்து விட்டது பார்த்தாயா? ஏதோ நம்முடைய விருத்தாப்பிய காலத்தில் நமக்கு மக்களில்லை யெனும் மனக்குறையை யொழிப்பதற்காகவே பகவான் நம்மால் அளவிட முடியாத இந்தச் செல்வமாகிய கமலரேகையை நம் வீட்டுக்கு அனுப்பியிருக்கிருர். கமலரேகை மகாலக்ஷ்மி யென்பதில் என்ன சந்தேகம்? அவள் நம் வீட்டை அடைந்த பிறகு நமக்கு யாது குறையிருக்கக் கூடும்? இதோ என் கையில் என்ன இருக்கிறது பார். நம் தரித்திரமெல்லாம் இன்றுடன் ஒழிந்துவிட்டது.

பத்மாக்ஷி:—ஆமாம், கமலரேகையை மகாலக்ஷ்மி, மகாலக்ஷ்மி யென்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டில் போதுமா? குழந்தை பாபம்,

காலை முதல் பட்டினியாயிருக்கிறாள்! தாங்கள் சமுத்திர ஸ்நாநம் செய்து விட்டு வரவே இத்தனை நாழியாய் விட்டதே! இனி எப்பொழுது புல்லரிசியைப் பொருக்கி வருவது? எப்பொழுது அதை வடித்துக் குழந்தைக்கு அமுதளிப்பது? நாம் பட்டினியாயிருந்து நமக்குப் பழக்கமாய் விட்டது. பாபம், குழந்தை கமலரேகை எப்படி வெகு நேரம் பட்டினியாயிருப்பாள்? பாபம், அவளிடமிருந்த நகைகளெல்லாவற்றையும் கொடுத்து விட்டாள்! நம் வீட்டுக்கு வந்த ஸ்ரீதேவிக்கு நாம் அன்ன மளிக்காவிடினும் அவளுடைய நகைகளெல்லாவற்றையும் விற்று விற்றுச் சாப்பிட்டு விட்டோம். குழந்தை பசிக்கிறதென்று கூட ஒரு வார்த்தை சொல்ல மாட்டேனென்கிறாள். ஏதாவது தக்ஷிணை கிடைத்தாலும் அதைக் கொண்டு அரிசி வாங்கி வாலாம். இவ்வளவு நாழிகையாகியும் வெறுங்கையாக ஆத்துக்கு வந்தால் என்ன செய்வது?

ஸதாநந்தர்:—நான் வெறுங்கையாகவா வந்திருக்கிறேன்? இல்லை யடி, இதோ பார்! இந்தப் பெட்டி என்ன அழகாயிருக்கிறது! இதை விற்றால் எவ்வளவு பணம் கிடைக்கும்! இதை வைத்துக் கொண்டு நாம் கவலையின்றி இனிக் காலட்சேபம் செய்யலாமல்லவா? எல்லாம் ஈசுவரனுடைய செயலாகவன்றோ இருக்கிறது!

பத்மாக்ஷி:—(பெட்டியைப் பார்த்து ஆச்சரியத்துடன்) இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதே! இவ்வளவு ஜோதியுள்ள சுவர்ணப் பெட்டியை அரண்மனையிற் கூடக் காண்பதரிதாயிற்றே! இது தங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

ஸதாநந்தர்:—அதுவும் ஆச்சரியந்தாண்டி! இன்று சமுத்திர ஸ்நாநம் செய்து கொண்டிருக்கையில் வெகு தூரத்தில் கருப்பான ஏதோ ஓர் பொருள் மிதப்பதாகத் தோன்றியது. அதையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். அந்த வஸ்து கரையை நோக்கி அலைகளால் மோதப்பட்டு மிதந்து கொண்டே வந்தது. சமீபத்தில் வந்தவுடன் அது ஒரு சிறிய படகாயிருக்கக்கண்டு அதற்குள் யார் இருக்கக் கூடுமென்று பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை. ஆனால் இத்தங்கப் பெட்டி மாத்திரம் அதில் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. படகு கைக் கெட்டிய தூரத்தில் வந்தவுடன், இன்னது செய்கிறேனென்பதையே யோசியாமல் இந்தச் சுவர்ணப் பெட்டியைக் கையிலெடுத்தேன். எடுத்ததும் படகு அதிவிரைவில் மறுபடியும் மிதந்து கொண்டே கடலில் கண்ணுக் கெட்டாத தூரம் சென்று விட்டது. பெட்டியை இன்னது செய்வதென்றறியாமல், பகவான் அதை நம்மிடம் தான் அனுப்பியிருக்க வேண்டுமென்று நம்பிக் கொணர்ந்தேன். இதை உடனே விற்றுப் பணம் கொண்டு வரட்டுமா ?

பத்மாக்ஷி:—பிராணநாத! பெட்டி கிடைத்ததில் எனக்குச் சந்தோஷந்தான். ஆனால் பரம ஏழைகளான நாம் இப்பெட்டியை விற்பதெனில், இதை நாம் திருடினோமென்றல்லவோ சந்தேகிப்பார்கள்! மேலும், இது யாருடைய பெட்டியோ என்னவோ? இதை நாம் விற்பதால் நமக்கு ஏதாவது தீங்கு வந்தால் என்ன செய்வது?

ஸதாநந்தர்:—அவ்விஷயத்தில் நீ கவலைப்படாதே. மகாலக்ஷ்மி கமலரேகை நம் கிரகத்திற்கு வந்தபிறகு நமக்குத் தீங்கு நேரிடக் கூடுமென்ற எண்ணத்தைக் கொள்ளாதே! ஆனால் இத்தங்கப் பெட்டியை நான் எல்லோரிடமும் காண்பிக்கப் போவதில்லை. இதைக் கண்டு அரசர் மிகுந்த ஆச்சரியப்படுவாராகையால், இதை நான் நேரில் அரண்மனைக்கு எடுத்துச் சென்று, அரசரிடம் காட்டி அரசர் கொடுக்கும் பொருளைக் கொண்டு வருகின்றேன். மேலும், அரசர் ஒருவர்தான் இதை வாங்கக் கூடும்!



பத்மாக்ஷி:—ஆகா! அப்படியே செய்யுங்கள். பாபம், கமலரேகை ஸ்நாநம் செய்யப் போயிருக்கிறாள். அவள் வருமுன் தாங்கள் திரும்பிவந்து விட்டால் சீக்கிரத்தில் அவளுக்கு உணவளிக்கலாம்.

ஸதாநந்தர்:—அப்படியே செய்கிறேன். நான் சென்று ஒரு நாழிகையில் திரும்பி வந்து விடுகிறேன். (ஸதாநந்தர் செல்லல்.)

காட்சி முடிகிறது.

**அங்கம் 2 களம் 2.**

**பவநகர். அரண்மனையில் ஓர் அறை.**

**காலம்—முற்பகல்.**

பீமசிங்:—ஆ! என்ன ஆச்சரியம்! எனக்குத் தெரியாமல் இந்நகரில் இத்தகைய அழகும் யௌவனமும் வாய்ந்த பெண் ஒருவள் இருக்கின்றாளா? ஆனால் பரம ஏழையான அவ்வேதியன் குடிசையில் அந்தச் சுந்தரியிருக்கக் காரணமென்ன? ஸதாநந்தரைப்பற்றி விசாரித்துக் கொண்டு வரும்படி ஆளனுப்பினேனே. அவன் ஏன் இன்னும் வரவில்லை? ஆ! அவ்வழகியைக் கண்டது முதல் எனக்கேதோ பைத்தியம் பிடித்தது போலிருக்கின்றதே! அவள் யாராயிருக்கலாம்? ஸதாநந்தருடைய குமாரியாயிருக்கலாமோ? ஆ! அவ்வயோதிகனுக்குக் குழந்தைகளே கிடையாதென்று கேள்விப்பட்டிருக்கிறேனே! அவள் ஒருகால் ஏதாவது ஒரு அரசனுடைய புத்திரியாக யிருக்கலாமோ? அங்ஙனமிருப்பின், அவள் ஸதாநந்தருடைய கிரகத்திலிருக்கக் காரணமென்ன? ஒன்றும் விளங்க வில்லையே! ஒருகால் அவள் தேவலோகப் பெண்ணோ? விண்ணுலகையாளும் இந்திராணியோ! அல்லது இம்மண்ணுலகிலுதித்து என் மனங்கவர வந்த ஏதாவது மாயா தேவதையோ! ஆ பெண்ணே! நீ யாராயிருந்தாலும் இனி உன்னையின்றி ஓர் கணமேனும் நான் உயிர்தரித்தல் அரிது! உன்னெழில் என் மனதை முழுதுங் கவர்ந்து விட்டதே! ஆ! உன்னை என் இராணி யென்றழைக்கும் பாக்கியத்தை எப்பொழுதடைவேன்! நான் நேற்று வேட்டையாடிக் களைத்து வருகையில் உன்னைக் கண்டதும் என் களைப்பெல்லாம் பறந்து விட்டதே! ஆனால் என்னைக் கண்டவுடன் வேடனைக் கண்டு வெறித்தோடும் மான் குட்டியைப்போல் நீ ஏன் வீட்டிற்குள் ஓடி விட்டாய்? ஆ! சேவகன் வந்து விட்டான் போலிருக்கிறது.

(சேவகன் பிரவேசித்தல்)

பீமசிங்:—சேவகா! ஸதாநந்தரைப் பற்றி நான் விசாரிக்கச் சொன்னதெல்லாம் விசாரித்தாயா? சீக்கிரம் சொல்!

சேவகன்:—மகாராஜ்! ஸதாநந்தரே இதோ வெளியில் வந்து நிற்கிறார். கையில் ஏதோ ஒரு பொருளை மறைத்து வைத்துக் கொண்டு அதை மகாராஜாவிடந்தான் காண்பிக்க வேண்டுமென்கிறார்.

பீமசிங்:—அப்படியா! அவரை உடனே உள்ளே அழைத்துவா!

(சேவகன் செல்லல்; ஸதாநந்தர் பிரவேசித்தல்)

ஸதாநந்தர்:—ராஜாதி ராஜ, வாழி!

பீமசிங்:—வாருங்கள், அதோ அவ்வாஸனத்திலமருங்கள்.

ஸதாநந்தர்:—(நின்று கொண்டே) மகாராஜ்! நான் தங்களிடம் ஓர் காரியத்தை யுத்தேசித்து வந்தேன்.......

பீமசிங்:—அதெல்லாமிருக்கட்டும், நான் கேட்கும் கேள்விகளுக்கு முதலிற் பதில் சொல்

பீமசிங்:—பேஷ்! உம்மை நான் இதுவரையில் பிராமணோத்தமரென்று நினைத்தேன். திருட்டுப் பயலென்று நினைக்கவில்லையே! அந்தப் பெட்டியை எவ்விடத்தில் திருடினீர்? உள்ளதைச் சொல்லுகிறீரா என்ன?

ஸதாநந்தர்:—ஐயோ! இதென்ன அநியாயம்! நான் இதைத் திருடினேனா? இந்த அநியாயத்திற்கு நான் என்ன செய்வது?

பீமசிங்:—யார்! நான் சொல்வதா அநியாயம்? நானா அநியாயக்காரன்! நம்மைப் பார்த்தா இந்த வார்த்தை சொல்லத் துணிந்தீர்!... யாரடா சேவகா! (சேவகன் பிரவேசித்தல்) இதோ இவ்வந்தணன் இப்பெட்டியை எங்கேயோ திருடி வந்திருப்பதாகத் தெரிகிறது. அதைத் தீர விசாரித்துத் தீர்ப்புச் சொல்லும்வரை இவனைச் சிறையிலடைத்து வை. உடனே நம் கார்பாரியை இங்குவரச் சொல்.

சேவகன்:—மகாராஜாவின் ஆக்ஞை!

(ஸதாநந்தரை இழுத்துக்கொண்டு செல்லல்).

பீமசிங்:—ஹூம்! என்னிஷ்டத்திற்கு மாறாகச் செய்வேனென்று சொல்ல இவ்வேதியனுக்கு எவ்வளவு துணிவு? இந்த அற்பனா நம்முடன் விளையாடுவது! தங்கப்பெட்டி... படகிலிருந்ததாம்! என்ன கதை? சொன்னவர் சொன்னாலும் கேட்பவர்களுக்கு மதியில்லையா! கமலரேகையை...ஆ! எவ்வளவு இனிமையான பெயர்! அவளை நான் என் கரங்களினால் தொடுவேனேயாயின் என் ஜன்மம் சாபல்யமாகும்...இருக்கட்டும், கார்பாரியை விட்டுக் கமலரேகையை உடனே அரண்மனைக்கழைத்துவரச் சொல்லுகிறேன்.

(செல்லல்)

(காட்சிமுடிகிறது.)

அங்கம் 2. களம் 3.

பவநகர். ஸதாநந்தருடைய கிரகம்.

காலம்—முற்பகல்.

பத்மாக்ஷி:—அம்மா குழந்தாய்! பாபம், நீ எவ்வளவு நாழிகைதான் பட்டினியாயிருப்பாய்? இதற்கு முன் நீ ஓர் நாளாயினும் பட்டினியாயிருந்திருக்க மாட்டாயே! எங்கள் வீட்டுக்கு வந்தது முதல் உன் நகைகளையெல்லாம் எங்களுக்காக விற்றுவிட்டதுமன்றி அடிக்கடி பட்டினியாகவும் கிடக்கவேண்டியிருக்கிறதே! நான் என்ன செய்வேன்?

கமலரேகை:—அம்மா! தாங்கள் என்னைக் கண்டு இவ்வித வார்த்தைகளைச் சொல்வது என் மனதை உருக்குகிறது. அநாதையான என்னைப் பார்த்து இவ்வித வார்த்தைகளைச் சொல்லும் தங்களையே என் அன்னையாகப் பாவிக்கிறேன். அம்மா! நான் பட்டினியாயிருக்கிறேனென்று ஏன் வருந்துகிறீர்கள்! நான் நேற்றிரவுதான் சாப்பிட்டேனே! தாங்கள் அதுகூடச் செய்யவில்லையே!

பத்மாக்ஷி:—குழந்தாய்! கமலரேகா! உன் நற்குணத்தை என்னென்றுரைப்பேன்! எனக்கு உன்னைப் போன்ற குழந்தை கிடைத்தபின் நான் ஓர் வேளை ஆகாரமில்லாமலிருந்தாலென்ன? ஆனால் கண்ணே! உன் தாத்தா அரண்மனைக்குச் சென்று 4, 5 நாழிகைக்கு மேலேயே ஆகிறது. வெகு ஏராளமான திரவியம் கொண்டு வருவார்......

கமலரேகை:—அரண்மனையில் இன்று யாது விசேஷம்?

பத்மாக்ஷி:—ஒன்றும் விசேஷமில்லை. இன்று உன் தாத்தா சமுத்திர ஸ்நாநம் செய்துகொண்டிருக்கையில் ஓர் படகு அவரை நோக்கி மிதந்து வந்ததாம். அப்படகில் ஒருவருமே யில்லையாம். ஆனால் ஓர் அழகிய தங்கப் பெட்டி மாத்திரம் அதிலிருந்ததாம்!



அதை யெடுத்துக்கொண்டு வந்தார். அதை மகாராஜாவிடம் விற்றுப் பணம் கொண்டு வருவதற்காக அரண்மனைக்குச் சென்றிருக்கிறார்!

கமலரேகை:—(ஆவலுடன்) தாங்கள் அப்பெட்டியைப் பார்த்தீர்களா? அது எப்படி இருந்தது?

பத்மாக்ஷி:—நன்றாகப் பார்த்தேன்! அது பத்தரைமாத்துச் சுவர்ணத்தினால் செய்யப்பட்டிருந்தது. அதில் ஓர் சிங்கமும் ஐந்து தலைகளையுடைய நாகமும் சண்டை செய்வதைப் போலவும், ஓர் கந்தர்வன் அவ்விரண்டையும் இரு கரங்களாற் பிடித்துக்கொண்டு இருப்பதைப் போலவும் வெகு விசித்திரமான வேலைகள் செய்யப்பட்டிருந்தன.

கமலரேகை:—(தனக்குள்) ஆ! இத்தகைய பெட்டி என் மாயப் பெட்டியைத் தவிர வேறு யாதாயிருக்கக்கூடும்? ஆனால், அது இவ்விடத்திற்கு எவ்வாறு வந்தது? என் பந்துக்களில் யாரேனும் அப்பெட்டியையோர் படகில் வைத்துக் கடலில் விட்டிருக்கலாமோ? அப்படியிருப்பின், அது என்னிடமன்றோ வந்து சேரவேண்டும்? நான் அதைப் பார்ப்பதற்கு முன் அது அரண்மனைக்குக் கொண்டு போகப்பட்டதின் காரணமென்ன? ஒருகால் அது தன் மாயா சக்தியை இழந்திருக்கக் கூடுமோ?

(யாரோ கதவைத் தட்டுதல்).

பத்மாக்ஷி:—அம்மா, குழந்தாய்! பெட்டியை விற்றுவிட்டு உன் தாத்தா இதோ வந்துவிட்டார்!

(சென்று கதவைத் திறக்க, கார்பாரியும் சில போர்வீரர்களும் இரண்டு தாதிகளும் பிரவேசித்தல்.)

பத்மாக்ஷி:—(திடுக்கிட்டு) யாரடா நீங்களெல்லாரும்?

கார்பாரி:—அம்மா, தங்கள் புருஷர் ஒரு தங்கப் பெட்டியைத் திருடியதற்காக மகாராஜா அவரைச் சிறையிலடைத்திருக்கிறார்! இங்கே யாரோ...

பத்மாக்ஷி:—ஐயையோ! ஐயையோ! இதென்ன அநியாயம்! ஐயையோ! நான் என்ன செய்வேன்! அடபாபி! அடகொலைபாதகா! அப்படிச் சொல்லாதேடா! ஐயையோ! ஐயையோ!

கார்பாரி:—அம்மா, கொஞ்சம் கூக்குரலிடாதேயுங்கள்! தங்கள் புருஷர் கமலரேகையெனும் யரோ ஓர் இராஜகுமாரியைத் திருடிக்கொண்டு வந்திருக்கிறாராமே! அவர்கள் யார்? இவர்கள்தான் போலிருக்கிறதே! (கமலரேகையைப் பார்த்து) அம்மணி! நமஸ்காரம்! தங்களை அரண்மனைக்கழைத்து வரும்படி மகாராஜா ஆக்ஞாபித்திருக்கிறார்.

பத்மாக்ஷி:—அம்மா! உன் தாத்தா ஜயிலிலிருக்கிறாராம் அம்மா! இவர்கள் யாரோ தெரியவில்லையே! ஐயையோ! ஐயையோ!

கமலரேகை.—(தாதிகளைப் பார்த்து) அம்மா! அரசர் என்னை அழைத்து வரச் சொல்லியிருக்கமாட்டார். நான் இராஜகுமாரியுமல்ல, ஒன்றுமல்ல! தாங்கள் நன்றாக விசாரியுங்கள்.

ஓர் தாதி:—தங்கள் பெயர் கமலரேகையென்பது தானே?

கமலரேகை:—ஆம், அதற்கென்ன?

தாதி:—ஆம், ஆம். தங்களைத்தான் அரசரழைத்து வரச் சொன்னது! அதிற் சந்தேகமில்லை! உடனே புறப்படுங்கள். வாசலில் பல்லக்குத் தயாராக இருக்கிறது. புறப்படுங்கள்!

பத்மாக்ஷி:—அம்மா! குழந்தை! இந்தப் பாதகர்கள் உன்னை மோசம் செய்யப் பார்க்கிறார்

கள்! இவர்கள் யாரோ தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் போலிருக்கிறதே! அப்பா ஜகதீசா!

தாதி:—(சிரித்துக்கொண்டு) அம்மா! நாங்கள் தீவட்டிக் கொள்ளைக்காரர்களன்று. (கமலரேகையைப் பார்த்து) அம்மா! பயமின்றி வாருங்கள்!

கமலரேகை:—அம்மா! நான் ஓர் ஏழைப் பெண். நான் பல்லக்கிலேறிக்கொண்டு அரண்மனைக்கு வர அவ்வளவு யோக்கியதையுள்ளவளன்று. மேலும் அரசர் என்னை அழைத்து வரச் சொல்ல யாதோர் காரணமுமில்லை. அவர் அழைத்து வரச் சொன்ன பெண்மணியின் அடையாளம் புரியாமல் தவறுதலாக என்னை அழைக்கிறீர்களென்று நினைக்கிறேன். ஆகையால் நான் இப்பொழுது அரண்மனைக்குப் புறப்பட்டு வரவேண்டிய அவசியமேயில்லை. நீங்கள் சென்று நன்றாக விசாரியுங்கள்.

தாதி:—அம்மணி! அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. மகாராஜா தங்களைத்தான் அழைத்துவரச் சொன்னார்கள். சமாதானமாய் வாராவிட்டால் பலாத்காரம் செய்தாகிலும் அழைத்துவர வேண்டுமென்பது தான் அரசர் ஆக்ஞை! ஆகையால் தாங்கள் எங்களுடன் வரமுடியாதென்றால் நாங்கள் தங்களை விட்டுச் செல்ல முடியாது!

(போர்வீரர்கள் அணுகுதல்)

கமலரேகை:—ஐயோ! தெய்வமே! இப்பொழுது நான் என்ன செய்வேன்! அப்பா நில்லுங்கள்! யாராவது ஒருவன் என்னருகில் ஓர் அடியெடுத்து வைத்தாலும் நான் தற்கொலை செய்து கொண்டு விடுவேன்! நில்லுங்கள்! ஓர் எளிய பெண்ணை அவளிஷ்டத்திற்கு மாறாக இப்படி வருத்துகிறீர்களே! நீங்கள் மனிதர்களா? அதிலும் வீரர்களா? நான் வரமுடியாது! வேண்டுமென்றால் உங்கள் அரசனிடம் போய்ச் சொல்லுங்கள்...நான் அரண்மனைக்கு வரமாட்டேன்.

தாதிகள்:—அதெல்லாம் முடியாதம்மணி, தங்களை விட்டு நாங்கள் செல்லவே மாட்டோம்! எங்கள் முன்னிலையில் தாங்கள் தற்கொலை செய்து கொள்ளவும் நாங்கள் விடுவோமா? இல்லையில்லை. தாங்கள் ஆட்சேபிக்காமல் வந்து விட்டால் சகல மரியாதைகளுடன் அரண்மனைக்கழைத்துச் செல்லுகிறோம்! இல்லாவிட்டால்....

பத்மாக்ஷி:—அம்மா, கமலரேகை! நீ இக்கொடியவர்களுடன் சண்டைபோடாதேயம்மா! இவர்கள் உன்னைக் கொன்றாலும் கொன்று விடுவார்கள்! ஐயோ! உன் தாத்தா ஜயிலிலிருக்கிறாராம்! எனக்கொன்றும் தெரியவில்லையே! ஐயையோ!

தாதி:—(பத்மாக்ஷியைப் பார்த்து) பாட்டி! ஏன் வீணாய்க் கத்துகிறாய்? இப்பொழுது என்ன மோசம் போய் விட்டது? (கமலரேகையைப் பார்த்து) அம்மணி! சீக்கிரம் புறப்படுங்கள். தங்களை விட்டு நாங்கள் செல்லமுடியாது.

கமலரேகை:—நீங்கள் என்னை விட்டுச் செல்ல முடியாதென்றால் நான் உங்களுடன் வர முடியாது. உயிரிழந்தாலு மிழப்பேனேயன்றி அரண்மனைக்கு வரமாட்டேன்!

கார்பாரி:—அம்மணி! மறுப்பதிற் பிரயோசனமில்லை. தாங்கள் வந்துதான் தீரவேண்டும்

கமலரேகை:—நான் வரமாட்டேன்!

தாதி:—தாங்கள் கடைசிவரை மறுத்தால் நாங்கள் பலாத்காரமாய் உங்களைக் கொண்டு செல்லவேண்டியிருக்கும். எதற்காக யோசிக்கிறீர்கள்? சந்தோஷமாய் வாருங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம்!

கமலரேகை:—நான் வரமாட்டேன். என்னைக் கண்டு இவ்வித வார்த்தைகளைச் சொல்லுகிறாயே! நீ பெண்பிள்ளையா!



கார்பாரி:—அம்மணி! கோபித்துக் கொள்ளாதீர்கள். எங்களுக்கு இராஜாக்ஞையே பெரிதன்றி எங்கள் உயிர், மானம் ஒன்றும் பெரிதல்ல. தங்களை பலாத்காரமாக......

(போர்வீரர்கள் கமலரேகையை அணுகுதல்)

கமலரேகை:—(வெருண்டு) அடே! முரட்டாள்களே! நில்லுங்கள்! செயலற்ற ஓர் பேதைப் பெண்ணென்றல்லவோ இவ்விதம் செய்கிறீர்கள்! மானத்தைத்தான் இழக்கத் தயாரா யிருக்கிறீர்கள்! மதியையும் இழக்கத் தயாராயிருக்கிறீர்களா?

தாதி:—அம்மணி! ஏன் வீண்வாதம் செய்கிறீர்கள்? தாமதம் செய்தால் எங்கள் அரசர் எங்களைக் கொன்று விடுவார்கள்,

கார்பாரி:—(ஓர் புறமாக ஓர் தாதியிடம்) தந்திரமாகவே அரண்மனைக் கழைத்துச் செல்ல முயற்சி செய்! பலாத்காரமாக இழுத்துச் செல்லக் கூடாது! எப்படியானாலும் நாளை நமது இராணியாகப் போகிறாளல்லவா?

தாதி:—(ஓர்புறமாக) சரி! சரி!

தாதி:—(கமரேகையைப் பார்த்து) அம்மா! எங்கள் அரசரைப் பற்றித் தாங்கள் ஏதோ கெட்ட எண்ணங் கொண்டிருக்கின்றீர்கள் போலும். அரசர் தங்களை யாது காரணத்துடன் அழைக்கிறாரோ நாங்கள் அறியோம். எனினும் அவருடைய நோக்கம் இழிவானதாக இருக்காதென்பது நீங்கள் நிச்சயமாக நம்பலாம். ஒருகால், தாங்கள் யாரென்பதை விசாரித்துத் தங்கள் மாதா பிதாக்களிடம் ஒப்புவிக்கவோ என்னவோ! தாங்கள் இக்குடிசையில் தங்கள் வாழ் நாட்களைக் கழிப்பதெனில் அவர் மனது எவ்வாறு சகிக்கும்? மேலும், எங்கள் அரசருக்கு இந்திராணியை யொத்த உத்தம மனைவியிருக்கிறாள்! தாங்கள் ஏன் வீணாக வருந்துகிறீர்கள்? பயமின்றி வாருங்கள்.

கார்பாரி:—(ஓர் புறமாகத் தாதியைப் பார்த்து) இதுதான் தருணம்! தயங்குகிறாள், சீக்கிரம் வேலையை முடி.

தாதி:—அம்மணி! நாழிகையாகிறது.

கமலரேகை:—நீங்கள் தயவு செய்து என்னை விட்டுச் செல்லமாட்டீர்களா?

தாதி:—அம்மணி! நாங்கள் என்ன செய்வது? இராஜாக்ஞை!

பத்மாக்ஷி:—அம்மா, குழந்தாய்! ஐயோ, உன் தாத்தா ஜயிலிலிருக்கிறாராம். நீ ஒரு காரியம் செய்! மகாராஜாவிடம் சென்று உனக்கு இங்கே எங்களுடன் இருப்பதுதான் இஷ்டமென்பதைச் சொல்லி விட்டு வந்துவிடு. இவர்கள் பொல்லாதவர்கள். மகாராஜா உன்னைப்பார்த்தால் உன்மீது இரக்கம் கொள்வார். உன் தாத்தா அந்த நாசமாய்ப் போகிற பெட்டியைத் திருடவில்லை என்பதையும் மகாராஜாவிடம் சொல்லி அவரையும் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிடு!

கமலரேகை:—ஈசா! (பத்மாக்ஷியைப் பார்த்து) அம்மா! நான் சிறு வயதிலேயே என் அன்னையை இழந்துவிட்டேன். இங்கு வந்து சேர்ந்தது முதல் என்னை இவ்வளவு அன்புடன் ஆதரித்து வந்த தங்களைவிட்டு எவ்வாறு அரைக்கணமேனும் பிரிவது? ஐயோ! துரதிருஷ்டசாலியான என்னுடன் சேர்ந்ததினாலேயே தங்களுக்கும் மேன்மேலும் கஷ்டங்கள் சம்பவிக்கின்றன போலும்! அம்மா! இவர்கள் சொல்வதை நான் நம்பவில்லை. நான் அரண்மனைக்குச் சென்று விட்டால் அவ்வளவு சுலபமாக வந்து விடக் கூடுமென்று நம்பவில்லை. எனினும் நான் அரண்மனைக்குப் போகிறேன்! நான் மிகவும் பாபி. என் தலைவிதிப்படி நடக்கட்டும். இவர்கள் என்னை விடமாட்டார்கள்

போலிருக்கிறது. அம்மா! அரசர் என்னை என்ன நோக்கத்துடன் அழைக்கிருரோ தெரியவில்லை. மேலும், மேலும், ஏதோ தீங்கு விளையுமென்னும் அச்சம் எவ்வாரே என் மனதில் உதித்திருக்கிறது. எனெனும் நான் என்ன செய்வது? ஆனால்... அம்மா!... (நமஸ்கரித்து) அம்மா! நாம் பிரியுமுன்னர் —என் ஞாபகார்த்தமாக—த்—தங்களிடம் எதையாவது கொடுத்துவிட்டு—ச்-செ-ல்-ல வேண்டு மென்று ஆசைப்படுகிறேன். ஆகையால் அம்மா, தயவு செய்து இதைத் தாங்கள் அங்கீகரிக்க வேண்டும். (தன் மோதிரத்தைக் கொடுத்தல்).

பத்மாக்ஷி:—கண்மணி! கமலரேகா! உன்னை விட்டுப் பிரிந்து நான் எவ்வாறு வாழ்வேன்? ஹே! ஜகதீசா! இதுவும் உன் லீலையோ? ஆ! இன்று பொழுது விடிந்த நேரம் இப்படியாயிருக்க வேண்டும்! (மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு) கண்மணி! உன்னை மறுபடியும் எங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ? குழந்தாய்! மகாலக்ஷ்மி! உன்னை என் ஆயுள் உள்ளளவும் மறக்கமாட்டேன். எதைப் பார்த்தாலும் உன் ஞாபகந்தான் வரும்! இந்தக் கணையாழியை என் உயிர் போனாலும் இழக்கமாட்டேன்!

தாதி:—அம்மணி! காலதாமதம் ஆகிறது. அரசர்......

கமலரேகை:—அம்மா, இவர்கள் என்னை அவசரப்படுத்துகிறார்கள். இவர்கள் சொல்லுமாறு அரசர் நல்லவராயிருந்தால் அவரிடம் சொல்லிக்கொண்டு திரும்பிவந்து விடுகிறேன். அம்மா! தங்களை விட்டுப் பிரிந்து எவ்வாறு நான் உயிருடனிருப்பேன்? ஆனால், அம்மா! நான் தங்களை விட்டுப் பிரிந்து வாழ வேண்டிய காலம் நீடித்திருக்காதென்று என் மனதில் ஏதோ சொல்லுகிறது. அம்மா! (கண்ணீர் சொரிந்து கொண்டு நமஸ்கரித்து) அம்மா! நான் சென்று—வ—ர—ட்டு—மா?

பத்மாக்ஷி:—ஆ! கண்மணி! ஆ! கமலா!

(பத்மாக்ஷியைக் கமலரேகையின் பின் வரவொட்டாமல் வீரர்கள் தடுத்தல். கார்பாரியும் தாதிகளும் கமலரேகையை அழைத்துச் சென்றுவிடல்.)

(காட்சி முடிகிறது.)

### அங்கம் 2. களம் 4.

ஓர் வெளிப்பிரதேசம்.

காலம்—காலை.

(வத்ஸனும் மகேந்திரராஜனும் ஏழைப் பிராமணர்களைப் போல் வேடம் பூண்டு பிரவேசித்தல்)

மகேந்திரராஜன்:—வத்ஸா! உன்னுடைய புத்தியை மெச்சினேன்! இக்காலத்தில் இவ்வேடத்துடன் நாம் பிரயாணஞ் செய்தாற்றான் சந்தேகத்திற்கிடமின்றி இருக்கும். நீ உருமாறிய பிறகு உன் அடையாளம் எனக்கே புரியவில்லையே!

வத்ஸன்:—மகாராஜ்! நம் உடைகளை மாற்றிக் கொண்டது மாத்திரம் போதாது. நம் பெயர்களையும் மாற்றிக் கொள்ளவேண்டும்.

மகேந்திரராஜன்:—நீ சொல்வதும் சரியே. நீ என்னை ஆதித்தியன் என்று அழை. நான் உன்னை எப்படி யழைப்பது?

வத்ஸன்:—நான் மகாராஜாவை ஆதித்தியன் என்றழைத்தால் மகாராஜா என்னை ஆதித்தியனுடைய ஒளியினுதவியால் விளங்கும் சந்திரனுடைய பெயரைவைத்து மதிவதனன் என்றழைத்தால்தான் நியாயம்.

மகேந்திரராஜன்:—அப்படியே ஆகட்டும். என் பெயர் ஆதித்தியன், உன்பெயர் மதிவதனன் என்று வைத்துக் கொள்வோம். நாமிருவரும் க்ஷேத்திர யாத்திரை செய்வதாகச் சொல்லி வரவேண்டும். நாம் எந்த இராஜ்ஜியத்திலிருப்பினும், ஒருவரும் நம்மேல் சந்தேகங்கொள்ளாவண்ணம் நடந்து கொள்ள வேண்டும்!



வத்ஸன்:—சரி, மகாராஜ்!

மகேந்திரராஜன்:—இப்பொழுதே சந்தேகம் விளையும்படி பேசுகிறாயே! என்னை மகாராஜாவென்றழைப்பதை விட்டுவிடு. நாமிருவரும் மிகுந்த நேசர்களானதால் மிகவும் அன்னியோன்னியமாகப் பேசிக்கொள்ளவேண்டும். என்னை இனி புதுப் பெயரிட்டே நீ அழைக்கவேண்டும்.

வத்ஸன்:—அப்படியே மகாராஜ்!—இல்லை, ஆதித்தியா! அப்படியே செய்வோம். எனினும் மகாராஜாவை ஆதித்தியா என்றழைக்க என் நாக்கு கூசுகின்றது.

மகேந்திரராஜன்:—இல்லை மதிவதனா! அதனால் பாதகமில்லை. நீ என்னை எப்பெயர் கொண்டழைத்தாற்றான் என்ன? உன்னை விட ஆப்த நண்பர்கள் எனக்கு வேறு யாரிருக்கிறார்கள்? நீ என்னை உயிர்ப்பிக்காவிடில் நான் பிழைப்பதேது?

வத்ஸன்:—இனி நண்பா என்றே அழைக்க முயலுகிறேன், மகாராஜ்!

மகேந்திரராஜன்:—நீ 'முயலுகிறேன்' என்று சொல்லி முடிப்பதற்குள் உன் முயற்சி பாழாய் விட்டதே!

வத்ஸன்:—(நகைத்து) சரி நண்பா! நீ சொல்லுகிறபடியே செய்வோம்.

மகேந்திரராஜன்:—நண்பா! இப்படி நாம் நகர் நகராய் அலைந்துகொண்டிருந்தால் நம் காரியம் எப்படிக் கைகூடும்?

வத்ஸன்:—அதற்கென்ன செய்வது? வேறு வழியில்லையே. நாம் ஓர் காரியம் செய்வோமா? நம் நேச அரசர்களிடம் சென்று நம்முடைய சுயரூபத்தை வெளியிட்டு அவர்களுடைய உதவியால் ஓர் சேனையைத் திரட்டிக் கொண்டு சூரசேனனைத் தோற்கடிப்போமா?

மகேந்திரராஜன்:—அதற்கு இப்பொழுது அவசரமில்லை. முதலில் என் மைந்தன் இருக்குமிடத்தை யல்லவோ கண்டு பிடிக்கவேண்டும்? அவன் உயிரிழந்து விட்டதாகத் தெரிந்தால் பிறகு நான் எதற்காக உயிர் தரிக்கவேண்டும்? என் மைந்தன் பிழைத்திராவிடில் நாம் இராஜ்ஜியத்தை மறுபடியும் அடைந்தும் என்ன பயன்?

வத்ஸன்:—மகாராஜ்—இல்லை—ஆதித்தியா! சந்திரவர்மாவிடம் போர்க்களத்தில் சிற்சில சங்கதிகளைச் சொன்னீர்களே! சந்திரவர்மா இருக்குமிடமும் தெரியவில்லையே?

மகேந்திரராஜன்:—ஒன்றுமே தெரியவில்லை. என் மைந்தனைப் பற்றி ஏதாவது சமாசாரம் சீக்கிரத்திலறியாவிடின் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடுமென்று எண்ணுகிறேன். என் மனக்கவலையை ஆற்ற ஒருவராலும் முடியாது.

வத்ஸன்:—மகாராஜ்! தைரியத்தைக் கைவிடாதீர்கள். நாம் கடவுளை நம்பியே காரியங்களைச் செய்ய வேண்டும் அவரை நம்பினோரை அவர் கைவிடுவதில்லை. எப்படியாயினும் தாங்கள் குமாரனை அடையக் கருணாநிதியாகிய ஜகதீசன் அருள்புரிவார்!

மகேந்திரராஜன்:—நண்பா! நான் கடவுளைத்தான் நம்பியிருக்கிறேன். நான் இதுவரை என் மனசாட்சிக்கு விரோதமாக யாதொரு காரியத்தையும் செய்திலேன். ஆகையால் புத்திர சோகமெனும் ஆறுப்பிணியால் நான் துயருறக் கடவுள் செய்யமாட்டாரென்று திண்ணமாய் நம்பியிருக்கிறேன். எனினும் போன ஜன்மத்தில் என்ன பாபத்தொழில் புரிந்தேனோ! யார் அறிவார்?

வத்ஸன்:—மகாராஜ், அப்படியெல்லாம் நினைத்து வருந்தாதீர்கள். அமைதியான மனதுடன் கடவுளைத் தியானிப்போம்.

மகேந்திராஜன்:—அப்படியே செய்வோம்.

(கடவுளை தியானித்தல்)

"கருணை நிதியே யபய மபயம்
கனகா கரனே யபய மபயம்
அருணை டகனே யபய மபயம்
அழகா வமலா வபய மபயம்
தருணை தவனே யபய மபயம்
தனிநா யகனே யபய மபயம்
தெருணை டுறவா யபய மபயம்
திருவம் பலவா வபய மபயம்
மருளுந் துயருந் தவி நம் படியென்
மனமன் றிடைநீ வருவா யபயம்
இருளும் பயமும் பெருவஞ் சகநெஞ்
றினனென் றிகழே லபயம் மபயம்
வெருளுங் கொடுவெம் புலையுங் கொலையும்
விடுமா றருள்வா யபயம் மபயம்
அருளுந் பொருளுந் தெருளுந் தருவாய்
அபய மபய மபய மபயம்"

(திருவருட்பா)

(காட்சி முடிகிறது)

அங்கம் 3. களம் 1.
சூரசேனன் தலைநகர்.
ஜயசீலனுடைய மாளிகையிலோர் அறை.
காலம்—மாலை.

ஜயசீலன்:—ஸ்ரீதரா! என்னருமைக் குழந்தாய்! நான் சொல்லும் சிற்சில வார்த்தைகளைச் செவிகொடுத்துக் கேள்.

ஸ்ரீதரன்:—தந்தையே! நமஸ்கரிக்கிறேன். தாங்கள் சொல்வதைக் கேட்கவும் தாங்கள் ஆக்ஞாபிக்கு வண்ணம் நடக்கவும் சித்தமாயிருக்கிறேன்.

ஜயசீலன்:—குழந்தாய்! நாம் முன்பின் யோசியாமல் இந்நாட்டுக்கு வந்ததே பேதமையென எனக்குத் தோன்றுகிறது. அதிலும் இந்நகர் மன்னன் நீதிமானென்று நினைத்து இவனிடம் அமைச்சனாயிருக்க நான் ஒப்புக்கொண்டது பேதமையிலும் பேதமை. இவன் செய்யும் அக்கிரமங்களைச் சகிக்க முடியவில்லை......

ஸ்ரீதரன்:—தந்தையே! இன்றைய தினம் நானோர் விஷயம் கேள்விப்பட்டேன். அயோத்தி மன்னனுடைய குமாரன் இப்பொழுது இந்நகர் சிறையிலிருக்கிறானாம். அரசன் அவனை அவமானம் செய்வதற்காகத் தன் வேசிகளின் ஏவலாளாக நியமித்து அரண்மனையில் ஈனத் தொழில்களைச் செய்யும்படி கட்டளையிடப் போகிறானாம். இது உண்மைதானா?

ஜயசீலன்:—குழந்தாய்! நீ கேள்விப்பட்டது நேற்றுவரை உண்மையே! ஆனால் நேற்றைய தினம் ஓர் சம்பவம் நடந்தது. அதன்பிறகு அரசன் தன் எண்ணத்தை மாற்றி விட்டதாகத் தெரிகிறது. அதாவது, மகேந்திராஜன் எங்கே உயிருடனிருப்பானோ, எங்கே தன் நேச அரசர்களின் உதவியைக் கொண்டு படையெடுத்து வருவானோ என்னும் அச்சத்தினால்தான் அரசன் இவ்வளவு காலமாக அந்த இராஜா புத்திரனை உயிருடன் வைத்திருக்கிறான். ஏனெனில், மகேந்திராஜன் படையெடுத்துவரின் இராஜசிம்மனைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தி அவனுடன் சமாதானம் செய்து கொள்ளலாமல்லவா? ஆனால், மகேந்திராஜனுடைய உயிரை மாய்த்துவிட அநேக உபாயங்களையும் தேடிக் கொண்டிருந்தான். நான் மூடத்தனமாக ஓர் காரியம் செய்து விட்டேன். என்னவெனில், மகேந்திராஜனுடைய உயிருக்கு இவன் ஹானி விளைவிக்காமலிருக்க வேண்டுமென்றெண்ணி, நேற்றைக்கு முந்திய நாள், நான் மகேந்திராஜன் இறந்து



விட்டதாகத் திண்ணமாய்த் தெரிகிறதென்று அரசனிடம்சொல்லிச் சிலபொய் சாட்சிகளைக் கொண்டு அரசனை நம்புமாறு நிரூபித்தேன். 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கு' மென்பது போலாயிற்று! மகேந்திராஜனுக் கஞ்சியே இராஜசிம்மனை அரசன் உயிருடன் வைத்திருந்தபடியால், மகேந்திராஜன் இறந்து விட்டானென்று தெரிந்ததும் இராஜசிம்மனைத் தொலைத்துவிட வேண்டுமென்னும் எண்ணம் அவன் மனதிலுதித்து விட்டது. இன்னும் சில நாட்களில் அவ்விளவரசனைச் சித்திரவதை செய்து கொன்றுவிட ஏற்பாடு செய்திருப்பதாக இப்பொழுது தான் ஓர் ஒற்றன் என்னிடம் சொல்லி விட்டுப்போனான்.

ஸ்ரீதரன்:—தந்தையே! இராஜசிம்மனை இவ்வாபத்தினின்றும் விடுவிக்க யாதொரு வழியுமில்லையா? அவனை நம் உயிர் கொடுத்தாயினும் இரட்சிக்கவேண்டியது நம்முடைய கடமையென்று நினைக்கிறேன்.

ஜயசீலன்:—ஸ்ரீதரா! நீ அப்படிச் சொல்வது எனக்கு அளவிறந்த ஆனந்தம் கொடுக்கிறது. அந்த இளவரசனுடைய ஆண்மையும் தீரமும் நான் கவனித்திருக்கிறேன்! அழகில் மாரனை வெல்வான்! தைரியத்தில் பார்த்தனை யொப்பான்! அவனைச் சிறை செய்து சூரசேனனுடைய முன்னிலையில் இழுத்து வந்த தினம் அவன் சூரசேனனை அவமதித்துப் பேசிய வார்த்தைகளும், அவனுடைய ஆண்மையும் தீரமும் நினைக்குங்கால் என்னைப் பரவசப்படுத்துகின்றன. நாம் அவனை எப்படியாவது காப்பாற்றவேண்டும். அதற்கு ஒரே வழிதானிருக்கிறது. ஆனால், அது மிகவும் அபாயகரமானது! உயிரை வெறுத்தாலன்றி அவனைக் காப்பாற்ற முடியாது!

ஸ்ரீதரன்:—தந்தையே! தாங்கள் அனுமதி கொடுத்தால் என் உயிரையும் பொருட்படுத்தாமல் அவனைக் காப்பாற்ற முயற்சி செய்கிறேன். தாங்கள் மாத்திரம் அவனைக் காப்பாற்றக் கூடிய உபாயத்தைத் தெரிவியுங்கள்.

ஜயசீலன்:—ஸ்ரீதரா! உலகில் சத்தியமே நித்தியமாயிருக்கும். அதை நிலை நாட்ட முயல்பவர்களைக் கடவுள் ரட்சிப்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சூரசேனன் நம்முடைய அரசனாகயிருப்பினும் அவன் கொடுங்கோல் அரசனாய் விட்டான்.

"நஞ்சமன்னரை நலிந்தாலது
வஞ்சமன்று மனுவழக்காகுமால்"

(கம்ப ராமாயணம்)

ஆகையால் நான் சொல்வதைக் கேள். நாமிருவரும் நாளை அரசனுடைய சபைக்குச் செல்வோம். அங்கே அரசனுடைய முன்னிலையில் உன்னை ஓர் காரியத்திற்காகக் கோசல தேசத்துக்குப் போய் வரும்படி ஏவுகிறேன். நீ மறுக்கவேண்டும். அதன்பின் நான் உன்னைப் பயமுறுத்தியும் கண்டித்தும் பேசுவேன். நீ ஒன்றையும் மதிக்காமல் முறட்டுத்தனமாக மறுக்க வேண்டும். அப்படி மறுக்கும்பொழுது அரசரைப்பற்றியும் இழிவாகச் சிற்சில வார்த்தைகளைச் சொல்லிவிடு. எனக்கு மிகவும் கோபம் வந்தது போல் பாவனை செய்து உன்னைச் சிறையிலடைத்து வைக்க அரசருடைய அனுமதியை வேண்டுகிறேன். கொஞ்சகாலமாக அரசருடைய க்ஷேமத்தில் நான் மிகவும் கவலைகொண்டவனாகப்பேசி நடந்துவருவதால் அரசர் அனுமதி கொடுப்பாரென்பதில் ஐயமில்லை. நான் தந்திரமாகப் பேசுவேன். நீயும் அப்படியே நடக்கவேண்டும். அரசன் அனுமதித்தபின் உன்னை இராஜசிம்மனிருக்கும் சிறைச்சாலையிலேயே அடைத்துவிட ஜெயிலதிகாரி மூலமாய் ஏற்பாடு செய்து விடுகின்றேன்.

ஸ்ரீதரன்:—அப்படியே நடக்கிறேன். ஆனால் இராஜசிம்மனுடன் நானும் சிறையிலடைக்

கப்பட்டபின் நான் என்ன செய்யவேண்டுமென்பதைத் தெரிவியுங்கள்.

ஜயசீலன் :—குழந்தாய்! இதோ இத்திறவுகோலை உன் உள்ளாடைக்குள் மறைத்துக்கொள். ஸ்ரீதரா! இராஜசிம்மன் அடைபட்டிருப்பது ஓர் சிறைச்சாலையல்ல! அது அரண்மனையைச் சார்ந்த ஓர் கட்டிடம். அது ஆதியில் ஓர் சிறைச்சாலையாக உபயோகப்படுத்தப்பட்டதல்ல! சூரசேனன் மகா காமக்குரோதி என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ? தன் கருத்துக் கிணங்காத மாதர்களை அரசன் முதலில் அதிலடைத்து வைத்தல் வழக்கம். இரண்டொரு நாட்கள் கழித்து அவ்வறையின் தென் கோடியிலிருக்கும் ஓர் இரகசியமான கதவைத் திறந்து கொண்டு சேவகர்கள் அம்மாதர்களை அரசனுடைய சயனக்கிரகத்திற்கு அழைத்துச் செல்வது வழக்கம். அக்கதவின் திறவுகோல்தான் இது. இதை மிகுந்த பிரயாசைப்பட்டுச் சம்பாதித்தேன்.

ஸ்ரீதரன் :—ஆ! அப்படியா! இப்பொழுதும் அக்கதவு அங்கிருக்கிறதோ?

ஜயசீலன் :—அங்கேயே இருக்கிறது. ஆனால் மிகவும் நுட்பமாகக் கவனித்தாலன்றி அக்கதவிருப்பது தெரியாது. அக்கதவைத் திறந்ததும் படிகள் தோன்றும். அதன்வழியே இறங்கி ஓர் நிலவறையைக் கடந்தால், அங்கு மற்றோர் கதவிருப்பது தெரியும். இத்திறவுகோலைக் கொண்டே அதையும் திறக்கவேண்டும். அதைத் திறந்து கொண்டு கரடு முரடான கற்கள் நிறைந்த ஓர் சுரங்கத்தின் வழியே சென்றால், சற்று தூரத்திற்கப்பால் மறுபடியும் மாடிப்படிகள் தோன்றும். அந்தப் படிகளையேறிச் சென்றால், ஓர் சிறிய அறையில் கொண்டு போய்விடும். அவ்வறை அரண்மனைத் தோட்டத்தின் தென்கோடியில் கட்டப்பட்டுள்ளது. ஆகையால் அவ்வறையின் வடபுறமுள்ள கதவைத் திறந்தால் தோட்டத்திற் கொண்டுபோய்விடும். அங்ஙனமின்றி, இடது பக்கத்திலிருக்கும் மாடிப்படியேறிச் சென்றால் அரசனுடைய வசந்த கால சயனக்கிரகம் சென்றடையலாம்.

ஸ்ரீதரன் :—அப்படியா! ஒரே கேள்வி. தாங்கள் கடைசியாகச் சொன்ன அறையின் சமீபத்தில் யாராவது போர்வீரர்கள் காவலாக இருப்பார்களோ?

ஜயசீலன் :—இப்பொழுது அவ்விடத்தில் அதிகமாகப் பாரா வைப்பதில்லை. ஒரே மனிதன் தான் அங்கிருப்பான். அவனும் நள்ளிரவில் உறங்குவான். எனினும் ஓர் உடைவாளையும் உன் உள்ளாடைக்குள் மறைத்து வைத்துக்கொள். நீங்களிருவரும் நள்ளிரவில் சந்தடி செய்யாமல் சென்று அரண்மனைத் தோட்டச் சுவற்றை ஏறிக் குதித்து ஓடிவிடுங்கள். பொழுது விடிவதற்குள் நீங்கள் இந்நகருக்கு நான்கு காதத்திற்கப்பாலிருக்க வேண்டும்.

ஸ்ரீதரன் :—அப்படியே செய்கிறேன். இப்பொழுதே நான் தயாராயிருக்கிறேன்.

ஜயசீலன் :—பதாறாதே! செய்வதை ஆய்ந்தோய்ந்து செய்யவேண்டும் நீங்களிருவரும் சிறையை விட்டு வெளியேறிய பிறகு பிரயாணிகளைப் போல் மாறுவேடம் போட்டுக்கொள்ளுங்கள்! மாறு வேட உடைகளை அரண்மனைத் தோட்டத்தின் தென் சுவற்றுக்கு வெளியில் புதர்களுக்கிடையில் இரவு பத்து மணிக்குள்ளாக ஒளித்து வைக்க ஏற்பாடு செய்கிறேன். அவைகளை எடுத்துக்கொண்டு மாறு வேடம் போட்டுக் கொள்ளுங்கள். என்பேரில் அரசன் சந்தேகங்கொள்ளாவண்ணம் நான் இங்கேயே இருக்க வேண்டும்.



ஸ்ரீதரன் :—இரண்டு குதிரைகள்—

ஜயசீலன் :—அதையும் நான் யோசித்துப் பார்த்தேன். இரண்டு குதிரைகளைப் புதரில் கட்டி வைக்கலா மென்றால், ஒருவேளை குதிரைகள் கனைத்தால் சந்தேகத்தை விளைவித்துவிடும். மேலும், குதிரைகளின் கால் தடங்களைக் கொண்டு காலையில் உங்களைப் பின் தொடர்ந்து பிடித்துவிடுவார்கள்! ஆகையால் நீங்கள் நடந்துதான் செல்லவேண்டும்.

ஸ்ரீதரன் :—நாங்கள் தப்பியோடிய பிறகு எங்கே செல்வது? அதையும் தெரிவியுங்கள். தாங்களை எவ்விடத்தில் சந்திப்பது?

ஜயசீலன் :—நீங்கள் தப்பியோடிய பிறகு இந்த நகருக்கு எவ்வளவுக்கெவ்வளவு தூரத்திலிருக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு நலம். ஆகையால் நீங்கள் சமீபத்திலிருக்கும் துறைமுகப்பட்டணம் சென்று கப்பலேறி, சிந்து முகத் துவாரத்திலிறங்கி புருஷபுரம் (Peshawar) சென்று அங்கேயேயிருங்கள். நானும் கூடிய சீக்கிரத்தில் அங்கேயே வந்து விடுகிறேன்.

ஸ்ரீதரன்:—தந்தையே! அப்படியே செய்கிறோம். நாம் எப்பொழுது இராஜ சபைக்குச் செல்வது?

ஜயசீலன்:—நாளைக்காலையில் செல்லலாம். அதற்குமுன் நான் சிற்சில ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கின்றதா? திறவுகோலை அதி ஜாக்கிரதையாக வைத்துக்கொள்.

ஸ்ரீதரன்:—என் உயிர் போனாலும் இத்திறவுகோலை இழப்பேனா!

(காட்சி முடிகிறது)

அங்கம் 3. களம் 2.

ஓர் சிறைச்சாலை.

காலம்—முற்பகல்

(இராஜசிம்மன் புலம்புதல்)

இராஜசிம்மன்:—ஜகதீசா! இதுவும் உனது திருவருளோ? ஐயோ! இன்னும் எவ்வளவு காலம் நான் இவ்வாறு வருந்தி வருந்திக் காலங் கழிப்பது? ஈசா! நான் என் வாணாள் முழுவதும் இங்ஙனம் சிறைச்சாலையிற் கிடந்து வருந்தவேண்டுமென்று என் தலையிலெழுதி விட்டாயோ! ஆ! என்னருமைக் காதலி இப்பொழுது எங்கிருக்கிறாளென்பது அறிகிலேன்! அந்தப் பாதகன் சூரசேனன் அவளை உயிருடன் வைத்திருக்கிறானோ, கொலையாளியின் வாளுக் கிரையாக்கி விட்டானோ! ஒருகால் அவள் வேறு யாருக்காவது வாழ்க்கைப் பட்டிருக்கலாமோ? சே! இதென்ன பேதமை! என்னையன்றி வேறொருவரை மணக்கக் கமலரேகையின் மனம் எவ்வாறு ஒருப்படும்? என்னரிய கமலரேகா! என்னுருயிர்த்தலைவி! என்னை அடைத்துவைத்திருப்பதைப்போல் அப்பாதகன் உன்னையும் ஓர் சிறையிலடைத்து விட்டானோ? என் செல்வமே! மறுபடியும் நான் உன்னைக் காண்பேனோ? நாமிருவரும் நாயகனும் நாயகியுமாகச் சந்தோஷத்துடன் வாழவும் பிரமேயம் ஏற்படுமோ? இச்சிறைச்சாலையினின்றும் தப்பியோடிவிட்டபோதிலும், நீ இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்கவாவது முயற்சி செய்யலாம்! ஆனால் கருங்கற்களால் கட்டப்பட்டிருக்கும் இச்சிறையினின்றும் எப்படித் தப்பியோடுவது? இங்குள்ள இரும்புக் கதவுகளை யார்தான் அசைக்கமுடியும்? சாளரத்தின் வழியாய்க் குதித்தோடுவோமெனினும், சாளரங்கள் இருபதடி உயரத்திற்கு மேலேயே இருக்கின்றன. ஜன்னல் கம்பிகளும் மிகவும் பலமானதாகக் காண்கின்றனவே!...ஆ! யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்கிறதே! இக்கோரத்தில் இங்கு யார் வரக்கூடும்? காவற்காரன் எனக்குக் கூழ் வார்த்துச் சென்று இன்னும் அரைமணி கூட ஆகவில்லையே!

(சேகவர்கள் சிறைச்சாலைக் கதவைத் திறந்து ஸ்ரீதரனை உள்ளே தள்ளிக் கதவைப் பூட்டிவிடல்.)

இராஜசிம்மன்:—(தனக்குள்) ஆ! என்னைப் போன்ற மற்றோர் துர்ப்பாக்கியன் என் துரதிருஷ்டத்தைப் பகிர்ந்து கொண்டான் போலும்! அடடா! இவன் முகத்தைப் பார்த்தால் உயர்குலத்தி லுதித்தவன் போல் தோன்றுகிறதே! (ஸ்ரீதரனைப் பார்த்து) அப்பா! நீ யார்? எதற்காகச் சிறையிலடைக்கப்பட்டாய்? சில காலமாகக் காவற்காரர்களை அன்றி வேறொருவரையும் காணாதிருந்த எனக்கு உன்னைக் கண்டதும் ஓர் வித சகோதர உணர்ச்சி உண்டாகிறது! இதுவரை என் விதியை நொந்துகொண்டிருந்த எனக்கு உன்னைக் கண்டதும் என் துயர்களெல்லாம் பிரமாதமல்ல வென்று தோன்றுகிறதே! உன்னைக் கண்டால் ஓர் உயர்குலத்தில் தோன்றியவனெனத் தெரிகிறது. அப்படியிருக்க இக்கோரமான சிறைச்சாலையிலடைக்கப்பட யாது காரணம்?

ஸ்ரீதரன்:—இராஜசிம்மா! நான் இன்னானென்பது உனக்குத் தெரியாவிட்டாலும், நீ இன்னானென்பது எனக்குத் தெரியும். நானும் உன்னைப் போல் ஓர் உயர் குலத்திற் பிறந்தவன்தான். நான் இந்நகர் அமைச்சரான ஜயசீலருடைய ஏக புத்திரன்...

இராஜசிம்மன்:—அப்படியா! நீ அம்மகானுடைய புதல்வனா? அப்பா! உன் தந்தையின் நேர்மையையும் பெருந்தன்மையையும் சூரசேனன் என்னைச் சிறைசெய்த தினம் அறிந்தேன்! உன் பெயரென்ன?

ஸ்ரீதரன்:—என் பெயர் ஸ்ரீதரன். இராஜசிம்மா! நான் உன்னைப் போல் விதிவசத்தின் கொடுமையால் இப்பொழுது இச்சிறைச்சாலையிலடைக்கப்படவில்லை. பிரத்தியாசையின்பேரில் இவ்விடம் வந்திருக்கிறேன்.

இராஜசிம்மன்:—ஸ்ரீதரா! நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையே.

ஸ்ரீதரன்:—எல்லாம் சொல்லுகிறேன். முதலில் நாமிருவரும் இணைபிரியாத நண்பர்களாக வேண்டும். பிறகு மற்ற விஷயங்களைச் சொல்லுகிறேன்.

இராஜசிம்மன்:—ஸ்ரீதரா! அநாதையான எனக்கு உன்னையன்றி வேறு யார் ஆப்த நண்பர்கள் இவ்வுலகி லிருக்கின்றனர்? உன்னை என் உயிர்த் தோழனாகக் கொள்ள நான் யாது புண்ணியம் செய்தேனோ! உனக்காக நான் என் உயிரையும் இழக்கத் தயாராயிருக்கிறேனென்பதை நம்பு.

ஸ்ரீதரன்:—இராஜசிம்மா! மெத்த சந்தோஷம். ஓர் விஷயம் சொல்லுகிறேன் கேள். கொடுங்கோல் மன்னனாகிய அந்த மூர்க்கன் சூரசேனன் இன்னும் ஒரு வாரத்திற்குள் உன்னைச் சித்திரவதை செய்து கொல்வதாக நிச்சயித்திருக்கிறான்.

இராஜசிம்மன்:—ஆ! சூரசேனன் ஆண்மையுள்ள வீரனாயிருந்தால் என்னுடன் மல் யுத்தஞ் செய்யட்டுமே! அப்படிச் செய்யாமல் என்னைச் செயலற்றவனாக்கிக் கொல்வதுதான் ஆண்மையோ?

ஸ்ரீதரன்:—இராஜசிம்மா! சூரசேனன் சுத்த வீரனாயிருந்தாலல்லவோ அவனுக்குப் பெருந்தன்மையிருக்கும்? மகாபயங் கொள்ளி! உங்கள் இராஜ்ஜியத்தை அவன் கொள்ளை கொண்ட விதத்தினின்றே அவனுடைய வீரமும் தீரமும் தெரியவில்லையா? அல்லது பிறர் ஹிதத்தைச் சொன்னாலும் அவன் காதுகளில் ஏறுமா?

"கற்பூரப்பாத்தி கட்டிக் கஸ்தூரி
எருப்போட்டுக் கமழ் நீர் பாய்ச்சி
பொற்பூர வுள்ளியினை விதைத்தாலும்
அதன் குணத்தைப் பொருந்தக் காட்டும்
சொற் பேதையர்க்கறிவு இங்கினிதாக
வருமெனவே சொல்லினாலும்
நற்போதம் வாராதங்கவர் குணமே
மேலாக நடக்குந் தானே."

(விவேக சிந்தாமணி)



ஆனால் நாமிப்பொழுது இதைப்பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கக்கூடாது. இராஜசிம்மா! கேள்! சூரசேனன் உன்னைக் கொல்லப் போகிறானென்னும் செய்தியை அறிந்தவுடன் என் தந்தை உன்னை இவ்வாபத்தினின்றும் தப்விக்க ஓர் சூழ்ச்சி செய்து என்னை இங்கனுப்பினார்.

இராஜசிம்மன்:—அப்படியானால் ஸ்ரீதரா! நாம் இச்சிறையினின்றும் வெளியேற ஏதாவது வழியிருக்கிறதோ?

ஸ்ரீதரன்:—அதைப்பற்றி நீ கவலைப்படாதே! உன்னைத் தப்புவிக்கவே நான் இப்பொழுது இங்கு வந்தது. நாளைப் பொழுது விடியுமுன் நாம் இந்நகருக்கு நான்கு காதத்திற்கப்பாலிருப்போம்! நீ யோசிக்காதே! (திறவுகோலைக் காண்பித்து) இதோ பார்! இதுதான் நமக்கு உயிர்ப்பிச்சைகொடுக்கும் கருவி! இன்றிரவு இச்சிறைச்சாலையின் பின் பக்கமிருக்கும் இரகசியக் கதவை இதனால் திறந்துகொண்டுதான் நாம் தப்ப வேண்டும்.

இராஜசிம்மன்:—ஸ்ரீதரா! உன் தந்தையை என் பிரத்தியட்சத் தெய்வமாக மதிக்கிறேன். நீயே என்னைக் காப்பாற்ற வந்திருக்கும் தேவதூதனென மதிக்கிறேன். நான் சுயேச்சையையடைய நீ சொல்லுமாறு செய்யத் தயாராயிருக்கிறேன். என்ன ஆபத்தாயினும் துணிந்து நடக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் ஒன்று. இப்பொழுது நான் இச்சிறையினின்றும் உயிருக்குப் பயந்து ஓடுவது என் ஆண்மைக்கு ஒவ்வாதாயினும், நான் என் சுயேச்சையை அடைந்த பிறகு இந்தச் சூரசேனனைத் தண்டிக்காமலிருப்பதில்லை. இது சத்தியம்.

ஸ்ரீதரன்:—இராஜசிம்மா! உலகில் எப்பொழுதும் அநியாயக்காரனுக்கே சாதகம் ஏற்படாது! உன் பிரதிக்ஞையை நிறைவேற்றவும் ஓர் காலம் வருமென்பதில் யாது ஆட்சேபனை?

இராஜசிம்மன்:—ஸ்ரீதரா! என்னே ஈசனது கருணை! நீ இன்றையதினம் இவ்விடம் வந்து என்னை இவ்வரசன் கொடுமையினின்றும் தப்புவிப்பாயென்று நான் கனவிலும் எண்ணவில்லை. எல்லாம் ஈசனது செயலே!

ஸ்ரீதரன்:—அதில் என்ன ஆட்சேபனை? அவனை நம்பினோரை அவன் கைவிடுவதில்லை. ஆயிரம் சூரசேனர்கள் ஒன்றுகூடிச் சூழ்ச்சி செய்தாலும் அவனன்றி ஓர் அணுவும் அசையுமோ?

(காட்சி முடிகிறது.)

(தொடரும்).

# ஆத்ம சிந்தனை.

உரோமாபுரிச் சக்ரவத்தியும் ராஜ ரிஷியுமான

மார்க்க அரேலியர்.

(ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் மொழி பெயர்ப்பு.)

சிற்ப வேலைக்காரர்கள் தங்களுடைய தொழிலில் தங்களுக்குள்ள ஆசையினால் உடம்பில் அழுக்குப் படிந்தும், பசியுடனும், மெய் வருத்தம் பாராமலும் தொழிலிலேயே கண்ணாயிருக்கிறார்கள். சிற்ப வேலைக்காரனுக்குத் தன் வேலையிலுள்ள ஆர்வம் அதைவிடச் சிறந்த பொருளான உன் மனத்தூய்மையில் உனக்கு இல்லையே. நாடகனுக்குத் தன் நிருத்தத்திலுள்ள மனப் பற்றளவு கூட உண்மையில் உனக்குக் கிடையாது. கிருபணனுக்குப் பணத்திலுள்ள ஆசை அளவும், டம்பன் தன்னைப் பிறர் புகழ்ந்து பேசுவதை விரும்பு மளவும் கூட உனக்கு உன் கடமையில் கருத்தில்லை. இவர்கள் தத்தம் நோக்கங்களிலே வைத்திருக்கும் பற்றினால் உண்ணுவதையும் உறங்குவதையும் கூட மறந்து விட்டுத் தாம் வேண்டும் பொருளை அடைவதிலேயே கருத்தாயிருப்பார். இவர்கள் வேண்டும் பொருள்களைக் காட்டிலும் ஒப்புறவு என்பது உனக்குப் பெரிதாகத் தோன்றவில்லையா?

சிலர் பிறனொருவனுக்கு ஒரு நன்மை செய்தால் அதைத் தங்களுடைய கணக்கில் குறித்துக்கொண்டு பிறகு அதற்குப் பதில் கேட்பார். சிலர் அப்படிச் செய்யாராயினும், தாம் செய்த உதவியை என்றும் நினைவில் வைத்துக்கொண்டு அவனைக் கடனாளியாகவே பாவிப்பார். வேறு சிலரோ தாம் செய்த உதவியை அறிய மாட்டார். அதைப் பற்றி நினையார். கொடிமுந்திரி பருவ காலத்தில் நல்ல பழம் தந்தபின் அதைப்பற்றி மறுபடி சிந்தியாது; தன் இயல்புக்கு இசையத் தன்னால் உதவக்கூடியதை உதவிவிட்டு அதைப்பற்றி மறுபடியும் கருதாது. குதிரை ஓடுவதும் இப்படித்தான். நாயும் இவ்வாறே வேட்டைக்குப் போகும். தேனீயும் தேனைச் சேர்ப்பது இப்படியே. இத்தன்மையையுடைய மனிதனும் ஒப்புற வறிந்து உதவியபின் அதைப் பற்றிப் பிறருடன் பேசான். கொடிமுந்திரி தான் முன் ஈன்ற பழங்களைப் பற்றி நினையாமல் மறுபடி அடுத்த பருவத்தில் பழம் தருவது போல் இவனும் உதவி செய்தபின் தான் செய்யக்கூடிய வேறு உதவியைப் பற்றித்தான் நினைப்பான். "இதென்ன தன்னைத் தானறியாமல் செய்வதுதான் மேலதா? பிறருக்கு உதவுவது அறியாமல் செய்த செயலாகவா இருக்க வேண்டும்?" என்று கேட்பாய். ஆம். அப்படியே தான். "கவனித்தல்லவோ ஒருவன் ஒரு காரியம் செய்யவேண்டும். ஒப்புறவு என்னும் தருமத்தைப் பிறரறிய வேண்டாமா? தானும் அறிந்து செய்து, பிறர் நினைவுக்கும் அது வருமாறு செய்தல் சரி தானே?" என்று நீ சொல்லுவாய். அது உண்மையே. ஆனால் நீ உண்மைப் பொருளை அறியவில்லை. நான் முன் சொன்னவர்களுங் கூட உன்னைப் போலவே தான் நியாயம் பேசி அவர்கள் செல்லும் வழி செல்லுகிறார்கள். கைம்மாறு வேண்டாமலும், செய்த உதவியை நினைவில் வைக்காமலும் இருப்பதால் ஒப்புறவு என்னும் கடமைக்குத் தீங்கு ஒன்றும் நேராது. அதற்காக நீ கவலைப்படவேண்டியதில்லை.

வைத்தியன் நோயாளிக்கு மருந்தும் பத்தியமும் நியமிப்பது போல் தெய்வம் மனிதர்களுக்குக் கஷ்டம் அளிக்கும். நோவும், அங்கவீனமாவதும், பொருள் நஷ்டமும்,



இவை போன்ற சம்பவங்களும் இவ்வாறு தெய்வத்தின் வைத்திய நியமங்களாகவே கருதப்பட வேண்டும். உடலின் நோய் தீருவதற்காக வைத்தியன் சொல்லும் பத்தியம் உடலின் தனி உறுப்பொன்றுக்குக் கஷ்டமாகவே யிருக்கலாம். அதைப்போல் உலக நடைக்கு வேண்டிய சம்பவங்கள் தனி மனிதனுக்குத் துன்பங்களாகவே தோன்றலாம். உலகம் முழுவதும் ஒரு ஜீவனுள்ள உடல். எல்லாருடைய உடல்களும் சேர்ந்து ஒரு உலக உடலாகும். எல்லாக் காரண காரியங்களும் சேர்ந்து ஒரு காரண காரியமாகிறது. அதுதான் உலகம். அதுதான் விதி என்று நீ எண்ணுவது. நீ விதி என்று வெறுப்பது உலகத்திற்கு உலக வைத்தியன் நியமித்த ஒரு பத்தியமேயாகும். ஆகவே ஒருவன் வைத்தியனுடைய கட்டளைகளை சந்தோஷமாய் ஒப்புவது போலவே விதியையும் ஒப்புக்கொள்ள வேண்டும். மருந்து கசக்கும். பத்தியம் கஷ்டமாய்த்தானிருக்கும். ஆனால் நோய் தீரும் என்று ஒப்புக் கொள்ளுகிறோம். உன் உடலின் நோயைத் தீர்க்க எவ்வாறு விரும்புகிறாயோ அவ்வாறு உலகம் முழுவதும் திரண்ட ஒருயிராகக் கருதி, அதன் நன்மையையும் விரும்பு. கஷ்டமாகத் தோன்றினாலும் விதியாக வந்ததைச் சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளக் கடவாய். அது உலக ஆரோக்கியத்திற்காகக் கடவுள் அனுப்பின மருந்தேயாகும். உலகத்தின் நன்மைக்காக அல்லாமல் ஒருவனுக்கு மாத்திரம் இந்தக் கஷ்டம் நேராது.

ஆகவே உனக்கு எது நேரிடினும் அதை நீ மனக் குறையின்றி ஒப்புக்கொள்ள இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, உனக்கென்று வந்த சம்பவம் இது. நீ எந்த சக்தியால் உண்டானாயோ அதே சக்தியிலிருந்து இதுவும் உண்டாயிற்று. இரண்டாவது காரணம், சர்வ ஜீவராசிகளின் க்ஷேமத்திற்கும் உலகம் ஓங்கிப் பரிபூரணமாவதற்கும் அவசியத்திற்குமே தனி ஜீவன்களைத் துன்புறுத்துவதுபோல் தோன்றும் சம்பவங்கள் உண்டாகின்றன. ஒன்றாக அமைக்கப்பட்ட இந்த ஜகத்தில் ஒரு பாகத்தை வெட்டி பேதித்தால் அதன் சுகமும் அழகும் குறையும். உலக அமைப்பில் நடக்கும் ஒரு விஷயத்தைக் குறித்து நீ தனித்து அதிருப்தி அடைவது ஒரு பாகத்தை வெட்டி பேதித்த தோஷமே யாகும். இயற்கை தருமத்திற்கு இடையூறு செய்த குற்றமே யாகும்.

எடுத்த ஒவ்வொரு காரியத்தையும் அறநெறி வழுவாமல் செய்து முடிக்க உன்னால் ஆகாமற் போனால், அதனால் காரியத்தில் வெறுப்புக் கொள்ளாதே. முயற்சியை விடாதே. பின் வாங்காதே. நீ எடுத்த காரியம் எம் மட்டும் நன்கு முடிந்ததோ அதற்காக மகிழ்ச்சி அடைவாயாக. எந்த பாகம் நன்கு முடியவில்லையோ அதைச் செய்து முடிக்க மறுபடி உற்சாகத்துடன் முயற்சிப்பாயாக. பள்ளிக்கூட வாத்தியாரிடம் குழந்தைகள் வெறுப்புடன் போவது போல் மெய் யறிவை நாடாதே. கண் வலிக்காகக் கண்ணை அலம்பி நோவு தீர்த்துக் கொள்ளப்போவது போலவும் காயப்பட்டால் ஒத்தடம் போட்டு மருந்து துடைத்துக் கொள்ளப் போவது போலவும் செய்வாயாக. மனதில் சாந்நியடைய மெய்யறிவை நாடு. அறிந்தவன் என்கிற கர்வம் காட்டாதே.

சித்து, சடம் இவ்விரண்டின் சேர்க்கையால் நான் உண்டாயிருக்கிறேன். இரண்டில் எதுவும் சூனியமாக அழிந்து போகாது, சூனியத்திலிருந்து உண்டாக வில்லை, ஆகையால் சூன்னியமும் ஆகாது. ஒவ்வொரு பகுதியும் விகாரப்பட்டு உலகத்தில் வேறு பொரு

ளில் சேர்க்கை யாகும். மறுபடி அவ் வுருவமும் மாறி வேறு பொருட்களில் போய்ச் சேரும். இப்படி அனந்த காலமும் மாறிக் கொண்டிருக்கும். ஆகையால் எனக்கு அழிவென்பது கிடையாது. முந்தியும் அனந்த காலம், பிந்தியும் அனந்த காலம் உருவம் மாறி இருந்து கொண்டே வருவேன். பிரளய காலங்களிலும் கற்பங்களிலும் உலகம் முடிவாவதாக வைத்துக் கொண்டாலும் இது உண்மையே யாகும்.

எந்தப் பொருள்களை நீ இடை விடாமல் சிந்திக்கிறாயோ அவற்றின் தன்மையை உன் மனம் அடைகிறது. சாயத்தில் தோயும் துணியைப் போல் உள்ளத்திலுள்ள எண்ணங்களில் தோய்ந்த ஆத்மாவின் நிறம் மாறும். ஆகையால் இத்தகைய எண்ணங்களை எப்போதும் எண்ணுவாயாக. எந்தப் பதவியிலும் நல் வாழ்வு வாழலாம். இராஜ கிருகத்திலும் கூட ஒருவன் உண்மை வாழ்வு வாழ முடியும். ஒரு பொருள் எதற்காக சிருஷ்டிக்கப்பட்டதோ அதற்கிசைய அதன் இயற்கையும் அமைக்கப்பட்டு வளரும். அதுவே அதன் தருமம். அதுவே அதன் நன்மையும். எனவே அறிவுள்ள மனிதனுடைய நன்மை ஒப்புற வறிந்து செய்தலே. அதற்காகவே அவன் ஜன்மம். ஜீவனற்ற பொருள்களை விட உயிருள்ளவை சிறந்தவை. உயிருள்ளவைகளில் அறிவுள்ள பிராணிகள் சிறந்தவை, பிராணிகளின் நன்மைக்காக ஜீவனற்றவை நிருமாணிக்கப்பட்டிருக்கின்றன. அறிவுள்ள பிராணிகள் தமக்குள் ஒருவருக்கொருவர் பணிசெய்து வாழ்வதற்காக பிறந்திருக்கிறார்கள்.

முடியாதது ஒன்றை எதிர்பார்ப்பது அறியாமை யாகும். துராத்மாக்கள் தங்களுடைய இயற்கைக்கு மாறாய் நடந்து கொள்வார்கள் என்று எதிர் பார்க்க வேண்டாம்.

எந்த ஸ்தூலப் பொருளாலும் ஆத்மா பாதிக்கப்படுவதில்லை. ஆத்மாவிடம் சென்று அதைத் தீண்ட அவைகளுக்கு வழியுமில்லை. அவைகளால் ஆத்மாவை அசைக்கவாவது நடத்தவாவது முடியாது. எதிர்ப்பட்ட பொருளைப் பற்றி என்ன எண்ணம் உள்ளத்தில் கொள்ளுகிறாயோ அதுவே தான் ஆத்மாவை பாதிக்கும். பொருள்களே அதை பாதிக்க முடியாது.

# சந்திரா.

## (ஸ்ரீமான். வெ. நாராயணன்.)

ஹொஸ்பேட்டை நகரத்தில் அன்று நாடகக் கொட்டகையில் கூட்டம் இவ்வளவென்று சொல்லி முடியாது. கர்னாடக தேசத்தில் ஆடி வரும் கம்பெனிகளுள் எல்லாம் 'நவீனகான சபை'யாரே மிகவும் பெயர் பெற்றவர்கள். அக்கம்பெனியின் நடிப்பின் திறமையும் கல்விப் பயிற்சியும் சங்கீத அழகும் மிக மெச்சத்தக்கவை. அக்கம்பெனியார் இரண்டு வாரங்களாக நாடகம் அவ்வூரில் நடத்தியதில் அவர்கள் பந்தலில் கூட்டத்திற்கும் அக்கம்பெனிக்கு பணத்திற்கும் ஒன்றும் பஞ்சமில்லை. எனினும் இன்று நாடகம் விசேஷமானது. பகலிலேயே டிக்கட்கள் எல்லாம் விற்றுவிடப்பட்டன. இரவில் வந்தவர்கள் இடமில்லாததால் திரும்பிப்போய்க் கொண்டும், வாயிலில் கூட்டங்கூடிக் கூச்சலிட்டுக்கொண்டுமிருந்தனர். உயர் பதவியிலுள்ள பிரபுக்களும, உயர்ந்த உத்தியோகத்திலிருந்த கனவான்களுங்கூட அன்று நாடகத்திற்குச் சென்றிருந்தார்கள் என்று சொல்வதே அன்று நாடகத்தின் பெருமையைக் குறிக்கப்



போதுமானதன்றோ. வடமொழிக்கவித்திறனில் முதன்மை பெற்றவரென உலகெங்கும் புகழ் கொண்டு விளங்கும் தெய்விகக் கவியாகிய காளிதாசனால் என்றுமழியாப் புகழ்கொண்டு விளங்குமாறு வல்லுயிர் கொடுக்கப்பட்ட 'சாகுந்தலம்' என்னும் நாடகமே அன்று நடத்தப்பட்டது. ஆயினும் சரித்திரத்தின் பெருமைக்காகமட்டும் அன்று அத்தனை பெயர்கள் கொண்ட கூட்டம் கூடியதாக வாசகர்கள் கருதி விடவேண்டாம். உண்மையாகவே அன்று அத்தனை பெயர்களைக் கூட்டத்தகுந்த காரணமொன்றிருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னேயே தெருச் சுவர்களில் சுமார் ஒரு அடி உயரமுள்ள எழுத்துக்கள் கொண்ட பெரிய கடிதங்களின் மூலம் தமிழ்நாடு முழுதும் கீர்த்தி பெற்ற சந்திரா என்னும் பெண்மணி தங்கள் கம்பெனிக்குப் பதினெட்டாந்தேதி முதல் வரப் போவதாகவும் அவள் நான்கு ஆட்டங்களுக்கே இருப்பதாகவும் அறிக்கையிட்டிருந்தனர். முதல் நாள் மாலை சந்திரா அவ்வூருக்கு வந்ததும் பலருக்குத் தெரியும். ஆகையால்தான் அன்று அளவிட முடியாத கூட்டம்.

அன்றிரவில் சந்திராவின் இன்னிசையின் சுகத்தையும் நடிப்பின் அழகையும் கண்டு மயங்காதவரில்லை. அவள் முகத்தில் விளங்கிய இளமையழகிற்கும் மேன்மைக்கும் அவள் மனத்தில் விளங்கிய நிர்மலத்தன்மை அபூர்வமான ஓர் ஒளியைத்தந்து பார்ப்பவரையெல்லாம் பரவசப்படுத்திற்று. சந்திரா மேடையில் தோன்றும் பொழுதெல்லாம் ஜனங்கள் ஆரவாரித்தனர். ஆனால் முன் புறத்தில் முதல் வகுப்பு நாற்காலியிலுட்கார்ந்திருந்த கோபாலகிருஷ்ணனுக்கு மட்டும் இளந்தளிர் போன்ற அவளது குழந்தைப்பருவமும், அவள் முகத்தில் வேஷத்திற்கும் நடிப்பிற்கும் ஒக்க விளங்கிய சோகம் உண்மையாக இருப்பதும் விளங்கி அவர் மனத்தைப் புண்படுத்திற்று. உலக அனுபவமென்னும் மாசுபடியாது இன்னும் புதிய வெண்துகில் போன்ற மனது படைத்த இவ்விளம்பெண் தானாக இவ்வழிகளிற் பிரவேசித்திருக்கமாட்டாள் என நினைத்தார்.

சகுந்தலை இராஜதர்பாரில் துஷ்யந்த மகாராஜனிடம் தான் அவன் மனைவி எனக் கூறி தன்னை அங்கீகரிக்குமாறு வாதாடும் சீன் நடைபெற்றது. பந்தலிலிருந்த எல்லோரும் சந்திராவின் சொற் பொழிவையும் அதற்கேற்ற அபிநயத்தையும் கண்டு மயக்கம் கொண்டு பரவசமாய்க்கிடந்தனர். ஒருவர் பெருமூச்சு விட்டாலும் கேட்கும்படி அவ்வளவு நிச்சப்தம் நிறைந்திருந்தது. சகுந்தலை தன்னாலியன்றவளவு அறவியல்களையும் நீதிநெறிகளையும் எடுத்துக்காட்டியும், எத்தனையோ அடையாளங்களால் நிரூபிக்க முயன்றும் அரசன் ஒப்புக்கொண்டு இணங்குவதாகக்காணோம். முடிவில் அவள் " அரசரே! தாங்கள் பொய்பேசுவதில் இவ்வளவு சமர்த்தர் என்பதையும், அறநெறியல்லாப்பிறநெறியிற் செல்லச் சற்றும் பின் வாங்காதவர் என்பதையும், கருங்கல்லினும் மேம்பட்ட கடின சித்தர் என்பதையும் முன்னமே யுணராது மதிமோசம் போனேன். என் வாழ்க்கை இனிப் பயனற்றதாய் விட்டது. என்னை உயிர்வாழச் செய்யத்தக்கது இனி இவ்வுலகில் ஒன்றுமே இல்லை. நான் தங்கள் மனைவி என்பதும், இச்சிறுவன் என் வயிற்றிற் பிறந்த தங்கள் மகனென்பதும் வேதங்கள் எவ்வளவு சத்தியமோ அவ்வளவு சத்தியமானவை. தாங்கள் அதற்குத்தக்க ருஜு கேட்கிறீர்கள். இனி கடவுளே எனக்குச் சாட்சி. இனி எனக்கு அவர்தான் துணைபுரியவேண்டும்." எனக்கூறி மூர்ச்சையாய்க் கீழே சாய்ந்து விட்டாள். உடனே பந்தல் முழுதும் கடல்போல் கோஷித்தது.

ஆனால் இவ்வாறு மூர்ச்சித்து விழுதல் நடிக்க வேண்டிய ஒன்றாகவே திரை உடனே தாழ்த்தப்பட்டு அக்கம்பெனியின் முதளாளியான குண்டுராவும் மற்றுஞ் சிலரும் தோன்றினர். சந்திராவுக்குச் சைத்தியோபசாரஞ் செய்த பின் மூர்ச்சை தெளிந்தது. முதலாளி அவள் ஏன் கீழே விழுந்தாள் என்றும் உடம்பு என்னவென்றும் விசாரித்தான்.

தான் சாயங்காலமே சொல்லியிருந்தபடி தனக்கு உடம்பெல்லாம் வலியாயும், சோர்வாயும் இருந்ததோடு இத்தனை பெயர்களுக்கு மத்தியில் சென்று ஆடுவதால் உண்டாகிய சிரமம் தாங்காமல் மூர்ச்சையடைந்து விட்டதாகக் கூறி இனித்தன்னால் ஆட முடியாதெனவும் கூறினாள்.

முதலாளி குண்டுராவுக்குக் கோபம் வந்தது. "ஆட மாட்டேனென்று சொல்ல நீ யார்? என் சோற்றைத்தின்று நான் கொடுக்கும் கூலியைக் கொண்டு பிழைக்கும் நீ நான் சொல்லியபடிதானே நடக்கவேண்டும். இல்லாவிட்டால் உன் கதி என்னவாகும் தெரியுமா?" என அதட்டி, மேற்கொண்டு சிலவசவுகளையும் அடுக்கினான். சந்திரா அழலானாள். "ஐயா, முடிந்தால் நான் செய்யமாட்டேனா? இதுவரை நீங்கள் சொல்லியதை மீறி நடந்திருக்கிறேனா? இன்று மட்டும் தயவுசெய்து உத்திரவு கொடுங்கள். என்னால் முடியவே முடியாது" எனக் கெஞ்சிக் கேட்டாள்.

சந்திரா மூர்ச்சையடைந்து கீழே விழுவதைப் பார்த்து கோபாலகிருஷ்ணனுக்குத் துன்பம் பொறுக்க முடியவில்லை. "உன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவளாகையால் உன் சகோதரியாகிய இச் சிறுபெண் இவ்வளவு துன்பப் படுவதைப் பார்த்திருந்தும் நீ உதவிபுரிந்து காப்பாற்றாதிருத்தல் நியாயமா? நீ இச்சமயம் அவளைக் காக்க முன்வாராவிடில் அப்பேதைப் பெண் சிறிது காலத்திற்குள் தன் மானம் மனவமைதி என்றவற்றை எல்லாம் இழந்துவிட்டுத் தன் வாழ்க்கையை விஷமாக்கிக் கொள்ள மாட்டாள் என்பது என்ன நிச்சயம்?" என அவரது மனசாட்சி கேட்கலாயிற்று. கோபாலகிருஷ்ணன் பிற்புறமாகச் சென்று அங்கிருந்த வாயில் வழி நுழைந்தார். அப்பொழுது முதலாளி சந்திராவை நோக்கி "நீ என் உத்திரவை மீறி நடந்தால் தெருவில் தான் நிற்கவேண்டுமென்பதை மறந்து விட்டாயா? உடம்பு அசௌகரியமென்ற சாக்கெல்லாம் என்னிடம் பலியாது. திரும்பவும் ஆட்டத்திற்குப் போவாயா? மாட்டாயா? முடிவாகச் சொல்லிவிடு" எனக் கூறியது அவர் காதில் விழுந்தது.

வாயிலில் உருவம் ஒன்று தோன்றவே இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். சந்திராவிற்கு வந்தவரது முகத்தைப் பார்க்கவும் அவர் தனக்கு உதவிபுரியவே வந்திருக்கிறார் என எக்காரணத்தாலோ தெரிந்தது. அவள் தைரியமாக குண்டுராவின் கேள்விக்கு "முடியாது" எனப் பதிலுரைத்தாள். இதற்குள் "சந்திரா, பயப்படாதே" எனக் கூறித் தைரியப்படுத்துவதுபோல் அம்மனிதன் அருகில் வந்து விட்டார். வந்தவர் "குழந்தாய்! உனக்கு இத் தொழில் வேண்டாம். என்னுடன் வருகிறாயா?" என்று கேட்டார்.

"ஓ, வருகிறேன். தாங்கள் எனக்கு எங்காவது ஒரு தொழில் செய்து பிழைக்க ஏற்பாடு செய்யுங்கள், வந்துவிடுகிறேன்" என்று விடை பகர்ந்தாள்.

இன்னும் "ஐபா, நான் அசடு அல்ல. எனக்குக் கைத்தையலும் மெஷினில் தைக்கவும் தெரியும். இன்னும் நூல்பின்னல் தெரியும். வீட்டுவேலைகளும் சரியாகச் செய்வேன். சங்கீதமும் கொஞ்சம் தெரியும். இவற்றைக் கொண்டு பிழைத்துக் கொள்வேன். ஒருவரை



யண்டி வயிறு வளர்க்க வேண்டாம். இன்னும் ஏதேனும் கற்றுக்கொடுத்தாலும் கற்றுக் கொள்கிறேன்" என்று முடித்தாள்.

இதன் பின் குண்டுராவ் பயமுறுத்தவாவது, அதட்டவாவது இல்லை. "சந்திரா, நீ சிறு குழந்தை. நான் சொல்வதைக் கேள். இதைக் காட்டிலும் இன்பமும், சுகமும் நிறைந்த வாழ்வு உனக்கு எங்கும் கிடைக்காது. நீ போவதானால் உனக்கு நன்மையுண்டாகாது. நீ போகப் போகிறாயா? சொல்" என்று கேட்டான்.

"ஆம், இதிலும் மேலான வேலை கிடைப்பதானால் போய்விடுவேன்."

தன் மனத்தில் தோன்றிய வெறுப்பை யடக்கிக் கொண்டு "அவர் எக்கருத்தை மனத்தில் கொண்டு உன்னை யழைத்துப் போகிறார் என உனக்குத் தெரியவில்லை. நீ சிறு பெண்ணாகையால் உனக்குத் தெரியாது" என்று சொன்னதைக் கேட்கவும் கோபாலகிருஷ்ணன் கோபங் கொண்டு முதலாளியைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார். அவன் திரும்பிவந்து "அடா! இதற்கு உன்னை இலகுவாய் விட்டுவிடமாட்டேன். என்னை யார் என்று நினைத்தாய்?" என கர்ஜித்தான்.

கோபாலகிருஷ்ணன் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து குண்டுராவ் கையில் கொடுத்து "இதோ, இதை வைத்துக்கொள். இனிச் சச்சரவு செய்யாதே. அப்பெண்ணை நான் அழைத்துப் போகப் போகிறேன். இதில் உனக்குத் திருப்தி இல்லையானால் இதில் குறித்திருக்கும் என் காரியஸ்தர் விலாசத்திற்கு எழுது. ஏதேனும் இன்னும் பெறுவாய்" எனக் கூறித் தன் பெயர் அச்சிட்ட சீட்டொன்றை எடுத்து அதன் பின்புறத்தில் ஓர் விலாசத்தை எழுதிக் கொடுத்துவிட்டு சந்திராவை அழைத்துக் கொண்டு புறப்படலானார். ஆனால் முதலாளி தடுத்து "நீர் எவ்வளவு பணம் கொடுத்தாலும் சந்திராவை விடமுடியாது. அவள் மூன்று வருஷங்களுக்கு எங்கள் கம்பெனிக்கு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்திருக்கிறாள்" என்று கூறினான்.

கோபாலகிருஷ்ணன் "என்னடா! போக்கிரித்தனம் செய்கிறாய்? அவள் சிறுகுழந்தை, வயது பதினான்கிற்கு மேலிராது. அவள் எழுதிக் கொடுத்த ஒப்பந்தம் செல்லத்தக்கது அல்ல எனத் தெரிந்திருந்தும் நீ ஏன் இப்படிப் பேசுகிறாய்? ஓர் சிறு பெண்ணை ஏமாற்றி ஒப்பந்தம் என ஒன்றில் கையெழுத்திடச் சொல்லி அதைக் கொண்டு அவளைத் துன்பத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கியதாக உன் மேல் வழக்கிட்டால் உன் கதி என்னாகும் தெரியுமா?" எனக் கோபத்துடன் மொழிந்து விட்டு இருவரும் வெளியேறி விட்டார்கள்.

குண்டுராவ் சீட்டைத் திருப்பிப் பார்த்தான். அதில் 'N. கோபாலகிருஷ்ணன், பனங்குளம் ஜமீன்தார், திருநெல்வேலி' என எழுதியிருந்தது. சந்திராவை அழைத்துச் சென்றவன் தன்னைவிடப் பணத்திலும், பதவியிலும், செல்வாக்கிலும் மேம்பட்டவன். இன்னும் இருவரும் தமிழர்கள். ஆகையால் அவனுடன் இனிச் சண்டைபோடுவதில் பிரயோஜனமில்லை என்றுணர்ந்தான். அதன் பின் தன் மனத்திற்குச் சமாதானம் கூறிக்கொள்ளும்வழி ஒன்றே இருந்தது. அவளால் இதுவரை நாமடைந்த பிரயோஜனம் கொஞ்சந்தான். இம்மாதிரியாக அடிக்கடி செய்வாளானால் நம் கம்பெனியின் பெயர் சீக்கிரம் கெட்டுவிடும். தவிர, அவளுக்கு இரண்டு மாதத்திற்கு 40 ரூபாய் சம்பளங் கொடுத்திருக்கிறேன். அம்மனிதன் அவளுக்கு விலை 50 ரூபாய் கொடுத்து விட்டான். ஆகையால் நஷ்டமொன்றுமில்லை. இனித் தக்க வய

துள்ள பெண் ஒருத்தியைக் கம்பெனியில்சேர்த்துக்கொள்வோம்" எனக் கூறிக் கொண்டான்.

முக்கிய ஆக்டரான சந்திரா என்னும் பெண்ணுக்கு உடம்பு அசௌகரியமாய் விட்டதால் அன்று நாடகம் அத்துடன் நிறுத்தப்படும் எனக்கூறி நிறுத்தி விட்டார்கள்.

கோபாலகிருஷ்ணனும் சந்திராவும் கையைப் பிடித்துக்கொண்டு நிலவில் சாலை வழியே சென்றார்கள். அப்பெண் தன் கதையைக் கூறிக்கொண்டு வந்தாள். சந்திராவின் தகப்பனார் ஓர் சங்கீத வித்துவான். ஊரில் பிரபுக்கள் வீட்டிலும் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் வீட்டிலும் பெண்களுக்குச் சங்கீதம் கற்பித்து ஜீவித்துவந்தார். சந்திரா ஒரே குழந்தை. அவள் தகப்பனார் திடீரென நோய் கண்டு இறந்தார். அதன் பின் அவளும் அவள் தாயும் கஷ்ட ஜீவனம் செய்ய வேண்டியதாயிற்று. சந்திராவின் தாய் அவ்வூரில் வேலை பார்த்து வந்த முன்சீப் வீட்டில் வேலை செய்து பிழைத்தாள். அப்பொழுது சந்திராவிற்கு வயது பத்து. தகப்பனார் இறந்து ஒன்பது மாதங்களுக்கெல்லாம் தாயும் மனக்கவலையால் உடல் நீத்தாள். சந்திராவின் பாடு நிர்க்கதியாய்விட்டது. அவ்வூரில் ஒரு கனவான் சந்திராவின் நிலைமைக்கு இரங்கியும் அவள் தகப்பனாரது பழக்கத்திற்காகவும் அவளைத் தன் குழந்தைகளோடு வளர்ப்பதாக அழைத்துச் சென்றார். ஆனால் அவர் மனைவிக்குச் சிறிதும் இது பிடிக்கவில்லை. ஆகவே அங்கு அவள் அதிக சுகப்படவில்லை. வீட்டு வேலையில் பாதி சந்திராவைப் பொறுத்தது. இன்னும் அவர் வீட்டிலில்லாத பொழுதும் அவர் காதிற் படாமலும் அக்குழந்தையைத் துன்புறுத்தியும் திட்டியும் வந்தாள். நாளடைவில் இவை எல்லாம் வீட்டு யஜமானனுக்கும் தெரிந்தது. அவ்வீட்டில் சந்திரா ஒரு வருஷமிருந்தாள். அதன் பின் அடுத்த ஊரில் சில பெரிய மனிதரிடம் சிபார்சு செய்து அங்கு சாப்பாடும் கல்வியும் இனாமாகக் கிடைக்கும்படி செய்து அங்கு அனுப்பினார். அப்பள்ளிக்கூடத்தில் படித்த இரண்டு வருஷங்களில்தான் சந்திரா தனக்குத் தெரிந்த படிப்பும் சிறிது சங்கீதமும் மற்றக் கைத்தொழில்களும் கற்றுக் கொண்டது. அவள் படித்த இரண்டு வருஷங்களுடன் அப்பள்ளிக்கூடத்தில் படிப்பு முடிந்து விட்டது. அதன் பின் என்ன செய்வது என்பது அப்பெண்ணுக்குப் பெரிய கவலையாய் விட்டது. இதன் மேல் நடந்தவற்றை அவள் வாயாலேயே சொல்லக் கேட்போம்.

"ஒரு நாள் அப்பள்ளிக்கூடத்தில் வருஷக் கொண்டாட்டம் நடைபெற்றது. அதில் நானும் இன்னுஞ் சில பெண்களுஞ் சேர்ந்து ஓர் நாடகம் நடித்தோம். அன்று ஊரிலிருந்த பெரிய மனிதர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். எனது பாட்டையும் நடிப்பின் திறத்தையும் கண்டு எல்லாரும் மெச்சினார்கள். அவ்வூர் மாஜிஸ்திரேட் அவர்கள் எனக்கு ஒரு ஹார்மோனியம் இனாமாகக் கொடுத்தார். அன்று முதல் நான் மிகக் கர்வங்கொண்டு விட்டேன். மற்றப் பெண்களை லட்சியஞ் செய்வதில்லை. எல்லாக் குட்டிகளும் என்னைப் பரிகசித்தார்கள். அன்று நாடகத்திற்கு குண்டு ராவும் வந்திருந்தார்போலும். பின்பு என்னைப்பற்றி விசாரித்து என் நிலைமையைத் தெரிந்துகொண்டார். நான் அனாதையாய் தர்மத்திற் பிழைப்பதை யறிந்து கொண்டு என்னை ஒரு நாள் தனியாகக் கண்டு எனது சங்கீதத் திறமையையும் நடிப்பின் சாமர்த்தியத்தையும் பற்றி மிகப் புகழ்ந்து தன் கம்பெனிக்கு வந்தால் மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகவும் அதைக் கொண்டு கஷ்டமில்லாமலும் பிறாது தயவை எதிர் பாராமலும் பிழைக்கலாமென்றும் கூறி



என்னைக் கூப்பிட்டார். நான் உடனே ஒப்புக்கொண்டு விட்டேன். சில நாட்களில் இருவரும் அவ்வூரை விட்டுப் புறப்பட்டோம். நான் கம்பெனியில் சேர்ந்த மறுநாளே குண்டுராவ் எனக்குச் சங்கீதப் பயிற்சி இன்னும் போதா தென்றும் அக்கம்பெனியிலிருந்து கொண்டே ஆறு மாதம் கற்கவேண்டுமெனவும் கூறி அந்த ஆறு மாதத்திற்கு எனக்குச் சம்பளமாக ஒன்றுங் கிடைக்காது, சோறு துணி முதலியவற்றைப் பற்றித் தான் பார்த்துக் கொள்வதாகவும் கூறினார். என் மனம் பகீரென்றது. ஆயினும் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டேன். சங்கீதம் ஆறு மாதம் பயின்றாலும் மூன்று மாதங்களுக்குப் பின் சிறு சிறு வேஷங்கள் போட்டு நடிக்க எனக்கு அனுமதி கிடைத்தது. ஆயினும் அவற்றில் எனக்குத் திருப்தி இல்லை. முக்கிய பாத்திரமொன்றாக நடித்து எல்லோருடைய புகழையும் பெற வேண்டுமென ஆசை இருந்தது. அக்காலமும் வந்தது. இன்று நான் நடித்தது நான்காவது நாடகம். இன்று பெரும்புகழ் கிடைத்தாலும் என் மனத்திற்குச் சந்தோஷமில்லை.

"சிறிது காலமாக முதலாளி என்னிடம் நடந்து கொண்ட மாதிரி எனக்குப் பிடிக்கவில்லை. வெளிக்குக் கெடுதலாகத் தெரியக்கூடிய தொன்றும் இல்லை. என்னிடம் பேசும் பொழுதெல்லாம் பரிகாசமாகவும் விளையாட்டாகவும் பேசுவதுமல்லாமல் நான் மெச்சவேண்டுமென்பதற்காகப் போலும், அடிக்கடி என்முன் தன் பிரதாபத்தைக் கூறிக்கொள்வார். இவை எல்லாம் நல்லதற்கு அன்றென எப்படியோ என் மனத்தில் தோன்றிற்று. அக்கம்பெனியில் இன்னொரு ஸ்திரீ இருக்கிறாள். நாங்களிருவரும் வெகு சிநேகம். ஒரு நாள் என் மனத்தில் முதலாளியைப்பற்றி யிருந்த அபிப்பிராயத்தை இரகசியமாக அவளிடம் கூறினேன். அவள் முதலாளியின் கருத்து இன்னதாக இருக்கலாமென்று கூறி நான் இன்னும் சில மாதங்களில் பருவமடைந்து விடுவேனாகையால் என் நடத்தையைப் பற்றி வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமெனக் கூறினாள். இன்னும் இது காறும் எனக்குத் தெரியாத பல விஷயங்களையும் கூறி, குடும்ப வாழ்க்கையைப்பற்றியும் குடும்பத்தில்லாது மற்ற விடங்களில் வாழ்வதில் ஸ்திரீகளுக்கு நேரக்கூடிய அபாயங்களையும் மானக் கேடுகளையும் பற்றி மிகச் சொன்னாள். அவற்றைக் கேட்கவும் என் மனதில் இன்னதெனச் சொல்லத் தெரியாத வேதனை உண்டாயிற்று. அது முதல் பலநாட்களுக்கு எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. இப்புதிய ஞானம் உண்டாகிய பின் முதலாளியின் நடத்தையை மிகக் கவனமாகப் பரிட்சித்து வந்தேன். என் சந்தேகங்கள் உறுதியாயின. எனக்குப் பயமதிகரித்தது. எப்படியும் அங்கிருந்து புறப்பட்டு விடவேண்டுமெனப் பார்த்தேன். வழியொன்றுந் தெரியவில்லை. இதற்குள் நான் நாடகத்தில் சகுந்தலையாக நடிக்க வேண்டுமாகையால் அதற்கு வேண்டிய பாட்டுக்களையும் பேச்சுக்களையும் கற்கும்படி கட்டளையிடப்பட்டேன். அத்துடன் அவ்வூரில் நாடகம் முடிந்து விட்டதால் கம்பெனி இங்கு வந்தது. எல்லோரும் புறப்படும் பொழுது குண்டுராவ் என்னிடம் வந்து எனக்குக் கீர்த்தியும் கம்பெனிக்கு நல்ல வருமானமும் கிடைக்கும்படி தான் ஒரு யுக்தி யோசித்திருப்பதாகக்கூறி அதன்படி நான் அவ்வூரில் பத்துநாட்கள் தங்கிப் பின்பு அவர்களிருக்குமிடம் போய்ச் சேரவேண்டுமெனச் சொன்னார். நான் அவ்வூரில் தங்கி இருக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். புறப்பட வேண்டிய நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பு ஜுரம் வந்துவிட்டது. ஆகையால் குறித்த தினத்திற்கு மூன்று நாட்கள் கழித்துதான் வந்தேன்.

காய்ச்சல் விட்டும் உடம்பெல்லாம் வலித்துக் கொண்டும் கைகால்கள் சோர்ந்து மிருந்தன. என் தேகஸ்திதியை முதலாளியிடம்கூறி இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கழித்து ஆடுவதாகக் கூறினேன். அவர் அதற்கு ஒப்பாமல் முன்னமேயே நான் வருவதாக விளம்பரப்படுத்தி விட்டதால் இனி ஆட்டத்தை நிறுத்த முடியாதெனக் கண்டிப்பாய்க் கூறிவிட்டார். என் விதியை நொந்து கொண்டு இன்று மாலை வேடமணிந்து கொண்டேன். 'இனித் தெய்வந் தான் எனக்குத் துணைபுரிய வேண்டும்' எனக் கூறிய பொழுது உண்மையாக அப்பொழுது என் நிலைமை அப்படி இருப்பது நினைவிற்கு வந்து துக்க முண்டாகி விட்டது. உடல் ஏற்கனவே களைத்திருந்ததால் மூர்ச்சை போய் விட்டேன்.

"இனி எனக்குப் பயமில்லை. தெய்வமே தங்களை யனுப்பி என்னைக் காத்தது. எனக்கு ஏதேனும் ஒரு வேலை பார்த்துக் கொடுங்கள். அல்லது தாங்களே ஏதாவது ஒரு வேலையிட்டாலும் செய்து அதனால் பிழைக்கிறேன். சோம்பேறியாய் உட்கார்ந்திருக்கப் பிடியாது என நினைக்கிறேன்" எனக் கூறிக் கதையை முடித்தாள்.

கோபாலகிருஷ்ணன் கதையைக் கேட்டுக் கொண்டே இப்பெண்ணிற்கு என்ன ஏற்பாடு செய்வதென யோசித்துக்கொண்டிருந்தார். ஒன்றும் தீர்மானமாகவில்லை. தற்காலம் தன்னுடனேயே இருக்கட்டும். தான் வீட்டுக்குப் போனபின் ஏதாவது செய்வதெனத் தீர்மானித்தார்.

"சந்திரா! வேலைக்குப் போக உனக்கு இன்னும் வயதாகவில்லை. நீ இன்னுஞ் சிலகாலம் படித்தால் நல்லதென எனக்குத் தோன்றுகிறது."

"படிப்பதில் எனக்கு மிகவும் ஆசைதான். ஆனால் என் ஜீவனத்திற்கு நான் சம்பாதிக்க வேண்டியிருக்கும்பொழுது படிப்பதெப்படி?"

"சந்திரா! நீ இப்படிப் பேசுவது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. இன்றுமுதல் நீ என் பெண். நானிருக்கும்வரை உனக்கு ஜீவனத்திற்குக் கஷ்டமென்ன? நான் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால் படிப்பாயா? சொல்."

"தருமத்திற் பிழைப்பதென்றால் எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஆயினும் தாங்கள் சொல்லும்பொழுது முடியாது என்று மறுத்துக் கூறவும் முடியவில்லை. தாங்கள் கட்டளையிடும்பிரகாரம் நடந்துகொள்ளுகிறேன்."

மறுநாள் இருவரும் பம்பாய் போகும் பகல் வண்டியில் புறப்பட்டார்கள். இங்கு அவர்கள் போகுமிடத்தைப்பற்றியும் கோபாலகிருஷ்ணன் என்பவரது வாலாற்றையும் சுருக்கமாகக் கூறுவோம்.

கோபாலகிருஷ்ணன் திருநெல்வேலி ஜில்லாவில் பனங்குளம் ஜமீன்தார் எனக் கூறியிருக்கிறோம். ஆயினும் அவர் உண்மையில் ஒரு பெரிய மிட்டாதாரே. பனங்குளம் கிராமத்திலிருக்கும் நிலங்களில் பாதிக்குமேல் இவருடையது. இன்னும் சிறு கிராமங்களாக இரண்டு இவருக்குச் சொந்தமானவை இருக்கின்றன. அருகிலுள்ள மலைத்தொடரில் சுமார் 15 சதுர மைல் விஸ்தீரணமுள்ள காடும் இக்குடும்பத்தார் வாங்கி இருந்தனர். இவற்றிலெல்லாமாக வருஷத்தில் லட்சக்கணக்கான ரூபாய்கள் வரும். ஆகையால் பாம்பரையாய்ப் பெரும் பணக்காரர்கள். கோபாலகிருஷ்ணனது முன்னோர்களில் ஒருவர் (இவருடைய பாட்டன்) பெருமைக்காகத் தன்னை ஜமீன்தார் எனச் சொல்லிக்கொண்டு வந்தார். அவர் காலத்திலிருந்து அக்குடும்பத்தில் அப்பட்டம் நிலைத்துவிட்டது. ஆயினும் அவ்வூரார் மட்டும் அக்



குடும்பத்தினரைப் பண்ணையார் என்றே சொல்லி வந்தனர். அவர்களுக்குச் சொத்து இருக்குமிடங்களில் எல்லாம் பனங்குளமே வாசத்திற்கு வசதி யுள்ளதாகையால் பரம்பரையாய்ப் பண்ணையார் குடும்பத்தவர்கள் அங்கேயே வீடு கட்டி வசித்து வந்தார்கள்.

சிறிது காலமாகத் தேசத்தில் ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்று வந்தது. அதில் எல்லாவற்றையும் தன்னால் அனுஷ்டிக்க முடியாதெனக் கருதி கதர் இயக்கத்தில் மட்டும் உழைத்து வந்தார். அப்பிரதேசத்தார் அவரை அவ்வருஷம் ஆமதாபாத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மகா சபைக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்காகப் புறப்பட்டுப் போகும்வழியில்தான் அவர் நமக்குமுதன்முதல் தென்பட்டார். சென்னையிலிருந்து நேராகப் பம்பாய்க்குப் போய்விடாமல், முன்னொரு காலத்தில் கிஷ்கிந்தையாக இருந்ததாகக் கருதப்படுவதும், பின்பு ஹிந்து இராஜ்யத்தின் தலைநகரான விஜயநகரமாக விளங்கியும் இப்பொழுது அழிந்தும் கிடக்கும் ஹம்பி என்னும் பிரதேசத்தைப் பார்க்கச் சென்றார். அங்கிருந்து திரும்பிச் செல்லும் வழியில்தான் அவரை நாம் ஹோஸ்பேட்டையில் சந்தித்தது.

சந்திராவும் கோபாலகிருஷ்ணனும் புனா மார்க்கமாய்ப் பம்பாய் போய்க் குறித்த காலத்தில் ஆமதாபாத் நகரத்தை யடைந்தார்கள். அவ்வருஷம் காங்கிரஸ் வெகு விமரிசையாகவே நடந்தது. ஆனால் நம் கதைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாததால் நாம் அதைப்பற்றி ஒன்றும் விசேஷமாய் விரித்துரைக்கப்போவதில்லை. நமது கவனமெல்லாம் இவ்விருவரைப் பற்றியதே.

இருவருமாக நகரத்தையும் காங்கிரஸ் நகரையும் அவற்றிலுள்ள வேடிக்கைகளையும் காட்சிகளையும் பார்த்துவிட்டு ஒரு நாள் சபர்மதிக்குச் சென்றார்கள். அங்கு சத்தியாக்கிரக ஆசிரமம் சென்றிருந்தபொழுது அங்கு இருப்பவரின் வாழ்க்கை நலத்தையும் அன்பையுங் கண்டு சந்திரா தான் இரண்டு மூன்று வருஷங்களுக்கு அங்கேயே படிப்பதாகச் சொன்னாள். கோபாலகிருஷ்ணனும் சம்மதித்து அங்கேயே அவளை விட்டு ஊர் வந்து சேர்ந்தார். சந்திராவிற்குத் தெரியாமலே ஆசிரமத்திற்கு அவள் செலவுகளுக்கு வேண்டிய பணஉதவி செய்தும் வந்தார்.

பனங்குளம் கிராமத்திற்குச் சுமார் கால் மைல் மேற்கே பெரிய மாடி வீடு ஒன்றும் அதைச் சுற்றிலும் பல மரஞ் செடிகள் கொண்ட அழகிய தோட்டம் ஒன்றும் உண்டு. தோட்டத்தைச் சுற்றிலும் சுவருக்குப் பதிலாய் இரும்புக் கம்பிகள் நடப்பட்டு சுமார் ஏழு அடிவரையிலும் பல வரிசைகளாக முட்கம்பிகள் கட்டப்பட்டிருந்தன. முன்புறத்தில் மட்டும் கற்சுவரும் அதன் மத்தியில் இரு பெரிய இரும்புக் கம்பிக் கதவுகளால் காக்கப்பட்ட பெரிய வாயிலுமிருந்தன. வாயிலின் இருபுறத்திலும் சுவரில் சதுரக் கற்கள் பதிக்கப்பட்டு அவற்றில் ஒருபுறம் 'சாந்தி குடீரம்' என்றும் மற்றொரு புறத்தில் 'N. கோபாலகிருஷ்ணன்' என்றும் எழுதப்பட்டிருந்தன. உட்புறமாக வாயிலின் இருமருங்கிலும் இரும்புத் தகட்டுக் கூரைகளால் மூடப்பெற்ற அறைகள். அவற்றில் ஒன்றில் ஒரு கோச் வண்டியும் மற்றொன்றில் ஒரு மோட்டாரும் நின்றன. மற்றொரு புறத்தில் இரு அறைகளில் ஒன்றில் இரண்டு குதிரைகளும் மற்றொன்றில் சவாரிக்கு ஏற்ற குதிரையொன்றும் நின்றன. பண்ணையார் கோபாலகிருஷ்ணனுக்குக் குதிரை சவாரி செய்வதில் மிகப் பிரியம். ஒரு காலத்தில் 3 குதிரைகள் வைத்திருந்தார். இப்பொழுது வயதாக ஆக இரண்டு குதிரைகளை விற்றுவிட்டார். வாயிலினின்றும் வீட்டின்

முன் தாழ்வாரத்தின்வரை சென்ற பாதையின் இருமருங்கிலும் வரிசையாக மருத்தோன்றிச் செடிகள் ஒரே உயரமாய் வெட்டி விடப்பட்டு வளர்ந்திருந்தன. அவற்றின் கீழ் தண்ணீர் ஓடும். வாய்க்காலின் இருகரையிலும் பசும்புல் அடர்ந்திருந்தது. அவ்வீட்டைச் சுற்றிலும் இருந்த தோட்டத்தைப்போல் பல தோட்டங்கள் காண்பதரிது. மா, கொய்யா, எலுமிச்சை, மாதுளை முதலிய கனி மரங்களும் மற்றும் அபூர்வ ஜாதி மரங்கள் பலவும் நின்றன. தோட்டத்தின் ஒரு மூலையில் ஒரு சிறு வாழைத் தோப்பு; மற்றொரு மூலையில் அடர்ந்து வளர்ந்து பூக்களால் மூடப்பட்ட மல்லிகைப் புதர். இன்னும் வீட்டு உபயோகத்திற்காகக்கூடிய சில காய்களும் கிழங்குகளும் கூட அத்தோட்டத்திலேயே கிடைக்கும். வாயிலிலிருந்து வீட்டிற்குச் செல்லும் பாதையின் இருபுறத்திலும் வெகு அழகான காட்சி. ஒருபுறத்தில் ஓர் பெரிய வட்டமாக ரோஜாச் செடிகளும் மத்தியில் ஓர் பெரிய மல்லிகைச் செடியும் இருந்தன. மற்றொரு புறத்தில் ஓர் வட்டம் மல்லிகைச் செடிகளும் நடுவில் ரோஜாச் செடியும் உண்டு. இன்னும் பற்பல நிறங்கள் கொண்ட பூக்களும் இலைகளும் செடிகளும் தொட்டிகளில் நிறைந்திருந்தன. இவை யெல்லாம் போதாதென வீட்டின் பின்புறத்தில் ஓர் துளசி மாடமும் ஓர் கொடி வீடும் இருந்தன.

வீடு கீழும் மேன்மாடத்திலும் பல அறைகள் கொண்டது. தற்கால நாகரிகத்திற்கேற்ப மேஜைகள், நாற்காலிகள், சோபாக்கள் என்றவைகளும் இருந்தன.

வீட்டிற்கு வலது புறத்தில் அதாவது மேற்கே சுமார் நான்கு மைலுக்கு அப்பால் சென்ற மலைத்தொடர் வானை எட்டிப் பிடிக்கக் கையை நீட்டுவதுபோல் ஓர் சிகரத்தை உயரச் செலுத்தி நின்றது. அம்மலையினின்றும் வெள்ளிக்கம்பிகள்போல் நீர் ஓடிவருவது ஐந்தாறு இடங்களில் தெரியும். வீட்டிற்கு எதிர்ப்புறத்தில் அரை மைல் தூரத்தில் ஓர் சிறு பசுங்குன்று விளங்கிற்று. அதில் உச்சிவரை கொடிகளும் புதர்களும் விலக்கப்பட்டு வீட்டிற்கு எதிராக ஓர் பாதை செல்லும்.

மார்கழி மாதம் தன் வயதில் பாதியை இன்னும் கழித்தாகவில்லை. ஊருக்கு வடக்கே உள்ள சிற்ருற்றிலிருந்து வாடை யடித்துக் கொண்டிருந்தது. இரவில் பனி பெய்ததாலும் சூரியன் தெற்கே வெகுதூரம் சென்றதால் வெய்யிலின் வெப்பக் குறைவாலும் காலை பத்து மணியாகியும் மனிதர் வெளியே செல்ல மனங் கொள்ளாதிருந்தனர். கோபாலகிருஷ்ணன் காலையில் குளித்து காலையாகாரத்தை முடித்துவிட்டு சாந்தி குடீரத்தின் முன் தாழ்வாரத்தில் ஓர் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கடோபநிஷத்தும் அதற்கு பகவத்பாத ஸ்ரீ சங்காரச்சாரியாரால் இயற்றப்பட்ட பாஷ்யமும் கொண்ட புத்தகம் ஒன்றை வைத்துப் படித்துக்கொண்டிருந்தார். சந்திரா இன்று ஊருக்கு வருவதாகக் கடிதம் எழுதியிருந்ததால் காலை வண்டிக்கு மோட்டாரை அனுப்பிவிட்டு அவள் வரவை எதிர்பார்த்திருக்கும் அவரது கண்கள் அடிக்கடி வாயிற் பக்கம் நோக்கின. அவர் மனது 'ரயில் வரும் நேரம் பதினொரு மணியாகையாலும் ஸ்டேஷன் வீட்டிலிருந்து ஐந்து மைல் தூரமிருப்பதாலும் அவள் பதினொன்றரை மணிக்குத்தான் வருவாள். அதற்குள் நீ அடிக்கடி பார்ப்பதில் பயனென்ன?' எனக் கூறிக்கொண்டே இருந்தது.

குறித்த நேரத்தில் மோட்டார் வண்டி வாயிலில் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு சிறு இரும்புத் தகட்டுப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு இறங்கினுள் சந்திரா. உடனே அருகில் நின்ற வேலைக்காரன் "அம்மணி, நான் கொண்டு வருகிறேன்" எனக் கையை நீட்ட அதை அவனிடம் கொடுத்துவிட்டு நடந்து சென்று பண்ணையாரின் பாதங்களில் நமஸ்கரித்தாள். அவர் இருகைகளாலும் தூக்கி நிறுத்திக் கொண்டு தன் அருமைக் குழந்தையைப் பலநாள் பிரிந்திருந்த தாய் அக்குழந்தையைத் திரும்பப் பார்ப்பதில் எவ்வளவு ஆனந்தங் கொள்வாளோ அவ்வளவு சந்தோஷமடைந்தார். அதன்பின் "சந்திரா! உள்ளே அம்மா இருக்கிருள், போகலாம் வா" என்றழைத்துச் சென்ருர். உள்ளே சுமார் நாற்பத்தைந்து வயதுள்ள கைம்பெண்ணுன ஒரு ஸ்திரீயிடம் கூட்டிச் சென்று "அம்மா! இவள்தான் என் பெண் சந்திரா. கடவுள் இவளை எனக்கு மூன்று வருஷங்களுக்குமுன் அளித்தார். இன்று வரப் போவதாகச் சொல்லி இருந்தேனே, வந்து விட்டாள்" எனக் கூறித் தன் தாய்க்கு அறிமுகப்படுத்திவைத்தார்.

சில நாட்களிலேயே சந்திரா அக்குடும்பத்தைச் சேர்ந்தவளாய்விட்டாள். அவளிடம் காதில் ஒரு சிறு தோடு தவிர வேறு நகை ஒன்றுமே கிடையாது. உடுத்திருப்பது சாயம் தோய்த்த கதர்ப் புடவை. அதிலும் மூன்று நான்கு புடவைகளுக்கு மேலில்லை. ஆயினும் அவள் அழகுக்குக் குறைவேயில்லை. முகத்தில் விளங்கிய இளமையழகு உள்ளத்தில் ஒளிர்ந்த தன்னயங்கருதா அன்பு, பிறர்க்குதவுதலில் தன்னையே தியாகஞ் செய்தல் என்னும் தன்மைகளின் சுடரொளியால் மிகச் சிறப்புற்று விளங்கிற்று. தன்னை வறுமையினின்றும் இழிய வாழ்க்கையினின்றும் காத்தவருக்கு எத்தகைய கைம்மாறு இயற்றுவது என்பதே எண்ணமாயிருந்தது.

கோபாலகிருஷ்ணன் தன் தாய் என்றவள் உண்மையில் அவளது சிறிய தகப்பன் மனைவி என்றும், அவளுக்கு இராமசாமி என்ற ஒரே மகன் சிம்லாவில் தந்தி இலாகாவிலோ வேறு எங்கேயோ ஓர் உயர்ந்த உத்தியோகத்திலிருப்பதாகவும், இது போன்ற இன்னும் பலகுடும்ப விருத்தாந்தங்களையும் தெரிந்துகொண்டாள். இராமசாமி என்பவர் சிறிது காலத்தில் ரஜா வாங்கிக்கொண்டு வரப்போவதாயும் செய்தி வந்திருந்தது.

சந்திரா வீட்டிற்கு வந்து மூன்று மாதங்களாயின. அவள் தனித்திருப்பதிலும் தோட்டத்தில் வேலைசெய்வதிலும் அதிகப்பிரியங் கொண்டாள். இன்னும் வீட்டில் வேலை இல்லாத நேரங்களில் எல்லாம் கொடி வீட்டில் அவள் வாசித்துக்கொண்டிருப்பது வழக்கம். அடிக்கடி அவள் கோபாலகிருஷ்ணனுடன் தோட்டத்தில் சுற்றிவருவதுண்டு. இன்று இருவரும் புறப்பட்டு வீட்டின் எதிரிலுள்ள மலைக்குச் சென்ருர்கள். அதன் உச்சியைத் தாண்டி அப்பாலிறங்கி ஓர் புதரின் கீழ் நிழலில் நின்று கொண்டு சுற்றித் தோன்றிய காட்சியின் வனப்பை நோக்கி நின்றனர். கோபாலகிருஷ்ணன் அங்கிருந்த பல அதிசயங்களையுங் காட்டி வந்தார்.

திடீரென சந்திரா "அழகிய இவ்வனக் காட்சிகளும், அவற்றைக்கண்டு ரசிக்கும் அறிவும், எனது இவ்வாழ்க்கையும் அவற்றிலுள்ள மற்ற இன்பங்களும் உங்கள் அருளால் கிடைத்தவை அன்றோ? அன்று இரவில் தாங்கள் வந்து என்னை மீட்காதிருந்தால் என் கதி என்னவாயிருக்கும் என்று நினைக்கவே பயமாயிருக்கிறது" என்ருள்.

கோபாலகிருஷ்ணன் "அவற்றை எல்லாம் ஏன் நினைக்கிருய்? இப்பொழுது நீ என் பெண். உனக்கேற்ற வாலிபன் ஒருவன் உன்னை அவன் மனைவியாக்கி அழைத்துச் செல்லும் வரை நீ என்னிடமே இருப்பாய்" என்று கூறியதும் தன் மனத்தில் இருக்கும் கருத்து வேறென்றும்

தான் வெளியே பேசியது பொய் என்றும் அவர் மனத்துக்குத் தெரிந்தது.

சந்திரா "நான் என்றும் தங்களுடையவள்தான். எப்பொழுதும் தங்களிடமேயே இருப்பேன். நான் 'எனது' என்று சொல்லிக்கொள்ளக் கூடியவை எல்லாம் தங்கள் தயவாலும் பெருந்தன்மையாலும் கிடைத்தவை என்பதை நான் என்றும் எப்படி மறக்க முடியும்?" என்றாள்.

கோபாலகிருஷ்ணன் "நீ உலகில் எத்தகைய வாழ்க்கையை விரும்புகிறாய்? சொல் பார்ப்போம்."

சந்திரா "இன்ப வாழ்க்கையை. அதனால் உடலுக்கும் ஐம்புலன்களுக்கும் கிட்டும் இன்பங்கள் என்றதல்ல என் கருத்து. அதாவது பட்டாடை, விலைபெற்ற உணவு, வண்டிகள், பங்களாக்கள் என்றவை பொருந்திய வாழ்க்கையையன்று. இவற்றிலும் இன்பமிருப்பது உண்மையே, ஆனாலவை நிலையற்றவை. என் கருத்தாவது பரஸ்பர அன்பும் காதலும், நம்பிக்கையும் கௌரவமும் கொண்ட வாழ்க்கையாகும்."

"நானளிக்கும் வாழ்க்கையில் சிறிதுகூட இன்பமில்லாமலா இருக்கிறது? அவள் கருத்துக்கிசையவும் இன்பமில்லாது போகாது. சைய், என்ன பைத்தியமிது. இனிமேல் எனக்கு விவாகமா? அவள் வயதென்ன, என் வயதென்ன? அவளைப்போல் சுமார் மூன்று பங்கு வயதாகிறதே எனக்கு. இன்னும் இளமை இளமையை நாடுதல் இயல்பாகும். அப்பெண்ணுக்கு இன்னும் உலக அனுபவம் கிடையாது. தக்க பருவமுள்ள வாலிபனைச் சந்திக்க நேருங்காலத்தில் எங்கள் இருவர் கதியும் என்னவாகும்?" எனத் தனக்குள்ளேயே சிறிது நேரம் யோசித்தார். "பின் என் வாழ்க்கை முழுதிலுமே இதுவரை இன்ப வாழ்க்கையே வாழ்ந்ததில்லை. எதற்கும் வெளிவிட்டுச் சொல்லிக் கேட்டு விடுவோம். அதில் என்ன கெடுதல் நேரிடப்போகிறது!" எனத் தீர்மானித்துக்கொண்டு "சந்திரா! அத்தகைய வாழ்க்கையை என்னால் உனக்குக் கொடுக்கமுடியுமென நினைக்கிறாயா? அதாவது தெளிவாகச்சொல்லுமிடத்து நீ என் மனைவியாகச் சம்மதிப்பாயா? சில காலமாக உன்பால் என் மனத்தில் அடக்கமுடியாக் காதல் கொண்டுவிட்டேன். எனக்கு வயது நிறம்ப ஆய்விட்டது உண்மையே. இப்பொழுது ஐம்பது வயதாகிறது. உனக்கோ அதில் இன்னும் பாதிகூட ஆகவில்லை. என்னைக் காதலிக்கக்கூடுமென நினைக்கிறாயா?" எனக் கேட்டார்.

தான் கைம்மாறு செய்யத்தகுந்த விஷயம் இது ஒன்றே என்று கருதினவளாய் "முதலிலேயே நான் என்றும் தங்களுடையவளாகவே இருப்பேன் எனச் சொல்லிவிட்டேனல்லவா? தாங்கள் அளிக்கும் பதவிக்கு நான் தகுதியுள்ளவளாயிருப்பேனா என்ற சந்தேகம்தான் என் மனத்திலிருக்கிறது" என்றாள்.

கோபாலகிருஷ்ணன் "சந்திரா! நன்றாய் யோசித்துப் பார். நீ கைம்மாறாக இக்காரியஞ் செய்வதானால் அதற்கு நான் சம்மதிக்கமாட்டேன். நீயும் உடனே மறுத்துவிடு."

காதற்சுடரால் தீண்டப் பெறாது அவளது உள்ளம் பனிக்கட்டிபோல் உறைந்து கிடக்க வாய்மட்டும் இச்சொற்களைக் கூறின. "அன்பரே! தங்களை உண்மையாகவே காதலிக்கிறேன். தங்களைப் பெறுவதிலும் மேலான இன்பமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை."

அப்பொழுது பண்ணையார் அடைந்த ஆனந்தத்தை அளவிட யாரால் முடியும்? "சரி! இனி வீடு செல்வோம். அம்மாவிடம் இச்செய்தியைச் சொல்லவேண்டும். நிலவில் தோட்டத்தில் சென்று மற்ற விஷயங்களைப் பேசிக்கொள்



வோம். இராமனும் உடன் வருவான்" என்றார்.

* * * *

வீட்டின் பின் தாழ்வாரத்தில் காந்திமதியம்மாள் தன் மகன் இராமசாமியிடம் கடுமையாய்ப் பேசிக்கொண்டிருந்தாள். "அதை ஏன் கேட்கிறாய் போ. சில காலமாக உன் அண்ணன் அப்பெண் விஷயத்தில் பெரும் மடையனாய்க் கொண்டு வருகிறான். அவளைத் தலையில் வைத்துக் கூத்தாடவேண்டியதுதான் பாக்கி. இன்னும் ஓரிரண்டு நாளில் அவளை மணந்துகொள்வதாகச் சொல்வானாயின் அதில் எனக்குப் புதுமை தோன்றாது" என மனக் கடுப்புடன் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இராமசாமி:—"என்னமோ, அம்மா! அவர் வாழ்க்கையில் எத்தனை நாட்கள் சுகமாக வாழ்ந்துவிட்டார்! இப்பெண்ணிடம் அன்பு கொண்டு அவளைக் காப்பாற்றுவதால் இன்பமடைவதானால் எனக்கும் அதில் சம்மதந்தான். சில சமயங்களில், அண்ணா ஏன் மறு விவாகம் செய்துகொள்ளவில்லை? செய்துகொண்டிருப்பாரானால் இப்பொழுது வீட்டில் சிறு குழந்தைகள் நிறைந்து அவர்களுடன் எவ்வளவு சந்தோஷமாக வாழ்வார் என்று எண்ணம் தோன்றுவதுண்டு."

காந்திமதியம்மாள்:—"பேஷ்! நன்றாயிருக்கிறது. நீ மிகவும் கெட்டிக்காரன். கோபாலன் இத்தனை வயதிற்குமேல் கலியாணம் செய்துகொள்வதில் உனக்குச் சம்மதம்தான். விவாகம் செய்துகொண்டாலும் இப்பெண்ணைத்தான் செய்துகொள்ளவேண்டும். அப்படித்தானே" என்னும் வார்த்தைகளால் தன் கருத்துக்களை வெளியிட்டாள்.

இராமசாமி:—"அம்மா! ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? அப்பெண்ணிடம் ஏதாவது தோஷமுண்டா? நான் கேள்விப்பட்டமட்டில் அவள் தூய மனம் படைத்த கட்டழகி என்று தெரிந்தது."

காந்தி:—"அவளைப்பற்றிக் கெடுதல் ஒன்றுஞ் சொல்ல முடியாது. ஆனால் இருவருக்கும் வயதிலும் நிலைமையிலும் அந்தஸ்திலும் இருக்கும் வித்தியாசத்தைக் கவனித்தாயா? பெற்றோர்கள் இன்னாரெனத் தெரியாது எங்கோ நாடகமாடித் தெருவில் அலைந்துகொண்டிருந்த பெண். அவளை நம் குடும்பத்தில் கொண்டு நுழைக்கவா? இன்னும் கோபாலன் விவாகம் செய்துகொண்டு அவனுக்குச் சந்ததி உண்டாகுமானால் உன் பாடு கஷ்டமாகிவிடும் என்பதை மறந்துவிட்டாயா?"

இராமசாமி "அம்மா! இதென்ன வார்த்தை! அண்ணனுடைய சொத்துக் கிடைக்காததற்காக எனக்கு வருத்தம் உண்டாகவே உண்டாகாது. அவர் விவாகம் செய்துகொண்டு சந்தோஷமாய் நெடுங்காலம் வாழட்டும். அவர் சந்தோஷமடைவதில் எனக்கும் சந்தோஷந்தான்" எனப் பதில் கூறினான்.

தாயார்—"இராமா! என்ன முட்டாள்தனமாய் உளறுகிறாய்?" என்றதற்குள் வெளியே மலைக்குச் சென்றிருந்த இருவரும் உள் நுழைந்தார்கள்.

கோபாலகிருஷ்ணன் இராமசாமியைப் பார்த்ததும் முகமலர்ச்சியுடன் "உங்களுக்கு ஒருவரை ஒருவர் தெரியாதே. 'இராமா! இவள்தான் நான் அபிமானமாக வளர்த்துவரும் சந்திரா' என அறிமுகப்படுத்தி, "நீங்களிருவரும் பேசிக்கொண்டிருங்கள். நான் இதோ வந்துவிடுகிறேன்" எனக் கூறிவிட்டு அம்மாவிடஞ் சென்றார்.

"அம்மா! சந்தோஷ சமாசாரம் ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறினார்.

அம்மா—"என்ன சமாசாரம்?" என ஆவலுடன் கேட்டாள்.

"எனக்கு அதிர்ஷ்டம் வந்திருக்கிறது, நான் விவாகம் செய்து கொள்ளப் போகிறேன். சந்திராவை மணந்து கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறேன். உனக்குச் சம்மதந்தானே" என்று கேட்டார்.

"அதனால் உண்மையாக உனக்கு இன்பம் விளையக் கூடியதானால் செய்து கொள்ள வேண்டியது தான். நீ சந்தோஷமடைவதைத் தடுப்பேனா?" எனப் பதிலளித்தாள் அம்மாள்.

"ஏன் உனக்குப் பூராச் சம்மதமில்லையா?"

"உங்கள் இருவருக்கும் பதவியிலும் வயதிலும் உள்ள வித்தியாசத்தைக் கருதிச் சொல்லுகிறேன்."

* * *

சந்திராவும் இராமசாமியும் ஒருவரை ஒருவர் நோக்கினர். சந்திரா தலை குனிந்தாள். இருவருக்குமிடையே நிகழ்ந்த பேச்சு மிகக் கொஞ்சமே. "உங்களை முன் எங்கோ பார்த்ததாக நினைவிருக்கிறதே, எங்கே பார்த்திருப்பேன்?" எனக் கேட்டாள். இராமசாமி, "இல்லை பார்த்திருக்க மாட்டாய். சந்தித்திருந்தால் நான் அதை மறந்திருக்க மாட்டேன். நான் எதையும் சீக்கிரம் மறக்கக் கூடியவனன்று" என விடை கூறினான்.

இவ்வளவே இருவரும் பேசிக் கொண்டது. கோபாலகிருஷ்ணன் இராமசாமியிடஞ்சென்று "இராமா, என் வாழ்க்கையில் சந்தோஷ அனுபவம் உண்டாகப் போகிறது. நான் சந்திராவை விவாகம் செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். உனக்கும் சந்தோஷந்தானே?" எனக் கூறினர்.

இராமசாமி வெகு சாதாரணமாகவே "உங்களுக்கு இப்பொழுது அதிர்ஷ்ட காலம்" என்றான்.

சந்திராவும் கோபாலகிருஷ்ணனும் வெளியே சென்று தத்தம் மிடங்களுக்குச் சென்றனர்.

இராமசாமியின் உள்ளத்தில் "நீ ஒரு வாரம் பிந்திவிட்டாய். ஏன் ஒரு நாள் பிந்தி விட்டாய். நேற்று இவ்விஷயம் நிச்சயமாகாதிருந்தது" என ஒரு சிறு குரல் சொல்லிற்று.

பத்து நாட்கள் வெகு தாமதமாகவே சென்றன. ஒரு நாள் மாலை பண்ணையார் தோட்டத்தில் உலவப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். சந்திராவையும் உடனழைத்தார். அவள் வந்ததும் "உள்ளே போய் இராமனையும் கூப்பிட்டு வா, அவனும் வரலாம்" என்றார்.

காந்திமதியம்மாள்—"இராமசாமி, ஏன் நின்ற விடத்தில் நிற்காமல் அலைந்து கொண்டிருக்கிறாய்? உடம்பு சௌக்கியமில்லையா?"

"இல்லையம்மா, உடம்பு சௌக்கியம் தான்."

"நீ ஒரு நாளுமிப்படி இருக்கமாட்டாயே. இன்று ஏன் அலைந்துகொண்டே இருக்கிறாய்?"

இராமன்—"ஒன்றுமில்லையம்மா. சில காலமாக அதிகமாக வேலை செய்தே வழக்கமாய் விட்டது. இந்தக் கிராமத்தில் சரியாய்ப் பொழுது போகவில்லை" எனக் கூறினான்.

அவர்களிருவரும் பேசிக்கொண்டதில் கடைசிப் பாகம் இதுதான். ஏனெனில் இத்துடன் வாயிலில் சந்திரா தோன்றினாள். இருவரையும் தனியே விடுத்துக் காந்திமதியம்மாள் ஏதோ காரியமாக வெளியே சென்றாள்.

சந்திராவின் முகம் சிவந்தது. அதை வெளிக்காட்டாதிருக்கும் பொருட்டுத் தலையைக் குனிந்து கொண்டு "உங்களைத் தோட்டத்தில் உலாவ அழைத்து வரச் சொன்னார்கள், வருகிறீர்களா?" எனக் கேட்டாள்.

இராமசாமி "இல்லை, வாவில்லை எனச்சொல்லி விடு. எனக்கு இங்கு கொஞ்சம் வேலை இருக்கிறது" என்று கூறினான்.

"உங்களுக்கு உடம்பு என்ன? முகத்தைப் பார்த்தால் மனக்கவலையோ அல்லது தேக



அசௌக்கியமோ இருப்பதாகத் தோன்றுகிறது" என வினவினாள்.

இராமசாமி "ஒன்றுமில்லை, நாளை இங்கிருந்து புறப்படப்போகிறேன். ஆகையால் எனக்குக் கொஞ்சம் அவசரவேலை இருக்கிறது" என அவள் போய்விடவேண்டுமென்பதைக் குறிப்பாய்க் கூறினான்.

சந்திரா மிக ஆத்திரத்துடன் "நாளை புறப்படப்போகிறீர்களா? ஏன் அவ்வளவு அவசரம்?" எனக்கேட்டு உடனே தான் அவ்வளவு ஆத்திரம் வெளிக்காட்டியதற்கு நாணமடைந்து அதை ஒருவாறு சமாளித்துக் கொள்வதற்காக "அண்ணா நீங்கள் போவதாயிருந்தால் வருத்தப்படுவாரோ என்பதற்காகச் சொன்னேன்" என்று கூறினாள்.

இராமசாமி "அவ்வருத்தம் சிறிது காலத்திற்குள் மறந்து போம்."

இதற்குள் கோபாலகிருஷ்ணன் உள் நுழைந்து "இராமா! நீ நாளைக்கு ஊருக்குப் புறப்படப் போவதாய் அம்மா கூறுகிறாரே, உண்மைதானா? என வினவியதற்குத் தம்பி "ஆம்" என்றான்.

கோபாலகிருஷ்ணன்:—"உன் பைத்தியக்காரத்தனத்தை எல்லாம் மறந்து விட்டாய் என்றல்லவோ நினைத்திருந்தேன். நீ போக முடியாது. இவ்வளவு சீக்கிரத்தில் போக விட்டு விடுவேனென நினைக்காதே" என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு 'நாம் தோட்டத்திற்குப் போவோம்" எனச் சந்திராவுடன் வெளியே சென்றார்.

தோட்டத்தில் நுழைந்து செல்லும்பொழுது "சந்திரா! இராமசாமியைப் பற்றி உன் அபிப்பிராய மென்ன?" எனக் கேட்டார்.

"நல்ல மனிதர், சூது வஞ்சகம் என்றவையே அவருக்குத் தெரியாது. அவர் மேல் எனக்குப் பிரியமுண்டு" எனக்கூறி பண்ணையாரின் முகத்தை நோக்கினாள்.

அவர் "நீங்களிருவரும் மனமொத்த நண்பாயிருக்க வேண்டுமென்பதுதான் என் விருப்பம்" என்றார்.

இருவரும் உலாவி வரும்பொழுது அப்பெண் மனத்தில் 'தன் காலத்தை எல்லாம் கல்வியிலும் வேதாந்த நூல்களை ஆராய்வதிலும் கழித்து வரும் இப்பண்டிதர் என்னை ஒரு பொருட்டாகக் கருதிக் காதலிப்பாரா?' என்ற எண்ணமுண்டாயிற்று. அதற்குச் சமாதானமாக அவள் "அவர் காதலித்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரியே. எனது வாழ்க்கையே அவரால் அளிக்கப்பட்டது. ஆகவே எனது இன்பம் என்பதைக் கவனியாமல் என் வாழ்க்கையை அவருக்கே தத்தம் செய்து விடுகிறேன். இன்னும் அவர் என்னை விலைக்கு வாங்கி இருக்கிறார் அல்லவா" எனக் கூறித் தீர்மானத்தை உறுதிப்படுத்தினாள்.

நான்காம் நாள் பிற்பகல் சாந்தி குடீரத்தில் ஓர் அறையில் காந்திமதியம்மாள் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். ஒரு மூலையில் இராட்டினம் ஒன்றில் சந்திரா நூல் நூற்றுக் கொண்டிருந்தாள். காந்திமதியம்மாள் "உங்கள் விவாகத்திற்கு முகூர்த்தம் நிச்சயம் செய்தாயிற்றா?" என்று கேட்டாள்.

சந்திரா "இல்லை, தங்களுக்கு இக்கலியாணத்தில் சம்மதமில்லை போலும், அப்படித் தானே?" காந்திமதியம்மாள் "உண்மைதான். ஆனால் அதற்குத் தகுந்த காரணங்களுண்டு. உன் மேலிருக்கும் பிரேமையால் தற்காலம் கோபாலன் மயங்கிக் கிடக்கிறான். இவ்விவாகத்தால் உங்களிருவருக்கும் முற்றிலும் சுகமே விளையுமென்று எனக்குத் தோன்றவில்லை. மணம் முடிந்த பின் அவன் வருப்பார்கள், அதாவது அவனுக்குச் சமமான பதவியிலிருக்கும் அவனது நண்பர்,

நகைக்க இடமுண்டாகும். நேர் நின்று பரிகசிக்க மாட்டார்கள் என்பது உண்மையே. அப்படியாயின் பதில் கூறி அவர்களை வாயடக்க முடியும். உன் மேலிருக்கும் பிரேமையின் திடம் சிறிது குறையவும் அவன் தான்செய்த காரியத்தைக் குறித்து வருந்த நேரிடுமென்று உனக்குத் தோன்றவில்லையா? ஆனால் இவற்றை எல்லாம் நீ என் அபிப்பிராயத்தைக் கேட்டதால் கூற நேரிட்டது. இல்லாவிட்டால் சொல்லி இருக்கவே மாட்டேன்.''

சந்திரா தன் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளை எல்லாம் அடக்கிக்கொண்டு ''ஆனால் அவர் கொண்டுள்ளது பிரேமைதானா? அப்படியாயின் அதனால் நன்மை விளையாது என்பது நிச்சயம். ஆனால் இக்கஷ்டத்தை நிவர்த்திக்க வழிதானென்ன?'' என மிகச் சாந்தமாகவே கேட்டாள்.

காந்திமதி "வழி யுண்டு. அது உன்னால்தான் முடியும். உன்னிடமேதான் பரிகாரமிருக்கிறது'' எனச் சிறிது மனக்கடுப்புடனே சொன்னாள்.

சந்திரா "என்னிடமா? என்னால் எப்படி முடியும் சொல்லுங்கள்?''

காந்திமதி "சந்திரா! என் மேல் வருத்தப்பட்டுக் கொள்ளாதே. நான் சொல்லாமல் ஒளிப்பதில் பிரயோசனமில்லை. நீ இங்கிருந்து செல்வதால்தான் அவன் பிரேமை நீங்கவேண்டும்'' எனச் சிறிதும் இரக்க மின்றி கூறினாள்.

சந்திராவின் தலை சுழன்றது. "நான் போய் விட வேண்டுமா? நானிங்கிருந்து போகவேண்டுமா? இவ்விஷயத்தைப்பற்றி தீர்க்காலோசனை செய்யவேண்டும்'' எனக் கூறிக் கொண்டே வெளியே சென்றாள்.

தோட்டத்தில் லதாக்கிருகத்தில் சென்று உட்கார்ந்தாள். மனத்தில் பலவெண்ணங்கள் உதித்தன. மகாபண்டிதராய், எப்பொழுதும் படிப்பிலும் வேதாந்தத்திலுமே கவனஞ் செலுத்திவரும் கோபாலகிருஷ்ணன் தன்னை ஒரு பொருட்டாக மதித்துக் காதல்கொள்வது சாத்தியமா? அல்லது அவர் மனத்தில் தோன்றியிருப்பது பிரேமை மயக்கந்தானா? அவர் தன்னை மணந்தாரானால் பின்பு அவர் மனத்திற்கு ஏமாற்ற முண்டாகாதபடி நடந்து கொள்ளத் தன்னால் முடியுமா? என்றவெண்ணங்கள் எல்லாம் மனத்தில் உதித்தன. இவற்றை எல்லாம் முன்னமேயே தீர்மானித்து முடிக்காவிடின் பின்பு தீமையே விளையும் என்று நன்கு விளங்கிற்று. மற்றும் "என்னை மணந்து கொண்டாரானால் அவரை உலகத்தார் நகைப்பார்கள் என்பது உண்மையன்றோ! நான் சுகமும் பெருமையும் அடைவதைக் கருதி அவரை அவமானத்திற்கும், மனப்புண்ணுக்கும் உள்ளாக்குவதா?'' என்ற கேள்விகள் தோன்றின. அதற்கு மாறாக "அவரை விவாகஞ்செய்து கொள்ளவேண்டுமென நானாக விரும்பவில்லை. அவரல்லவா அழைத்துக் கேட்டார். நான் பெற்ற உதவிக்குக் கைம்மாறு இதுவெனக் கொண்டு என் சுகத்தைச் சிறிதும் கருதாது என் வாழ்க்கையையே அவருக்கு சமர்ப்பித்து விடத் தீர்மானித்தேன். இதில் என்ன பிசகு இருக்கிறது?'' என்ற வெண்ணங்கள் தோன்றி மனத்தை மற்றொரு புறமிழுத்தன. இருவழியிலும் செல்ல இயலவில்லை. இதற்கிடையில் வஞ்சமனம் மெதுவாய் இராமசாமியின் உருவத்தை எதிரே கொண்டு நிறுத்திற்று. அத்துடன் அடைபட்டுக் கிடந்த காதலுணர்ச்சியும் வெளிக்கிளம்பிற்று. மனக் குழப்பமெய்த சந்திராவின்பாடு அவஸ்தையாய் விட்டது. சிறிது நேரத்தில் மனஞ் சிறிது தேறி தன்னய நோக்கங்கொண்ட காதலைப் பின்பற்றுவதில்லை எனத் தீர்மானித்தாள். மறுகணமே கோபாலகிருஷ்ணன் தன்னை மனைவியாயடைவதால் அவருக்கு நேரும் அவமானமும் கஷ்டமும்



தோன்றின. விவாகத்தைத் தவிர்க்கவோ காந்திமதியம்மாள் சொல்லியதைத் தவிர வேறு வழியைக் காணோம். ஆனாலங்கிருந்து போய் விடுவதா? அவரறியாது சென்றால் கோபாலகிருஷ்ணன் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்? சிறுமைக் குணமுள்ளவளாகவும் செய்ந்நன்றி மறந்தவளாகவும் கருதினால் என்னசெய்வது? இன்னும் தான் போய்விடுவதாலும் அவர் மனத்திற்குக் கஷ்டம்தானே உண்டாகும்?'' என்று இவ்வாறு வெகுநேரம் சிந்தனையி லாழ்ந்திருந்தாள்.

மறுநாட்காலையில் கோபாலகிருஷணன் வழக்கத்திற்கு விரோதமாய் வெகுநேரங் கழித்துக் காலை பத்துமணிக்கு ஆகாரம் சாப்பிடவந்தார். அவர் முகத்தில் சோகமும் கிழக்குறிகளும் விளங்கின. காந்திமதியம்மாளுக்கு மனம் பகீரென்றது. "கோபாலா! உடம்பு சௌக்கியமில்லையா? ஏன் இன்று இப்படி இருக்கிறாய்?'' என்றாள்.

கோபாலகிருஷ்ணன் நிமிர்ந்து பாராமலே "இதைப்பார்'' என ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அது கோபாலகிருஷ்ணனது குரலாகவே இல்லை. கடிதத்தில் நாலைந்து வரிகளே எழுதி இருந்தன. அவைகீழ் வருமாறு.

"அன்புருவாகிய தெய்வமே!

என்னால் முடிந்தமட்டும் நான் ஆழ்ந்து யோசித்ததில் தாங்கள் என்னை மனைவியாக அடைவது அசம்பாவித மெனத் தெரிந்து கொண்டேன். இதன்பின் தங்கள் முகத்தில் விழிக்க யோக்கியதையும் உரிமையும் இல்லை. ஆகவே நான் செல்கிறேன். என்னைச் செய்ந்நன்றி கொன்றவளாக மட்டும் கருதாதிருக்கப் பிரார்த்திக்கிறேன். அவ்வாறு கருதுவதுதான் தாங்கள் எனக்கு விதிக்கும் தண்டனைகளிலெல்லாம் மிகக் கொடியது.''

இங்ஙனம்,
தங்களடிமை,
சந்திரா.

கடிதத்தைப் படித்துவிட்டுக் கோபாலகிருஷ்ணனிடம் கொடுக்கவும் அவர் "உன் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார்.

"இக் கலியாணத்தால் நேரிடும் பலாபலன்களை அவள் யோசித்து நன்கு தெரிந்து கொண்டு விட்டாள்.'' கோபாலகிருஷ்ணன் "நீ அப்படி நினைக்கிறாய். சரி, காலையில் எழுந்த பின் இராமனைக் காணோமே. நீ பார்த்தாயா?''

காந்திமதி "இல்லை. நேற்று சாயங்காலம் சேரமாதேவியில் அவன் நண்பனொருவன் வியாதியாயிருப்பதாகவும் அவனைப் பார்க்கச் செல்லவேண்டு மென்றும் கூறிக்கொண்டான். ஒரு வேளை யங்கு போயிருப்பான்.''

கோபாலகிருஷ்ணன் "அது உன் அபிப்பிராயம் போலும். ஆனால் இச்சமயம் இராமசாமி நோயாளி ஒருவனைச் சமாதானப்படுத்திக் கொண்டிருக்கவில்லை என்பது நிச்சயம். அவன் போயிருக்கும் இடம் வேறு. அவன் நினைத்துச் செல்லும் காரியமும் வேறு. வண்டிக்காரன் வேலையனைக் கேட்டதில் அவன் இன்று காலை மூன்றுமணி வண்டியில் திருநெல்வேலிக்குப் போவதாகவும் அங்கு போனபின் நமக்கு எழுதுவதாகவும் சொல்லிச் சென்றதாகத் தெரிகிறது.''

காந்திமதியம்மாளுக்கு அவர் மனத்திலிருந்த சந்தேகம் உடனே விளங்கி விட்டது. "கோபாலா! நீ அப்படியா நினைக்கிறாய்? என் இராமன் உனக்குத் துரோகம் செய்வானென்றா நினைக்கிறாய்?'' எனக்கேட்டாள்.

''ஸ்திரீகள் விஷயத்தில் மட்டும் உலகில் எம்மனிதனையும் நான் முழுவதும் நம்பமாட்டேன். சரி, போதும், இனி அவ்வற்பங்களின் பேச்சை என்முன் பேசாதே. இத்துடன் அத்தரித்திரங்கள் ஒழியட்டும். அவைகளைப் பற்றி நான் கவலைப்படப் போவதில்லை'' என என்றுமில்லா மனக் கடுப்புடன் கூறிச் சென்றார்.

காந்திமதியம்மாளுக்குத் திடீரென ஒரு சந்தேகம் தோன்றிற்று. "கோபாலா, எங்கு போகிறாய்? எனக்குப் பயமாயிருக்கிறதே" என்று புலம்பினாள்.

கோபாலகிருஷ்ணன் "அம்மா, அவர்களைத் தேடிக்கொண்டு போகிறேனென நினைக்கிறாயா? இல்லை, இன்னும் இதற்காக என் உயிரை மாய்த்துக்கொள்வேன் என்றும் பயப்பட வேண்டாம். தனியறையில் சிறிதுநேரம் உபநிஷத்துக்களைப் படிக்கலாமெனக் கருதிப் போகிறேன். வேறு பிரமாதம் ஒன்றுமில்லை" எனப் பதிலளித்துச் சென்றார்.

புதன்கிழமை காலை, அதாவது முற்கூறிய சம்பவங்கள் நிகழ்ந்த மறுநாட் காலை, சந்திரா திருநெல்வேலி ஜங்ஷனில் சென்னை போகும் வண்டிக்கு டிக்கட்வாங்கி வண்டியின் வரவை எதிர்பார்த்து நின்றாள். சென்னையில் எங்காவது ஒருவேலை பார்த்து ஜீவிப்பது, அதுமுடியாவிட்டால் தான் படித்த ஆசிரமத்திற்கே மீண்டும் செல்வதெனத் தீர்மானித்தாள். இடையில் சிறிது நேரத்திற்குக் கனவுபோல் கிடைத்த இன்பவாழ்க்கை நஷ்டமானதைக் குறித்து அவள் சிறிதும் கவலை கொள்ளவே இல்லை. ஆனால் கோபாலகிருஷ்ணனுக்கு மனப்புண் உண்டாக்கியதை நினைக்குந்தோறும் அவ்வெண்ணம் அவள் மனத்தை அறுத்துக்கொண்டிருந்தது.

அவள் உட்கார்ந்திருந்த இடத்திற்குச் சற்று தூரத்திற்கப்பால் மனிதர் இருவர் பேசிக்கொண்டிருந்தனர். தன்னையறியாமலே சந்திராவின் மனம் அவர்கள் பேச்சை கவனிக்கச் சென்றது. வந்தவரில் ஒருவர் பணங்குளத்தைச் சேர்ந்தவர். அவர் தங்கள் ஊர் பண்ணையாருக்கு பெரிய ஆபத்து நேர்ந்ததெனச் சொல்லிக்கொண்டிருந்தார். "நேற்று காலையில் மாடியிலிருந்து இறங்கும்பொழுது தவறி விழுந்துவிட்டாராம். அடி மிக பலமாம், பிரக்ஞையற்றுக் கீழே விழுந்து கிடந்தாராம். மண்டை உடைந்துவிட்டதாகக் கூடச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். நான் இன்று காலையில் புறப்பட்டு வரும்வரை நினைவு வரவில்லை. ஊர் முழுதும் இதே பேச்சாகத்தானிக்கிறது." எனக் கூறினார்.

மற்றவர் "ஏனிராது. அடடா, அவருக்கா இந்த ஆபத்து வந்தது. எவ்வளவு நல்ல மனிதர். ஊரூராகத் தேடினாலும் அவர் போல் மனிதன் கிடைப்பது அரிதன்றோ" என விடையளித்தார்.

இதைக்கேட்டவுடன் சந்திரா எழுந்து நின்றாள். மறு நிமிஷத்திலேயே தான் வாங்கிய டிக்கட்டைக் கொடுத்துவிட்டு மேற்கே பணங்குளத்திற்குச் செல்லும் வண்டிக்குச் சீட்டொன்று பெற்றாள். விசாரித்ததில் இன்னும் இருபது நிமிஷத்தில் அவ்வண்டி புறப்படுமெனத் தெரிந்தது.

காந்திமதியம்மாள் டாக்டர் சர்வாடீச்வர ஐயரைத் தனியே அழைத்து விசாரித்துக்கொண்டிருந்தாள். டாக்டர் "அம்மா, மூளைக்கு மிகபலமான அதிர்ச்சி ஏற்பட்டதால் தான் இவ்வாறு இருக்கிறது. நல்லவேளையாய் மண்டை ஓட்டிற்காவது மற்ற எலும்புகளுக்காவது சேதமில்லை. ஆனால் நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய காரியம் ஒன்று உண்டு. சந்திரா என்னும் பெண்ணை உடனே வரவழைக்கவேண்டும்" எனவும், காந்திமதியம்மாள் முகத்தைச் சுளித்துக்கொண்டாள். டாக்டர் "அம்மா! அவருக்கு நினைவு வந்து பேசமுடிந்ததும் முதல் சந்திராவைத் தான் அழைத்தார். இப்பொழுது அவர் மனப்படியே விட்டுவிட வேண்டும். எதிர்த்து நிற்பது நல்லதல்ல. அதனால் மிகக் கெடுதல் உண்டாகும்" என்று சொல்லி முடிக்கவும் கதவைத் திறந்துகொண்டு சந்திராவும் உள் நுழைந்தாள்.



டாக்டர் மிகக் களிப்பெய்தி "ஆ! இதுதான் தெய்வச் செயலென்பது. உங்களைப்பற்றி இப்பொழுதுதான் பேசிக் கொண்டிருந்தேன். நீங்கள் வந்து விட்டீர்கள்" என்றார்.

காந்திமதியம்மாள் "நீ இப்பொழுது எங்கிருந்தடீ வந்தாய்?" எனக் கேட்டுவிட்டு வெளியே சென்றுகொண்டிருந்தாள்.

ஆனால் அப்பெண் இவை ஒன்றையும் கவனியாது நேரே டாக்டரிடம் சென்று "ஐயா! அவர் எப்படி இருக்கிறார்?" என வேதனை மிகுந்த குரலில் கேட்டாள்.

டாக்டர் "இனிப் பிழைத்து விடுவார். ஆனால் அவரைச் சீக்கிரம் குணப்படுத்துவது உங்களால்தான் ஆகவேண்டும். அவரை உயிர்பிழைத்துச் சீக்கிரம் சௌக்கியமடையச் செய்ய வல்லவர் நீங்கள் ஒருவரே என்றதை மறக்காது நீங்கள் அவரிடம் தக்கபடி நடந்துகொள்ள வேண்டும். வாருங்கள், அவர் படுத்திருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்கிறேன், இன்று மத்தியானத்திற்கு மேல் நினைவுடனிருக்கிறார்."

கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்கள். கண்களை மூடிக் கொண்டிருந்தாலும் அவர்கள் அங்கு நிற்பது நோயாளிக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. கண்ணைத் திறந்தார். சிறிது நேரம் நினைவிற்கு மிகப்போராடுவது போல் தோன்றிற்று. "ஆ! சந்திரா! வா, இப்பொழுதுதான். உன்னை நினைத்துக்கொண்டு கண் மூடினேன். நீயும் வந்துவிட்டாய்" என மிக இழிந்த குரலில் பேசிவிட்டு, டாக்டரை ஜாடைசெய்து அழைத்தார். அவர் நெருங்கி வரவும் தான் கொஞ்சநேரம் அப்பெண்ணுடன் தனித்திருக்க அனுமதி கேட்டார். டாக்டர் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே கூடத்திற் சென்று உட்கார்ந்தார்.

சந்திரா கட்டிலருகிற்சென்று முழங்கால் தரையூன்றி உட்கார்ந்து கொண்டு கைகளைக் கட்டிலின் மேல் வைத்து அவர் தலையைத் தொட்டுப் பார்த்தாள். சிறிது காய்ச்சலடித்துக் கொண்டிருந்தது.

கோபாலகிருஷ்ணன் மெல்லிய குரலில் "சந்திரா, இராமசாமி எங்கே?" என்று கேட்டார்.

"மாடியில் அவரறையிலிருப்பார். கூப்பிடட்டுமா?"

"அவன் உன்னுடனேயே திரும்பி விட்டானா?"

சந்திரா "எங்கிருந்து திரும்பி யிருக்கிறார்? ஊருக்குப் போயிருந்தாரா?"

கோபாலகிருஷ்ணன் "ஆ, ஆனால் நீங்களிருவரும் ஒன்றாய்ச் செல்ல வில்லையா? அவன் இங்கிருந்து சென்றதே உனக்குத் தெரியாதா?"

"அவர் ஊரிலில்லை என்பது தாங்கள் இப்பொழுது சொல்லத்தான் தெரியும்."

கோபாலகிருஷ்ணன் "சந்திரா! என்னிடம் உண்மையை ஒளியாமற் சொல்லிவிடு. என் தேகபலம் குறைந்திருந்தாலும் மனோதிடம் இன்னும் நன்றாகவே இருக்கிறது. மற்றும் நான் சிறு குழந்தையல்ல. ஆகையால் நீ சொல்லும் செய்தி எப்படிப்பட்டதாயினும் எனக்குத் தீங்கிழைக்காது. என் மேல் காதல் கொண்டுள்ளாயா, இல்லையா? சொல். நீ எனக்குத் துரோகம் செய்துவிட்டு இராமசாமியைப் பின்பற்றிச் சென்றதாக நான் நினைத்தேன்."

சந்திராவிற்கு டாக்டர் சொன்ன 'அவர் உயிர் பெற்று சீக்கிரம் குணமடையச் செய்யக் கூடியவள் நீ ஒருத்தியே' என்னும் சொற்கள் நினைவிற்கு வந்தன. "ஆம், உண்மையாகவே தங்கள்பால் காதலுண்டு" எனக் கூறித் தலைகுனிந்தாள். தலை குனிந்தது நாணத்தாலல்ல. தன் முகத்தைப் பார்த்தால் தான் சொல்லுவது பொய்யெனத் தெரிந்து விடுமெனப் பயந்து அதை மறைக்கக் குனிந்ததாகும்.

ஆயினும் கோபாலகிருஷ்ணன் "இது சத்தியமா? பொய்யல்லவே?" என்று கேட்டுவிட்டார்.

சந்திரா சற்றும் பின்வாங்காது "நான் பொய் சொல்லியதுண்டா? அதிலும் தங்கள் விஷயத்தில் சொல்லுவேனு?" எனக் கூறிச் சமாளித்துக் கொண்டாள்.

சித்திரை மாதத்தின் வெயிலின் கொடுமை அதிகமாகவே இருந்தது. ஆயினும் வசந்த காலமாதலாலும் இடையிடையேமழை பெய்திருந்தாலும் தோட்டத்திலுள்ள மரஞ்செடிகள் எல்லாம் பச்சைப்பசேலெனத் தளிர்த்தும் சில ஜாதிகள் பூத்துமிருந்தன. வீசிய இளங்காற்று வெப்பத்தைத் தணித்ததுமன்றி தான் அடித்துக்கொண்டு வந்த நறுமலர்களின் மணத்தை மூளைவரையிற் செலுத்திக் கொண்டிருந்தது.

இரவில் கோபாலகிருஷ்ணன் வெகு நேரம் வரை தூங்கவில்லை. படுக்கை யறையில் கடிதம் ஒன்று எழுதிக் கொண்டிருந்தார். தன் கருத்துக்களைச் செவ்வையாய் வெளியிடாக் காரணத்தாலோ வேறு காரணத்தாலோ எழுதிய கடிதங்களைப் படிப்பதும் கிழித்தெறிவதுமாயிருந்தார். கடைசியாக ஓர் கடிதத்தை எழுதிப் படித்துப் பார்த்துவிட்டு ஓர் பையில் போட்டு விலாசமும் எழுதினர்.

காலையில் ஆகாரம் சாப்பிட்டுக் கொண்டே "எனக்கு ஒரு சிறு உபகாரம் செய்வாயா?' எனக் கேட்டார் சந்திராவை.

"தங்கள் கேட்பானேன். நான் செய்வேன் எனத்தங்களுக்குத் தெரிந்தே இருக்கிறதே" என்று விடை பகர்ந்தாள் சந்திரா.

கோபாலகிருஷ்ணன் "அதிகக் கஷ்டமானதொன்றுமில்லை. திருநெல்வேலியில் நமது பங்களாவில் இராமசாமி இருக்கிறன். அவனிடம் நான் கொடுக்கும் கடிதத்தைச் சேர்ப்பித்துப் பதில் கொண்டு வரவேண்டும். குடும்பவிஷயமானதால் சேவகர்களை அனுப்புவதை விட நீ போவது நல்லது எனத் தோன்றுகிறது. மோட்டாரில் இலகுவாய்ப் போய் வந்து விடலாம். நீ இவ்விஷயமாக வருவதாகத் தந்தி கொடுத்திருக்கிறேன்" என்றார்.

சந்திரா ஒப்புக்கொண்டாள். ஆயினும் மனத்தில் அதிக தைரியம் தோன்றவில்லை.

திருநெல்வேலியில் பங்களாவின் முன் மோட்டார் வண்டி சென்று நின்றது. சாரதி உள்ளே சென்று சந்திராவின் வரவைத் தெரிவித்தான். வெட்கித் தலைகுனிந்து உள் நுழைந்தாள். "உங்கள் அண்ணுவிட மிருந்து கடிதம் கொண்டு வந்திருக்கிறேன்" என வெகு சிரமப்பட்டு சொன்னாள்.

இராமசாமி "உட்கார்" எனச் சொல்லிக் கடிதத்தை வாங்கிப் பிரித்து வாசித்தான். திடுக்கிட்டு இரண்டாம் முறையும் படித்தான். அதன் பின் "சந்திரா, இதைப் படித்துப்பார்" எனச் சொல்லிக் கொடுத்தான். சந்திரா கீழ் வருமாறு படித்தாள்.

"என் பிரிய இராம!

இதுகாறும் என் கண்கள் குருடாய் இருந்தன. ஆழமற்ற அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தேன். இப்பொழுது விழித்துக் கொண்டேன். அதன் பின் எல்லாம் வெகு நன்ருய்த் தெரிகின்றன. நான் இப்பொழுது எல்லாவற்றையும் சரியாகப் பார்ப்பதற்கு ஒரு ருஜு சொல்கிறேன் பார். நீயும் சந்திராவும் பரஸ்பரம் காதல் கொண்டிருக்கிறீர்கள். இது உண்மையல்லவா? இவ்வாறு நான் எழுதும்பொழுது என் மனத்தில் சிறிதளவேனும் கோபமாவது வெறுப்பாவது கிடையாது என்று நிச்சயமாய் நம்பு. உலகில் நடைபெறுவனவெல்லாம் நமது நன்மைக்கே நடக்கின்றன. என்னப்பனருளால் எல்லோரும் முன்னேக்கிதான் செல்கிறோம். இவற்றை யெல்லாம் நன்குணர்ந்தபின் நான் ஒன்று செய்கிறேன். சந்திராவை உனக் களிக்



கிறேன். எனக் களித்த வாக்கை நிறைவேற்றுவதாக அவள் பிடிவாதம் செய்வாளாயின் அவளைத் திருத்திச் சீர்படுத்தவேண்டியது உன் கடமையாகும். அவளது அவ்வளவு பெரிய தியாகத்தை ஏற்றுக்கொண்டால் இருவருக்கும் சுகம் உண்டாகாது. மற்றும் பலவந்தமாய் அவளிடம் பிரதிக்ஞையைப்பெற எனக்கென்ன உரிமையுண்டு? இன்னும் அவள் அடிக்கடி எனக்கு நினைப்பூட்டி வந்ததுபோல நான் அவளை விலைக்கு வாங்கியதால் அவள் எனது பொருளென்றும், ஆகையால் என்னிஷ்டம்போல் யாருக்கேனும் அளிக்கப் பாத்தியமுண்டு என்றும் அவளுக்கு நீ நினைப்பூட்டு அந்த உரிமையை முன்னிட்டு உனக்கவளை அளிக்கின்றேன். என் குழந்தை சுகமாய் வாழ்வதில் தான் எனக்குச் சுகமுண்டு. எக்காலத்தும் உங்களிருவரின் க்ஷேமத்தையே பிரார்த்திக்கும் அனபுள்ள,

கோபாலகிருஷ்ணன்"

இதைப்படித்தவுடன் சந்திராவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. பின் சிறிது நேரங்கழித்து "நான் என்ன செய்வதென்று தோன்றவில்லை. நாம் இப்பொழுது செய்ய வேண்டியதுதான் என்ன? சொல்லுங்கள்" எனப் பரபரப்புடன் கேட்டாள்.

இராமசாமி "உன்னாலும் செய்ய முடியாத காரியத்தை இக்கடிதம் செய்துவிட்டது. நான் எத்தகைய நன்றி கெட்ட மிருகம் என்பதை நன்கு காட்டி விட்டது பார்த்தாயா?" எனச் சொல்லிக்கொண்டான்.

"நீங்கள் உங்களை அப்படி ஒன்றும் குறைவாகச் சொல்லிக்கொள்ள வேண்டாம். நம்மினும் வலியதோர் சக்தி பின்னின்று இக்காரியத்தை நடத்தி இருப்பது தெரியவில்லையா? ஆயினும் அப்பாவிற்குக் கைம்மாறு ஒன்றுஞ் செய்யமுடியாது போனதுமன்றி அவர் மனத்தைப் புண்படுத்தியது மட்டும் என் மனத்தைப் பிளந்து கொண்டிருக்கிறது" என்றாள்.

இராமசாமி "நாம் புறப்படுவோம் வா, வீட்டிற்குப் போவோம். இனி இங்கிருந்து என்ன செய்யவேண்டும்?"

* * *

சாந்தி குடீரத்தில் காற்றும் வெளிச்சமும் நிறைந்து மிகவும் சுத்தமாய் வைக்கப்பட்ட ஓர் அறையில் கோபாலகிருஷ்ணன் ஓர் சாய்வுநாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார்.

இதற்குள் தன் குழந்தை போயிருப்பாள். இப்பொழுது இருவரும் சந்தித்து ஆனந்திக்கும்சமயமாயிருக்கும். ஆஹா! சந்திராவும் இராமனும் தகுந்த தம்பதிகளாக விளங்குவார்கள். இருவரும் மனமொத்து வாழ்ந்து சிறு குழந்தைகள் வீட்டிலும் தோட்டத்திலும் விளையாடித்திரிவதும், கிழப்பருவமாகத் தான் அவர்களின் ஆதரவில் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பதும் இவை எல்லாம் அவர் மனக் கண்ணில் தோன்றிக் கொண்டிருந்தன. அவரது இப்பகற்கனவின் இடையே இராமசாமியும் சந்திராவும் நுழைந்தனர். அவர்களைக் காணவும் எழுந்து நின்று சிரித்த முகத்துடன் "நீங்கள் ஒன்றும் என்னிடம் சொல்லவேண்டாம். நான் கடிதத்திற்கு எதிர் பார்த்த பதில் இதுவே தான்" எனக் கூறி முதலில் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது எனத் தயங்கிக் கொண்டிருந்த அவ்விருவரையும் அச்சந்தேக நிலையினின்றும் விடுவித்தார்.

இராமசாமி "அண்ணு! நான் தங்களுக்குச் செய்த துரோகத்திற்கு என்ன பிராயச்சித்தமிருக்கிறது எனத் தெரியவில்லை."

கோபாலகிருஷ்ணன் "ஒன்று இருக்கிறது. என் பெண்ணிடம் நீ என்றும் மாருத காதல் கொண்டு அவளைக்களிப்பிக்கவேண்டும்."

இதற்குள் கோபாலகிருஷ்ணனது பாதங்களில் நமஸ்கரித்து "அப்பா! நான் தங்களைச் சந்தித்தது முதல் என் தகப்பனுகவே கருதி வந்தேன். இன்று மீண்டும் அவ்வுரிமையை

எனக்களித்தீர்களே, அது என்பாக்கியம்தான்'' என்று கூறினாள் சந்திரா.

அவர் சந்திராவைத்தூக்கி நிறுத்தி நெற்றியில் முத்தமிட்டு "சந்திரா, இன்று முதல் நீ என் மகள். நல்லவேளையாகக் கடவுள் இப்பொழுதே என் கண்களைத் திறந்து விட்டாரே. நம் எல்லோருடைய நன்றியும் வந்தனங்களும் அவருக்கே உரியன'' என்றார்

குறிப்பு:—இக்கதையை எழுதி முடிக்கவும் எமக்குத் தன்னயங் கருதாப் பெண்மணியான சந்திராவின் தியாகம், காம இச்சையையே வேரோடு பிடுங்கி அழித்து வெற்றிக் கொண்ட அதிதீரபுருஷனனின் வீரச்செயல் என்ற இவ்விரண்டுள் எது மிகவுயர்வுடைத்தது என விளங்கவில்லை. வாசகர்களே அறிந்துகொள்வார்களாக.

முற்றிற்று.

# குற்றாலம் என்னும் திருத்துருத்தி க்ஷேத்திரம்.

(ஸ்ரீமான் T. K. R. சர்மா)

ஸ்ரீகைலாயபர்வதத்தில் ஸ்ரீபரமசிவனும் பார்வதிதேவியும் சொக்கட்டான் ஆடினார்கள். சில காரணங்களால் சுவாமியுடன் அம்பாளுக்கு வாதம் ஏற்பட்டது. சுவாமியின் சாபத்தால் அம்பாள் திருவாலங்காடு என்னும் திவ்விய ஸ்தலத்தில் ஸ்ரீ பாதரிஷி என்பவருக்குக் கன்னிகையாக ஞான உதயம் செய்து வளர்ந்து வந்தாள்.

இக்கன்னிகையைத் தகுந்த இடத்தில் பாணிக்கிரகணம் செய்ய வேண்டி, தேவகுருவாகிய பிரகஸ்பதியிடம் ஸ்ரீ பாதரிஷி சொன்னார்.

ஸ்ரீ பாதரிஷியின் இஷ்டப்படி பிரகஸ்பதி திருவாலங் காட்டைவிட்டு, திருத்துருத்தி என்னும் இக்குற்றாலத்தை அடைந்தார்.

இவர் வருகையை அறிந்த பகவான் உக்தவேதீச்வரர், தம் இருப்பிடமாகிய மூல லிங்கத்தினின்று வெளிக்கிளம்பி வேதிய உருவமாகிய பிராமணப் பிரம்மசாரி உருவத்துடன் குற்றால விருட்சத்தடியில் உட்கார்ந்து இருந்தார்.

வேதியரைக்கண்ட பிரகஸ்பதி நமஸ்கரித்து "நான் தேவகுருவாகிய பிரகஸ்பதி'' என்று சொன்னார்.

பிறகு பிரகஸ்பதி:—"தாங்கள்யார்?'' என்று வணக்கமாய்க் கேட்டார்.

பகவான் :—'வேதி' என்று உரைத்தார்.

வேதி என்றால் வேதம் தெரிந்த அந்தணர் என்றபடியால் 'தாங்கள், தயவு செய்து வேதத்தைச் சொல்லும்' என்று பிரகஸ்பதி கேட்டார்.

உடனே வேதியாகிய பகவான் வேதங்கள் முழுமையும் தன் திருவாக்கினால் சொல்லக் கேட்ட பிரகஸ்பதி பிரமித்துவிட்டார்.

பிறகு பகவான் பிரகஸ்பதியை பார்த்து "ஹே குரு! என் பெயரை எதற்காகக் கேட்டீர்?'' எனக் கருணையுடன் கேட்டார்.

பிரக்ஞை தெளிந்த பிரகஸ்பதி பகவானைப் பார்த்து "சுவாமி' இத்தலத்திற்கு மேற்கிலிருக்கும் திருவாலங்காட்டில் பாதரிஷி என்று ஓர் மகானிருக்கிறார். அவருக்கு ஓர் கன்னிகை இருக்கிறாள். அவளுக்குத் தகுந்த வரன்தேட நான் இவ்விடம்வந்தேன். தங்களைக் கண்டதும், தங்களுக்குப் பாணிக்கிரகணம் செய்வதாக நிச்சயம் கொண்டேன்'' என்றார். வேதியாகிய பகவான் அப்படியே ஆகட்டும் எனமறுமொழி கூறினார்.



இதைக்கேட்ட பிரகஸ்பதி திருவாலங்காட்டுக்குச் சென்று பாதரிஷியிடம் நடந்தவைகளைச் சொன்னார். உடனே பாதரிஷி, பிரகஸ்பதி முதலியவர்கள் மணத்திற்காக விச்வகர்மாவிடம் கலியாண மண்டபம் கட்ட ஏற்பாடு செய்தார்கள்.

விச்வகர்மாவினால் நிர்மாணஞ் செய்யபட்ட கலியாண மண்டபத்தில், கொணத்தலைபாடி என்ற ஸ்தலத்தில் மணையில்வைத்துப் பாடி, அஞ்சாரவர்த்தலை என்ற பஞ்சபாலிகாபுரத்தில் பாலிகை தெளித்து, வல்லியநல்லூர் என்னும் தூர்க்காக்ஷேத்திரத்தில் ரட்சாபந்தனம் ஹோமங்கள் முதலானதும் செய்து, திருமணஞ்சேரி என்னும் க்ஷேத்திரத்தில் கலியாணம் செய்துகொண்டு மேலத்திருமணஞ்சேரியில், பொரியிட அவதரித்த எம்பெருமான் விஷ்ணுவினால் பொரியிடப்பட்டு ஹோமம் முதலானது நடத்தி, திருவிழக்கு என்னும் க்ஷேத்திரத்தில், பச்சைபூசி, நலங்கிட்டு, மச்சக்கிரகணம், ஸ்தாலீபாகம், ஆசீர்வாதம் முதலியவைகள் நடத்திக்கொண்டு வருவதற்குள் வெகுகாலம் பிடித்தது. இந்த க்ஷேத்திரத்தில் பகவானுக்குப் பூர்வத்தில் அம்பிகையாய் விளங்கிய உமை என்னும் பார்வதிதேவியின் பெயரால் உமாம்பாள்புரம் என்று இவ்வூர் மாறிவிட்டது.

ஸ்ரீ பகவான் அம்பாளை நோக்கி "கிரகப்பிரவேசம் செய்ய ஸ்ரீ மிருது முகுள குஜாம்பிகாவை அழைத்து வரலாமா?'' எனக் கேட்க "அம்பாளும் அப்படியே ஆகட்டும்'' என்று சொன்னார்.

ஸ்ரீ அம்பாளின் இஷ்டப்படி கிரகப்பிரவேசம் செய்துகொண்டு திருநேத்திரதாரியாய் பக்தானுக்கிரகம் செய்துகொண்டு மேற்கு முகமாய் இருந்து கொண்டு வருகிறார்.

இப்படி யிருக்கையில் அகஸ்திய முனியின் அனுக்கிரகத்தாலும், முப்பத்திமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீசுவரர்களும், ஸநகாதியோகீச்வரர்கள், பிதுர் தேவதை முதலியவர்களின் வேண்டுகோளின் பேரில் மகாநதியாய்ப் பிரவாகித்து காவிரியம்மன் மேற்குமுகமாய் வீற்றிருக்கும் பகவானைக் கண்டு பயந்து நிற்க, ஸநகாதிகளும் பகவானைப் பிரார்த்தித்தார்கள். பகவான், 'திருகச்ச; ('நீ தைரியமாகப்போ') என்று சொல்லியருளினார்.

காவிரியும், முன் கங்கைக்குண்டான கர்வத்தை யடக்கிய பகவான் எதிரில் எவ்விதம் போவது எனப் பயந்து பலவித ஆலோசனையின் பேரில் நிற்கப் பகவானும் 'துருதிகச்ச': அதாவது வேகமாய்ப்போ, என்று தன்முகத்தை வடக்கே காட்டிக் கிழக்கே காட்ட, காவிரியும் தன்னை உத்திர வாகினியாய் வடக்கே சென்று திரும்ப க்ஷேத்திரத்தின் கிழக்குமுகமாய்ப்பிரவாகிக்கலாம் என்று உத்திரவானதை யறிந்து அப்படியே பிரவாகித்துக் காவிரி என்னும் பெயருடன் இன்னும் விளங்கி வருகிறாள்.

இதற்குச் சமீபத்தில் திருநாவலூர் என்னும் திருப்பதியில் சுந்திரமூர்த்தி நாயனார் என்பவர் பரமசிவனின் பிரதிபிம்பமாகிய பல க்ஷேத்திரங்களிலும் பகவானனுக்கிரகம் பெற்று, இக்குற்றால க்ஷேத்திரத்தின் மூலாதார க்ஷேத்திரமாகிய கமலாலயமென்னும் திருவாரூரில் தியாகராஜப் பெருமானுடைய அனுக்கிரகம் பெற்றுப் பறவைநாச்சியாரிடம் சுகமடைந்து, அவ்விடமிருந்து பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று கடைசியில் காஞ்சிபுரத்தருகில் அவதரித்த சங்கிலிநாச்சியாரை மாத்தடியில் பறவையிடம் செல்வதில்லை என்று சத்தியம் செய்து வாழ்ந்து வரும் நாளில் ஓர் நாள் அர்த்தராத்திரியில் தென்னல் வீச, இது என்ன பறவையின் மேலடித்த காற்று என்று பறவையின் ஞாயகம் வர, பரவசமாகி சத்தியத்தை மீறி வெளிக்கிளம்

பிப் பறவையை நோக்கித் தெற்குத்திக்கில் வரும் சமயத்தில், சத்திய விரோதத்தின் பலனாய்க் குஷ்டமுங் கண்டுண்ணுறும் குருடடைந்து விட்டது. இது கண்டு ஞானக் கண்ணால் பகவானை பதிகம் பாடுகையில் கிடைத்த கோல் கொண்டு இக்குற்றாலம் வந்தார்.

இங்கு வந்து ஸ்ரீ உக்தவேதீச்வரரைப் பாட, கருணைக் கடவுளின் கடாட்சத்தினால் 'அமிர்த தீர்த்தத்தில் மூழ்கு' என அசரீரிவாக்கு நாயனாரின் செவியில் விழ உடனே சுந்திரமூர்த்தியானவர் அமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய, பகவானின் கருணையினால் ஓர் கண்ணும், குஷ்டமும் குணமடையக் கண்டு, ஆனந்தங்கொண்டு பகவானைப் பதிகம் பாட, பகவான் இரங்கி அனுக்கிரகித்து 'கமலாலயமாகிய திருவாரூரில் போய்ப் பறவையிடம் சுகித்துவா' என உத்திரவு கொடுக்கப்பட்டு ஸ்ரீ சுந்திரமூர்த்தி நாயனார் அவர்கள் குதூகலத்துடன் இந்த க்ஷேத்திரத்தைவிட்டுச் சென்றார்.

உக்தவேதினம்—ஈசானம் நிர்க்கமேசஞ்ச சுந்தரம். காளீசம்-வருணேசஞ்ச விச்வவேச்வரம் நக்ஷிஸ்வரம்.

என எட்டு திக்கிலும் எட்டு ஊர்களுடன் இந்த க்ஷேத்திரம் விளங்கிவருகிறது.

சுபம்.

# பிரஹ்லாத விஜயம்.

(ஸ்ரீமான் K. நடராஜய்யர்.)

(எல்லா உரிமைகளும் ஆசிரியருடையது.)

(76ம் பக்கத் தொடர்ச்சி.)

## ஐந்தாம் அத்தியாயம்.

சோணிதபுரமென்னும் நகரம் அசுரசிற்பியான மயனால் நிர்மாணிக்கப்பட்டதென்றால் அதனுடைய அழகை வருணிப்பதெங்ஙனம்? நகரத்தைசுற்றி விசாலமாயும், ஆழமாயுமுள்ள அகழியும், அகழியின் உட்புறத்தில் மகாமேரு பர்வதமே பிராகாரமாக அமைந்திருக்கிறதோவென்று பார்ப்பவர்கள் திகைக்கும்படித் தங்கமயமான காந்தியை வீசிக்கொண்டு, மேகமண்டலத்தை அளாவி ஜ்வலித்துக் கொண்டிருக்கும் பிரம்மாண்டமான நான்கு கோபுரங்களுடன் கூடின பொன்மதிலும் இருக்கின்றன. மதிலின் உட்புறத்தில், பற்பல அந்தஸ்துக்களைப் படைத்துச் சித்திரங்களமைந்து, இரத்தினமயமாக விருக்கிற மாடமாளிகைகள் இருபக்கங்களிலும் நெருங்கப்பெற்றிருக்கின்ற பற்பல தெருக்களும், ஸ்படிகக் கற்களாலேயே கட்டப்பட்டு கைலாச பர்வதத்தைப்போல் வெண்மையான காந்திவீசிப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ராஜகிருகங்களும், கொன்றை, புன்னை, பவளமல்லிகை, பலாசம், ஆல், அத்தி, தேக்கு, மருதம், பாலை, வேங்கை, மாமரம், ஸாளம், கோங்கு, பலா, தேவதாளி, குருந்தம், மாதுளை, தமாலம், அசோகம், சந்தனம், தேவதாரு முதலிய விருட்சங்களாலும், அன்னம், ஸாரஸம், சக்கிரவாகம் முதலியவைகள் விளையாடிக் கொண்டிருக்கும் குளிர்ந்த நீரையுடைய பல ஓடைகளாலும், சந்திரகாந்தக் கற்களாலாகிய மேடைகள், சவுக்கண்டிகள், லதாகிருகங்கள், கிரீடா பர்வதங்கள் முதலானவைகளாலும் நிறைந்து விளங்கும் சோலைகளும், அருவிகள், குகைகள், நந்தவனங்கள், மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை எனச் சொல்லும்



ஐவகை நிலங்கள் முதலானவைகளும் பொருந்தி, தன்னுடைய மகிமையினால் அளகாபுரியையும் அமராவதியையும் பரிகசித்துக் கொண்டு, லக்ஷ்மீவிலாசத்துடன் விளங்குகிறது அந்த நகரம். மாறி யொலிக்கும் மணிகளைப் பெற்றதாய் மும் மதங்களொழுக வீறிட்டுக் கொண்டிருக்கும் யானைகளின் பெருக்கையும், நவரத்தினமயமாய்ப் பாரித்திரா நின்ற தேர்களின் தொகையையும், மல்லகதி, மயூரகதி முதலான நடைகளைப் பெற்று, கம்பீரமாகக் கனைத்துக் கொண்டிருக்கும் உத்தம லட்சணங்கள் பொருந்தின அசுவக் கூட்டங்களையும் எண்ணக் கூடுமோ? வண்டினங்கள் கன்னியர்கள் அளகபாரங்களிற் சொருகியிரா நின்ற புதியமலர்களிலும், பற்பல மலர்களைப் பெற்றுப் பரிமளித்திருக்கின்ற நந்தவனங்களிலும், தாமரை முதலிய புஷ்பவகைகள் அலர்ந்திருக்கும் தடாகங்களிலும், பர்வதாகிருதியாக விருக்கின்ற யானைகளுடையப் மதநீர் பெருக்கிலும் விருப்புற்று, ரீங்காரத் தொனிகளைச் செய்து தேனையுண்டு திரிகின்றன. முத்து, பவழம், வயிடூரியம், கோமேதகம், புஷ்பராகம், நீலம், மாகதமெனச் சொல்லாநின்ற நவரத்தினங்களால் சோடித்துப் பிரகாசிக்கும் பல அந்தஸ்துக்களையுடைய பொன் மயமான உப்பரிகைகளில் வாசஞ் செய்கின்ற மின்னலை யொத்த சாயலையுடைய பருவ தருண மங்கையர்கள் மஞ்சனமாடி ரத்தினமயமான ஆபரணங்கள், புஷ்ப மாலைகள், பீதாம்பரங்கள் முதலானவைகளால் அலங்கரித்துக் கொண்டு, தங்கள் பாதச்சிலம்புகள் கலீர்கலீரெனச் சப்திக்க, அன்னங்களை யொப்ப மெல்ல மெல்ல உலவுவதை வருணிக்க முடியுமோ? ஒரு புறத்தில், வானத்தை யளாவி நிற்கும் உப்பரிகைகளில் சர்வாபரண பூஷிதைகளாகக் களித்து காமலாகிரி மீறிச் சோகப்படுகின்ற சுந்தராங்கிகளில் பலர் வானத்தில் போகின்ற தேவர்களில் தங்களுக்கு இஷ்டமானவர்களுடன் விளையாடுகின்றனர். ஒருபுறத்தில் மனதிலிரக்கமென்பதே இல்லாத கடினசித்தமுடைய அசுரப்பெண்களும், கண்டவர்கள் மனதைக் குழைந்து வாடச்செய்யும் வனப்புள்ள பருவ மங்கைகளும் கன்னிகைகளாகவே மாளிகையிலிருந்துகொண்டு, காமுகர்களான அசுரர்களுக்கு இன்பத்தைக் கொடுத்துக் கொண்டு வருகின்றனர். மேலும் கதம்பப் பொடியும், சுகந்தமலர்மாலைகளும், சந்தன களபகஸ்தூரிக் குழம்பும், புஷ்பச் செண்டுகளும் கொண்டு சுந்தரவதிகளான தாசிகள் விடர்களான அசுரகுமாரர்களுடன் கூடிச் சரசசல்லாபமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். மற்றொருபுறத்தில், மேல் அந்தஸ்துக்களில் வாசஞ் செய்கின்ற சில ரமணிகள் தங்கள் கணவருடன் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். வேறு சில ஸ்திரீகள் தங்கள் குழந்தைகள் அமிர்தத்துக்காக அழுகின்றதைக் கண்டு, ஆகாய வீதியில் செல்லும் சந்திரனைக் கரங்களை நீட்டிப் பிடித்து, அவனுடைய கலையிலுள்ள அமிர்தத்தைக் குழந்தைகளுக்குக் கொடுக்கின்றனர்.

பதிவிருதைகளான பல ஸ்திரீகள், யாதொரு குறைவு மில்லாமல் தங்கணவருடன் சதுரங்கம், சொக்கட்டான் முதலானவைகள் விளையாடிக்கொண்டும், நந்தவனங்களில் உல்லாசமாக உலாவிக்கொண்டும் காலங் கழிக்கிறார்கள். அழகிய அன்னப் பட்சிகள், மாடப்புறாக்கள், மயில்கள், கோகிலங்கள், கிளிகள் முதலிய பட்சிகளெல்லாம் இந்த நகரத்திலேயே வாசமாயிருக்கின்றன. இந்த நகரத்திலுள்ள தெருக்களில் எக்காலத்திலும் மேள வாத்தியங்களின் முழக்கமும், திருச்சின்னம், காகளம், சங்கம் முதலானவைகளின் ஓசையும், பேரிகைகளின் தொனியும், வீரர்களின் ஆரவாரமும் சமுத்திரத்தைப்போல் சப்தித்துக் கொண்டிருக்கும். மேகத்தை அளாவிய கோபுரங்களும், பொன் மதிலும், உப்பரிகைகளும், வாவிகளும், அரண்

மணிகளும் மற்றெல்லாச் சிறப்புகளும் நிறைந்து விளங்கும் இந்நகரின் அழகை பிரம்மதேவனாலும் வருணிக்க முடியுமோ? மயன் இந்த நகரை நிருமாணித்தான் என்பது பொய்யாக விருக்கவேண்டும் என்பதே நமதபிப்பிராயம். இல்லாவிடில் இதே விதமான வேறொரு பட்டணத்தை அவன் நிருமாணித்திருக்க வேண்டுமல்லவா? அவ்விதமில்லையே! எந்த உலகத்திலும் இதற்கிணையான நகரமில்லை யாதலால், இந்நகருக்கிணையாக இதையே ஒப்பிட வேண்டியிருக்கிறது. இந்நகரின் பெருமைகளைப் பார்ப்பதற்குக் கோடிக்கண்களும், சொல்லுவதற்குக் கோடி வாய்களும், கேட்பதற்குக் கோடிச் செவிகளும் வேண்டுமென்றால், இதன் மகிமைகளை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்தச் சோணிதபுர மென்னும் நகரமே சக்கரவர்த்தியான ஹிரண்யகசிபுவின் ராஜதானியாகும். இந்நகரின் மத்தியில் சக்கரவர்த்தி வாசஞ்செய்யும் அரண்மனையும், அரண்மனையைச் சுற்றி மேக மண்டலம் வரையில் உயர்ந்து நிற்கும் வயிரமதிலும், மதிலுக்கு நாற்புரங்களிலும் சக்கிரவாள கிரியைப்போலப் பாரித்தோங்கி, சூரிய சந்திரர்களின் பிரகாசத்தை மறைத்துக் கொண்டு விளங்கும் நவரத்தின மயமான நான்கு கோபுரங்களுமிருக்கின்றன. ஒவ்வொரு கோபுரவாசலிலும் ஜயசாலிகளான கோடி அசுரர்கள் ஆயுத பாணிகளாய்க் கண்ணிமைக்காமல் காவல் புரிந்து வருகிறார்கள். ஒவ்வொரு கோபுரத்தின் சிகரத்திலும் சக்கரவர்த்தியின் வெற்றிக் கொடியானது அசைந்தாடிக் கொண்டிருக்கிறது. அரண்மனைக்குள் நவரத்தினங்களால் செய்யப்பட்ட சித்திரங்களும், வயிரத் தூண்களும், பத்மராகத்தாலாகிய சுவர்களும், மரகதக் கற்களால் தளவரிசையுமுடையதாய்ப் பார்ப்பவர்களுடைய கண்கள் கூசும்படியான காந்தியுடன் சக்கரவர்த்தியின் சபாமண்டபம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அரண்மனையின் பின் புறத்தில் இந்திரனுடைய நந்தன வனத்தையும் திரஸ்கரித்துக் கொண்டிருக்கிற கற்பக விருட்சங்களால் நிறைந்த உத்தியான வனம் இருக்கிறது. சூரியன் அஸ்தமனத்தை அடைந்தான். பகல் முழுவதும் சூரிய கிரணங்களின் வெப்பத்தைச் சகிக்கமாட்டாமல் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஜீவராசிகளுக்குச் சந்தோஷத்தை உண்டாக்குவதற்காக அமிர்தமயமான தனது பதினாறு கலைகளுடனும் சந்திரன் கீழ்த்திசையில் உதயமானான். தென்றல் காற்று இனிமையாக வீசிக்கொண்டிருந்தது. பகலில் எள் விழக்கூட இடமிராமல் ஜனக் கூட்டங்களாலும், வாகனங்களாலும் நிறைந்திருந்த தெருக்களெல்லாம் நிச்சப்தமாயிருந்தன. சேவகர்கள் தெருக்களில் ஆங்காங்கு காவல் புரிந்து கொண்டிருக்கின்றனர். அக்கினி சாட்சியாக அகங்கை பிடித்த கணவனை வஞ்சித்துத் தன்னிஷ்ட நாயகனைத் தேடிக் கொண்டு போகும் வியபிசாரிகளான சில ஸ்திரீகள் மட்டும், கருப்பு வஸ்திரத்தால் தலையிலிருந்து கால்வரையில் மூடிக்கொண்டு மெள்ள மெள்ளப் போய்க் கொண்டிருக்கின்றனர்.

கணவனைப் பிரிந்த காதலிகளும், மனைவியைப் பிரிந்திருக்கும் புருஷர்களும் தங்கள் விரகவேதனையைத் தாங்கமாட்டாமல் சந்திரனையும், மந்தமாருதத்தையும் நிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். கணவன் தூரதேசம் சென்றிருக்கத் தனியே இருக்கும் யுவதி ஒருத்தி, தென்றல் வீசுவதைக்கண்டு நடுநடுங்கி "தென்றலே! என் மீது நெருப்பை வாரிக்கொட்டும் காரணமென்ன? ஆகட்டும்! என் பர்த்தா வந்ததும் சொல்லி உன் கொட்டத்தை யடக்கச் செய்கிறேன் பார்" என்று கோபிக்கிறாள். மற்றொருத்தி சந்திரனை நோக்கி "பாதகனே! சீத



கிரணனென்று பெயருள்ள நீ என்னை மட்டும் உஷ்ணத்தால் தகிக்கும் காரணமென்ன? நான் உனக்கு என்ன அபசாரம் செய்தேன்? ஏன் என்னைக் கொல்லுகிறாய்?" என்று அதட்டினாள். இன்னொருத்தி மன்மதனை நோக்கி 'அனங்கனே! நீ புஷ்பபாணனென்று பெயர் பெற்றிருப்பது சுத்தப் பொய். என்னை வேலைப் போன்ற கூரிய பாணங்களால் பிளக்கிறாயே. அபலையான நான்தானா உனக்கு எதிரி? ஸ்திரீகளை அடிப்பது மகாபாபமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே. என் பழியை ஏன் கொட்டிக் கொள்ளுகிறாய்? உனக்குப் புண்ணியமுண்டு. என்னை விட்டுவிடு" என்று கெஞ்சுகிறாள். வேறொருத்தி விரகத்தைச் சகிக்க முடியாமல் தன் கணவனின் உருவத்தை ஒரு பலகையில் எழுதித் தன் கரங்களைக் கொண்டணைவாள். அதைத் தன்மீது பொருந்தும்படியாக இறுகத் தழுவி, முகத்தோடு முகம் வைத்து முத்தமிடுவாள். இவர்களிவ்விதம் தவித்துக் கொண்டிருக்க, கணவனுடன் சேர்ந்திருக்கும் பெண்மணிகளெல்லோரும் தென்றலையும் சந்திரனையும் வாழ்த்திக்கொண்டு, மிகுந்த சந்தோஷத்துடன் தங்கள் புருஷர்களோடு மதுவைக் குடித்துவிட்டு, உல்லாசமாக ஆடிப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். ஒருத்தி தன் கணவனிடத்தில் கோபத்தால் பிணங்கிக் கொள்ள, இவளைச் சமாதானப்படுத்துவதற்காகக் காலில் விழுந்து அவன் கொஞ்சும்போது, கோபத்தினால் அவனுடைய கிரீடத்திலுள்ள முத்துக்களெல்லாம் சிதறிப்போகும்படியாக உதைக்கிறாள். மற்றொருத்தி தன்னுபகனை அழைத்து வரும்படி சகியை அனுப்ப, அவள் அவனுடன் உல்லாசமாயிருக்க, போனவள் திரும்பி வாராததைக்கண்டு தன்னைத் தானே நொந்துகொள்ளுகிறாள். புதிதாக விவாகமான நாரிகை யொருத்தி சயனக்கிருகத்தில் நாணத்தினால் பராமுகமாயிருந்து விட்டு, கணவன் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருக்க, அவன் தூங்குகிறானென்றெண்ணி ஆசையின் மிகுதியால் மெள்ள வெழுந்து அவன் கன்னத்தில் முத்தமிட, அவனுடம்பில் மயிர் கூச்சல் உண்டானதைக்கண்டு, வெட்கத்தினால் தலை கவிழ்கிறாள். ஒரு சோர ஸ்திரீ, சகியைப்போல் வேடம் பூண்டிருக்கும் தன் கணவனிடம் தன்னுடைய சோர நடவடிக்கையைச் சொல்லிக் கொண்டு வரும்போது நடுவில் தன் புருஷனென்றறிந்து, "சகி! இவ்வளவு தூரம் ஸ்வப்னம் கண்டு உடனே விழித்துக் கொண்டேன்" என்று சொல்லித் தான் சொன்னது ஸ்வப்ன சாமசாரமென்று அவன் நம்பும்படி செய்து தப்பித்துக் கொள்ளுகிறாள். ஒருத்தி மதுபான மயக்கத்தினால் தன் கணவனென்று அவனுடைய நிழலைத் தாவிப் பிடிக்கிறாள். இன்னொருத்தி தன் புருஷனுடன் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருக்க, இந்த சமயத்தில் அவள் தன்னுயிரினும் அருமையாய்ப் பாவித்து வருகிற அவளுடைய ஒரே குழந்தையானது அழ, "நீ நாசமாய்ப் போக, நீ தூங்கமாட்டாமல் ஏன் கழுத்தை அறுக்கிறாய்? உன்னைக் குழியிலே வைக்க" என்று திட்டுகிறாள். ஒருவள் கோபத்தினால் தன் புருஷனுடைய மார்பில் உதைக்க, அவன் அவளுடைய காலைப் பிடித்துக்கொண்டு "சுந்தரி! வேலைக்காரன் குற்றம் செய்தால் அவனை யஜமான் உதைப்பது சகஜந்தான். அதைப்போல் உன்னுடைய தாசனான என்னை நீ உதைத்ததைப்பற்றி எனக்கு வருத்தமே யில்லை. ஆனால் உன்னுடைய ஸ்பர்சத்தினால் எனக்கு மயிர்க்கூச்சல் உண்டானபடியால், அதினால் தாமரைமலரை யொத்த உன்னுடைய பாதத்திற்கு நோவுண்டாகுமே என்பதுதான் என் மனதைப் புண்படுத்துகிறது" என்று கூறி அவளைச் சமாதானப்படுத்தினான். தன் புருஷ

னிடத்தில் பிருந்த அன்புள்ள ஒரு ஸ்திரீயைப் பார்த்து, அவளுடைய சகியானவள் "பெண்ணே! நீ பெரும் பைத்தியக்காரியாயிருக்கிறாய். புருஷனிடத்தில் ஆசையிருக்கவேண்டியது தான். இருந்தாலும் இப்படியா! கொஞ்சமாவது பிகுவுடன் இருந்தாலல்லவா புருஷனும் நம்மை மதித்து நடந்துகொள்வான். இனி மேலாவது நான் சொல்வதைக் கேள். உன் கணவன் வந்தவுடன் அவனுடைய முகத்தைப் பாராமல் கோபித்துக் கொண்டிருப்பவளைப் போல் பாவனை செய். அவன் உன் காலில் வீழ்ந்து கெஞ்சுவான் பார்" என்று உபதேசம் செய்கிறாள். அவளைப் பார்த்து "மெள்ளப் பேசு, என் ஹிருதயத்திலிருக்கும் பர்த்தா கேட்டு விடப்போகிறார்" என்கிறாள் மங்கை. ஒருவன் தன்னுடைய வனிதாரத்தினத்தின் பீதாம்பரத்தை நெகிழ்த்தெறிய, அந்த சுந்தரி லஜ்ஜையுடன் தன்னுடைய அங்கங்களை மறைத்துக் கொள்வதற்காக நாயகனை இறுகத் தழுவிக்கொள்ளுகிறாள். ஒரு நாரீமணியானவள் தன் வீட்டுக்குவந்த லக்ஷ்மீபதி என்னும் புவனைப் பார்த்து, கடவுளைத் தியானிப்பது போல், "சுவாமி! லக்ஷ்மீபதியே! என் புருஷனோ தேசாந்திரம் சென்றிருக்கிறார். கிழவர்களான என்னுடைய மாமன் மாமிகள் கண் தெரியாமல் படுத்த படுக்கையாயிருக்கிறார்கள். யுவதியான நான் மட்டும் ஏகாங்கியாகக் கஷ்டப்படுகிறேன். என்னை அனுக்கிரகித்து என் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற வேண்டும்." என்று சமத்காரமான வார்த்தைகளால் அந்தச் சோரனிடத்தில் தனக்கு ஆசையிருப்பதையும், வீட்டிலுள்ளோர் அறிந்துகொள்ளுவார்களே என்று பயப்படக் காரணமில்லை யென்பதையும் சூசிப்பித்து, அவனும் சம்மதிக்க, இருவரும் உல்லாசமாக இருந்தார்கள். ஒருத்தி மதுபான மயக்கத்தினால் தன் புருஷனுடன் விபரீதமாகக் கிரீடித்துத் தன்னிச்சை நிறைவேறிய பிறகு, தன்னுடைய நடவடிக்கைக்காக லஜ்ஜைப்பட்டுக் கொண்டிருக்கிறாள். ஒருத்தி தேசாந்தரத்திலிருந்து திரும்பிவந்த தன் கணவனை ஆசைதாங்காமல் இறுகத் தழுவிக்கொள்ள, அவள் மார்பிலணிந்திருந்த முத்துமாலையானது நொறுங்கி, அவன் க்ஷேமமாய்த் திரும்பி வந்ததற்காகப் புஷ்பமாரி பொழிவதைப் போல், அவனுடம்பில் உதிர்ந்து விழுகின்றது. சிலர் பரதசாஸ்திரப்படி நடனம் செய்துகொண்டும், சிலர் வீணா நாதத்தையும் பரிகசிக்கும் தங்கள் இனிய குரலால் பாடிக்கொண்டும், சிலர் தங்கள் புருஷர்கள் மீது உல்லாசமாகச் சாய்ந்துகொண்டும், மற்றும் சிலர் ஆலிங்கனம் செய்துகொண்டும், வேறு சிலர் முத்தமிட்டுக் கொண்டும், இன்னும் சிலர் விளையாடிக்கொண்டும், பலர் தங்கணவர்களின் தோள்மேல் கையோட்டுக்கொண்டு உத்தியானங்களில் உலாவிக்கொண்டும், பலர் உல்லாசமாகப் பேசிக்கொண்டும், இன்னும் பலர் பற்பல விதமான சிருங்கார அவஸ்தைகளுடனும் இருப்பதைப் பார்க்கும்போது, மன்மதனுடைய உலகமிதுதான் என்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. கண் தெரியாது, கன்னங்கள் குழிவிழுந்து, நரம்புகள் தளர்ந்து, ஜீர்ணமான சரீரத்துடன் மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சில கிழவர்களையும் பால் குடிமாறாத சிசுக்களையும் தவிர இந்நகரிலுள்ள மற்றெவரும் அனங்கனுடைய பாணங்களுக்குத் தப்பிப் பிழைக்கவில்லை.

## ஆறாம் அத்தியாயம்.

அரண்மனை உத்தியானவனம் நிச்சப்தமாயிருக்கிறது. சக்கிரவாக தம்பதிகள் பிரிவாற்றாமையினால் கதறிக்கொண்டிருக்கும் கூச்சலையும், மலர்ந்திருக்கும் புஷ்பங்களிலுள்ள மதுவையுண்டு திரிந்துகொண்டிருக்கும் வண்டுகளின் ரீங்காரத்வனியையும் தவிர வேறு எவ்வித



சந்தடியுமில்லை. வியோகத்தை அடைந்தவர்களின் தூஷணையையோ, சேர்ந்திருக்கும் சதிபதிகளின் பூஷணையையோ கொஞ்சமேனும் பொருட்படுத்தாமல் சந்திரன் ரமணீயமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான். உத்தியானவனத்திலுள்ள ஒரு ஸ்படிகமேடையின் மீது ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும் ஒருவரையொருவர் இறுகத் தழுவிக் கொண்டபடியே, உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஸ்திரீ கண்டவர் மனதைக் கவரும் கட்டழகி. ஆ! அவளுடைய அழகை யாவரே வர்ணிக்கக்கூடும்! அடர்ந்து, நீண்டு, சுருண்டு, கார்கால மேகத்தையும் வண்டுக்கூட்டங்களையும் பழிக்கும் கேசபாரமும், பிறைநுதலும், மன்மதனுடைய வில்லைப்புறங்கண்ட புருவமும், கறுத்துக் காதளவு நீண்டு நீலோத்பலம் போல் விளங்கும் நேத்திரமும், முகிழம்பூவென்னத்தக்க நாசியும், பவள வாயும், முல்லையொத்த பல்லும், வலம்புரிசங்கம் போன்ற கழுத்தும், உருண்டு திரண்டு இளம்போத்தைப் போன்ற கரமும், ஸ்வர்ணகலசங்களையும் யானையின் மஸ்தகத்தையும் சக்கிரவாக பட்சியையும் பழித்து நடுவில் ஒரு நூல் நுழையக்கூட இடமிராதபடி பாரித்துப் பூரித்து மார்க்கச்சுக்குள் அடங்காமல் விம்மிக் கொண்டிருக்கிற ஸ்தனங்களும், கம்பீரமாயும் அகாதமாயுமிருக்கும் நாபியும், பிடிக்குள்ளடங்கும் இடையும், வாழைமரம்போன்ற துடையும், தாமரை நிகர்த்த பாதமும், குயிலினுமினிய குரலும், அன்ன நடையும், மின்னற்கொடி போன்ற சாயலும்—இன்னும் சாமுத்திரிகா சாஸ்திரப்படி எல்லா லட்சணங்களும் செவ்வையா யமையப்பெற்ற அப்பெண்மணி பத்மினி ஜாதி ஸ்திரீயாவாள். அவளுடைய சரீரமோ வாகைப் புஷ்பத்தைப் போல் அதிமேன்மையாயிருந்தது. அவளுடைய முகமோ தாமரையையும் களங்கமில்லாப் பூர்ண சந்திரனையும் திரஸ்கரித்துத் தனக்குவமையான வஸ்து வேறெதுவுமில்லாது பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவள் விலையுயர்ந்த பீதாம்பரம் உடுத்திருந்தாள். அவள் தரித்திருந்த நகைகளோ விலைமதிக்க முடியாதவையா யிருந்தன. காதில் வைரக் கம்மலும், கழுத்தில் நவரத்தினமாலை, முத்துமாலை முதலானவைகளும், கையில் காப்பு, சங்கிலி, பல விதமான வளையல்கள் முதலானவைகளும், தலையில் தேஜோமயமாய்ப் பிரகாசிக்கும் நவரத்தினகிரீடமும், இடுப்பில் வைர ஒட்டியாணமும், பாதத்தில் மாணிக்கச் சிலம்பும் அணிந்திருந்தாள். அவளுடைய சௌந்தரியத்தையும், எப்பொழுதும் வேதங்களை ஓதிக்கொண்டு அதனால் இதர விஷயங்களையே அறியாமலிருக்கும் சிருஷ்டிகர்த்தாவான பிரம்மதேவருடைய சாமர்த்தியத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது அவள் இந்தப் பிரம்மதேவரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்க முடியாதென்பது நிச்சயம். அவளை சிருஷ்டித்தவன் ஜகன்மோஹனனாய்—சிருங்கார ரசத்துக்கே அதிதேவதையாக—விளங்கும் மன்மதனாகவே இருக்கவேண்டும். அவளுடைய முகத்திலிருந்துதான் அமிர்தகிரணனான சந்திரன் உண்டானான். அவளுடைய பாததூளிகளைக் கொண்டே பிரம்மதேவர் அப்சரஸ்களை சிருஷ்டித்தார்போலும். அதிகம் சொல்லுவானேன். முற்றுந் துறந்த முனிவர்களும், பிரம்ம ஞானிகளும், மும்மூர்த்திகளுங்கூட அவளுடைய அழகைக் கண்டு மயங்கிப் பொறிகலங்கி அவள் காலில் வீழ்ந்து கெஞ்சுவார்களென்றால், அவளுடைய சௌந்தர்யத்தை வாசகர்களே ஊகித்துக்கொள்ளலாம். அம்மனோன்மணிதான் சக்கரவர்த்தியான ஹிரண்யகசிபுவின் பட்டமஹிஷி லீலாவதி. அவளுக்கு 'கயாது' என்று மற்றொரு பெயரும் உண்டு. அவள் மகா பதிவிருதை. அருந்ததி, அனசூ

யை, லோபாமுத்திரை முதலியவர்களும் பாதிவ்ருத்ய மகிமையை இவளிடத்திலிருந்தே கற்றுக்கொள்ளவேண்டும். பத்தினிக்கடவுளென்றே அவளை அழைத்தல் வேண்டும். அவளுக்கருகில் சக்கரவர்த்தி உட்கார்ந்திருந்தார். இருவருடைய முகமும் ஒன்றுபடும்படி ஒருவர் தோள்மேல் ஒருவர்கையைப் போட்டு அணைத்துக்கொண்டு, இருவரும் சரசசல்லாபமாகக் கொஞ்சிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். "அன்பே! இன்று நிலவு எப்படியிருக்கிறது? பார்த்தாயா?" என்று சக்கரவர்த்தி அன்போடு கேட்டார்.

"பிராணநாதா! இன்று பௌர்ணமியல்லவா, சந்திரன் ரமணீயமாய்த் தான் பிரகாசிக்கிறான்" என்றாள் லீலாவதி.

"கண்ணே! இந்தச் சந்திரன் எவ்வளவுதான் பிரகாசித்தாலும் உன் முகத்தை ஜயிக்க இவனால் கூடுமோ? கிருஷ்ணபட்சத்தில் தேய்ந்துகொண்டும் சுக்கில பட்சத்தில் வளர்ந்துகொண்டும் நடுவில் ஒரே ஒரு தினத்தில் மட்டும் (அதாவது பௌர்ணமியில் மட்டும்) பூர்ணகலைகளுடனும் விளங்கும் இவன், எப்பொழுதும் பரிபூர்ணமாய் அமிர்தத்தை வருஷித்துக்கொண்டிருக்கும் உனது திவ்விய முகத்துக்கு நிகராவனோ? இவன் உண்மையில் மானமுள்ளவனாயிருந்தால் உன் வதனத்தைப் பார்த்த பின்பு வெட்கமில்லாமல் இவ்விதம் வெளிக்கிளம்புவானா?" என்று களியுடன் கூறினார் சக்கரவர்த்தி.

தன்னுடைய அழகைப் பற்றித் தன்னுடைய முன்னிலையிலேயே சக்கரவர்த்தி புகழ்ந்து பேசுவதைக் கேட்டதும் லீலாவதியின் முகம் நாணத்தினால் சிவந்தது.

"பிராணநாதா! இந்தச் சந்திரன் அமிர்த கிரணங்களை வருஷிக்க, புஷ்பங்களின் நறுமணம் கமழ, மந்தமாருதம் வீச, இந்த ஸ்படிக மேடையின் மீது நாமிருவரும் எப்பொழுதும் இப்படியே இருந்து விடுவோமானால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்! இப்படிப்பட்ட நிலவு நாளில் தான் மன்மதனென்னும் திருடன் சந்திர பிம்பத்தின் மத்தியிலிருக்கும் களங்கமாகிற சுரங்கத்தின் வழியாகப் பூலோகத்தில் இறங்கி ஸ்திரீ புருஷர்களின் மானத்தை கொள்ளையடிக்கிறான். அவனுடைய சாமர்த்தியத்தைப் பாருங்கள். கரும்பை வில்லாகவும், வண்டுக் கூட்டங்களை நாண் கயிறாகவும், தென்றல்காற்றையே தேராகவும், வைத்துக்கொண்டு சுயமாய் சரீரமே யில்லாமல் அனங்கனாயிருக்கும் அவன் தன்னுடைய ஐந்தே பாணங்களினால்—அதுவும் புஷ்ப பாணங்களினால்—இந்த உலகத்தை என்ன பாடு படுத்துகிறான்! அவனுடைய மகிமையல்லவா மகிமை! அவனுடைய சேர்க்கையினாலல்லவா சந்திரனும் உலகத்தை சந்தோஷப்படுத்துகிறான்? அவர்களிருவரும் தாண்டவமாடும் இன்றிரவு நம்மைப் போலொத்த ஸ்திரீ புருஷர்களுக்கு எவ்வளவு இன்பத்தைக் கொடுக்கிறது பார்த்தீர்களா?" என்று உசாவினாள் லீலாவதி.

"கண்மணி! நீ சொல்வது சரிதான். பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகளும்கூட இந்த மன்மதனுடைய பாணவேகத்தைத் தாங்கமாட்டாமல், ஒருவர் தன் மனைவியை நாக்கிலேயே வைத்துக்கொண்டும், மற்றொருவர் தன் மனைவிக்குத் தன் சரீரத்தில் பாதியைக் கொடுத்தும், இன்னொருவர் தன் மனைவியை எப்பொழுதும் மார்பில் வைத்துக்கொண்டுமிருக்கிறார்களென்றால், மற்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்! மூவுலகங்களையும் வெற்றிகொண்ட—எப்படிப்பட்ட ஆயுதங்களாலும் பிளக்க முடியாத வஜ்ரசரீரத்தையுடைய—என்னை இந்த மன்மதன் ஒரே



பாணத்தினால் ஜயித்துவிட்டான். என்னுடைய மனமானது உன்னிடத்திலேயே ஐக்கியப்பட்டுவிட்டது. பிராணேச்வரி! என்னுடைய மனம் உன் சரீரத்தில் யாத்திரைசெய்ய ஆரம்பித்து முதன் முதல் உன்னுடைய முகமாகிறமனோகரமான ஆரண்யத்தை அடைந்தது. அங்கு உனக்கு நேத்திரமாக விளங்கிக்கொண்டிருக்கும் நீலோத்பலங்களையும், பற்களென்றழைக்கப்படும் முல்லைப் புஷ்பங்களையும், நாசியென்று சொல்லப்படும் சண்பகப் புஷ்பங்களையும், அதரமாகிற செம்பரத்தம் பூவையும், மந்தஹாஸமாகிற ஜாதிப் புஷ்பங்களையும் பார்த்துக்கொண்டு வரும்போது, என் மனம் மட்டுமல்ல; எனதுயிரே உன்னிடத்தில் லயித்திருக்கிறது. கண்ணே! உன் அதராமிருதத்தைப் பானம் செய்துகொண்டு, உன்னை விட்டுப் பிரியாமல் எப்பொழுதும் உன்னுடன் சரசசல்லாபமாகக் கிரீடித்துக் கொண்டிருப்பதை விட எனக்குப் பேரின்பம் பயப்பது வேறொன்றுமில்லை. எல்லா நற்குணங்களும், ஸ்திரீகளும் கண்டு காதல் கொள்ளக்கூடிய திவ்வியலாவண்யமும் ஒருங்கே யமையப் பெற்ற ஸ்திரீரத்தினமான உன்னைக் காதலியாக அடைந்த என்னுடைய பாக்கியமே பாக்கியம்!" என்று கூறி, அவளுடைய அதரத்தில் முத்தமிட்டார் சக்கரவர்த்தி.

சக்கரவர்த்தி அடிக்கடி தன் காதலியைப் பார்த்திருக்கிறாராயினும், அன்றையதினம் அவள் விளங்கியதுபோல் அவ்வளவு அழகுடன் அதற்குமுன் அவள் இருந்ததில்லையென்றே நினைத்தார். புஷ்பங்களின் மதுவை வயிறார உண்டு மயங்கிக் கிடக்கும் வண்டைப்போல, சக்கரவர்த்தி லீலாவதியின் அழகில் மதிமயங்கி ஏதும் தோன்றாமல் ஸ்தம்பித்துவிட்டார். ஸ்வர்க்க போகமென்பது இதுதான் என்று நினைத்தார். தன்னுடைய உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் அவளுடைய ஒரு மந்தஹாஸத்துக்காக அர்ப்பணம் செய்துவிடத் தயாராயிருந்தார்.

என்னே! பெண்மணிகளின் சக்தி! மூவுலகத்தையும் அடக்கியாளும் புருஷனையும் தன்னுடைய அன்பினால்—தனக்கடங்கி நடக்கும்படி—தான் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கும்படி—ஒரு ஸ்திரீ ஒரு நிமிஷத்தில் செய்துவிடுகிறாள். மிகுந்த பலவானென்றும், ஒருவருக்கும் அஞ்சாத வீரசிகாமணி யென்றும் பெயர் பெற்ற மனிதனும் தன் வார்த்தைக்குப் பணிந்து நடக்கும்படி செய்து, அவனை அடக்கியாளும் அபாரமான சக்தியை அபலைகள் என்று சொல்லப்படும் ஸ்திரீகளிடம் மட்டுமே கடவுள் அமைத்திருக்கிறார். தன் காதலியின் அன்பினால் கட்டுப்பட்ட புருஷன் அவளுக்காக எத்தகைய கஷ்டங்களையும் சகித்துக்கொள்ளவும், எப்படிப்பட்ட வேலையையும் செய்யவும் பின்வாங்குவதில்லை என்பதை நாம் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். ஆதலால் சக்கரவர்த்தி இவ்விதம் தன் மனைவியின் இன்பத்தில் கட்டுப்பட்டுத் தன்னை மறந்து பரவசப்பட்டது ஓர் ஆச்சரியமன்று.

சக்கரவர்த்தியும், சக்கரவர்த்தினியும் இவ்விதம் தேனொழுகப் பேசிக்கொண்டும், ஒருவரையொருவர் இறுகத் தழுவி அடிக்கடி முத்தமிட்டுக்கொண்டும், ஆனந்தத்தினால் மெய் மறந்தவர்களாய்க் கிரீடித்துக்கொண்டிருந்தார்கள். தங்களையும் தங்களைச் சுற்றியுள்ள வஸ்துக்களையும் அறவே மறந்தார்கள். அவர்களிருவருடைய ஆத்மாவும் ஒன்றாகக் கலந்து ஐக்கியத்தை யடைந்தது. அவர்களனுபவித்த பேரின்ப சுகத்தை வாசகர்களுக்கு அப்படியே விளக்கிக் காட்டவேண்டுமென்று நாம் முயலும்போது நமது மூளை கலங்குகிறது. எழுது

கோல் கழுவி விழுகிறது, அதை வருணிப்பதற்குத் தமிழ்பாஷையிலேயே எழுத்துக்களில்லை. கையினுல் எழுதுவதற்கும், வாயினுல் சொல்லுவதற்கும், மனத்தினுல் ஸ்மரிப்பதற்கும் கூட முடியாதபடி அவ்வளவு எல்லைகடந்த ஆனந்தசாகரத்தில் மூழ்கினுர்கள். அந்த சுகம் எப்படிப்பட்டதாயிருக்குமென்பதை அதை அனுபவித்த பாக்கியசாலிகளே சொல்லவேண்டும். சிருங்கார ரசத்தின் மகிமை வர்ணிக்க முடியாதது. ஒவ்வொருவரும் தம் அனுபவத்தினுல் மட்டுமே அறியக்கூடியது. சிருங்கார சாஸ்திரங்களில் கரைகண்ட மகா நிபுணர்களும் அவ்வின்பத்தை அனுபவித்துப் பார்த்தாலன்றி அதன் மகிமையைப் பற்றி ஒன்றும் சொல்லமுடியாதென்பது நிச்சயம். இங்கே ஒரு விஷயம். ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவராய் சர்வக்ஞர் என்று பெயர் பெற்று திக்குவிஜயம் செய்து கொண்டுவரும்போது காச்மீரத்திற்குச் சென்று பிரக்யாதிபெற்ற மண்டன மிச்ரர் என்னும் வித்வானை ஜயித்து அவரைத் தமது சிஷ்யராக ஏற்றுச் சந்நியாசம் கொடுத்தருளினுர். அதனுல் கோபத்தை யடைந்த மண்டன மிச்ரரின் தர்மபத்தினியான சாரதை என்பவள் தன்னுடன் வாதம் செய்யுமாறு ஆசார்யாரை அழைத்தாள். அவரும் சம்மதிக்கவே, அவரைப் பார்த்து 'மன்மதனுடைய கலைகள் எவ்வளவு? அவைகளின் ஸ்வரூபமென்ன? ஒரு காதலனும் காதலியும் மனமொருமித்து நாணம் விட்டு ஒன்றுபடும் இன்பம் எப்படிப்பட்டது?' என்று கேட்டாள். ஆசார்யார் என்ன செய்வார், பாபம்! அவர் சிருங்கார சாஸ்திரங்களை மட்டும் படித்திருந்தாரேயன்றி அந்த இன்பத்தை அனுபவித்துப் பார்த்தவரல்ல. ஆகவே ஒரு மாதத்திற்குள் பதில் சொல்லுவதாக அவளிடம் அனுமதி கேட்டுக்கொண்டு, சிஷ்யர்களுடன் போகும்போது வழியில் ஒரு காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்த அமருகன் என்னும் அரசன் தெய்வச் செயலாய்ப் பிராண வியோகத்தை யடைய, பாகாயப் பிரவேசம் என்னும் வித்தையினுல் அவனுடைய சரீரத்தில் புகுந்து அவனுடைய மனைவிகளான நூறு சுந்தரிகளுடனும் ஒரு மாதம் வரையில் கிரீடித்து சிருங்கார தத்துவத்தை அறிந்துகொண்டுவந்து சாரதையின் கேள்விகளுக்குப் பதிலளித்து அவளை ஜயித்தார் என்பது கவனிக்கத்தக்கது.

जये धरित्र्याः पुरमेव सारं पुरे गृहं सद्मनि चैकदेशः ।
तत्रापि शय्या शयने वरा स्त्री रत्नोज्ज्वला राज्यसुखस्य सारः ॥
(वराहमिहिरः)

இவர்களிவ்விதம் ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருக்க, ராத்திரிப் பொழுது அதிவேகமாகச் சென்றுகொண்டிருந்தது. பிரம்மானந்த சுகத்தில் மூழ்கியிருந்த சக்கரவர்த்தி தம்பதிகள் சூரியன் கீழ்த்திசையில் உதயமானதைக் கூட அறிந்தார்களில்லை.

ஏழாம் அத்தியாயம்.

இரவு முழுவதும் சுரத லீலைகளைச் செய்து களைத்துப்போயிருந்த யுவதிகள் பிராதக்காலத்திய சீதளமான காற்றினுல் சிரமம் நீங்கப்பெற்றவர்களாய் தங்கள் சுகத்துக்கு இடையூறு செய்த சூரியனை நிந்தித்துக்கொண்டே படுக்கையை விட்டெழுந்தார்கள். சக்கிரவாகப் பட்சிகள் சூரியனை வாழ்த்திக்கொண்டு தம் காதலிகளுடன் கூடிக் குதூகலித்துக்கொண்டிருந்தன. தேசாந்தரத்திலிருந்து திரும்பிவந்த பர்த்தாவைக் கண்ட பதிவிருதையைப்போலத் தாமரைகள் தங்கள் நாயகனின் வரவைக் கண்டு சந்தோஷித்து மலர்ந்தன. பட்சிகள் தம் கூடுகளை விட்டு இரை தேடுவதற்காக வெளியிற் சென்றுகொண்டிருந்தன. இரவு முழுவதும் நிச்சப்தமாயிருந்த சோணிதபுரத்தின் தெருக்களில் தங்கள் அலுவல்களை முன்னிட்டுச் செல்லும் ஜனங்களின் கூட்டம் சமுத்திரம் போல் நிறைந்திருந்தது. ரதங்களும் சாரட்டுகளும் அங்குமிங்கும் அதிவேகமாகப் பறந்து கொண்டிருந்தன. தங்க மயமான அந்த நகரமானது சூரியனுடைய இளங் கிரணங்களால் தாக்கப்பட்டு தகதகவென ஜொலித்துக் கொண்டிருந்தது. ஜனங்களின் சப்தமும், பேரிகைகளின் தொனியும், மங்கள வாத்தியங்களின் முழக்கமும், வீரர்களின் அட்டகாசமும் வானைப் பிளந்தன. சக்கரவர்த்தி உப்பரிகையில் உலாவிக்கொண்டிருந்தார். அவர் மிகுந்த மனச் சஞ்சலத்துடனிருப்பதாகக் காணப்பட்டது. கைகளிரண்டையும் மார்பில் கட்டிக்கொண்டு ஏதோ சிந்தனை செய்வதும், பெருமூச்சு விடுவதும் தனக்குத்தானே பேசிக் கொள்வதுமாக இருந்தார்.

"ஆ! என்ன! ஒரு காரணமுமின்றி என் மனம் ஒரு நிலையிலில்லாது தத்தளித்துக் கொண்டிருக்கின்றதே! நான் எவ்வளவுதான் முயன்றும் என் மனதை அடக்கிச் சமாதான நிலைக்குக் கொண்டுவர முடியவில்லையே! எனக்கு என்ன குறை? சத்துருக்களை வாட்டி மூவுலகங்களையும் ஜயித்து அரசு செய்கிறேன். தேவர்களுக்கும் கிடைக்காத சுகபோகங்களை யனுபவிக்கிறேன். லக்ஷ்மி, ரதி, திலோத்தமை, மேனகை முதலானவர்களும் கண்டு நாணத்தக்க பேரெழில் வாய்ந்த திவ்விய சுந்தரியை மனதிற்கிசைந்த காதலியாகப் பெற்றிருக்கின்றேன். எதிர்த்த சத்துருக்களை யமலோகங் குடியேற்றும் வீர பராக்கிரமசாலியான தம்பியிருக்கிறுன். இவ்வளவுமிருந்தும் ஒரு நாளுமில்லாத விதமாய் இன்றையதினம் என் மனம் இவ்வளவு சஞ்சலப்படுவானேன்? இன்று விடியற்காலத்தில் நான் கண்ட ஸ்வப்னத்தின் பொருளென்ன? ஆ! அந்த ஸ்வப்னம் எவ்வளவு பயங்கரமாயிருந்தது? அதை நினைக்க நினைக்க என் மூளை கலங்குகிறதே. ஆ! இதென்ன? எனது இடது தோள் படபடவென்று துடிக்கின்றதே! ஏதோ ஆபத்து நேரிடப்போகின்றதுபோலும். வீரசிகாமணியான என் சகோதரனும் இங்கில்லையே. ஒரு மாதத்திற்குமுன் தன்னுடன் யுத்தம் செய்யக்கூடிய எதிரிகளைத் தேடிப் புறப்பட்டவன் இதுவரையில் ஏன் திரும்பி வரவில்லை? ஒருகால் அவனுக்குத்தான் ஏதாவது ஆபத்து நேரிட்டுவிட்டதோ? சே! சே! அப்படியிருக்காது. அவனை ஜயிக்கக்கூடியவர்கள் எந்த உலகத்திலுமில்லையே. அந்தப் புருஷ சிம்மத்துக்குக் கெடுதி செய்யவேண்டுமென்று நினைக்கவும் ஒருவரும் துணியமாட்டார்களே. ஆயினும் அவன் இதுவரையில் வராததைக் குறித்து எனக்குச் சந்தேகமுண்டாகிறதே. நான் என்ன செய்வேன். ஏன் இன்னும் குலகுரு வரவில்லை? அவரை அழைத்துவரும்படி முன்னமேயே ஆள் அனுப்பியும்......" இவ்விதம் கலங்கிக்கொண்டிருந்த சக்கரவர்த்தி தனக்குப் பின்னுல் யாரோ பெருமூச்சு விடும் சப்தத்தைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். சுக்கிராசாரியார் நின்றுகொண்டிருந்தார். "வாருங்கள்! நீங்கள் வந்து வெகுநேரமாய்விட்டதுபோலும். நான் துக்கத்தினுல் பீடிக்கப்பட்டிருந்ததால் தங்கள் வரவை கவனிக்கவில்லை. அதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். இந்த ஆசனத்தில் உட்காருங்கள்" என்று அவரை உபசரித்தார் சக்கரவர்த்தி.

"அரசே! தங்களுக்குத் துக்கம் உண்டாகக் காரணமென்ன? தங்கள் முகம் ஏன் இப்படி வாடியிருக்கிறது? நடந்த விஷயங்களை விவரமாய்ச் சொல்லுங்கள்" என்று உசாவினுர் சுக்கிரர்.

"இன்று அதிகாலையில் நான் ஒரு ஸ்வப்னம் கண்டேன். அதுமுதல் என் மனம் தாமரையிலைத் தண்ணீர்போல் தத்தளித்துக்கொண்

டிருக்கிறது. அக்கனவை நினைக்கும்போதே என் மூளை கொதிக்கிறது. அதன் பொருளை அறிவதற்காகத்தான் தங்களை வரவழைத்தேன்" என்றார் அரசன்.

"அக்கனவென்னவென்று தாங்கள் இன்னும் வெளியிட்டுச் சொல்லவில்லையே" என்றார் சுக்கிரர்.

"ஸ்வாமிகளே! என் சகோதரன் ஒரு ஆரண்யத்தின் வழியாகச் செல்லும்போது பயங்கரமான ரூபத்தையுடைய ஒரு பன்றி அவனை எதிர்த்ததாகவும், சற்று நேரம் அதனுடன் யுத்தம் செய்து கடைசியில் அந்தப் பன்றியினால் அவன் கொல்லப்பட்டதாகவும், அவன் இறக்கும்போது என்னை நினைந்து துக்கப்பட்டு, "ஐயோ! அண்ணா! நான் அனியாயமாய்ச் சாகிறேன். என்னைக் கொன்றவனை மட்டும் விடாதே. பழிக்குப் பழி வாங்கு" என்று கதறிக்கொண்டே பிராணனை விட்டதாகவும் கனவு கண்டு விழித்தேன். அதுமுதல் என் புத்தி என் சுவாதீனத்திலில்லை. என் மனம் படும் பாட்டை வருணிக்க முடியாது. என் தம்பிக்கு என்ன ஆபத்து நேரிட்டதோவென்பதே எனக்கு மிகுந்த கவலையாக இருக்கிறது. அந்தக் கனவின் பொருளென்னவென்பதைத் தாங்கள் எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டார் அரசன்.

சுக்கிராசாரியரின் மனம் மிகவும் வருத்தத்தை அடைந்தது. ஹிரண்யாக்ஷன் மரணத்தை அடைந்தான் என்பதையே இந்த ஸ்வப்னம் குறிக்கிறது என்று நினைத்தார். இவ்விஷயத்தைச் சக்கரவர்த்திக்குச் சொல்லி அவர் மனதை துயரத்திலாழ்த்தாது, சமாதானமான வார்த்தைகளால் அவருக்குத் தேறுதல் சொல்லுவதே உசிதமென்று தீர்மானித்துக் கொண்டார். மனதைத் திடப்படுத்திக்கொண்டு சக்கரவர்த்தியை நோக்கிச் சொன்னார் :—

"அரசே! உண்மையிலேயே அந்தக் கனவு பயங்கரமானதுதான். சமீபத்திலேற்படப் போகும் ஏதோ ஒரு கெடுதலையே அது சூசிப்பிக்கிறது. ஆயினும் வருவது வந்தே தீரும். அதைத் தடுக்க ஒருவராலும் முடியாது. எந்தக்கஷ்டம் வந்தாலும் அரசர்கள் தைரியத்தைக் கைவிடக்கூடாது. எப்படிப்பட்ட ஆபத்துக்களையும் லட்சியம் செய்யாது உற்சாகத்துடனிருக்கும் புருஷனே வீரனெனப்படுவான். மூவுலகங்களையும் வென்ற புருஷசிம்மமான தாங்களே இவ்வளவு அதைரியப்படலாமா? மனக்கவலையென்பது மனிதர்களுக்குப் பெரிய சத்துருவல்லவா? கவலையினால் பலமொடுங்கிப்போய்விடும். பலமொடுங்கினால் சத்துருக்கள் மேலிட்டு நம்மை வருத்துவார்கள். அதனால் தாங்கள் இதுவரையில் பெற்றிருந்த கீர்த்தியும், தங்களுடைய பராக்கிரமமும், நாசத்தையடையும். தாங்கள் இவ்விதம் கவலைப்படுவதை சத்துருக்களறிந்தால் தங்களைப் பரிகாசம் பண்ணுவார்களே. சிதை, கவலை இவ்விரண்டிற்குள் சிதையைக்காட்டிலும் கவலையே மிகவும் கொடியது. சிதை பிராணனில்லாத சரீரத்தை மட்டுமே தகிக்கிறது. கவலையோ உயிருள்ள சரீரத்தைத் தகித்து நாசஞ் செய்கிறது. கவலையினால் பீடிக்கப்பட்டவன் புத்தி மழுங்கி, மூளை கலங்கி, இந்திரியங்கள் ஒடுங்கி, கன்னங்கள் ஒட்டிப்போய், கண்கள் குழி விழுந்து, நடைப்பிணம்போல் ஆகிறான். எதைக்கண்டாலும் அவனுக்கு வெறுப்பு. விருந்துக்கச்சேரிகளிலும், சந்தோஷக் கூட்டங்களிலும், உத்தம ஸ்திரீகளுடைய போகத்திலும், உற்சவங்களிலும், சங்கீதக் கச்சேரிகளிலும், மற்றுமுள்ள எந்தக் கொண்டாட்டங்களிலும் அவனுக்கு ருசி இருப்பதில்லை. அவைகளில் அவன் கலந்து கொள்வதுமில்லை. உலக விஷயங்களிலேயே சம்பந்தப்படாமல் எப்போதும் தன்னந்தனிய



னாக—எகாந்தமாக இருக்கவே அவன் பிரியப்படுவான். அவன் மனம் எப்பொழுதும் அலைகடல் துரும்புபோல் தத்தளித்துக்கொண்டேயிருக்கும். மரணம் ஒன்றே அவன் கவலையைத் தீர்க்கக்கூடியது. நரக வேதனைகள் முழுமையும் இவ்வுலகத்திலேயே அனுபவித்துவிட்டுக் கடைசியாக அகால மரணத்தையடைகிறான். மேலும் சம்சாரமென்னும் துன்ப சமுத்திரத்தில் யாத்திரை செய்யும்போது மனிதன் ஒவ்வொரு நிமிஷமும் ஏக்கம், விசாரம், பயம், கோபம், பொறாமை, ஆசை, கபடம், துவேஷம், கிழத்தனம், மரணம் முதலான பயங்கரமான முதலைகளால் எதிர்க்கப்படுவது—பீடிக்கப்படுவது—சகஜந்தான். பகுத்தறிவுள்ளவன் இவைகளைப் பொருட்படுத்தமாட்டான். அடுத்த க்ஷணத்தில் என்ன நேரிடப்போகிறதென்பதை ஒருவராலும் அறிய முடியாது. ஆதலால் வரப்போவதை நினைத்து வருந்துவதனால் என்ன பயன்? குபேர சம்பத்துக்களிருந்தாலும், கவலையுள்ளவனுக்கு அவைகளால் சுகமேது? சக்கரவர்த்தியாயினும், எழையாயினும், தேவ போகங்களை அனுபவிக்கிறவனாயினும், கீர்த்தியுள்ளவனாயினும், உலகத்தாரால் நிந்திக்கப்பட்டவனாயினும், எவனாயிருந்தாலும் சரியே, கவலையில்லாதவனே பாக்கியசாலி. கால் வயிற்றுக்கஞ்சிக்குக்கூட வழியில்லாத பரம எழையேயாயினும், அவனுடைய வாழ்நாளில் உற்சாகமும், சந்தோஷமும், திருப்தியுமே குடிகொண்டிருக்கும். தங்களுடைய தைரியமென்ன, காம்பீர்யமென்ன, வீரமென்ன, பராக்கிரமமென்ன, உற்சாகமென்ன, இவ்வளவையும் விட்டுக்கேவலம் பாமரர்களைப் போல் தாங்கள் கவலையினால் பீடிக்கப்பட்டதை நினைக்கும்போது எனக்கு ஆச்சரியமுண்டாகிறது. கவலையை விட்டொழித்து மனதை உற்சாகப்படுத்திக்கொள்ளுங்கள். எழுந்திருந்து ஸ்நானம் செய்து போஜனமுண்டு ராஜ்ய காரியங்களைக் கவனிக்கும்படி வேண்டுகிறேன். மந்திரிகள் முதலானோர் சபா மண்டபத்தில் கூடித் தங்களுடைய வரவுக்கெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லி முடித்தார் சுக்கிரர்.

குலகுருவான சுக்கிராசாரியர் சொன்னதனைத்தையும் செவி குளிரக் கேட்டுச் சக்கரவர்த்தி துயரத்தினின்றும் நீங்கி, சுக்கிரருக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு, ஸ்நானம்செய்து போஜனத்தை முடித்து களப கஸ்தூரியணிந்து, கிரீடம், கவசம், குண்டலம், கேயூரம் முதலானவைகளைத் தரித்துக்கொண்டு சபா மண்டபத்துக்குச் சென்று ராஜ்ய காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தான்.

(தொடரும்.)

# பதுமினி.

(ஓர் சிறு கதை)

(ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமணியன்.)

சித்தூர் தீரக்கோட்டையின் வீரக்கதையைக் கேட்டிராதார் சிலரே. சித்தூர் கார்ஸ்டேஷனில் இறங்கிப் பார்த்தவர்கள் மூன்று மைல் நீளமும், ஐந்நூறு அடி உயரமும் உடையதும், உச்சியில் வியக்கத்தக்க அற்புதமான கோட்டையொன்றுடையதுமான சித்தூர் சிறுகுன்றை ஒருநாளும் மறக்கமாட்டார்கள். பண்டைக் காலத்தில் அதுதான் மீவார் தேசத்து ராஜதானியாக இருந்தது. அந்நகரம் அக்கோட்டையுள் தானிருந்தது.

அதன் அரண்மனையை அடுத்த நீலநிற நீரேரியில் அவ்வரண்மனை மாளிகையின் அழகிய சுவர்களும் மாடிகளும் நவரத்தின கசிதமான சிகரங்களுடன் மிளிர்ந்து பிரதிபிம்பித்தன. ஆனால் அவ்வுயர்ந்த சித்தூரிலிருந்த அழகிய பொருள்களுக்குள் அவ்வேரி ஒன்றே இக்காலம்வரை நிலைத்து நிற்கிறது. ஏனெனில் யாரோ டில்லி சுல்தானும்—அல்லாவுத்தீன் கில்ஜியாம்—அத்துருக்கன் சித்தூர் கோட்டையை முற்றுகை போட்டு அழித்தபோது அப்பாபி அஃதுடன் நின்று விடாமல் அனியாயமாய் நமது தேசப் பெண்மணியாகிய இராணி பதுமினியிருந்த அரண்மனை, மாளிகை முதலியனவற்றைக் கொஞ்சமும் இரக்கமில்லாமல் கடுநெஞ்சினனாய்த் தரைமட்டம் ஆக்கிவிட்டான்.

ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் இலங்கையில் அழகே அவதரித்தாற் போன்ற பதுமினி பிறந்தாள். அவளழகின் புகழ் இந்தியாமுழுதும் பரவியிருந்தது. அவள் மீவார் ராணாவும் ரஜபுத்திர வீரசிகாமணியுமான பீம்சிங்குக்கு மனைவியானாள். மணம் முடிந்ததும் இலங்கையை விட்டுச் சித்தூருக்குச் சென்றவள் மீண்டும் இலங்கைக்கு—தன் ஜனன பூமிக்கு—ஒரு தடவைகூடத் திரும்பிவந்ததே இல்லை. தன் மரணத்தின் பொருட்டும், தனது பரிசுத்தமான நாமத்திரத்தினாலேயே பாரதவீர பால பாலிகைகளை உயர் நிலைக்குக்கொண்டுவரக் கூடிய சக்தி தன்னிடமிருக்கிறதென்பதை விளக்குதற் பொருட்டும், ஆரியநாடு வீர உண்மை நாடு உயர்ந்த நாடு என்பதை யாவருக்கும் தெரிவிக்கும் பொருட்டும், பண்டைக்கால ஆரிய க்ஷத்திரியர்களின் அஞ்சாத வீரத்தை யாவருக்கும் அறிவிக்கும் பொருட்டும், சித்தூருக்குச் சென்றவளுக்கு மீண்டும் இலங்கையில் என்ன வேலையிருக்கிறது?

அவள் சிறு பெண்ணாக இருந்த பொழுது அவளது தாயார் அவளுக்கு ஸ்ரீ இராமபிரானுடைய உத்தம பத்தினியாராகிய சீதாப்பிராட்டியாரது சரிதத்தை அடிக்கடி சொல்வதுண்டு. இராமசந்திரன் வில் முறிப்பான் கருதி மிதிலைக்குள் நுழைந்தபொழுதே அவரைக்கண்டு காதலித்து, அவரையே அடைந்து, அவர்பொருட்டே இராஜ்யபோகத்தையும் உற்றாருறவினரையும் செல்வமனைத்தையும் துறந்திட்டு, பதினான்கு வருடகாலம் அவருடன் கடுமையான வாசம் செய்து, இராவணனால் கவரப்பட்ட போதும் அவனை ஒரு திரணமாக மதித்துப் புறக்கணித்து இராமனையே சதா நினைத்தழுது, பாரத மாதர்கட்கு ஏற்ற சத்திய நெறியைக் கடைப்பிடித்து காட்டிய அவ்வுலகமாதாவின் சரிதத்தைக் கேட்கக் கேட்க பதுமினிக்கு ஒரு விதமான மனோதைரியமும் வீரமும் தோன்றும். சீதையின் பரிசுத்தமான பதிவிருதா தருமத்தையும் வீரத்தையும் நினைந்து நினைந்து அவள் பெருமகிழ்வடைவாள். ஆனால்—பாபம்!—தானும் அச்சீதையைப் போல் ஒரு நாள் இருக்கப் போவதாக அவள் கொஞ்சம் கூட அறியவில்லை. சீதாதேவியினது குலத்தின்—தனது க்ஷத்திரிய குலத்தின்—தருமத்தைக் காப்பாற்றுவதற்காக தனதுயிரையே ஒரு நாள் அற்பணம் செய்து விடப் போவதை அவள் அறிய வில்லை.

ஒருவர் எழுதுகிறார் :—“மங்கையரின் நலத்தையும் குணத்தையும் மதித்து அவர்களை நம் முன்னோர் நால்வகையாக வகுத்துள்ளார். அவர்களில் பதுமினியே சிறந்தவள். நமது பதுமினியும் தனது பெயருக்கேற்பப் பேரழகு வாய்ந்தவள். அப்பேரழகை உவமைகாட்டிக் கூறலாமென்றால் சொல் ஒக்குமே ஒழியப் பொருள் ஒவ்வாது. அவளது பாதம்பட மத்தியபதி பாக்கியம் படைத்ததெனலாம். அக்காலத்திருந்த பாரத நாட்டுப் பெண்மணிகளுக்கெல்லாம் அவளே திலகமாக விளங்கினாள்.”



மற்றொருவர் எழுதுகிறார் :—“அவளழகைப் பற்றி எழுவதில் பொருத்தமுடைய சொற்களே இவ்வுலக பாஷை எதிலும் இல்லை. அவளது இருகருவிழிகளின் பிரகாசத்தைவிட அதிகப் பிரகாசமுடையதான நக்ஷத்திரம் ஒன்றும் இல்லை. அவளது கன்னங்களைப் போன்ற மென்மையானதும் சிவந்ததுமான ரோஜாமலரே இவ்வுலகுள் உண்டானது கிடையாது. முத்து வரிசைபோல் அவள் பற்களிருந்தன. தாமரைமலர் போன்றவளிருகாங்களிருந்தன. இதனினும் அவளது அழகைப் பற்றி எப்படி எழுதுவதோ அறியேன். அழகில் உயர்ந்தவளாகப் பதுமினி இருந்ததுமின்றி ஸ்திரீ தருமங்களில் உயர்ந்தவளாகவும் இருந்தாள். எப்பாஷைக் கவியாலுமவளது சத்திய நெறியைப்பற்றிச் சொல்ல முடியாதென்பது நிச்சயம்.”

அல்லாவுத்தீனோ டில்லியில் தனது அரண்மனைக்குள் உட்கார்ந்தவனாய்ச் சதா பதுமனியினழகையே எண்ணி எண்ணி ஏங்கினான். அழகிற் சிறந்த மனைவிமார்கள் அவனுக்கு டஜன் கணக்காக இருந்தார்கள். இருந்துமென்ன? அவர்களிடத்தவனுக்கன்பே கிடையாது. அவர்களாலவனைச் சந்தோஷிக்கச் செய்ய முடியவில்லை. அவர்களும் தங்களால் கூடியமட்டும் முயன்று பார்த்தார்கள். அவனுடைய முகம் சந்தோஷத்தால் ஒரு நிமிடமாவது பிரகாசித்ததில்லை. எப்பொழுதும் கடுகடுத்தேங்கிய முகம் அவனுடைய முகம். ஆ! பதுமினியினழகுடன் ஒத்திட்டுப் பார்த்தால் இவர்களுடைய அழகு எந்த மூலைக்கு?—

அதிசீக்கிரத்தில் சித்தூரை முற்றுகையிட்டான்; பதுமினியைக் கொடுத்துத் தீரவேண்டுமென்று சொல்லியும் பார்த்தான். அவன் ஜம்பமொன்றும் பலிக்கவில்லை. “ஆ! அவள் மட்டும் கொடுக்கப்பட்டால் சித்தூரை முற்றுகையிடேன்” என்று கதறினான். ஆனால் கேட்பார் யார்? ஏதோ பைத்தியமுளருகிறதென்று ரஜபுத்திர வீரர்கள் நகைத்தார்கள். அதற்கியைவதிலுமவர்கள் தங்களுயிரை யுத்தகளத்தில் சந்தோஷமாக விடுவார்கள். அதனை நினைத்த மாத்திரத்திலேயே அவர்களது இரத்தம் நாடிகளுக்குள் குதித்தோடும். அளவற்ற உற்சாகமுண்டாகும். இத்தகைய வீரர்களை எப்படி ஜயிப்பான் இந்தக் கோழைப்பயலான அல்லாவுத்தீன் ?

* ‘தவிர அச்சமயம் சித்தூரைச் சுற்றி ஏறக்குறைய ஐம்பது கற்கோட்டைகள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மலையைப் போல் பட்டாணித் துருக்கரின் சேனை வெள்ளத்தைத் தடுத்து நின்றது. கோட்டையை நெருங்கினாலோ அம்பு மழை அடிக்கும். ரஜபுத்திரர்களை அணுகினாலோ வாள் வீச்சுக்கிடைக்கும். என்னதான் செய்வான் அந்த அல்லாவுத்தீன் ? கோளரியினால் குலைக்கப்பட்ட குஞ்சரத்தைப்போற் கலங்கினான். இவ்வாறு நாட்கள் பல சென்றன. அப்பட்டாணியன் கொண்ட எண்ணம் மண்ணாயிற்று. அவன் படைவகுப்பிலே பலரும் களபலி ஆய்விட்டனர்.’

இக்காலங்களில் பதுமினி தனது தோழிமார்களுடன் சந்தோஷமாகவே இருந்தாள். அத்தோழிகள் எல்லாம் ரஜபுத்திர உயர்தரக்குலத்து மாதர்கள். மதசம்பந்தமான புத்தகங்களை அவள் அவாகளுடன் படிப்பதுண்டு. பண்டைக்கால ரஜபுத்திரர்களின் வீரதீரத்தை எடுத்துச் சொல்லுகின்ற பாட்டுக்களைப் பாடுவதுமுண்டு. சில சமயங்களில் அரண்மனையையடுத்த ஏரிக்கரையில் போய் நின்று உலவுவாள். அவளது அழகிய உருவமே அதில் பிரதிபிம்பித்து நிற்கும். சில சமயங்களில் உயர்தர உப்பரிக்கை மீது ஏறி நின்று நாற்

புரங்களையும் சுற்றிக் கண்ணோக்க மிடுவாள். துக்கத்தால் அவளது முகம் பீடிக்கப்பட்ட காலமும் உண்டு. சித்தூரின் கோட்டை மதில்களின்மீது ரஜபுத்திர வீரர்களின் இரத்தம் சிதறியிருப்பதாகவும், ரஜபுத்திர வீரர்கள் மரணத்திற்கு அஞ்சாது போர் புரிந்து விட்டு எதிரியின் இரத்தத்தாற் சிவந்த தங்களது ஈட்டிகளுடன் சவங்களாக இருப்பதாகவும் அல்லாவுத்தீனுடைய சேனைகளில் ஜயபேரிகை முழங்குவதாகவும், நினைத்து மனோவியாகூலம் கொள்வாள். ஆனாலடுத்த நிமிடமே அவளது முகத்திற் புன்னகை தவிழும். அவளது திருநேத்திரங்கள் இரண்டும் பிரகாசத்தால் ஜ்வலிக்கும். தன்னை உயிருடன் அல்லாவுத்தீன் அடைய முடியாதென்று அவ்வுத்தமி நன்கறிவாள்.

* 'இதற்கிடையே பதுமினியைக் கண்ணால் காணப்பெறின் கடும்போரை நிறுத்துவதாக அறிவித்தான் அப்பட்டாணிப் பாபி. இக்கோரிக்கையை ரஜபுத்திரர்கள் செவியிலேற்கவில்லை. எங்ஙனம் ஏற்றுக் கொள்ள முடியும்? கண்ணெதிரே காணப் பெறும் பாக்கியம் பெறாமற் போயினும் நிலைக்கண்ணாடியின் மூலமேனும் அழகைப் பருக அருள்புரியவேண்டுமென மீண்டும் தூதுவிடுத்தான். நெடுங்காலம் நடந்தபோரில் களைத்துப் போனதோ, குலவாலிபரிலே வீராதி வீரர் பலரைப் பறிகொடுத்ததோ, யாதோ அறிகிலோம். அல்லாவுத்தீனது வேண்டுகோளுக்கு ரஜ புத்திரர்கள் சம்மதித்தனர். அவ்வளவில் பதுமினியைக் காண அவன் சித்தூருக்கு வந்தான். சக்கரவர்த்தியாய் முடிதரித்த ஒருவன் பெண்ணரசி ஒருத்தியின் பேரழகைக் கண்ணாடியிற் கண்டுகளிக்க வந்தான் என்றால் அவனது பேதமையை என்னென்றுரைப்பது? 'வாலியும் வல்லரக்கரும் கோலமுடிமன்னரும் காமினிமேற் காமத்தால் அழிவுற்றனரெனில்' இத்துருக்கப் பாபி எம்மாத்திரம்? '

பகையரசனாய் இருப்பினும் ரஜபுத்திரருடைய சத்தியவாக்கை நம்பி மெய்க்காவலதிகமின்றியே வந்தான். ஓரழகிய அறைக்கு அவனை அழைத்துச் சென்றான் பீம்சிங்கு. அவன் முன் நிலைக்கண்ணாடி ஒன்றிருந்தது. அதன் மீது திரை மூடப்பட்டிருந்தது. ஆ!—ஒன்று...இரண்டு......மூன்று......விநாடிகள் ஆனதும்—அத்திரை விலகியதும்—பதுமினியினதியற்புத அழகின் தோற்றமவன் கண்ணெதிரில் நின்றது. அவனதை நன்றாக உற்று நோக்குவதற்குள்—ஆ!—மீண்டும் திரை மூடப்பட்டது. "ஏன்?—இனிப் போகலாமா?" என்றான் ராணா. பாபம்! அல்லாவுத்தீனுக்கு இன்னது பதில் கூறவேண்டும் என்றே தெரியவில்லை. பேசாமல் மரியாதையாக ராணாவைப் பின்பற்றி நடந்தான்.

* 'தங்கள் வாக்கை நம்பி மிக்க காவலின்றி வந்த வேந்தனை பீமசிம்மன் சிறிதுதூரம் பின்தொடர்ந்து வழியனுப்பினான். இது ரஜபுத்திரரின் இயற்கையான நற்குணம். உள்ளம் களிக்க உபசார வார்த்தையையுமுரைத்தனன். அல்லாவுத்தீனும் உபசார வார்த்தை உரைக்கத் தவறவில்லை. அங்ஙனம் இருவரும் உரையாடிக்கொண்டே கோட்டையின் மதிற்புறமடைந்தனர். அச்சமயம் அருகே மறைந்திருந்த பட்டாணியப் பாபிகள் சிலர் திடீரென அங்கு தோன்றி நமது வீரசிம்மமான பீமசிம்மனைச் சிறைசெய்து சென்றுவிட்டார்கள். அல்லாவுத்தீன் தக்க மெய்க்காவல் பெற்று மகிழ்வுடன் போனான். போயினபின் 'பதுமினியை மரியாதையாக அனுப்பித்தரின் பீமசிம்மன் உயிர் தப்புவான், அவனும் சுதந்திரம் பெறுவான், இன்றேலவனது சுதந்திரம், உயிர் இரண்டும் நாசமாவதுடன் சித்தூரும் சின்னாபின்னமாகும்' எனக் கடிதம் விடுத்தான் கம்பீரமாக. அடாடா! நம்பிக்கைத் துரோகம் செய்த இவ்வனியாயப் பாபிக்கு கம்பீரமும் உண்டோ?



* 'பீமன் பகைவன் கையிற்பட்டதையும் பதுமினியை அனுப்பாமற் போயின் போராபத்து விளையுமென்பதையும் உணர்ந்தவுடனே சித்தூர்வாசிகள் தீயில்விழுந்த புழுவைப்போல் துடித்தனர். பதுமினியை இழந்து மானத்தைப் பறிகொடுக்க மனம் வருமா? அல்லது பதுமினிக்காகப் பீமனைத்தானிழக்க இயலுமா? இரண்டு கன்றினுக்கு இரங்கும் பசுவேபோல் அத்தனை ரஜபுத்திரரும் பதைத்தனர். இவ்விஷயம் பதுமினிக் கெட்டியது. பார்த்தாள் அப்பெண்ணரசி. 'அந்தோ! நம் எழில் நலமன்றோ இத்தனை இழிவுக்கும் காரணமாயிற்று. இதுபற்றியே பேரழகு படைத்த மனைவி பகையாவாளென முன்னோர் மொழிந்தனர்போலும். அங்ஙனமே நமது உயிருக்கும் உயர்வுக்கும் பங்கம் வாராவண்ணம் அம்மை பவானியின் அருளால் முயன்று பார்ப்போம்' என அம்மாதரசி மிக்கத் துணிவுடன் தனது மாமன் கோரசிம்மனையும் மருமகன். மாலனையும் வரவழைத்து ஆலோசனை செய்தனள்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகெல்லாம் இராணி அறிவித்தாள்:—"சித்தூரை முற்றுகையிட்டிருக்கும் உனது சேனையை அழைத்துக்கொள். அதன்பின்பே பதுமினி அங்கு வருவாள்."

தனது தகாத இஷ்டத்திற்கு அவள் இசைந்துவிட்டதாக எண்ணி எண்ணி மனத்தில் பரமானந்தமடைந்து ஆனந்த சாகரத்தழுந்தினான் துருக்கன். பதுமினி தனக்குக் கிடைப்பதாயின் எத்தகைய காரியத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் செய்வதற்கு அவன் ஆயத்தமாக இருந்தான். தான் தனது வாணாளில் அடைந்த வெற்றிகளில் அதுவே மிக்க சிறந்ததாகுமென அவன் எண்ணினான். அவனிதயமளவற்ற சந்தோஷத்தினால் அடிக்கடி பலமாக அடித்தது. பதுமினி வந்தபிறகு தான் செய்யவேண்டியவற்றை அடுக்கடுக்காக எண்ணிச் சந்தோஷிப்பான். ஆனால் அஃதொரு மூடனுடைய சந்தோஷம். உடனே தான் அதற்கிசைந்ததாகத் தெரிவித்து அப்படியே செய்யவும் செய்தான். அதுகண்டு பதுமினி விழுந்து விழுந்து சிரித்தாள். மீண்டும் ரஜபுத்திரர்கள் தெரிவித்தார்கள் :—

* "அவள் தன் மரபுக்குரிய காவல் பூண்டு அரசிக்குரிய ஆடம்பரத்துடன் வருவாள். சேடியரும் செவிலித்தாய்களும் அவளைச் சூழ்ந்து மூடுபல்லக்குகளில் வருவார்கள். வருகையில் அவசரப்பட்டு அவளது நாணத்தையும் கூச்சத்தையும் அவலப்படுத்தக்கூடாது."

* 'கஞ்சி வரதப்பா எனில் எங்கு வருகிற தப்பா என்றேங்கு மேழையேபோல் அண்ணாந்து நின்ற அல்லாவுத்தீன் மகிழ்ச்சி அளவிறந்தது. அச்சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்து நீந்திக் கரை யேறும் வகை தெரியாமல் அவன் தத்தளித்து அப்படியே நின்று மலைத்தான்.'

சித்தூரிலிருந்து எழுநூறு மூடுபல்லக்குகள் கிளம்பின. ஆனால் அவைகளுள் ஒன்றிலேனும் ஒரு மாதுகூட இல்லை. இராஜபுத்திர சேனையில் வல்லமையிலும் தீரத்திலும் மிகச் சிறந்த எழுநூறு வீரர்கள் அப்பல்லக்குகளில் ஆயுதபாணிகளாக ஏறிக்கொண்டனர். ஒவ்வொரு பல்லக்கையும் அறுவர் தூக்கிச் சென்றனர். உண்மையில் அவ்வறுவர் பல்லக்குத் தூக்கிகள் அல்லர். அவர்களும் ரஜபுத்திர வீரர்களே! ஒவ்வொருவனிடமும் கூரிய வாளும் வேலும் இருந்தன. பதுமினி சித்தூரிலிருந்து போகவே இல்லை. இந்த ரகசியம் மிகச் சிலருக்கே தெரியும்.

தங்கமயமான கூடுகளில் இரத்தினங்களிழைக்கப்பட்டதும் சூரிய கோடிபோல் ஜ்வலிக்கும்படியானதுமான அப்பல்லக்குகளுக்குள்

பதுமினியும் அவளது தோழிமார்களும் இருப்பதாக யாவரும் நம்பினார்கள். அநேகர் தங்கள் ராணி மிக்க இழிவான தொழிலுக்கு இறங்கிவிட்டதாக எண்ணிக் கோபங்கொண்டு, ராணியைக் கொடூரமாகச் சபித்தனர். "சீ! நமது குலத்திற்குக் கோடாலி போன்றவள் இந்த மூதேவி. அழகிருந்தென்ன பிரயோசனம்? ஈசா! அதர்மமும் இவ்வளவு தூரம் வந்துவிடவேண்டுமா?" என்றேங்கினார் பலர். எழுநூறு பல்லக்குகள் துருக்கனுடைய பாசறையை யடைந்தபொழுதிலும் அலாவுத்தீனுக்கணுவளவு சந்தேகமேனும் ஏற்படவில்லை. செய்வதற்கரிய காரியமொன்றைத் தான் செய்திட்டதாக எண்ணி மகிழ்ந்து, "ஆ! அக்கிளி கூண்டில் அகப்பட்டுக்கொண்டது. இனித்தப்ப வழி இல்லை, நான் கைவைத்த காரியம் கைகூடாது போமா?" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு தன்னை மெச்சிக்கொண்டான்.

மகமதியர்தம் பாசறை தடித்த துணிச்சுவற்றினை உடையது. அதற்கு வெளியே நமது பல்லக்குகள் இருந்தன. அல்லாவுத்தீன் அனுவசிய தாமதத்தின் காரணத்தை வினவ, பதுமினி தனது காதலனிடமிருந்து தனது கடைசியான விடையைப் பெற்றுக்கொள்ள அனுமதி தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதாக ரஜபுத்திர வீரர் சொல்லினர். அல்லாவுத்தீனதற்கிணங்க, பதுமினி உள்ளே இருப்பதாக நம்பப்பட்ட ஒரு மூடுபல்லக்கானது பீமசிம்மன் சிறை வைக்கப்பட்டுள்ள அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மற்றவை அவனெதிரிலேயே மூடியவண்ணம் இருந்தன. அரைமணி நேரத்திற்குள் பதுமினி வந்துவிடவேண்டுமென அல்லாவுத்தீன் கட்டளையிட்டான். ஆனால் பத்து........இருபது........முப்பது......நிமிடங்களும் சென்றன. பதுமினி வருவதைக் காணோம்.

அல்லாவுத்தீனுக்குக் கோபம்வர ஆரம்பித்தது. சென்ற முப்பது நிமிடங்களும் அவனுக்கு முப்பதினாயிரம் கோடி கற்பகாலங்கள் போல் தோன்றின. இதற்குள் பீமனுக்கு ஏன் விடுதலை எனவும் அல்லாவுத்தீன் யோசித்தான். ஒவ்வொரு வினாடிக்கு ஆயிரம் விரல் விட்டுத் தாறுமாறாக எண்ணிக் கொண்டு பித்துப் பிடித்தவன் போல் இருந்தான். உண்மையாகக் கூறுமிடத்து அவன் பெருத்த தோர் நரக அவஸ்தையில் இருந்தான் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

*'அவனண்ணுந்து பார்க்கையில் யமகிங்கரர்களைப் போன்ற வீரர் பலர் வாளும் ஈட்டியும் தாங்கிச் சிவிகைகளிலிருந்து கிளம்பினர். போகிகள் போல் வேடம் பூண்டுவந்த சூரர் வேல் கம்புடன் வெளிப்பட்டனர். இன்னும் சிலர் ஈட்டியை நீட்டிக்கொண்டு சிங்கநாதம் செய்தனர். உடனே அரிமா கண்ட கரிமாவென அல்லாவுத்தீன் ஆசைநீங்கி அதிர்ச்சிகொண்டு நடுங்கினான். அதற்குள் பட்டாணிச் சேனைகளிலிருந்து, "ஆ! பீமன் போய்விட்டான்! பதுமினிவரவே இல்லை!!......நாம் மோசம் செய்யப்பட்டோம்" என்ற தொனிகள் கிளம்பின. அல்லாவுத்தீன் ஒரு முகூர்த்த நேரம் பிரமையிலுழன்றவனாய் யாதொன்றையும் செய்வதற்கோ அன்றி பேசுவதற்கோ அல்லது நினைப்பதற்கோ அசக்தனாய் தட்டுத்தடுமாறினான். பின்பு, "ஆம்! கடைசியில் நான் ஏமாற்றப்பட்டேன்" என்று கோபத்துடன் கர்ஜித்துக் கொண்டே எழுந்து நின்று மீசை துடிக்கக் கூவினான்:—"எனது வீரர்களே! அவர்களை விடவேண்டாம். பூரண வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளுங்கள்."

உடனே பட்டாணியரும் படைக்கலங்களுடன் பாய்ந்தனர். ஆனாலிதற்குள் பீமன் கனவேகங் கொண்ட ஓர் பரிமீது ஏறிச்



சென்று சித்தூர் கோட்டையை நெருங்கிவிட்டான். அவனைத் துறத்திவந்த பட்டாணியப் படைகளைச் சித்தூர் வீரர் நாசஞ்செய்து தாங்களும் மாய்ந்தனர் தீரமாக. மாபின் மானமும் மன்னவன் மகிமையும் அரசியின் கற்புமே அவர்களது ஆருயிர். உடலிலுற்ற உயிர் ஒரு பொருட்டன்று. ஆதலால் நடு நாட்டிலிருந்த வாலிபதிலகங்களனைத்தும் அன்று தீர்ந்து போயின எனலாம்.

ஆ! ஆச்சுது!! ஆச்சுது! இதோ, சித்தூர் கோட்டைகளின் மதில்கள் காணப்படுகின்றன. ஆ! அதோ, ரஜபுத்திர வீரர்கள் வீரத்துடன் நிற்கின்றனர். ஆ! அதோ, அந்த ஏரியினருகே பதுமினி தன் பர்த்தாவின் வருகையை அடக்கற்கரிய ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். ஆ! இதோ ஆயிற்று. சித்தூர் கோட்டை மதிலை அடைந்தாய் விட்டது! உடனே கோட்டைக் கதவுகள் படீர் என மூடப்படுகின்றன. இவ்வளவு தூரம் மூச்சுப் பிடித்துத் துரத்திவந்த பட்டாணியர் தங்கள் முயற்சி யாவும் வீணானது கண்டு மனம் வருந்தி அக்கினி கக்கும் பார்வையுடன் நாற்புரமும் பெருமூச்சு விட்டுப் பார்த்து மனத்துற்ற கோபத்தீ வெப்பம் பொறுக்கலாற்றாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும் போர் மூண்டது. இருதிறத்தாரும் "வெற்றிகிடைத்தால் கிடைக்கட்டும்! மரணம் வரின் வரட்டும்!!" எனச் சண்டை செய்தனர். எங்கும் குருதிப்பிரவாகம் ஆறென ஓடிற்று. ஆயிரக்கணக்கான ரஜபுத்திர சிகாமணிகள் தங்களது ராணிக்காகச் சந்தோஷமாக யுத்தகளத்தில் உயிர் துறந்தனர். தங்களது மகத்தான வலிமையினால் பத்துப் பத்து பட்டாணியர்களுக்கு ஒவ்வொருவர்களாய் நின்று ரஜ புத்திரவீரர்கள் சண்டை செய்தனர். தங்கள் ராணியின் மகிமைக்கும், பரிசுத்தத்திற்கும், அவர்கள் தங்களது உடல் பொருள் ஆவி மூன்றினையும் தத்தம் செய்தனர். பட்டாணிய சேனை யானை போன்றிருந்ததெனின் நம் நாட்டுச்சகோதரரின் சேனை பூனை மாதிரி இருந்தது. இருந்தால் என்ன? தைரியமும், வீரமும், தியாகமும் வேண்டாமா? எவனுக்காவது அதருமத்தில் தைரியம் பிறக்குமா? தைரிய நெறியில் தைரியம் வாராதார் யாரேனுமுளரோ?

"பயமே மரணம்! பயமே நகரம்!! பயமின்மையே மோட்சம்! பயமின்மையே புண்ணியம்! பயமின்மையே உயிர்!!" என்பதை ரஜபுத்திரதீரனறிவான். ஆனால் பட்டாணியர்களோ தங்களைப் பட்டாணிக்கடலைகளைப் போல் தூளாகச் செய்து சாப்பிட்டு விடின் என் செய்வதென அஞ்சி சித்தூர் முற்றுகையை விட்டு, பிழைத்தது புனர்ஜன்மமென்றுதேர்ந்து, வந்த வழிபார்த்து ஓடினர். ஆ! இவர்களுக்கும் சத்தியத்திற்கும், இவர்களுக்கும் தருமத்திற்கும், இவர்களுக்கும் தைரியத்திற்கும் வீரத்திற்கும் எவ்வளதூரம் இருக்குமென்பதை இதை வாசிக்கும் கணிதசாஸ்திரி நிபுணர்கள் கணக்கிட்டுச் சொன்னால் மெத்த வந்தனம் சமர்ப்பிப்பேன்.

*'ஆயிரக்கணக்கான வீரர்களன்றிறந்தனர். வீரனான கோரசிம்மனும் அவர்களில் ஒருவன். அவனது இளமனைவி யுத்தத்தை உப்பரிகைமீது நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். தனதாருயிர்க் காதலன் காலனுக்கு மஞ்சாதவனாய்ப் பலத்த எதிரிகளின் சேனையைப் பிளந்து கொண்டு போகும் போது அவள் சிறிதும் பயங்கொள்ள வில்லை. கடைசியில் அவ்வீர உருவம் காலன் வயப்பட்டு மண்மீது சாய்ந்தபோதுகூட அவள் ஒரு துளி கண்ணீரேனும் விட்டாளல்லள் பலத்த காயமடைந்து மாளிகைக்குக் கொணரப்பட்ட

பன்னிரண்டு பிராயமும் நிறம்பப்பெறாத மாதுலனை அவள் வினவினாள்:—"மாதுல! என் பர்த்தாவின் வீரத்தை விளம்புவாயாக. அதனைச் செவி குளிரக் கேட்டபின் உயிரை விடப்போகின்றேன்." அதற்கவன் தனது ரணங்களையும் பாராட்டாமல் கம்பீரமாகச் சொன்னான்:—"பிரியமுள்ள அன்னாய்! என் மாமன் வீரத்தை என்னென்றுரைப்பேன். போர்க்களத்தில் பகை படைவீரரைக் கொன்று குவித்துப் போர் வேய்ந்துவர, யானோ உடனிருந்து வாளைக்கருக்கிட்டு நீட்டும் சிற்றாள் வேலையில் சிரத்தை கொண்டு நின்றேன். பகைவரது பிணக்காட்டின் மீது வீரமென்னும் போர்வையிட்டுப் பட்டாணி படைத்தலைவனது சிரத்தையே தலைக்கணியாகக் கொண்டு (தலையணையாகக் கொண்டு) படுத்துறங்குகிறார்." இதுகேட்ட அம்மங்கையற் கரசி மனங் கசிந்துருகி மொழிந்தாள்:—"என் பிராணகாந்தரைப் பற்றி இன்னும் சிறிது சொல், மாதுல!"—"இன்னும் யான் எங்ஙனம் விரித்துரைப்பேனம்மணீ!—அவரது வீரச்செயலை இன்னும் எப்படியம்மா விரித்துரைப்பது—என் தாயே, அவரது வீரத்தைக் கண்டு வியக்கவோ, விம்மியழவோ பகைவர்களில் ஒருவரேனும் எஞ்சவேயில்லை" என்றச் சிறு பாலகன் பகர, அது செவியுற்று என்றுமில்லாத வீரமும் சாந்தியும் அவளிதயத்திலங்க, அப்பாவிகை புன் முறுவல் பூத்த முகத்துடன், "என் குழந்தாய்! காலதாமதத்திற்காக உன் மாமன் கோபிப்பார். ஆதலின் அவரது சிரடி சேவிக்கச் சீக்கிரம் செல்கிறேன்" எனத் தீரமாய்க் கூறி அருகிலிருந்த அக்கினி குண்டத்தூடு வீழ்ந்துயிர் துறந்தாள்

மூர்க்கனுக்கு அறிவேகிடையாது. தகாத பாபச் செயல்களை எவ்வளவு வேண்டுமானாலும் சற்றுங் கூசாமல் செய்வான், நமது கதையில் வரும் மூர்க்க சிகாமணியாகிய அப்பட்டாணித் துருக்கனுடைய அவிவேகத்தையும் அதருமத்தையும் பற்றி எழுதுவதென்றால் எத்தனை புட்டி மை வேண்டும்—எத்தனை கடிதங்கள் வேண்டும்—எத்தனை காம் வேண்டும். எத்தனை கற்பகாலங்கள் வேண்டும்—இவைகளை எழுதியதன் பலனாக எத்தனை யுகங்கள் நரகக் குழியில் அவதிப்படவேண்டும்—ஆ!—அது சற்றும் முடியாத காரியமே. அவன் தான் கொண்ட எண்ணத்தை விட்ட பாடில்லை. அவன் மனத்தில் காமக்கனல் சதா கொழுந்துவிட்டெரிந்தது. கோபக்கனல் மூண்டது மீண்டும் சித்தூரை முற்றுகையிட்டு பதுமினியை அடைய வேண்டும். இன்றேல் சித்தூரைத் தரை மட்டமாக்கிடவேண்டுமென்பதே அப்பாபியின் துரோக சிந்தனை.

பின்பு கி. பி. 1290-ம் வருஷம் தனது படைகளை எல்லாம் ஒருமித்துத் திரட்டிக் கொண்டு சித்தூருக்கு வந்தான். அவன் சேனை ஆழியென அளவற்றுப் பரந்திருந்தது. முன்னடந்த கொடும் போரிலுண்டான அழிவை எண்ணி அஞ்சி நடுங்கி ரஜபுத்திர வீரர்கள் தங்களது ஆண்மையைக் கைவிடவில்லை. உயிர் போகுந்தருணத்திலும் நிமிர்ந்து நின்றுறமக் கூடிய ரஜபுத்திர சிம்மங்கள் கிடைக்கக் கூடிய படை எல்லாம் திரட்டினர். திரட்டிய பின் வழக்கம்போல் சிங்கநாதம் செய்தனர். ஆயினும் பட்டாணியனது படைவகுப்பு கும்பல் கும்பலாக வர, சித்தூர் சேனை நாளாக நாளாக மெலிந்தே வந்தது. ரஜபுத்திரர்களின் எண்ணம்—கோரிக்கை—லட்சியப்பொருள்—வெற்றியன்று சுதந்திரமே ஆகும். அவர்கள் யமனுக்கு அஞ்சவில்லை, யமனே அவர்களுக்கு அஞ்சினான். மரணத்தினால் சுதந்திரம் கிடைக்குமாயின் மரணம் சாலச் சிறந்ததாகும் என்பர் ரஜபுத்திரர். எண்ணிறந்த படைவீரர்களைப் பறிகொடுத்து நகரின் தென்பாகத்



திலுள்ள ஒரு குன்றை அல்லாவுத்தீன் தன்வசப்படுத்திக்கொண்டான். அத்தென்பாகம் சித்தூர் கோட்டைக்கு உயிர் நிலையானது. பன்னிரண்டு வருஷம் கடும் போர்புரிந்து பல வீரரையுமிழந்து ஊருக்குயிர் நிலையான குன்றையுங் கைவிட்ட ராணாவுக்கு ஏக்கம் உண்டாகிவிட்டது. கம்பீரமான ஆண்சிங்கமென்றாலும் நகமும் பல்லுமிழந்தபின் அது கலங்குமன்றோ? தன் ஆருயிருக்காக அவனஞ்சவில்லை. தன் வம்சம் போய் விடுமே, என்னசெய்வது என்பதுதான் அவனது ஏக்கத்துக்குக் காரணம். அவனது பன்னிரண்டு பிள்ளைகளுள்.........* ...........*...........*..............பதினொரு பிள்ளைகளும் போர்க்களத்தில் உயிர் துறந்தனர். எள்ளும் தண்ணீரும் இறைக்கவும், பழிக்குப்பழி வாங்கவும், ஒரு பிள்ளையேனும் பிழைத்தால் போதுமென நினைத்து அவன் தனது கடைசிப் புதல்வனாகிய அஜயசிம்மனை (அவன் விருப்பத்திற்கு மாறாக) வெகு தந்திரத்துடன் பகைவனது அணிவரிசைகளைக் கடந்து சென்று க்ஷேமமான ஓரிடத்திற் சேர்த்துக் கடைசிப் போருக்குச் சித்தமானான்.

* ஆனாலதற்குமுன் வேறொரு கோரச் செயல் நிகழவேண்டியதாயிற்று. சித்தூர் கோட்டையின் உயிர்நிலையான குன்று பகைவர் கையிலகப்பட்டதால் இரண்டொரு தினத்திலே கோட்டையும் விழுந்து விடும். புஜபல பராக்கிர தீரர்களான பல ரஜபுத்திரவீரர்கள் முன்னமேயே போரில் ஆவிதுறந்து விட்டனர். மிஞ்சியுள்ள வீரர் கொஞ்சமே. அல்லாவுத்தீனோ காமவெறியும் கோபவெறியுங் கொண்டவனாயிருக்கிறான். கோட்டை விழுந்தபின் பதுமினியையேயன்றி மற்ற மங்கையரையும் மானபங்கப் படுத்துவான். ஒரு பெண்ணின் மானத்துக்காக அவ்வளவு இரத்த பூஜை செய்துவிட்டு எல்லாப் பெண்களையும் சந்தியில் விட்டுப்போக அவர்களுக்கிஷ்டமில்லை. தனது வாலிலுள்ள மயிர்க்கற்றையிலே ஒரு மயிரையிழுப்பினும் கவரிமான் உடனே உயிர் விடுமென்பர். அம்மானினும் மானத்தைப் பெரிதாக மதித்துப் பிராணனைத் திரணமாகக் கருதும் ரஜபுத்திரர் அக்கோரத்திற்கு ஒருகாலும் இடங்கொடார். இதனை உலகமறியும். அறியாததாயின் பின் வரும் சம்பவமே தக்க சாட்சியாகும். போரிலே தமக்கு வெற்றி கிடைக்காது என்று தோன்றின் முதலிலேயே ரஜபுத்திரர் தமது மனைவியரையும் குமரிகளையும் தீக்கிரையாக்கி விடுவர். பின்னர் மஞ்சள் உடை தரித்துக்கொண்டு, நெற்றியில் குங்கும திலகம் கொண்டு, கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டு உருவின வாளுடன் பகைவர் மத்தியிலே பாய்வர். அதன்படி சித்தூரிலுள்ள ஆண்மக்களனைவரும் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த மங்கையரனைவரையும் தீக்குளிக்கச் சித்தமாகும் வண்ணம் தெரிவித்தனர்.

அப்பொழுது பதுமினி தன் தோழிகளுடன் உயர்ந்த உப்பரிகை மீது நின்றுகொண்டு அக்கொடும்போரைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அல்லாவுத்தீன் சேனையில் ஜயக்குரல் கேட்டபொழுது அவள் சற்றும் தடுமாற்றமின்றி தன்னைச் சுற்றி நின்றவர்களை அன்புடன் பார்வையிட்டு, "அதோ வருகிறானப்பாம பாபிப் பட்டாணியன். அவமானத்திலும் மரணமே நன்சிறப்புடைத்து என நம்புகிறவர்கள் என்னைப் பின் தொடரலாம்" எனச் சாந்தியுடன் கூறினள். ஆண்டுற்ற ஒரு பெண்ணேனுமவளைப் பின்தொடர மறுக்கவில்லை. தங்கள் சிரங்களை மிக கம்பீரமாக உயர்த்திக்கொண்டு, "ஆ! இவ்வுலகமென்ன—இவ்வுலக போகமென்ன—எல்லா மனித்தியம். இதற்காக நாமேன் வருந்த வேண்டும்" என்று கூறும் கண் பார்வையுடன் பதுமினியைத் தொடர்ந்தனர்.

*"பின்பு ஒவ்வொரு பெண்ணும் நறு நீராடி அழகிய ஆடை தரித்து அணிகலனனைத்தும் பூண்டு அம்மை பவானியைத் துதித்து வணங்கி வசந்தகால விழாவினுக்குச் செல்லும் மகிழ் பூத்த மாதர்போல் புறப்பட்டனர். அக்கோட்டையின் ஒரு புறத்தே நிலவறை ஒன்றுண்டு. அதிற்றான் மாதரைத் திரட்டித் தீயிடுவது. தாமரை மலர்களிலன்னப்பறவைகளார்வமுடனமர்வது போலவும், முன்னாளிலே சீதாதேவி சந்தனக் குழியெனக் கருதித் தீயிலிறங்கியது போலவும் ரஜபுத்திர ஸ்திரீகள் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்து ஒருவர் பின்னொருவராக அம்மையின் ஆயிரம் நாமங்களையும் நவின்று கொண்டு நிலவறையிலுள்ள அக்கினி குண்டத்திற் குளித்தனர். இக்கோலத்திற்கு ஒருவிதத்தில் காரணமான பதுமினியும் பரம களிப்புடன் கொழுந்து விட்டெரியுந் தீயில் குளித்தனளென நாம் சொல்லத் தேவையில்லை. அங்ஙனம் ஆயிரக்கணக்கான கன்னியர் களிப்புடன் செல்லுங் கோலத்தையவரவர் தந்தை, தநயன், புருஷன் முதலியோர் கண்டு நின்று பரமனைத் துதித்தனர். அரசிமுதல் வாயிற் கூட்டும் பெண்வரையில் பெண்ணெனப் பெயர் படைத்த அனைவரும் அக்கினி பகவானுக்கு அர்ப்பணமானார்கள்."

ஒருவர் எழுதுகிறார்:—"ஒருவர் பின் ஒருவராக ரஜபுத்திர வீரமாதர்களனைவரும் தீக்குளித்தனர். அக்கினிச் சுவாலை தங்களது மென்மையான உடலை தகித்தபோது ஒருவரேனும் வாய் திறந்து ஆ! என்றலறவில்லை, பெருமூச்சு விடவுமில்லை, முகமுங் கோணவில்லை. அவர்களது பெருமைதானென்ன? முடிசியாகப் பதுமினியும் புன்னகை தவழும் முகத்துடன் தீக்குண்டத்தில் விழுந்தாள். ஆ! ஆ!! ஈசனுக்கும் இது சகிக்க கூடியதாயிருந்ததே. அவள் விழுந்ததும் மாணச்சாலையின் வாயிற் புறக்கதவு மூடப்பட்டது. இத்தகைய வீரர்கள்முன் இவ்வற்புப் பட்டாணியின் சாமர்த்தியமும் தீரமும் எவ்வளவு மாத்திரம். இச்சிலரை ஜயிக்க அப்பலரால் முடியவில்லையே! இச்சிலர் மரணந்தழுவி நித்திய வெற்றி பெற்றனரே!"

மற்றொருவர் எழுதுகிறார்:—"மத்திய கால ரஜபுத்திர வழக்கத்தின்படி கொடிய மகமதியர்களிடத்திலிருந்து தமது மனைவிமார்களையும் மக்களையும் காப்பாற்றுவதற்கு யாதொரு வழியுமில்லாதகாலத்தில் ரஜபுத்திரர்கள் ஒரு பெரிய தீக்குண்டத்தைச் செய்து தீ மூட்டுவார்கள். சிறுவர், சிறுமியர், பாலர், பாலிகையர், பெண்கள் யாவருமதில் வீழ்ந்து உயிர் துறப்பதில் சுதந்திரம் அவர்களுக்குயிரினும் சிறந்தது. கொடுங்கோலினின்று மானம் காப்பாற்றுவதால் அவர்கள் மரணத்தை விரும்பினார்கள். இத்தகைய சமயங்களில் அவர்களிடம் ஒரு அபரிமித தெய்விகச் சக்தி ஏற்படுவதுண்டு. இந்த சரித்திரத்தை—அவ்வழகிய பதுமனி தனது முப்பதினாயிரம் (30,000) தோழிகளுடன் தீக்குளித்துத் தங்களது சத்திய தர்மத்தைக் காப்பாற்றிய இவ்வற்புத வரலாற்றினை—இன்றுகூட அநேக ரஜபுத்திரர்கள் பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள்."

* "வேந்தனும் கோட்டையின் கதவுகளைத் திறந்து போட்டுப் பகைப்படை நடுவே புகுந்தான். துணைவரும் புகுந்தனர் தொடர்ந்து வந்து. உடனே பட்டாணியர் சேனைகளும் கைகலக்கக் குறுகின. அந்நாள் பாரதப் போரிலே அபிமன்னன் கௌரவ சேனையின் நடுவே சென்று அனைவரையும் கலக்கியது போல் ராணாவும் அல்லாவுத்தீனுடைய சேனையைக் கலக்கினான். இதர வீரருமப்படையிற் பாய்ந்து மத்திட்டுத் தயிர் கடைவதுபோல் பட்டாணியரைப் பதற வடித்தனர். ஒரு சமயம்



அல்லாவுத்தீனே போர் யாதாக முடியுமோ எனக் கலங்கினான். எனினுமோர் ஆறு கருங் கடலை நிலைகுலையச் செய்ய இயலுமா? இயலாது. ராணாவும் ரஜபுத்திரரும் வீரங்காட்டி உயிர் விட்டனர் விதிவலியால். பன்னிரண்டு வருஷகாலம் கடும்போர் நடந்த பின்பு சித்தூர் கோட்டை சிதறி வீழ்ந்தது. உடனே அல்லாவுத்தீன் ஆவலுடன் சித்தூருக்குள் புகுந்தான். உயிரற்ற உடலைக் காண்பது போல் நீறு பூத்து நின்ற ஊரையே கண்டனன். ராணாவின் அந்தப்புரம் வெற்றுப்புரமாக விளங்கியது. அதனருகே ஆகாய மளாவப் புகைப்படலங் கிளம்பியது. டேய்! டேய்!! ஏனடா இந்த வீணாசை? உனக்குமவளகப்படுவாளா! அந்நகரின் வனப்பையும் அலங்காரத்தையும் நோக்கிச் சினந்து புராதனமாகிய அழகிய ஆலயங்களையெல்லாம் அப்பாதகன் அநியாயமாயிடித்துத் தள்ளினான். அரண்மனைகளை அடியோடு பாழாக்கினான். விசித்திர வேலைப் பாடமைந்த மண்டபங்களை மண்ணோடு மண்ணாக்கினான். நகரமும் பாழாகியது. விரித்துரைக்க மனம் பதைக்கிறது. பீமனும் பதுமினியும் வசித்து வந்த மாளிகையொன்றே அப்பாபியின் கோபக்கனலில் மடியாமல் எஞ்சி நின்றது. இதன் காரணத்தைக் கடவுளே அறிவர்."

* * *

"ஓ! இந்தியாவே!! உனது மகிமையை அளவிட யாரால் தான் முடியும்!"

சுபம்!

* ஐயம் கம்பனியாரது 'இராஜபுத்திர விஜய'த்தினின்று சில பக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

# பெண்களும் புலால் உண்ணாமையும்.

(ஸ்ரீமதி கு. கமலாம்பிகை அம்மாள்.)

"நோன்பென்பதுவே கொன்று தின்னாமை."

கோன்றை வேந்தன்.

அறநெறிகளும் தவநெறிகளும் தலைசிறந்து விளங்கிய புண்ணிய பூமியாகிய பாதகண்டத்திலே பண்டைக்காலந் தொட்டு வழங்கி வரும் நீதி நூல்களெல்லாம் கொல்லாமை, புலாலுண்ணாமையே சிறந்த அறமெனக் கூறுகின்றன. சைவ சமய நூல்களும் அவ்வாறே கூறுகின்றன. நீதி நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலுமே உண்மை நெறியாகும். பல நூல்களையுங் கற்றுணர்ந்த உத்தமர்கள் எவ்வுயிர்க்கும் அன்பாயிருத்தலையே விரதமாகக் கொண்டனர்; அவ்வாறே பிறர்க்கும் போதித்தனர். உத்தமர் கூறும் நல்வழி நிற்றலே சிற்றறிவுடையோராகிய நங்கடனாகும். மக்களாகிய நாம் எவ்வுயிரையும் நம்முயிர் போலப் பேணல் வேண்டும். அன்புடன் வாழ்ந்தாலன்றோ இன்புடன் வாழலாம். இறைவனருளை அடையலாம்.

புலாலுண்ணலாவது உயிர்களைக் கொன்று அதனால் வரும் ஊனைப் புசித்தல். புலாலுண்ணலே கொலைப் பாபத்திற்குக் காரணமாகின்றது. ஊன் உண்பவர் உயிர்களிடத்து அருளில்லாதவரே. பொருளில்லாதவர்க்கு இவ்வுலகவின்பம் இல்லை. அவ்வாறே அருளில்லாதவர்க்கு வீட்டுலக வின்பம் இல்லை. தாம் தம்மின் எளிய உயிர்களை வருத்தும்பொழுது, தம்மின் வலியார் தம்மை வருத்த வரும்பொழுது அவர் முன் தாம் அஞ்சி நிற்கும் நிலையினை நினைக்கக் கடவர். தன்னுயிரை நீத்தாயினும் மன்னுயிரைக்

காக்கவேண்டிய மக்கள் தக்க காரணமின்றிக் குற்றமற்ற பிராணிகளைக் கொல்லுகின்றனரே. கொல்லப்படுஞ் சமயத்தில் ஏழைப் பிராணி ஏங்குகின்றது; நடு நடுங்குகின்றது; அலறுகின்றது. ஆனால் அதன் ஊனைப் புசிப்பவரோ இன்று தாம் விரும்பிய போசனங் கிடைத்ததென்று பேராரவாரத்துடன் நிற்கின்றனர்; பெரு மகிழ்ச்சி யடைகின்றனர்.

பறவை, விலங்கு முதலிய இழிந்த பிறப்புக்களை யொழித்துப் பகுத்தறிவுடைய மக்கள் யாக்கையை எடுத்தும் மிகக் கொடிய பாபத் தொழிலைச் செய்தல் எத்துணை அறியாமை! சிலர் தாங்கள் உயிர்களைக் கொல்லவில்லை யென்றும், ஊன் விலைப்படுவதனாற்றான் அதனைப் புசிக்கின்றோம் என்றுங் கூறுவர். புலால் புசிப்பவர் இல்லையாயின் அதனை விற்பாருமில்லை. எவ்வாறெனில் காஞ்சிரங்காய் புசிப்பவருமில்லை; அதனால் அதனை விற்பவருமில்லை. ஆதலால் புசிப்பவரே காரணராகின்றனர். அன்னம், ரசம் முதலியவைகளிலே ஈ, எறும்பு முதலியவற்றுள் ஒன்று விழுந்திருக்கக் கண்டால் மிக அருவருப்படைந்து, அவற்றை உண்ண மனம் பொருந்தவில்லை யென்று சொல்பவர் அருவருப்படையத் தக்க துர்நாற்றமுள்ள புலாலைச் சமைத்துப் பேராவலுடன் வயிறாரப் புசிக்கின்றனர். அந்தோ! இவர்தம் அறியாமைதானென்னே!

பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடியைச் சேர விரும்பித் தவ நெறி நின்ற பெரியோர் காய்கனிகளையுங் கந்த மூலாதிகளையும் உண்டனர்; உடம்பை வாட்டினர்; மனத்தை அடக்கினர்; ஒரு வழிப்படுத்தினர்; பரனை வழிபட்டனர்; பரகதி அடைந்தனர்; அறநெறி நின்ற நம் முன்னோர்களும் தாவர உணவை உண்டனர்; சரீர பலத்துடனிருந்தனர்; நோயற்றிருந்தனர்; நீடிய காலம் வாழ்ந்தனர்; மக்கட் தன்மையுடனிருந்தனர்; அன்புடனிருந்தனர்; இன்புடன் வாழ்ந்தனர்; நல்வழி அடைந்தனர். ஆதலால் தாவர உணவே சிறந்ததென்பது வெள்ளிடைமலை. தாவர உணவே சிறந்தது; சுத்தமானது; சத்தியத்தை நிலை நிறுத்துவது; அறமானது; அறிவை வளர்ப்பது; மக்கட்கேற்றது; மனதைத் தூய்மைப் படுத்துவது; பலத்தைக் கொடுப்பது; சுவையுடையது.

ஊன் உணவு உடம்பை அளவுக்கு மீறிக் கொழுக்கச் செய்வது; நோயை யுண்டாக்குவது; மக்கட் தன்மையைக் கெடுப்பது; கோபத்தை வருவிப்பது; பாபத்தை விளைவிப்பது; அன்பைக் களைவது; துன்பத்தை விளைவிப்பது; அறத்தைக் கெடுப்பது; மறத்தை வளர்ப்பது; இன்னும் பற்பல தீமைகட்குக் காரணமானது. ஆதலால் தாவர உணவு இருக்க ஊன் உணவை விரும்புவது, சுத்தமானதும் சுவையுடையதும் பலத்தைக் கொடுப்பதுமாகிய பசும்பால் இருக்கப் பல தீமைகட்குக் காரணமானதும், மயக்கத்தைக் கொடுப்பதுமாகிய மதுவை விரும்புதல் போலும். இவ்வுலக இன்பத்திற்குக் காரணமாகிய உடம்பை நல்வழியிலன்றோ காப்பாற்றவேண்டும்.

தற்காலத்திற் சிலர் நம் தேசாசார சமயாசார வழக்கத்திற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களை நாகரிகமென நினைக்கின்றனர். அவற்றுள் புலாலுண்ணலும் மேலான நாகரிகமாக மதிக்கப்படுகிறது. இந்த மேலான நூதன நாகரிகமானது காட்டுத் தீபோல் விரைந்து பரவி வருகிறது. பல ஆயிரக்கணக்கான மக்கள் இதன் வாய்ப்படுகின்றனர். சிலர் ஊனுணவுக்குச் செரிக்குஞ் சக்தி அதிகம் உண்டென்றும் அதனாற்றான் அதனைப் புசிக்கின்றோம் என்றுங் கூறுவர். ஊனுடன் சைவ உணவுப் பொருள்களாகிய கொத்துமல்லி மிளகு மஞ்சள் உப்புப்



புளி மிளகாய் முதலானவற்றைச் சேர்த்துச் சமைக்காவிடின் செரிக்குஞ் சக்தி உண்டாகுமா, சுவை உண்டாகுமா என்பதை நினைக்கக் கடவர்.

தேச முன்னேற்றத்திற்குப் பெண்களே காரணராகின்றனரென்றால், தேசாசார சமயாசார வளர்ச்சிக்கும் பெண்களே காரணராகின்றனர். ஆதலால் ஊன் உணவை யொழிப்பதற்கு, அன்பே அணிகலனாகவுடையவரும், இரக்கத்திற்கு இருப்பிடமானவருமான பெண்களே முன்வரவேண்டும். வீட்டிற்கு விளக்கென விளங்கும் வீரத்தாய்மாரே வீட்டைத் தூய்மை யாக்கவேண்டும். வீடு தூய்மையாயிருந்தால் திருமகள் மகிழ்ந்து வாசஞ் செய்வாள். பெண்கள் தங்கள் வீடுகளில் ஊனுணவை யொழித்தலே அவர்களது இன்றியமையாத கடமையாம் என்க. ஊன் உண்பவர்க்கு அதனால் வருந்துன்பத்தைச் சொல்லவேண்டும். பெண்களால் தம்மின் மூத்தோரைத் திருத்துவது சிறிது வருத்தமாயினும், தமது குழந்தைகளை ஊனுணவு கொடாமல் வளர்ப்பது மிக எளிதாகும். மூத்தோரையும் நல்வழிப்படுத்தும்படி வேண்டுவோர் வேண்டியதே ஈயும் பரம்பொருளை வழிபட்டு நல்வழிப்படுத்தலாம்.

தாயானவள் குழந்தைகளை உலக மகிழும் உத்தமர்களாய் வரும்படியன்றோ வளர்க்க வேண்டும். உண்மை நெறியில் வளர்த்தாலன்றோ உத்தமர்களாவார்கள். இளமையிற் பழகிய பழக்கம் பசுமரத்தாணிபோலப் பதிந்துவிடும். நன்றெது தீதெது என்று அறியாத குழவிப் பருவத்தில் ஊனுணவைக் கொடுத்து வளர்த்தால், அவர்கள் பிற்காலத்தில் துன்பப்படுவர். அறியாத காலத்தில் தாயார் பழக்கினாரே யென்று குறை கூறுவர்; மனம் வருந்துவர். ஆதலால் தாய்மார் ஒருபோதும் ஊனுணவு ஊட்டலாகாது.

மக்கள் யாக்கை நீர்க்குமிழிக்கு நிகரானது, மின்னலை ஒத்தது எனப் பெரியோர் கூறுவர். அதனைப் பெருப்பித்தல் பொருட்டு உயிர்களைக் கொல்லலாகாது. ஒருவர் இறந்தபின் அவர் செய்த புண்ணிய பாபம் மாத்திரமே அவருடன் தொடரும். இவற்றுள் புண்ணியம் உற்ற நண்பன் உடன் செல்வது போலச் சென்று பற்பல நன்மைகளைப் புரியும். பாபமோ பலவிதமான துன்பங்களை விளைவிக்கும். ஆயிரக் கணக்கான தானங்கள் செய்வதிலும் ஒருயிரையுங் கொன்று தின்னாமையே மேலான அறமாகும். இந்த அறம் செல்வர்களால் மாத்திரமன்றி வறிஞர்களாலும் செய்யத் தக்கது. சிலர் கல்வி, உத்தியோகம் முதலானவற்றின் பொருட்டுப் பிறதேசங்களுக்குச் சென்றால் அங்கு ஊன் உணவையும் பழக்கிக்கொள்கின்றனர். அப்படி ஊன் உண்ணவேண்டிய நியமமுண்டா? சிலர் தங்கள் வீடுகளில் ஊன் உண்ணாதிருந்தும் வீட்டைவிட்டு நான்கு காதம் சென்றவுடன் ஊன் இன்றி உணவு கொள்கிறார்களில்லை. இதன் காரணத்தை அறியேம்!

வட துருவம் போன்ற இடங்களில் ஊனுணவின்றி இருப்பது முடியாதே அன்றி, ஊனுணவின்றி இருக்க விரும்புவோர் மற்றைய எப்பாகங்களுக்குச் சென்றாலும் இருக்கலாம். அவ்வாறே மேலைத் தேசங்களில் பலர் ஊனுணவின்றி இருக்கின்றனர். மேல் நாட்டு அறிஞரும் ஊன் உணவை வெறுக்கின்றனர். அது உடம்பைக் கெடுக்கின்றதெனக் கூறுகின்றனர். பிள்ளைகள் பிற தேசங்களிற்குச் செல்லும்பொழுது, 'நீ எக்காரணங் கொண்டும் ஊன் உணவு கொள்ளாதே' என வற்புறுத்திச் சொல்லவேண்டியது தாயின் கடமை என்க. இதற்கு இலக்கியமாக உலகம் போற்ற உண்மை நெறி வளர்க்கும் உத்தமான மகாத்மா காந்தியடிகளின் தாயாரைக் கூறுவோம். காந்தியடி

கள் கல்வியின் பொருட்டு மேலைத் தேசஞ் செல்ல விரும்பினர். தன் விருப்பத்தைத் தாயாருக்குத் தெரிவித்தார். தாயார் புலாலுண்ணலாகாது என வற்புறுத்திக் கூறி விடையளித்தார். அவர் தயார் கூறிய பொன்மொழிகளைச் சிரமேற் கொண்டொழுகினார். என்றும் மலை விளக்கென விளங்குகின்றார்.

விரத காலங்களில் ஊன் உணவை யொழிப்பதனால், அது பாபத்திற்குக் காரணமானதென்பதும், சமய ஒழுக்கத்திற் கொவ்வாததென்பதும் நன்கு புலனாகும். ஊன் உண்பவர் விரத தினங்களில் அதனை யொழித்து மறுநாட்களில் அதனை உண்பதனால் அவர்கள் அது உண்ணத் தகாத உணவென்பதை நன்கு அறிந்துகொண்டே உண்கின்றார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோலத் தெள்ளிதிற் புலனாகின்றது. சிலர் ஊனைப் பாகசாலையிலாவது சைவ உணவு சமைக்கும் பாத்திரங்களிலாவது சமையாது வேறு இடங்களில் வேறு பாத்திரங்களிற் சமைப்பதனால் அது இழிவான உணவென்பது நன்கு புலனாகும். இறந்தோர் வீட்டிற் சென்று போசனஞ் செய்தாலும் ஆசௌசம் உண்டு என்னும் கொள்கையுடைய சைவ மக்கள் ஆடு, கோழி முதலானவற்றைக் கொன்று அவற்றின் பிண உணவை நாடோறும் புசித்தால் அவர்களுக்கு நித்தியமும் ஆசௌச முண்டல்லவா.

சில தாய்மார் தாங்கள் ஊன் உண்ணாதிருந்தும் தம் பிள்ளைகளுக்கு ஊனைப் பிறரைக் கொண்டு சமைப்பித்துக் கொடுக்கின்றனர். இத்தாய்மார் தாங்கள் உண்ணத் தகாததென நீக்கப்பட்ட உணவை தம் பிள்ளைகளுக்கு என்ன காரணத்தாற் கொடுக்கின்றனர்? தங்கள் பிள்ளைகள் தம்மைப் போல நல்வழியைக் கடைப்பிடித்தொழுகலாகாது என்ற அழுக்காறாலோ, அன்றித் தமது நல்லுணவில் பிள்ளைகள் பங்கிற்கு வருவார்கள் என்ற அச்சத்தாலோ கொடுக்கின்றனர் போலும்!

ஒருவர் பலவீனமாயிருக்குஞ் சமயத்தில் ஊன் உண்டாற்றான் அவர் பலமடைவர் என்று பலர் கூறுவர். அவ்வாறு கூறுவதைக் கேட்ட சிலர் ஊனை உண்பர். உண்ண விரும்பாதவருக்கு அவரை அறியாது மற்றையோர் ஊட்டுவர். சிலர் பலாத்காரமாகக் கொடுப்பர். அப்படி ஒருபோதும் கொடுக்கலாகாது. சிலர் நோய் வாய்ப்பட்டிருக்குஞ் சமயத்தில் ஊன் உண்டாற்றான் நோயாளியின் உயிர் பிழைக்கும் என்று கூறுவர். அது உண்மையன்று. அச்சமயத்தில் ஊன் உண்ணாதிருந்து நோய் நீங்கி உயிருடனிருப்பவரைக் கண்ணாரக் காணலாம். நோய்வாய்ப்பட்டவர் ஊனுணவை உண்டு உயிர் பிழைப்போம் என்று எண்ணுவது கிணற்றுள் வீழ்ந்தவன் பாம்பின் வாலைத் துணைக்குப் பற்றிக் கரையேறத் துணிதல்போலும். உண்மை நெறி நின்றால் அழிவு ஒருபோதும் வாராது. இதற்கு இலக்கியமாக அரிச்சந்திர மகாராஜனையும் தேவியாகிய சந்திரமதியையுங் காண்க. சகித்தற்கரிய பலவிதமான துன்பங்கள் வந்தபோதும் மனந்தளராது நின்றனர். சத்தியத்தைக் கைவிடாது நின்று பெரும்புகழ் அடைந்தனர்; இறைவனருளும் பெற்றனர். அதுபோல மக்கள் எல்லோரும் எவ்விதமான துன்பம் வந்த போதும் மனந்தளராது நின்று புலாலுண்ணா விரதத்தை நிறைவேற்றினால் புகழ் அடையலாம்; புண்ணியத்தைப் பெறலாம்; இறைவனருளையும் அடையலாம்.

சிலர், 'ஒரு ஆடவன் ஊனுண்ணாத தன் மனைவியை நோக்கி ஊன் உண்ணும்படி கூறினான்; அவள் உண்ணாது விடின் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னுந் திருமொழிக்கு மாறாக நடக்கிறாள்' என்பர். அப்படி அன்று



"கற்பு" என்ப்படுவது. கணவன் தன் மனைவிக்கு அறிவுடையோரால் அறிவுறுத்தப்பட்டவற்றைக் கூறி அதனைக் கடைபிடித்தொழுகும்படி கூற, அவள் அதன்படியொழுகுவதே 'கற்பு' எனப்படும் என்பது அறிஞர்கள் துணிபாகும். அப்படியன்றிக் கணவன் சொன்னபடி யெல்லாம் ஒழுகுவதே கற்பெனப்படுமாயின், ஒருவன் தன் மனைவியைக் கள்ளுண்ணும்படி கூறினால் அவள் அதற்கு உடன்படலாமா? கணவன் தகுவன கூறுமிடத்து அதன்வழி யொழுகுதலும், தகாதன கூறுமிடத்து அதனைக் கேளாது அவனையுந் திருத்தி நல்வழிப் படுத்துதலுமே கற்பிற்கு அழகாகும் என்பது அறிஞர்கள் துணிபு.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்"

என்று அறிஞர்கள் போற்றுந் திருவள்ளுவநாயனாரும், "புலையுங் கொலையுங் களவுந்தவிர்" என்று ஔவைப் பிராட்டியாரும், "கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு கல்லாமல்" என்று பட்டினத்தடிகளும், "கொல்லாவிரதமொன்று கொண்டாரே நல்லோர்" என்று தாயுமான அடிகளும் அருளிச் செய்தமை காண்க. கொல்லாமை, புலாலுண்ணாமையாகிய அறங்களை நன்கு எடுத்து அறிவுறுத்தும் அருண்மொழிகள் அளவில்லாதன, அவற்றை விரிப்பிற் பெருகும்.

விளக்கொளியை விரும்பிச் சென்று வீழ்ந்து மாய்கின்ற விட்டிற் பறவை போல, ஊன் உணவை விரும்பிப் புசித்து, இம்மையிலும் பல துன்பங்களால் வருந்தி மறுமையிலும் எரிவாய் நரகத்திற் காளாகாது நல்வழியில் நிற்றல் வேண்டும். பல தீமைகட்கும் காரணமாகிய ஊன் உணவைப் பெண்கள் தத்தம் வீடுகளில் ஒழிப்பாராயின் அவர்கள் குடும்பத்தார் நடுவழிப்படுவர். எத்தனையோ உயிர்கள் பிழைக்கும். அறநெறி ஓங்கும்; தவநெறி தழைக்கும். சைவ சமயம் வளரும். தேசஞ் சிறக்கும்.

"கொல்லா விரதங் குவலய மெல்லாம் ஓங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை
பராபரமே" —தாயுமான அடிகள்.

# தேச சேவை

(சிறு கதை.)

(ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள்.)

## முதல் அதிகாரம்.

பூவுலகின்கண் ஜனித்திருக்கும் மானிடர்கள் பெரிதும் அஞ்சக்கூடிய விஷயம் யாது? நினைத்த மாத்திரத்தில் மனிதனைத் திடுக்கிடச் செய்யக்கூடியது எது? இதற்கு விடையளிப்பதில் அவரவர்கள் தத்தமக்குள்ள அறிவினாலோ ஆராய்ச்சியினாலோ அல்லது அனுபவத்தினாலோ ஏற்பட்டிருக்கும் விஷயங்களையே விடையாக அளிக்கக்கூடும். ஆனால் பண்டிதன், பாமரன், நல்லவன், தீயன் என்ற வித்தியாசமில்லாது எல்லோரையும் ஒரே சமமாகத் திடுக்கிடச் செய்வது மரணமேயாகும்.

ஒவ்வொருவரும் தாமெடுத்த காரியங்களையோ தமது நோக்கங்களையோ முடித்துக் கொள்ளுமுன் மரணத்தைக் கண்டு அஞ்சுவது பொருத்தமானதே. உத்தம தேசாபிமானியாகிய ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகலேயவர்கள் மரணப் படுக்கையிலிருந்த சமயம் பிரதமப் படிப்பைக் கட்டாயமாகவும் இலவசமாகவும் நம்மிந்தியாவில் ஏற்படுத்துமுன் தமது வாழ்நாளை முடிக்க வந்திருக்கும் மரணத்தைக் கண்டு வருந்தியிருக்கக்கூடுமென்பதில் தடையுண்டோ? உயிருடனிருந்தால் தமது முயற்சிக்கேற்றபடி பலனைக் காணக்கூடியவர்களான

மனிதர்கள் அகால மரணத்தைக் கண்டு அஞ்சாமலிருப்ப தெங்ஙனம்?

ஜன சமூக வாழ்க்கையின் கஷ்டத்தையும் பரிதாபத்தையும் ஒரு சிறிதும் அறியாமல் தம் வாழ்நாளைச் சிறப்பிப்பதிலேயே அளவற்ற பொருளைச் செலவழித்துவரும் சிலர் மட்டும் மரணமென்பது தனவானுக்கு விசனகரமென்றும் ஏழைகள் அதை மனமார ஒப்புக்கொள்ளக்கூடியவர்களென்றும் நினைக்கக்கூடும்.

தனவந்தர்களின் ஐசுவரியப் பெருக்கத்திற்கு ஏழைகளின் சரீர உழைப்பே காரணமென்பதை இவர்கள் யோசிப்பார்களாகில், ஏழைக் குடிமக்களைப் பிரபுக்கள் எவ்வளவு பொறுப்புடனும் அன்புடனும் ஆதரிக்கவேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குமல்லவா?

பணச்செருக்கால் சுயநலத்தையே முழுதும் பாராட்டிவரும் பிரபுக்களடங்கிய அமராவதி நகரில் ஏழையிலும் ஏழையாயிருக்கும் கேசவனுக்கு அன்றாடம் சம்பாதித்துத் தன் மனைவி மக்களைக் காப்பாற்றுவது மிகக் கடினமாகவே இருந்தது. கூலிவேலை செய்யச் செல்லுமிடங்களில் முதலாளிகள் நெஞ்சில் இரக்கமற்றுக் கடுமையாய் வேலை வாங்கிக்கொண்டு அவ்வாட்களுக்கு அரைகுறையான கூலி கொடுப்பதிலும் அதை இனாம் செய்வதாக நினைப்பவர்களிலும் பாஸ்கரன் என்ற பிரபுவும் ஒருவர்.

இவர் தாம் பொருளீட்டும் வழிகளில் சுதேச சம்பந்தமான பூர்வீக வழிகளை ஒரு சிறிதும் அனுசரிப்பதே கிடையாது. இவ்வழியை யனுசரித்தால் அநேகம் கூலி ஜனங்கள் கையார வேலைசெய்து சம்பாதிக்க இடமுண்டாய்விட்டால் என்ன செய்வது? பாஸ்கரன் ஒன்றுக்கு மூன்று செலவழித்து அயல்நாட்டு இயந்திரங்களை வரவழைத்து அவைகளின் மூலமாகவே தமது பஞ்சாலையின் வேலைகளை நடத்திவந்தார். இயந்திரங்களின் தன்மையை யறியாத பாஸ்கரன் அவைகளில் வேலை செய்பவர்களுக்குப் பெருத்த சம்பளம் கொடுப்பதில் சிறிதும் பின் வாங்கவே மாட்டார். அதே இடத்தில் கூலி வேலை செய்துகொண்டிருக்கும் கேசவனுக்கு பாஸ்கரன் நாள் ஒன்றுக்கு நான்கு அணா வீதம் படியளித்தார். கேசவன் அதிகாலை ஐந்து மணிக்கே பஞ்சாலை செல்லவேண்டும். பகற் சாப்பாட்டிற்கு வீடு செல்லக்கூடாது. மாலை ஏழு மணிக்குமேல் முதலாளியின் வீடு சென்று கூலியைப் பெற்றுக் கேசவன் வீடு வரும் பொழுது இரவு மணி ஒன்பதாய்விடும். இவன் மனைவி மரகதம் மிகவும் பொறுப்பும் புத்தி சாலித்தனமு முள்ளவளானதால் அன்றாடம் வீட்டிற்கு வேண்டியவற்றைத் தானாகவே சேகரித்துச் சமையல் செய்து தனது குழந்தைகளுக்கு அமுதிட்டுப் புருஷனுக்கும் சாப்பாட்டைக் கட்டியெடுத்துக்கொண்டு நாள் தவறாது பஞ்சாலைக்குச் செல்வாள். குடிப்பதென்ற துர்வழக்கம் கேசவனிடம் கிடையவே கிடையாது இவனுக்கு ஒரு பெண்ணும் ஒரு பிள்ளையுமிருந்தன. பிள்ளைக்கு வயது பத்து. பெண்ணிற்கு நான்கு வயதாயிருந்தது. உலகிலுள்ளவர்களில் பெரும்பாலரை வருத்தியும் கொள்ளை கொண்டும் வந்த மாயச்சுரம் அமராவதியில் ஏழை ஜனங்கள் வசிக்குமிடத்தில் ஆரம்பமானது ஆச்சரியமல்ல. பள்ளத்தாக்கில் ஈரங்காத்து இருக்குமிடத்தில் கூரை வீடுகள் கட்டிக்கொண்டு வசிக்கும் ஜனங்களிடத்தில் மாயச்சுரம் இட்டதே சட்டமாயிருந்தது. கிடைத்ததைப் புருஷனுக்கும் மக்களுக்குமிட்டு அநேகமாய்ப் பட்டினியாயும் சில சமயம் கால் வயிற்றிற்குப் புசித்தும் காலங் கழித்துவரும் மரகதத்தை இந்நோய் கடுமையாய்ப் பற்றிக்கொண்டது. மனைவி நோயாய்ப் படுத்ததிலிருந்து கேசவன் விடியுமுன் எழுந்து சமையல் செய்து



தனக்கும் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு பஞ்சாலை செல்வான். வீட்டிலுள்ள குழந்தைகள் தம் இஷ்டம்போல் அரைகுறையாய்ச் சாப்பிட்டுத் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தன. அவ்விடம் வசிப்பவர்களெல்லோரும் கூலிவேலை செய்யும் ஏழை ஜனங்கள்தான். ஆனால் அவர்களில் கேசவன் நீங்கலாக மற்ற எல்லோரும் பெருங் குடி குடித்து மனைவி மக்களைப் பட்டினி போடும் பரம பாதகர்களாயிருந்ததால் அவர்களைக் கேசவன் வெறுத்துவந்தான். இது காரணமாகக் கேசவன் மனைவி கேட்பாரற்றுத் தனியே நோயினால் வருந்தியும் இவளை ஒருவரும் கவனிக்க முன் வரவில்லை. ஒரு நாள் காலையில் கேசவன் வேலைக்குச் சென்றதும் மரகதத்திற்கு ஜுரம் மிதமிஞ்சி யதிகரித்து நினைவு போய்விட்டதுடன் பெருமூச்சும் கண்டுவிட்டது. தெருக்கதவு திறந்து கிடந்ததால் வாயிற்படியில் பிச்சைகேட்க வந்த பிச்சைக்காரி ஒருத்தி மரகதத்தின் நிலைமையைக்கண்டு மனத்தவித்தாள்.

இதைப் படிக்கும் நேயர்கள் ஏழைக் குடிசைக்குப் பிச்சைக்காரர் சென்றால் என்ன பயனென்று சிந்திக்கக்கூடும். ஆனால் ஏழைகளின் ஆகாரத்தினாலேயே எளியவர்கள் பிழைக்கிறார்கள் என்பது திண்ணம். சுகமாக ஊருக்கு வெளியில் உயர்ந்த மாளிகையில் தெருவாயிலில் சேவகனைக் காவல்வைத்து நிம்மதியாய்க் காலங்கழிக்கும் தனவந்தர் வீட்டின் வாயிற்படியைப் பிச்சைக்காரர்கள் மிதிப்பதும் கூடாத காரியம். விஸ்தாரமான வீதிகளில் ஒய்யாரமாக மோட்டார்காரில் வாயுவேகமனோவேகமாய்ச் சஞ்சரிக்கும் இப்புண்ணியவான்கள் கண்களில் பிச்சைக்காரர்கள் தென்படுவதும் நியாயமில்லை. அநகரின் கடுமையால் ஏழைகள் மிகவும் துன்புறுவதால், நிமிஷத்திற்கு நூறு ரூபாய் செலவழிக்கும் பிரபுக்களின் கூட்டம் பெருகிக் கிடக்கும் நகரங்களில் பிச்சையும் கிடைக்காமல் பலர் பட்டினி கிடக்கிறார்கள் என்பது நிச்சயம். மரகதம் பசியின் துன்பத்தை யறிந்தவளாதலால் இக்கிழவி வரும் சமயம் அவளுக்குக் கஞ்சி வார்க்காமலிராள். பசிக்கு ஆகாரமளிக்கும் பாக்கியவதியான மரகதம் மரணத் தருவாயிலிருப்பதைக் கண்ட பிச்சைக்காரி மரகதத்தின் மகனை அழைத்துக் கேசவனை உடனே அழைத்துவரும்படி பஞ்சாலைக்கு அனுப்பினாள். கேசவன் மகன் தனது சிறுகால்கள் நோவ வழி நடந்து பஞ்சாலை சென்று தன் தந்தையைக்கண்டு பேசுவதற்குள் மாலை நான்கு மணியாய்விட்டது. மனைவிக்கு நோய் அதிகமாயிருப்பதை யறிந்த கேசவன் உடனே வீட்டிற்கு ஓடிவர நினைத்தும் முடியவில்லை. யஜமானன் பாஸ்கரன் வெளியிற் சென்றிருந்ததால் அவர் வந்தபின்பே அவரிடம் விடைபெற்று வீடு வரவேண்டும். தவிர, யஜமானனிடம் தன் கஷ்டத்தைச் சொல்லிக்கொண்டால் இரண்டு ரூபாயாவது முன் பணமாகப் பெற்று அதைக்கொண்டு தன் மனைவிக்குச் சிகிச்சை செய்யலாமென்று ஏழைக் கேசவன் எண்ணலானான். அச்சமயம் அமராவதியில் முனிஸிபல் கமிஷனரைத் தேர்ந்தெடுக்கும் சமயமாயிருந்தது. நமது பாஸ்கரனும் ஓர் அபேக்ஷகராக நின்றார். இவர் தம் டிவிஷனிலுள்ள வீட்டுக்காரர்களுக்குச் சிறிய தொகையைக் கடன் கொடுத்து உதவியிருந்ததால் தமக்கு வோட் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற பயம் இதுவரை இவருக்குண்டானதில்லை. கமிஷனர்களின் பொறுப்பு இன்னதென்றும் வோட் கொடுக்கும் சுதந்தரத்தில் தமக்கு வேண்டிய ஆலோசனை இன்னதென்றும் சற்றுமறியாத ஜனங்கள் கொண்ட அந்த டிவிஷனில் இதுவரை இவர் இட்டதே சட்டமாக விருந்தது. இம்முறை இவருக்குப் போட்டியாக நிற்பவர் சாமானியரல்லர். அவர் நல்ல படிப்பும் ஜன சமூக வாழ்க்கையில் ஆதா

வும் கொண்டவர். அவர் பெயர் தேவதத்தன். அவர் அங்குள்ள ஜனங்களுக்குக் கமிஷனர்களின் கடமையைப் பற்றியும் வோட்டுக் கொடுப்பவர்களுக்குள்ள சுதந்தரத்தைப்பற்றியும் அடிக்கடி மகாநாடு கூட்டி நகர் முழுதும் உபதேசித்து வந்தார். ஊழல் நிரம்பிக்கிடக்கும் தமது டிவிஷனுக்கு இப்புண்ணியவான் போட்டியாய் வந்திருப்பதால் இம்முறை தாம் தோற்றுவிடுவோம் என்ற பயம் பாஸ்கரனுக்குண்டாயிற்று. இம்முறை மந்திரத்தில் மாங்காய் உதிராதென்றறிந்து சந்து பொந்துகளிலெல்லாம் நுழைந்து தமக்கே வோட் கொடுத்தால் ஜனங்களுக்குரிய சுகாதார விஷயங்களில் மெத்தப் பாடுபடுவதாய் வாக்களித்துத் தெருத்தெருவாய்ச் சுற்றிக் கொண்டிருந்தார் பாஸ்கரன்.

கேசவன் குடியிருக்கும் பாகமும் இவர் டிவிஷனைச் சேர்ந்திருந்ததுடன் அதற்கடுத்த தெருவிலுள்ள வீடுகளெல்லாம் தமது சிநேகிதருக்குச் சொந்தமாயிருந்ததால் அவர்களைக் கண்டு தமக்மே வோட்டுக் கொடுக்காவிடில் வீட்டை விட்டுக் காலிசெய்ய நேரிடுமென்று மிரட்டும் நிமித்தம் அவர் அன்று அவ்வழி நடந்துகொண்டிருந்தார்.

பஞ்சாலை முதலாளியைக் கண்டதும் அங்குள்ளவர்கள் ஓடிவந்து 'உங்கள் வேலைக்காரனாகிய கேசவனின் மனைவி மரணத்தறுவாயிலிருக்கிறாள். யாரும் கவனிப்பாரில்லை' என்று தெரிவித்தார்கள். 'ஆம்! வயிற்றிற்கில்லாத தரித்திரங்களுக்குக் கலியாணம் வேறு! மனைவி ஒரு கேடு! போதாக் குறைக்குக் குழந்தைகள் ஒரு பக்கமா? நன்றாயிருக்கிறது' என்று கம்பீரமாயுரைத்துக் கொல்லென்று நகைத்துவிட்டுச் சென்றார் கனவான். கேசவன் நெடுநேரம் காத்திருந்தும் யஜமானன் வராததால் தன் மகனை வீட்டிற்கு முன்னதாக அனுப்பிவிட்டு அங்குள்ள மேஸ்திரியாரிடம் மன்றாடி உத்தரவு பெற்றுத் தர்ம வைத்தியம் செய்யும் புண்ணியவான் ஒருவரைக் கண்டு சில மருந்துகளை வாங்கிக்கொண்டு ஒரே ஓட்டமாய் வீடுநோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான். இவனுக்கெதிரில் அதிவேகமாய் வந்துகொண்டிருந்த மோட்டார் கார் ஒன்று இவனைக் கீழே தள்ளி இவன் சரீரத்தின் மேல் ஓடிற்று. வண்டிச் சக்கரம் கழுத்திற் பதிந்து ஓடியதால் கேசவன் 'ஐயோ செத்தேன்' என்றலறி ரத்தம் கக்கி அங்கிமிஷமே உயிர் துறந்தான். தெருக்கோடியின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த போலீஸ் வீரனுக்கு ஓடிய வண்டி பாஸ்கரனுடையதென்று தெரிந்தும், அவர் பிரபுவாயிருப்பதையும், அவர் வீட்டில் தனது மேலதிகாரி அடிக்கடி விருந்திடப்பட்டு உபசரிக்கப்படுவதையும், அவர் அடையும் பலவித மரியாதைகளையும், பாஸ்கரனுக்கு அதிகார வர்க்கத்தினரிடமுள்ள நெருங்கிய பழக்கத்தையும் சலிகையையும் யோசித்தவளவில், முடிவில் ஒன்றும் செய்யாது கேசவன் பிணத்தினருகில் வந்து அஜாக்கிரதையால் நேர்ந்த மரணமென்று தனது புத்தகத்தில் குறித்துக்கொண்டு அச்சவத்தை வண்டியிலேற்றி அடக்கம் செய்யும்படியான ஏற்பாடுகளைச் செய்தான்.

## இரண்டாவது அதிகாரம்.

ஸ்ரீமான் ராஜசேகரன் அமராவதியிள்ள பிரபுக்களுள் முதன்மையானவர். கோடீசுவரரான ராஜசேகரனுக்கு தேவதத்தனென்ற குமாரனும் தாராமணி யென்ற பெண் குழந்தையுமுண்டு. தாராமணி ஒரு வயதுக் குழந்தையாயிருந்தபோதே தாயை இழந்து விட்டாள். ராஜசேகரன் தன் மகன் தேவதத்தனை இரத்தினபுரியிலுள்ள உயர்தரக் கலாசாலையில் படிக்கச் செய்து தக்கவிடத்தில் அவருக்கு விவாகமும் செய்துவைத்தார். தந்தையின் விருப்பப்படி பெரிய உத்தியோகங்களில் அமர்வதில் தேவ



தத்தனுக்குச் சற்றும் பிரியமில்லாததால் மனைவி வித்யாவதியுடன் தந்தையிடமே வசிக்கலானார். தாராமணிக்கு இப்பொழுது வயது பதினாறு. ராஜசேகரன் ஜனசாரச் சீர்திருத்தத்தில் தமக்கிணையில்லை யென்ற பெயரை யெடுக்கும்பொருட்டு மகளுக்கு இதுவரை கலியாணம் முடிக்காமலிருந்தார். தாயில்லாப் பெண் தாராமணி படிப்பு, சங்கீதம் முதலியவை கற்பிக்கப்பட்டிருந்ததுடன், நவநாகரிக முறையை யனுசரித்து டென்னிஸ் (பந்து) விளையாடுவதிலும் அவளுக்கு நல்ல பயிற்சி இருந்தது. ராஜசேகரன் மறுபடி வேறு கலியாணம் செய்து கொள்ளாமல் இக்குழந்தைகளைக் கண்காணித்து வந்தார். பிள்ளை தேவதத்தன் உத்தியோகத்தில் அமரவில்லையே யென்ற வருத்தம் மட்டும் ராஜசேகரனுக்கு அளவற்றதாயிருந்தது.

ராஜசேகரன் வீட்டில் புருஷோத்தமனென்ற வாலிபனும் வசித்து வந்தான். இவன் ராஜசேகரனுக்குத் தமக்கை மகனாகவேண்டும். புருஷோத்தமனுக்கு இருக்கும் அழகிற்கு மாறாக அவன் குணம் மட்டும் தீயவழியிலேயே சென்று கொண்டிருந்தது. ராஜசேகரனுக்கு இவனே காரியதரிசியாய் ஏற்பட்டான். இருபத்திரண்டு வயதுள்ள புருஷோத்தமன் தன்னிலும் மூத்தவனாகிய தேவதத்தனைச் சிறிதும் மதிப்பதில்லை. இவன் தாராமணியைத் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பியதுடன் மாமன் சொத்துக்கள் முழுவதிற்கும் தானே அதிகாரியாய்விடும் வழியையும் தேடவேண்டுமென்று யோசித்தான். தேவதத்தனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு பரோபகார சிந்தை யிருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு ராஜசேகரனுக்குச் சுயநலமே பெரிதாயிருந்தது. இதுவே இவர்களுள் மனஸ்தாபத்திற்குக் காரணம்—தேவதத்தன் தன் தகப்பனிடமுள்ள ஆஸ்தியைப்பற்றிச் சிறிதும் விரும்பினவரல்லர். இவர் குணத்திற்கேற்றவாறு வித்யாவதியும் இவருக்கு இல்லக்கிழத்தியாயமைந்தாள். இச்சமயம் பாஸ்கரனுக்குப் போட்டியாய்க் கமிஷனராக நிற்பது இவர்தான். மாலை ஆறுமணிப் பொழுதில் அவர் தம்மனைவியுடன் காற்றுலாவி வரும் நிமித்தம் வண்டியேறி வெளியிற் சென்றார். இவர்கள் வண்டி கேசவன் குடிசைக்குப் பக்கத்திலிருக்கும் ரஸ்தாவிற் சென்றது.

அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருப்பது கண்டு தேவதத்தன் தம் வண்டியை நிறுத்தி என்ன விசேஷமென்று விசாரித்தார். கேசவன் என்ற எளியவன் மோட்டாரில் அகப்பட்டு நடுவழியில் இறந்துவிட்டான் என்றும் அவன் மனைவி மாகதம் சுரத்தினால் குடிசையில் மாண்டு கிடப்பதாயும் குழந்தைகள் நாதனற்று இருப்பதாயும் அங்குள்ளவர்கள் தெரிவித்தார்கள். தேவதத்தனும் வித்யாவதியும் வண்டி விட்டிறங்கிக் குடிசையினருகிற் சென்றார்கள். பத்து வயதுள்ள சிறுவன் அப்பாவைக் காணோமே என்று அலறிக்கொண்டிருந்தான். நான்கு வயதுள்ள பெண் குழந்தை சவமாய்க்கிடக்கும் தாயின்மீது புரண்டு அழுது, "அம்மா, எழுந்திரு, பசியாயிருக்கு, சாப்பாடுபோடு" என்று கூவிக்கொண்டிருந்தது. கல்லான நெஞ்சமும் கரைந்துருகக் கூடிய இக்காட்சியைக் கண்ட தேவதத்தனும் வித்யாவதியும் துக்கம் தாங்காது மாலைமாலையாய்க் கண்ணீர் விட்டழுதார்கள். பிரபுவின் குடும்பத்தார் ஒரு ஏழையின் நிமித்தம் பரிதாபப்படுவதுகண்டு அங்குள்ளவர்களெல்லோரும் அளவற்ற ஆச்சரியமடைந்தார்கள்.

கேசவன் மனைவியை யடக்கஞ் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அவ்விரு குழந்தைகளையும் கூட அழைத்துக்கொண்டு தேவதத்தன் தம் மனைவியுடன் வீட்டிற்குத் திரும்பினார்.

அன்று மாலையில் வெளியான பத்திரிகையில் ஸ்ரீமான் ராஜசேகரனுக்குத் 'திவான் பஹதூர்' என்ற பட்ட மளிக்கப்பட்டிருப்பதாய்ப் பிரசுரிக்கப்பெற்றிருந்தது.

இச்சந்தோஷச் செய்தியைப் புருஷோத்தமன் தன் மாமனுக்கு அறிவித்ததும் ராஜசேகரன் எல்லையற்ற ஆனந்தக்கடலில் மூழ்கிக் கிடந்தார்; இப்பட்டம் பெறுவதற்குத் தாம் பட்ட பிரயாசைகளை எல்லாம் எண்ணி எண்ணி அகமகிழ்ந்தார். இச்சந்தோஷ சம்பவத்தைத் தானே முந்தி கொண்டாட வேண்டுமென்று தீர்மானித்து அதற்குரிய ஏற்பாடுகளை அவர் தம் மருமகனுடன் யோசித்துக் கொண்டிருந்தார். தாசி காந்தாமணியை வரவழைத்து ஒரு சதிர்க் கச்சேரி வைப்பதென்று ராஜசேகரன் தீர்மானித்து இச்சந்தோஷக் கச்சேரிக்கு மறுநாள் அனைவரும் வந்துசேரவேண்டுமெனத் தமது இஷ்டமித்திர பந்துக்களுக்கெல்லாம் கடிதமனுப்பிக் கொண்டிருந்தார்.

இந்தச் சம்பிரமத்தில் தேவதத்தனும் வித்யாவதியும் அங்கு வந்து நின்றிருந்ததை ராஜசேகரன் கவனித்தாரில்லை. 'அப்பா' என்றழைக்கும் சத்தம் கேட்டுத் தலை நிமிர்ந்த ராஜசேகரன் மகனை நோக்கி, "பார்த்தாயா! நான் எண்ணியபடியே எனக்கு இம்முறை 'திவான் பஹதூர்' பட்டம் கிடைத்துவிட்டது. கூடிய சீக்கிரத்தில் இன்னும் பல பெரிய பட்டங்களை நான் பெறத் தடையில்லை. என் கண் இருக்கும்பொழுதே உன்னை ஓர் உயர்தர அதிகாரியாக்க வேண்டுமென்று நான் எவ்வளவு பிரயத்தனம் செய்தாலும் நீ மட்டும் என் சொல்லைக் கேட்பதில்லை. இனியாவது நான் சொல்வதை மதிப்பாயென்று எண்ணுகிறேன். ஏனென்றால், நான் இப்பொழுது சாமானிய ராஜசேகரனல்ல. திவான் பஹதூர் என்ற பட்டப் பெயர் ஒன்று என் பெயருக்குத் தலையில் மகுடம்போல் பிரகாசிக்கிறது பார்! இப்பொழுது நான் திவான் பஹதூர் ராஜசேகரன்" என்றுரைத்துத் தமக்குள்ள சந்தோஷப் பெருக்கினால் காரணமின்றிக் கடகடவென்று சிரித்து ஆரவாரித்தார்.

தேவ:—இதற்கா இவ்வளவு சந்தோஷம்? நீங்கள் இருந்த குதூஹலத்தைப் பார்த்தபொழுது ஏதோ பெருத்த நற்காரியம் பலித்துவிட்டதாயல்லவோ நான் எண்ணினேன்!

ராஜ:—இதற்கா என்கிறாயே! இது என்ன சாமானியமா? எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதா? இதைக்காட்டிலும் நல்ல சமாசாரம் வேறென்ன வேண்டும்?

தேவ:—நான் இதை உயர்வாக மதிக்கவில்லை.

ராஜ:—என்ன! என்ன! திவான் பஹதூர் பட்டத்தை நீ மதிக்கவில்லையா? நீ சொல்வது உண்மையா?

தேவ:—நான் அப்பட்டத்தை மதிக்கிறேனோ இல்லையோ, அது வேறு விஷயம். உங்களுக்கு அளித்திருப்பது பற்றி நான் அதை மதிக்கவில்லையென்பது நிச்சயம்.

ராஜ:—எனக்குக் கிடைக்காமல் பின் யாருக்குக் கிடைக்கும்? கோடீசுவரனுக்கே பொருந்தாதாயின் இப்பட்டம் பிறகு எதற்கு உபயோகம்?

தேவ:—ஜனசமூகத்திலோ அல்லது அதிகார அமைப்பிலோ உண்மையாய் உழைப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடியது இவ்விருவழியில் ஒன்றுமில்லாத ஒருவருக்கு அளிக்கப்படுமாயின் அப்பட்டத்திற்கே பெருமை குன்றிவிடத் தடையென்ன?

ராஜ:—தாயில்லாப் பிள்ளையாயிற்றே என்று உன்னை நான் செல்வமாக வளர்த்து வந்ததின் நிமித்தம் உனக்கு என்னைக் கண்டால் சிறிதும் லட்சியமுண்டாவதில்லை. கோடிக் கணக்காய் நான் சொத்துக்களைச் சேர்த்து



வைத்திருப்பதால் நீ தலைகீழாய்த் துள்ளி வீழ்கிறாய். சரி, நல்லதிருக்கட்டும். நாளைய தினம் பட்ட வைபவம் கொண்டாடுவதற்காகத் தாசி காந்தாமணியைக்கொண்டு ஒரு சதிர்க்கச்சேரி ஏற்பாடு செய்திருக்கிறேன். வரும் விருந்தினர்களை உபசரிக்க இஷ்டமுண்டானால் இவ்விடம் இரு. இல்லையானால் இக்கொண்டாட்டம் முடியும்வரை நமது கிராமத்திற்குச் சென்று தங்கியிரு. திவான் பஹதூர் பட்டவைபவத்தை நான் தொடர்ச்சியாய் ஒருமாதகாலம் கொண்டாடப்போகிறேன்.

தேவ:—அப்பா! நீங்கள் இதையொரு பிரமாதமாய் எண்ணியதற்கு நான் ஆட்சேபித்தேனன்றி உங்களிடம் எனக்கு அவமதிப்பென்பது கிடையாது. உங்கள் இஷ்டப்படி நடப்பதில் நான் குறுக்கிடவேமாட்டேன். எனது சிறிய விண்ணப்பமொன்றைத் தாங்கள் அங்கீகரிக்கவேண்டுமென்பதாக இவ்விடம் வந்திருக்கிறேன்.

ராஜ:—விண்ணப்பமாவது, கோரிக்கையாவது. 'அவனுக்குப் பாடசாலைச் சம்பளம் கொடு, இவனுக்கு ஒரு கலியாணம் செய்து வை, தங்க வீடில்லாமல் ஒருவன் தத்தளிக்கிறான், தொழிலாளிகள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள்' என்று உன்னுடைய கதைகளை அளப்பாயானால் நான் செவிசாய்க்கப்போவதில்லை. உன் சௌக்கியத்திற்காக மட்டும் வேண்டியதைக்கேள். நான் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். உன் மனைவிக்கு வேண்டிய புதுமாதிரி ஆபரணங்கள் வேண்டுமானால் கேள். தாராளமாய் வாங்கிக் கொடுக்கிறேன். இருபதினாயிரம் ரூபாயில் ஒரு மோட்டார் கார்விலைக்கு வந்திருப்பதாய் விளம்பரத்தில் பார்த்தேன். அதையுனக்கு வாங்கிக்கொடுக்க நீ விரும்புவாயானால் இந்தா இந்த நிமிஷமே வாங்கிக்கொள். உன் பதவியையும் பெருமையையும் மறந்து இவ்விதம் ஜனசமூகம், ஏழைகள், தாழ்ந்த வகுப்பார், தொழிலாளிகள் துயரம் என்று அறுபது நாழிகையும் பிதற்றிக்கொண்டு திரியாதே. உன் கண்ணியத்தை உனது தோரணையால் காப்பாற்றிக்கொள்.

தேவ:—அப்பா! உங்கள் வயிற்றில் பிறந்த எனக்கு என்ன குறைவிருக்கிறது? சுகசௌக்கியங்களெல்லாம் அனுபவித்துச் சலித்துவிட்டேன். மனிதன் பிறப்பது பரோபகாரத்திற்கன்றிச் சுயநலத்திற்கல்ல என்பதே என் கொள்கை. எனது விண்ணப்பம் இவ்விஷயமானதேயாகும்.

ராஜ:—நீ செல்வத்திலேயே பிறந்து வளர்ந்தவனாகையால் உனக்குப் பணத்தின் அருமை சற்றும் தெரியவில்லை. நான் இப்பணத்தைச் சேர்க்கப் பட்டிருக்கும் பாடு எனக்கல்லவா தெரியும்! நான் ஏழையாயிருந்த காலத்தில் எனக்கு ஒருவரும் உதவியதில்லை. நான் மட்டும் ஏன் என் பணத்தை வாரி இறைக்க வேண்டும்?

தேவ:—அப்பா! கடவுள் ஒருவனுக்குக் கணக்கற்ற திரவியம் கொடுப்பதின் கருத்தென்னவென்றால் அது பிறருக்கு உபயோகப்பட வேண்டுமென்பதேயாகும். அதிலும் ஏழ்மையின் கஷ்டத்தை நன்குணர்ந்திருக்கும் நீங்கள் ஏழைகளின் கவலையைப்பற்றிச் சிந்திக்காமலிருப்பது தர்மமா? இது நீதியா? ஆசார சீர்திருத்தத்தில் பெரிதும் ஊக்கங்கொண்டிருக்கும் தாங்கள் தங்களைப்போல் பிறரையும் எண்ணவேண்டியது கடமையல்லவா?

ராஜ:—ஆசார சீர்திருத்தமென்பது சுயநலத்தை விருத்தி செய்துகொள்வதற்காகவே அனுஷ்டிக்கப்படுவதன்றி, பிறருக்

கென்பது முடியாத காரியமாகும். நான் பலருடன் வித்தியாசமின்றிப் பழகிவருவதினாலேயே எனக்கு இவ்வளவு புகழும் திவான் பஹதூர் பட்டமும் கிடைத்திருக்கின்றன. ஆசார சீர்திருத்தங்கள் பிறர் நலத்திற்காக இருக்குமானால் ஆசார சீர்திருத்தமென்ற சொல் அழிந்து நெடுநாட்களாயிருக்குமே. அதிலும் அது அவ்விதமிருப்பின் நான் சிறிதும் பின்பற்றியிருக்கவேமாட்டேன் என்பதும் நிச்சயம்.

தேவ:—நெஞ்சிலிருப்பதை வஞ்சனையின்றி வெளியிடுவதால் உங்கள் பெருந்தன்மை நன்கு வெளியாகிறது பற்றி இதைக்கேட்டு நான் சந்தோஷிக்கிறேன். ஆனால் நீங்கள் பேசுவதும் நடப்பதும் சயநலத்திற்காகவன்றி வேறில்லையே?

ராஜ:—மேடைமீது நின்று ஆசார சீர்திருத்தங்களைப்பற்றிக் கம்பீரமாய் நான் பேசுவதால் பத்திரிகைகளெல்லாம் என்னைக் கொண்டாடுகின்றன. பிரசங்கமேடையில் தீண்டாமை வித்தியாசமின்றி வீட்டு வேலையில் அமர்த்திக்கொள்ள வேண்டுமென்று நான் பேசுவேன். அவ்விதமே என் வீட்டிலும் இதை யனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவேனாகில் அஃது எனக்குக் குறைவை விளைவிக்குமென்பதே என் தீர்மானம். சுய நலத்திற்காகச் சமபந்தி போஜனம் செய்வதைச் சுபாவமாகவே வீட்டிலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவேனாகில் பந்துக்கள் என்னை விலக்கிவிடுவார்களன்றோ? நீ உலகமறியாதவன், உனக்கு ஒன்றுமே தெரியமாட்டாது. நான் வித்தியாசமின்றி விவாகம் நடைபெற வேண்டுமென்று பேசினாலும் நமது தாராமணியைத் தாழ்ந்த குலத்தினனுக்குக் கொடுக்கச் சம்மதிப்பேனா? நம் வீட்டில் வண்டி யோட்டுபவன் கூடத் தாழ்ந்த வகுப்பினனாய் இருக்கக்கூடாதென்பதே என் கருத்து. எனக்குச் சௌகரியமானதைச் சமயம்போல் ஆசார சீர்திருத்தமென்றும் சம்பிரதாயமென்றும் நடத்திக்கொள்வேன். ஆசார சீர்திருத்தத்தில்மட்டும் பேசுபவர்கள் அவ்விதமே நடக்கவேண்டுமென்ற நிபந்தனை கிடையவே கிடையாது. அவ்விதமிருந்தால் சாத்தியப்படுமா? கதியற்றவர்களுக்கு ஒருவழி இருக்கட்டுமென்பதற்காகவே சீர்திருத்தமென்று பேசுவது.

தேவ:—இவ்விதமாகப் போலிவேஷம் தரிப்பதைக்காட்டிலும் உண்மையில் தாழ்ந்த வகுப்பினரை உயர்த்துவதில் சிரமம் எடுத்துக்கொள்ளக்கூடாதா? ஆறறிவு பெற்ற மனிதர்களாகிய அவர்களும் கல்வியில் சிறந்தவர்களாய் ஜனசமூகத்தில் சுயமதிப்புடனும் நன்மதிப்புடனும் வாழ்ந்துகொண்டிருக்கும்படி செய்யக்கூடாதா? ஏழைகளுக்கு இரங்கக்கூடாதா? தொழிலாளிகளின் துயரைத்தீர்க்க முன்வரக்கூடாதா? இன்று மாலை நான் வெளியிற்சென்று வரும்பொழுது இரண்டு திக்கற்ற குழந்தைகளை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். அக்குழந்தைகளை நமது வீட்டில் வைத்து வளர்த்துக் காப்பாற்றவேண்டுமென்பதே என் விண்ணப்பம். சந்தோஷத்திற்காக லட்சியமின்றிப் பணத்தை இறைக்கும் நீங்கள் இவ்விஷயத்தில் எனக்கு அனுமதியளிப்பீர்களென்றே நம்புகிறேன்.

ராஜ:—வந்துவிட்டாயா வழிக்கு! இவ்வளவு நாட்களும் வாயால் பிதற்றித் திரிந்தது போதாமல் காரியத்திலும் நடத்த ஆரம்பித்துவிட்டாய்போலும். போதும், வாயை மூடு! உன் அசட்டுத்தனங்களை இன்றுடன் விட்டுத் தொலை.

தேவ:—கேசவன் என்ற ஏழைத் தொழிலாளியும் அவன் மனைவியும் ஒரே நாளில் இறந்துவிட்டார்கள். பத்து வயதுள்ள பிள்ளையும்



நான்கு வயதுள்ள பெண் குழந்தையும் காப்பாற்றுவாரற்று இருப்பதால் அவைகளை ரட்சிக்கவேண்டுமென்றே தீர்மானித்திருக்கிறேன்.

ராஜ:—நான் இதுவரை பொறுத்திருந்தேன். இனி உன்னை மனம்போனபடி நடக்கவிடேன். ஜாக்கிரதை!

இதற்கிடையில் வித்யாவதி உள்ளேசென்று அவ்வநாதைக் குழந்தைகளைக் கண்ணால் கண்டாலாவது மாமனாரின் மனமிளகாதா என்ற எண்ணத்துடன் குழந்தைகளை யழைத்துவந்து பெரியவரை வணங்கச் செய்தாள். ராஜசேகரனுக்கு இக்குழந்தைகளைக் கண்டதும் பச்சாத்தாப முண்டாவதற்குப் பதிலாகக் கோபம் மீறியது. அவர் தேவதத்தனை நோக்கி, "நான் பொருளைத் தேடி வைத்திருப்பதாலல்லவா உனக்கு இவ்வளவு கொழுப்பேறியிருக்கிறது! நல்லதாகட்டும். சொத்துக்கள் முடிய எனது சுயார்ச்சிதமன்றி, நீ பாத்தியங் கொண்டாட முடியாது. இந்தச் சனியன்களை வீட்டை விட்டுத் துரத்தாதவரை நீ இங்கிருக்கக் கூடாது. ஓடு! என் கண்முன் நில்லாதே!" என்று கர்ச்சித்து அச் சிறுவர்களையும் காலாலுதைத்துத் தள்ளினார். ஓவென்றலறிபழும் குழந்தைகளை வித்யாவதி தன்னருகில் அழைத்துச் சமாதானப்படுத்தினாள். இதுவரை பொறுத்திருந்த தேவதத்தனுக்குத் தம் தந்தை அக்குழந்தைகளை யுதைத்துத் தள்ளியது கண்டு மனம் பொறுக்கவில்லை. அவர் "நல்லது, நான் வெளியே சென்றுவிடுகிறேன்" எனக் கூறி மூத்த குழந்தையைத் தாம் கையில் பிடித்துக்கொண்டு சிறு குழந்தையை வித்யாவதி எடுத்துக்கொண்டதும் வெளியிற் செல்ல வாரம்பித்தார். ராஜசேகரன் தம்மை நமஸ்கரித்துச் செல்லும் மருமகளை யழைத்து "உன் தேகத்திலுள்ள நகைகளனைத்தும் நான் செய்தவைகளன்றி உன் புருஷன் தேடியவையல்ல. எல்லாவற்றையும் கழற்றி வை. வீட்டிலிருந்து ஒரு தூசியும் எடுத்துப்போகக் கூடாது. ஜாக்கிரதை!" என்றார்.

## மூன்றாவது அதிகாரம்.

அநாதைச் சிறுவர்களை அழைத்துக் கொண்டு மனைவியுடன் தேவதத்தன் வெளியிற் சென்றதும் ஒரு சத்திரத்தின் திண்ணையில் தங்கி அன்றிரவைப் போக்கி, அதிகாலையில் எழுந்து பக்கத்திலிருக்கும் ஒரு கிராமத்திற்குச் சென்று, அவ்வூரிலுள்ள தனிகர்களை மன்றாடிக் காலியிடம் ஒன்றை வாங்கி அதில் ஒரு குடிசை கட்டினார்.

தேவதத்தனது முகப் பொலிவையும் அடக்கத்தையும் மற்றுமுள்ள குணவிசேஷங்களையும் கண்ட அந்தக் கிராமத்தார் அவருக்கு வேண்டுவனவற்றைச் செய்ய முன்வந்தனர். தேவதத்தன் ஆங்கிலம் பயின்றிருந்தும், ஒருவரிடம் கைகட்டி உத்தியோகஞ் செய்வதை வெறுத்துவந்தாராதலாலும், கிராம வாழ்க்கையில் மிகப் பற்றுள்ளவராதலாலும், அவ்வூரில் ஒரு பள்ளிக்கூடம் வைத்துச் சிறுவர் சிறுமியர்க்குக் கல்வி கற்பித்து அவர்களுடைய பெற்றோர் கொடுப்பதை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தத் தீர்மானித்திருந்தார். அங்ஙனமே அவர் தமக்காக அமைக்கப் பெற்ற சிறு வீட்டின் தெருப்புறத்தில் ஒரு பந்தலை அமைப்பித்து அதில் பள்ளிக்கூடம் வைத்துவிட்டார். அந்தக் கிராமத்தில் படிக்கும் வயதுள்ள சிறுவர் சிறுமியர் யாவரும் தேவதத்தனிடம் அனுப்பப்பட்டனர். தேவதத்தன் பள்ளிக்கூடத்தை நடத்தியதோடு வீட்டுக்குப் பின்புறத்திள்ள நிலத்தை வளைத்துத் தோட்ட வேலையுஞ் செய்துவந்தார். தோட்ட வேலையில் பள்ளிச் சிறுவர்களும் அவர் மனைவியும் அவருக்கு உதவி வந்தார்கள்

அந்தத் தோட்டத்தில் புஷ்பச்செடிகளும் காய்கறிவகைகளும் பயிர் செய்யப்பட்டு வந்தன. தேவதத்தன் தம்வீட்டுக்கு வேண்டியன போக எஞ்சிநின்ற காய்கறிகளை வேண்டியவர்களுக்கு இலவசமாகக் கொடுத்ததுடன் விற்பனைசெய்தும் சிறிது பணம் சம்பாதித்துவந்தார். மொத்தத்தில் அவர் அந்தக்கிராமத்தில் கஷ்டமின்றிச் சந்தோஷமாக வாழ்ந்துவரச் சௌகரிய முண்டாயிற்று. அவர் மனைவி மகாத்மா காந்தியின் உபதேசத்தைச் சிரமேற் கொண்டவளாய் வீட்டில் ஓய்வு நேரங்களில் நூல் நூற்று வந்தாள். இதனால் குடும்பச் செலவிற்குச் சிறிது பணம் கிடைத்தது. தேவதத்தன் சிறுவனுக்கு பலராமன் என்றும் சிறுமிக்கு மாதவி என்றும் பெயரிட்டழைத்தார். வித்யாவதி இவர்களைத் தன் வயிற்றிற் பிறந்த குழந்தைகளாகவே பாவித்தாள். கையால் நூல்நூற்ற வண்ணம் வித்யாவதி இக்குழந்தைகளுக்குப் படிக்கவும் எழுதவும் கடவுளை ஸ்தோத்தரிக்கவும் கற்பித்து வந்தாள். வித்யாவதியின் சந்தோஷமான நிலைமையையும் குழந்தைகள் நாளுக்கு நாள் அழகும் கல்வியும் பெருக வளர்ந்து வருவதையும் கண்டு தேவதத்தன் அந்நிலைமையே தமக்குச் சுவர்க்க சுகமாக மதித்தார். தேவதத்தன் மாமனார் நேரில் வந்து தாம் பணமளிப்பதாயும் அதைக்கொண்டு சுகமாய் ஜீவிக்கும்படியும் மருமகனை மன்றாடினார். வித்யாவதி இவ்விதம் சொல்லும் தந்தையை மறுத்துக்கூறி, தன் கணவருடைய கண்ணியமே தனக்கு முக்கியமென்றும், பரோபகாரத்திற்காகக் கஷ்டப்படுவது சிறந்ததென்றும் எடுத்துரைத்தாள்.

ஒரு நாள் தேவதத்தன் வெளியே சென்றிருந்தார். வித்யாவதி கடைக்குச் சென்றிருந்தாள். சிறுவர்களிருவர் மட்டும் குடிசை வாயிலில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். கறுத்து உயர்ந்து பயங்கரமான தோற்றத்தையுடைய மனிதனொருவன் அங்கு தோன்றி, பலராமனைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு நடக்க வாரம்பித்தான். மாதவி, "ஐயோ! அண்ணாவைத் திருடன் எடுத்துப்போகிறானே' என்று அலறினாள். பலராமன் அம்மனிதனை நோக்கி, "நீ ஏன் என்னை தூக்கிச் செல்கிறாய்?' என்றான்.

திருடன்:—உன்னிடம் நகை நட்டு இருக்குமென்று தூக்கினேன். அஃதொன்றுமில்லா விட்டாலும் உன்னைக் கூத்தாடிகளுக்கு விற்றால் எனக்குப் பணம் கிடைக்கும்.

பல :— அந்தப் பணத்தை என்ன செய்வாய்?

திருடன்:—வயிறாரச் சாப்பிடுவேன்.

பல :—என்னை விட்டுவிடு. இல்லாவிடில் எங்கப்பாவும் அம்மாவும் மெத்தக் கஷ்டப்படுவார்கள். நீ வயிற்றுக்கில்லை என்று சொன்னால் எங்கம்மா உனக்குச் சாப்பாடு போடுவாள். உனக்கு வேண்டியது சாப்பாடுதானே?

திருடன்:—உன்னை அழைத்துக்கொண்டு என்னைப் போலீஸில் பிடித்துக் கொடுத்து விட்டால் என்ன செய்கிறது?

பல.:—எங்கப்பா அவ்விதம் செய்யமாட்டார். உன்னைத் திருடனென்று நான் சொல்லமாட்டேன. பசியால் வருந்தும் ஏழையென்று சொல்வேன்.

திருடன்:—நீ அவ்விதம் செய்யாவிட்டால் —

பல.:—நான் பொய் பேசினால் கடவுள் என்னைத்தண்டிப்பார். நான் உன்னைக் காப்பாற்றுவதற்காகப் பொய் பேசினால் கடவுள் கோபிக்கவேமாட்டார்.

திருடன்:—உனக்கு இவ்விதம் கற்றுக்கொடுத்தது யார்?

பல.:—இதெல்லாம் எங்கம்மாள் எங்களுக்குப் போதித்தாள். நீ எங்கம்மாளைப் பார்த்தால் பிறகு திருடவே மாட்டாய்.

இவ்விதம் இவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்த சமயம் வித்யாவதி கடையிலிருந்து சாமான்களை வாங்கிக் கொண்டு அவ்விடம் வந்தாள். தேவஸ்திரீபோலும் லக்ஷ்மீ தேவி போலும் சாந்தமே உருவாகக்கொண்டு வந்திருக்கும் அம்மாதரசி குழந்தைகளைக் கட்டியணைத்துச் சீராட்டுவதைக்கண்டு திருடன் பிரமித்து நின்றான்.



வித்யாவதி அவனை நோக்கி "நீ யாரப்பா?" என்றாள்.

திருடன்:—"அம்மா, நான் ஒரு பிச்சைக்காரன். வயிற்றின் கொடுமையால் திருட்டுத்தொழில் செய்து வருகிறேன். பிரபுக்கள் நிறைந்த இவ்வூரில் எனக்கு ஒரு கவளம் அன்னம் கிடைக்காததால் கண்ணில் பட்ட குழந்தைகளைத் திருடிப் பெற்றோர்களைப் பரிதபிக்கச் செய்வதென்ற பிடிவாத மெனக்குண்டாயிற்று. இச்சிறுவனை நான் திருட வந்ததில் எனக்கு ஞானோதயமாயிற்று. அம்மணி! நான் போய் வருகிறேன்" என்று கூறி வித்யாவதியின் காலில் விழுந்து கும்பிட்டான்.

வித்யாவதி மனமிரங்கி, "அப்பா! நீ ஒன்றுக்கும் கவலையுறாதே. உன் வயிறு பசியாமல் நான் உனக்கு அன்னமிடுகிறேன். நீ பிறருக்கு நன்மைசெய்ய வேண்டுமென்ற நினைவுடனிருப்பாயாகில் உனக்குக் கடவுள் நல்வழி காட்டுவார்" என்று கூறி உள்ளே சென்றாள். வீரன் குழந்தைகளுடன் பேசிக்கொண்டே வெளியிலிருக்கும் பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துக்கொண்டிருந்தான்.

இச்சமயம் தொலைவில் வந்துகொண்டிருந்த தேவதத்தனை வீரன் கண்டதும் அவர் ஸ்ரீமான் ராஜசேகரப் பிரபுவின் குமாரர் என்றறிந்தான். அவர் நிலைமையின் காரணமிவனுக்குத் தெரியவில்லை. வீரன் இன்னான் என்பதை அறிந்தபின் தேவதத்தனுக்கு அவனிடம் அளவற்ற பச்சாத்தாபமுண்டாயிற்று. புருஷன் மனைவி இருவருமாக அவனுக்கு உணவளித்து ஒழிந்த நேரங்களில் நற்போதனைகளைச் செய்துவந்தார்கள். அன்றிலிருந்து வீரன் தோட்டவேலை செய்யத் தொடங்கினான். அவன் வீட்டைச் சுற்றித் தோட்டமாக்கி அதில் காய் கறிகளை ஏராளமாய்ப் பயிரிட்டு வீட்டிற்கு வேண்டியது போகமிகுந்ததைத் தெருவில் விற்று வருவான்.

ஒரு நாள் தேவதத்தன் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருக்கும் சமயம் ஒரு பெண்பிள்ளை சிறுவனொருவனைக் கையில் பிடித்துக் கொண்டுவந்து, "ஐயா! காப்பாற்றும்" என்று கதறிக் காலில் விழுந்தாள். அருகிலிருந்த வித்யாவதி அவளைச் சமாதானப்படுத்தி விஷய மென்னவென்று விசாரித்ததும், தன் புருஷன் பாஸ்கரனுடைய பஞ்சாலையில் வேலையிலிருந்ததாகவும், ஒரு நாள் அவன் இயந்திரத்திலடிபட்டுப் பெருத்த காயமடைந்து முடிவில் இறந்து விட்டானென்றும், தன் புருஷனுக்கு வைத்தியம் செய்வதற்காக வாங்கிய ஐந்து ரூபாய்க்காகத் தனது அறியாச் சிறுவன் பஞ்சாலையில் வேலைசெய்து தீரவேண்டு மென்று பாஸ்கரன் கட்டாயப்படுத்துவதாயும், பிள்ளையும் ஆபத்திலகப்பட்டால் தனக்கு வேறு கதியில்லை என்றும், பாஸ்கரனுக்கு ஐந்து ரூபாயைத் திருப்பிக் கொடுக்கத் தான் பல பெரிய மனிதர்கள் காலில் விழுந்தும் அவர்கள் ஒரு காசும் கொடுக்கவில்லை என்றும் அவள் சொல்லியழுதாள்.

ஒரு காசும் கையிலில்லாததால் தேவதத்தன் இதற்கென்ன வழியென்று ஆலோசித்தார் வித்யாவதி உள்ளே சென்று தினம் சிறிதாகச் சேர்த்து வைத்திருக்கும் கோதுமையை அளந்து பார்த்ததில் நான்கு படி இருந்தது. தேவதத்தன் வீரனை அழைத்துக்கொண்டு அன்று மாலைவரை விறகு வெட்டிக் குவித்தார். பலராமனும் மாதவியும் தோட்டத்திலுள்ள காய்கனிகளையும் புஷ்பங்களையும் பறித்துச் சீராக அடுக்கி வைத்தார்கள். இதற்கிடையில் கையிலுள்ள பஞ்சை யெல்லாம் வித்யாவதி நூலாக நூற்று வைத்தாள்.

தேவதத்தன் இவைகளை எல்லாம் கடையில் விற்று ஐந்து ரூபாய் சேர்த்து விநோதன் தாயிடம் கொடுத்து பாஸ்கரன் கடனைத் தீர்க்கும்படி செய்து விநோதனைத் தம்மிடமே வைத்துக் கொண்டார். பவானி மெத்த சந்தோஷத்துடன் சென்று பாஸ்கரனிடம் ஐந்து ரூபாய் கடனைத் தீர்த்துவிட்டு வித்யாவதியிடமே தங்கியிருந்தாள்.

### நான்காவது அதிகாரம்.

ராஜசேகரன் வீட்டில் நடைபெற்ற சதிர்க் கச்சேரியில் நர்த்தனம் செய்த தாசி காந்தாமணி அங்குள்ளவர்களால் பெரிதும் போற்றப்பட்டாள். சமய சஞ்சீவியாகிய புருஷோத்தமன் காந்தாமணியின் கையில் ஒயின் சீசாவைக் கொடுத்து விருந்தினர்களுக்கெல்லாம் அளிக்கச் செய்தான். ராஜசேகரன் காந்தாமணிக்கு ஆயிரம் பொன் வெகுமதியளித்து அடிக்கடி வந்து கச்சேரிகள் செய்துகொண்டிருக்கும்படி அவளைக் கேட்டுக் கொண்டு தெருவாயில் வரை கால் நடையாய் வந்து அவளுக்குக் கைலாகுக் கொடுத்து வண்டியிலேற்றியனுப்பிவிட்டுத் தமது நண்பர்களுடன் மனமாரக் குடித்து ஆனந்தக் கடலில் ஆழ்ந்து இருந்தார். நாள் தவறினாலும் ராஜசேகரன் வீட்டில் சங்கீதக் கச்சேரியும் சாராய விருந்தும் தவறுவதில்லை. இதற்கென்றே பல நண்பர்கள் ராஜசேகரனைச் சூழலானார்கள்.

புருஷோத்தமன் சமயம் கிடைக்கும்பொழுதெல்லாம் தேவதத்தனைப்பற்றி ராஜசேகரனுக்கு வெறுப்புண்டாகும்படி பேசிவந்தான். இவன் ஒரு நாள் குடித்து வெறித்திருந்த சமயம் தாராமணியைக் கண்டு தன்னை விவாகம் செய்து கொள்ளும்படி நிர்ப்பந்தித்தான். தாராமணி அப்பொழுதுதான் தந்தையின் துர்க்குணம், தமையன் வீடுவிட்டுச் சென்றது, தன் தாயிறந்தது இவைகளைப்பற்றிச் சிந்திக்கலானாள். தன்னைப்பற்றித் தந்தை சரியானபடி சிரத்தையெடுக்கவில்லை என்பது அறிந்து அவள் விசனித்தாள். இதுவரை டென்னிஸ் விளையாடுவதிலும் மேனாட்டு நடையுடை பாவனைகளிலும் ஆழ்ந்து கிடந்த தாராமணிக்குத் தான் ஹிந்துப் பெண் என்பதும் தனக்குள்ள வழியைத் தான் தேடிக்கொள்ள வேண்டுமென்பதும் நன்கு புலப்பட்டன. வீட்டு வேலைகளிலும் குடும்ப நிர்வாகத்திலும் பயிற்சிபெற்ற வித்யாவதியின் அமைதியையும் அடக்கத்தையும் தான் கர்னாடகமென்று நினைத்தது பிசகு என்று அவள் உணர்ந்தாள். தமையன் வீடு வாராதவரையில் தந்தை துர்ச்சகவாசத்தினால் அழிந்து விடுவார் என்று அவள் நிதானித்தாள். மறுநாள் தாராமணி மோட்டார் ஏறித் தேவதத்தன் குடிசைக்குச் சென்றாள். இவள் செல்லும் சமயம் தேவதத்தன் தோட்டத்தில் வெட்டிக் கொண்டிருந்தார். இது கண்ட தாராமணி அருகில் ஓடிவந்து தமையன் கையைப் பிடித்துக்கொண்டு, "அண்ணா! இதுவோ உன் தலை விதி?" என்று அழுதாள்.

தேவ.:—தங்காய்! நீ இவ்விதம் கண்ணீருதிர்க்கும்படியான நிலைமையை நானடைந்திருக்கவில்லையே!

தாரா.:—கோடீசுவரன் பிள்ளையாகிய நீ இவ்விதம் ஏழைபோல் குடிசையில் வசித்தல் அடுக்குமா?

தேவ.:—ஏழைக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? கடவுள் சமூகத்தில் அனைவரும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தானே?

தாரா :—அண்ணா! நீ ஒரு பைத்தியக்காரன். தெருவில் கிடந்த அநாதைகளை இழுத்து வந்து தந்தையுடன் மனஸ்தாபப்பட்டு போக பாக்கியங்களையெல்லாம் இழந்து இப்பரதேசிக் கோலத்தில் இருக்கிறாய்! இதைக் காட்டிலும் வயிற்றெரிச்சல் வேறு என்ன



வேண்டும்? உன் தாய் இருந்தால் இது கண்டு சகிப்பாளா? அஷ்ட தரித்திரங்களுக்காக அஷ்டைசுவரியத்தை இழக்கலாமா?

தேவ :—தாரா! நீ ஒன்றுமறியாதவள். ஹிந்துக் குடும்ப வாழ்க்கையின் மேன்மையும் நோக்கமும் இன்னவையென்பதே உனக்குத் தெரியமாட்டாது. நீ என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டிய காரணம் ஒன்றையும் காணோம். வெளிப் பகட்டுக்கு மயங்கி உதவியற்றவனை வரிக்காமல் பாபம், புண்ணியம், பரோபகாரம், பச்சாத்தாபம் இவைகள் பொருந்திய நற்குணவானை மணந்துகொள். இதுவே எனது புத்திமதியாகும். நீ இவ்விடம் வந்திருப்பதறிந்தால் உன் தந்தை உன்னையும் கடிந்துகொள்வார். புருஷோத்தமன் ஒளித்திருந்து நீ இவ்விடம் வந்ததைக் கவனிப்பான். சீக்கிரம் வீட்டிற்குச் செல்.

தாரா :—அண்ணா! நீ என்னை உத்தேசித்தாயினும் வீடு வரக்கூடாதா? புருஷோத்தமன் தன்னை மணந்துகொள்ளும் படி என்னை நிர்ப்பந்திக்கிறான். அப்பாவுக்குக் குடிப்பதும் தாசிவீடு செல்வதும் ஓயாவேலைகளாயிருக்கின்றன. நமது வீடு நிறையக் குடியரும் வெறியருமாகக் கூடிக் கொக்கரிக்கிறார்கள். நீ வந்தாலன்றி நான் வீட்டில் நிம்மதியாயிருக்கமுடியாது. பரோபகாரமென்பதை என் விஷயத்திலும் நீ சிறிது கைக்கொள்ளக்கூடாதா? நான் உன்னுடன் பிறக்கவில்லையா?

தேவ :—நான் ஆண்பிள்ளையாகப் பிறந்து தந்தை தேடிவைத்திருக்கும் திரண்ட திரவியத்தை யுத்தேசித்துப் பரோபகாரத்தை விட முடியாது. நீ சுகமாயிருக்க வேண்டுமானால் நமது பக்கத்து வீட்டிலிருக்கும் ரமாகாந்தனை மணந்துகொள்ளல் இன்றியமையாததாகும். நற்குணமும் நன்னடக்கையும் பொருந்திய ரமாகாந்தனுக்கு ஆஸ்தியில்லை என்ற எண்ணத்தால் உன்னை அவனுக்கு விவாகிக்கத் தந்தை சம்மதிக்கமாட்டார். அவருக்கு 'ஸர்' பட்டம் வாங்கிக் கொடுப்பதாய் ஆசை காட்டிப் புருஷோத்தமன் உன்னை மணந்துகொள்ள வழிதேடுவான். ஆகையால் இவைகளை ஆலோசித்து உன் விவாகம் நடப்பதைப்பற்றி நீ பிரயத்தனம் செய்துகொள்ளல் முக்கியம்.

தாரா :—ரமாகாந்தனை நான் என்னவென்று கேட்பது? அவன் என்னை மணப்பதற்கு மறுதளித்துவிடுவானாயின் என் கதி என்ன?

தேவ :—தக்க வயதடைந்தால் தனக்கேற்ற புருஷனை மணந்து பெண்மக்கள் சுகமாய் வாழ்வார்கள் என்ற நாகரிக ஆராய்ச்சியில் உனக்கே நம்பிக்கையில்லையா? ரமாகாந்தன் உன்னை மணக்காவிடில் உன் வாழ்நாளைக் கன்னிப் பெண்ணாகவே கழித்துவிடுவதென்ற உறுதியை நீ கைக்கொள்ள வேண்டும். பகட்டும் படாடோபமும் இல்லாமல் அவன் உனது கீழ்ப்படிதலையும் அடக்க வணக்கத்தையும் கண்டு சிலாகிக்கும்படி நீ நடந்து கொள்ளல் முக்கியம். நம்மைப் போலவே இவள் இதற்குமுன் எவ்வளவு பெயரை மணக்கப் பிரயத்தனம் செய்தாளோ என்ற சந்தேகம் ரமாகாந்தனுக்கு உண்டாகக் கூடாது. இந்த சிரமங்களை எல்லாம் எண்ணியே நமது முன்னோர்கள் இளம் பிராயத்திலேயே தம் பெண்மக்களுக்குத் தக்க வரனைத் தேடிக் கலியாணம் முடித்து வந்தார்கள் என்று நாம் அறியலாம். சுமார் பதினெட்டு வயதுள்ள நீ உனக்கேற்ற புருஷனைத் தேடிக்கொள்வதில் எவ்வளவு கஷ்டமிருக்கிறதென்பதை இப்பொழுது அறிகிறாயன்றி இதுவரை தெரிந்துகொள்ள நியாயமே இல்லை. ரமாகாந்தன் உன்னை விவாகிக்க மறுத்து விடுவானாயின் நீ உலகவாழ்க்கைக்குரிய நன்மைகளையடையமுடியாது.

தாரா:—நல்லது, நீ வீட்டிற்கு வரமாட்டாயென்பது நிச்சயம்தானே? எதோ, அக்குழந்தைகளைக் காட்டு, பார்க்கிறேன்.

தேவதத்தன் சந்தோஷத்துடன் "பலராம்! மாதவி!" என்றழைத்ததும் அவ்விருவரும் 'அப்பா!' என்று ஓடிவந்தார்கள். தாராமணி அக்குழந்தைகளின் பொலிவையும் அழகையும் கண்டு ஆச்சரியமடைந்து தன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றாள். தங்கையின் பரிதாப நிலைமையைச் சிந்தித்தவண்ணம் தேவதத்தன் மரத்தடியில் சாய்ந்துகொண்டார். அவரைச் சுற்றிலும் என்றுங் கண்டிராத வெளிச்சமொன்று உண்டாயிற்று. நான்கு கைகளும் கருணை வெள்ளம் பொழியும் பார்வையும் மகுடமணிந்த சிரமும் பிரகாசிக்க ஓர் மாதரசி தோன்றினாள். பக்கத்தில் பல கன்னியர் சாமரை வீச, இரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அப்பெண்மணி தேவதத்தனருகில் வந்து அவன் தலையில் தன் கையை வைத்து ஆசீர்வதித்தாள். "குழந்தாய்! உன் மனவுறுதி கண்டு மகிழ்ந்தேன். எனது மக்களின் துயரைத் தீர்க்கும் உத்தமர்களுள் நீயும் ஒருவனாவாய். கண்மணி! நீ பெரிதும் சிந்திக்க வேண்டியது என் ஏழைக் குழந்தைகளின் நிலைமைமட்டு மல்ல. எனது பெண்மக்கள் தற்காலமுற்றிருக்கும் தாழ்ந்த நிலையைப் பார். அவர்கள் முன் பெற்றிருந்த மேன்மையான நிலை என்ன வென்பதை யாரேனும் சிந்திக்கிறார்களா?

சுயநலத்தை விரும்புபவர்களால் ஆசார சீர்திருத்தம் என்று விவகரிக்கப்படுவதன்றி என் பெண் குழந்தைகளை முன்னேற்றமடையச் செய்வதில் ஏதேனும் சிரத்தை எடுப்பாரிருக்கிறார்களா? வீட்டிலுள்ள பெண்மக்களைக் கவனியாதவர்கள்தானா தாழ்ந்த வகுப்பினரைக் கைதூக்கிவிடப்போகிறார்கள்? பெண்மக்களின் சுதந்தரம் இத்தகையது என்று யாராவது நிதானித்திருக்கிறார்களா? பெண்கல்வி விருத்தியாகும் வழியில் பாடசாலை ஒன்றாவது இதுவரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதா?

எனது ஆண்மக்கள் அயல்நாட்டு ஆசார அனுஷ்டானங்களில் மயங்கி உழன்று வரவரச் சுயானுஷ்டானத்தில் திரும்புவதுபோல் என் பெண்களும் சீர்திருந்தட்டு மென்று பார்த்திருக்க என் மனம் சகிக்கவில்லையே. எனது அருந்தவப் புதல்வரில் ஒருவனாகிய நீ உனது தங்கைக்கு நல் உபதேசம் செய்ததை நான் கேட்டுக்கொண்டிருந்ததால் என் சந்தோஷத்தை யுனக்கறிவித்து ஆசீர்வதித்துச் செல்லலாம் என உன் கண்முன் வந்தேன். நீ உன் தாய்க்கு வஞ்சனையின்றித் தொண்டு புரிவதால் நீடூழிகாலம் வாழ்ந்து பிறகு எனது சிங்காசனத்திற்கடியில் நீயும் வீற்றிருப்பாய். எனக்காகத் தொண்டுபுரிந்து கீர்த்திசேஷர்களாக விளங்கும் எனது புத்திர ரத்தினங்களைப் பார்" என்று ஒருதிசையை அவ்வம்மணி சுட்டிக் காட்டினாள். அத்திசையைத் தேவதத்தன் உற்று நோக்கினார். நல் முத்துப் பந்தலின் கீழ் நவரத்தினச் சிம்மாசனத்தில் பாரத மாதா கொலுவீற்றிருந்தாள். வலக்கைப்புறமுள்ள ஆசனத்தில் ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி அவர்களும் இடதுபக்கம் ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோகலே அவர்களும் வீற்றிருந்தார்கள்.

தேவதத்தன் திடுக்கிட்டு, "தாயே! தாங்கள் பாரதமாதாவோ?" என்று உரத்துக் கூவினார். உள்ளே வேலைசெய்து கொண்டிருந்த வித்யாவதி இக்குரல் கேட்டு வெளியில் ஓடி வந்து, "நாதா! பாபிகளாகிய நம்முன் பாரத தேவி பிரத்யட்சமாவாளோ" என்று கூறினாள். தேவதத்தன் கண்ணை விழித்துக்கொண்டதும் தான் இதுவரையில் கண்ட வைபவங்கள் கனவோ நினைவோ என்று சிந்திக்கலானார். தேச பக்தர்களுடைய உருவங்களும் பாரத மாதாவினுடைய



மங்கள உருவமுமே அவர் கண்முன் அசையாமல் காட்சி அளித்துக்கொண்டிருந்தன.

## ஐந்தாவது அதிகாரம்.

ரமாகாந்தன் ராஜசேகரனுக்கு அந்நியனல்ல. அவன் ராஜசேகரனுடைய அத்தை மகன்தான். ரமாகாந்தன் தந்தை பெரிய பிரபுவாயிருந்து காலாந்தரத்தில் ஏழ்மை நிலைமைக்கு வந்துவிட்டார். ஸ்ரீதரன் வியாபாரத்தில் நஷ்டமடைந்ததற்கு பாஸ்கரனே காரணமென்று அமராவதியில் ஒரு பிரஸ்தாபமுண்டு. ரமாகாந்தன் நல்ல படிப்பாளி; குணவான். அவன் இருபதாம் வயதிலேயே பி. ஏ. பரீட்சையில் தேறினான். தேவதத்தனும் இவனும் பள்ளித் தோழர்கள். குடும்ப நிலைமையை உத்தேசித்து ரமாகாந்தன் உள்ளூரிலேயே ஓர் உத்தியோகம் சம்பாதிக்க முயன்றான். அச்சமயம் ராஜசேகரனுக்குக் கிராமங்களைக் கவனிப்பதற்காக ஒரு மானேஜர் வேண்டியது அவசியமாயிற்று. புருஷோத்தமன் அந்தரங்க காரியதரிசியாகையால் அவனை அரை நிமிஷநேரம் பிரிய முடியாது. ரமாகாந்தனையே மாதம் அறுநூறு ரூபாய் சம்பளத்திற்கு மானேஜராக நியமித்தார் ராஜசேகரன். தாராமணி இதுகண்டு சந்தோஷித்தாள். ரமாகாந்தன் தனது வேலைகளில் மிகவும் சுறுசுறுப்பாகவும் உண்மையாகவும் நடந்துகொண்டான். புருஷோத்தமன் வழிக்கு இவன் போவதில்லை. சிற்சில சமயம் வீட்டிற்கு வேண்டியவற்றையும் இவன் தானே நேர் நின்று கவனித்ததால் தாராமணிக்கு இவனுடன் பழக இடமேற்பட்டது. தமையன் சொல்லிய புத்திமதியைச் சற்றும் மறவாது ரமாகாந்தன் தன்னிடம் மதிப்புடன் பழகக்கூடிய வழியில் நடந்துகொண்டாள். ரமாகாந்தன் தாராமணிக்கு உதவியாகத் தன் தாயை அடிக்கடி அனுப்பிவந்தான். நாளடைவில் குடும்பத்திலுள்ள கஷ்டங்களைப்பற்றித் தாராமணி ரமாகாந்தனிடம் தெரிவித்துக் கொள்ளலானாள். ராஜசேகரன் குடித்து வெறித்துக் கிடப்பதும் தேவதத்தன் வீட்டை விட்டுச் சென்றதும் தாராமணி தனியாய்க் கண்ணீர் விட்டு அழுவதும் ரமாகாந்தனுக்குப் பரிதாபகரமாக விருந்தது. தாராமணிக்கும் ரமாகாந்தனுக்கும் தேவதத்தன் எப்படியாவது வீட்டிற்கு வரும் வழியைத்தேடவேண்டும் என்ற எண்ண முண்டாயிற்று. அவ்விரு குழந்தைகளையும் பிரித்து விட்டால் தேவதத்தன் வீடு வந்து விடுவானென்று தாராமணி நினைத்தாள். தாராமணியின் அழுகையையும் மன்றாட்டத்தையும் தாங்கமுடியாது முடிவில் அக்குழந்தைகளுக்குக் கெடுதலின்றித் தன் வீட்டிலேயே ரகசியமாய் வைத்துப் பாதுகாப்பதென்றும் தந்தையும் மகனும் ராஜியாய்ப் போய்விட்டபின் இச்சமாசாரத்தை வெளியிடலாமென்றும் ரமாகாந்தன் தீர்மானித்தான். தாராமணி ஓர் ஆளைத் தன் அண்ணனிருக்கு மிடத்திற்கனுப்பி அவ்விடம் ஒவ்வொரு நாளும் நடைபெறும் நடவடிக்கைகளைக் கவனித்து வரச்செய்தாள். நடுப்பகல் வேளையில் இவ்விரு சிறுவர்களும் தோட்டத்தில் தனியே விளையாடிக் கொண்டிருப்பது வழக்கமென்று தெரியலாயிற்று. தாராமணி ரமாகாந்தனுடன் வண்டியேறிச் சென்று தன் வண்டியைத் தேவதத்தன் குடிசைக்குச் சற்று தூரத்திலேயே நிறுத்திக்கொண்டு தான் முன்னம் திட்டப்படுத்தி வைத்திருந்தபடி வேலையாளைக் குடிசைக்கனுப்பினாள். அவன் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர் முன் சென்று, "ஐயோ! ஒரு பெண்பிள்ளை காலொடிந்து வழியில் வீழ்ந்திருக்கிறாள்" என்றான். இது கேட்ட பலராமனுக்குத் தான் சென்று உதவி புரியவேண்டு மென்ற பரபரப்புண்டாயிற்று. பலராமன் தன் தங்கையை அவ்விடமே இருக்கச்சொல்லி, தான் புறப்பட்டான்.

மாதவி 'நானும் வருவேன்' என்று பிடிவாதம் செய்தாள். வேலையாள் மாதவியைத்தான் தூக்கி வருவதாக ஒப்புக்கொண்டு பலாாமனைக் கையில் பிடித்துக்கொண்டு தாராமணியின் வண்டிக்கருகில் வந்து சேர்ந்தான். பலராமன் 'கிழவி எங்கே?' என்று கேட்டான். தாராமணி அவளை ஆஸ்பத்திரிக் கனுப்பி யிருப்பதாயும் தான் இவர்களையழைத்துச் செல்வதாயும் கூறி வண்டியை வேகமாய் விடச்சொன்னாள்.

வழக்கம்போல் தேவதத்தன் குழந்தைகளைப் பாடம் படிக்க அழைத்தும் ஒருவரும் வரவில்லை. மற்றச் சிறுவர்களெல்லாம் மூலைக்கு மூலை சென்று தேடினார்கள். வீரனும் பவானியும் சுற்றுப் புறமெல்லாம் அலைந்து பார்த்தார்கள். குழந்தைகளைக் காணோமென்றதும் வித்யாவதி கதறி யழுதாள். எங்கு தேடியும் குழந்தைகள் அகப்படவில்லை. தேவதத்தன் ஓயாது "பலாாமா, மாதவி" என்று கூவிய வண்ணம் கதறி ஓலமிட்டார். குழந்தைகளைப் பிறர் அபகரித்திருப்பார் என்ற சந்தேகம் ஒருவருக்கும் உண்டாகவில்லை. தோட்டத்தருகில் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கும் கால்வாயில் இவ்விருவரும் தவறி விழுந்திருக்கலா மென்றே எல்லோரும் தீர்மானித்தார்கள். விவேகியாகிய தேவதத்தன் தம் மனதை ஒரு விதமாகச் சமாதானப்படுத்திக்கொண்டு தாம் ஏற்படுத்திய பள்ளிக்கூடத்தைச் சிரத்தையுடன் கவனித்து மற்றச் சிறுவர்களை ஆதரித்து வந்தார். கிராமத்திலுள்ளவர்க ளெல்லோரும் தேவதத்தனுக்கு ஏற்பட்ட விசனகாமான நிகழ்ச்சி கண்டு மிகவும் பரிதவித்தார்கள்.

## ஆறுவது அதிகாரம்.

பலாாமனும் மாதவியும் 'அம்மா, அப்பா' என்று அறுபது நாழிகையும் அழுதவண்ணமாயிருந்தது கண்டு ரமாகாந்தன் அவ்விருவரையும் ரத்தினபுரிக்கழைத்துச் சென்றான். அவ்விடத்தில் அக்குழந்தைகளுக்குப் பல விநோதக் காட்சிகளையும் காண்பித்து அவர்கள் விரும்பிய சாமான்களையும் ஏராளமாய் வாங்கிக் கொடுத்தான்.

அவ்விடமே ஒரு வீட்டை வாடகைக் கமர்த்தி, தன் தாயையும் சிறுவர்களையும் ரத்தினபுரியில் வசிக்கச் செய்தான். சிறுவர்களுக்கு தேவதத்தன் இன்னார் என்ற விவரம் தெரியாது. இவ்விடமும் தங்களை மெத்த அன்புடன் நடத்துவதாலும் விளையாட்டு புத்தி இன்னும் நீங்காமலிருந்ததாலும் நாளுக்கு நாள் அவர்கள் அழுகையை ஒய்த்துச் சந்தோஷமாகவும் இருந்தார்கள். ரமாகாந்தன் தன் பள்ளித் தோழனாகிய தேவதத்தனுக்கு இக்குழந்தைகள் மீதுள்ள வாஞ்சையையும் குழந்தைகளின் சுறுசுறுப்பையும் புத்திசாலித்தனத்தையும் உத்தேசித்து, பிரபுக்கள் வீட்டுக் குழந்தைகளைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இவர்களை ஆதரித்து வந்தான். பலாாமனை அதிகமாய் வெளியிலனுப்பாமல் வீட்டிலேயே பாடங் கற்கச்செய்தான். ரமாகாந்தன் அடிக்கடி ரத்தினபுரி வந்து குழந்தைகளிடம் இரண்டொருநாள் தங்கியிருந்து செல்வான். தேவதத்தன் குழந்தைகள் இறந்து விட்டதாய்த் துக்கித்தாரன்றி, குழந்தைகள்மட்டும் வரவர மனந்தெளிந்து சந்தோஷத்துடன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தனர். இக்குழந்தைகளை வளர்ப்பதில் தேவதத்தனைக் காட்டிலும் ரமாகாந்தனுக்கு அதிகப் பிரியமும் பற்று முண்டாயிருந்தன.

இவ்விதம் குழந்தைகளை உபாயமாய்ப் பிரித்தும், தமையன் வீடு வந்து சேராமல் குடிசையிலேயே வசிக்கத் தீர்மானித்து விட்டது கண்டு தாராமணி மனம் நொந்து அழுதவண்ணமிருந்தாள். ராஜசேகரன் குடிப்பழக்கத்துடன் நில்லாமல் சதாகாலமும் தாசி காந்தாமணியின்



வீடே கதியாகக் கிடந்தார். ராஜசேகானுக்குக் காந்தாமணியின் விஷயத்தில் செலவு செய்வதில் சற்றும் உற்சாகக் குறைவு ஏற்படவில்லை. ராஜசேகரன் இளம் பருவமுள்ள வாலிபனைப் போல் தம்மைச் சிங்காரித்துக் கொள்வதே அலுவலாக விருந்தார். இவர் வண்டியேறித் தாசி வீடு செல்லும் சமயம் பன்னீர் மணமும் வில்லை வாசனையும் அத்தரின் சுகந்தமும் தெருமுழுதும் வீசியடிக்கும். தாசி காந்தாமணியுடன் ராஜசேகரன் ஆட்டங்கள் பார்க்கச்சென்றால், சபையோர்களெல்லாம் இவர்களை கவனிப்பார்களன்றி ஆட்டம் பார்க்கும் வழக்கம் கிடையாது. முழு வயிற்றுச் சோறும் கந்தலற்ற துணியும் இல்லாமல் குச்சு வீட்டில் பதுங்கிக் கிடந்த காந்தாமணி இப்பொழுது தேவ ஸ்திரீயோ, கந்தர்வ மாதோ, கின்னரப்பாவையோ, நாக கன்னியோ என்று காண்போர் திடுக்கிடும்படி ஆடை யாபரணங்களினால் பிரகாசித்தாள். காந்தாமணியை விவாகஞ்செய்து கொண்டு விட்டால் அவளுக்குப் பெயரும் புகழும் உண்டாய் விடுமென்று ராஜசேகான் பன்முறை எத்தனித்தார். ஆனால் தாசி காந்தாமணி இதற்குச் சம்மதிக்கவில்லை. காந்தாமணிக்காக ராஜசேகான் கட்டி வைத்திருந்த மாளிகைக்கு 'காந்தி விலாசம்' என்று பெயர். ராஜசேகாரிடம் உபகாரம் பெற விரும்புவோர் யாராயிருந்தாலும் தாசி காந்தாமணியைக் கும்பிட்டாலன்றிக் காரியம் கைகூடாது. ராஜசேகருடைய தயவிற்காகவும் சந்தோஷத்தின் நிமித்தமும் தாசி காந்தாமணி மீது சில போலிப் புலவர்கள் கவி கட்டிப் பாடினார்கள். அரைகுறை வித்வான்கள் அரங்கேற்றல் செய்வதற்குக் காந்தாமணியின் சமுகமே அரங்கஸ்தானமாக விருந்தது. ராஜசேகான் வீட்டில் நடைபெறும் சந்தோஷக் கூட்டங்களில் தாசி காந்தாமணியே முன்னின்று விருந்தினர்களை யுபசரிப்பாள். காந்தாமணியின் மோகம் மீற மீற ராஜசேகான் தாராமணியைக் கவனிப்பதேயில்லை. கிழவர் குடிமயக்கத்தில் யோகநித்திரை புரிய ஆரம்பித்ததும், காந்தாமணியும் புருஷோத்தமனும் இஷ்டப்படி குதூகலமாக ஆடிப் பாடிக் கொண்டு ஆனந்திப்பார்கள். காந்தாமணியின் உள்ளன்பு மட்டும் புருஷோத்தமனிடமே பதிந்திருந்தது. இவ்வாறு ஒருவிதக் குறைவுமின்றி புருஷோத்தமன் காலங் கழித்துவந்ததுடன் திருப்தி கொள்ளாது மேல் நடக்க வேண்டியவற்றை ஆலோசிக்கலானான்.

## ஏழாவது அதிகாரம்.

பாஸ்கான் முனிசிபல் கமிஷனாாக நின்ற சமயம் போட்டியாக வந்த தேவதத்தன் தமக்கு நேரிட்ட வருத்தம் காரணமாக ஒதுங்கி விட்டதும், மீண்டும் பாஸ்கானே வெற்றி பெற்றார். தமது பஞ்சாலையில் வேலை செய்யும் ஆட்களைக் கொடுமையாக நடத்திவரும் இப்புண்ணியவானுக்குப் பொது ஜன ஊழியத்தில் நோக்க முள்ளவர்களுக்குக் கிடைக்கவேண்டிய முனிசிபல் கமிஷனர் ஸ்தானம் கிடைத்தது பற்றிச் சிலர் தமக்குள் வருத்தமடைந்தார்கள். பாஸ்கான் எலெக்ஷனில் நிற்கும் சமயம் பணத்தை லட்சியமின்றி வாரி யிறைத்திருந்தார். ஆகையால் இவரைப் புகழ்ந்து எழுதுவதே சில பத்திரிகைகளுக்கு வேலையாயிருந்தது. பாஸ்கானுக்கு ஜனப்பிரதிநிதி ஸ்தானங்களில் இடம் பெறவேண்டு மென்ற ஊக்கமும் முயற்சியும் இருந்தும், கமிஷனர் ஸ்தானத்தைப்போல் அவ்வளவு எளிதாய் ஜனப்பிரதிநிதி ஸ்தானத்திற்கு வோட்டர்களை வசப்படுத்திக் கொள்ள சாத்தியமற்றதாயிருந்தது. பொதுநல ஊழியத்தில் இவர் சிறிதும் சம்பந்தப்படாமலிருந்தபோதிலும், எந்த விசேஷ நடவடிக்கைகளிலும் ஸ்ரீமான் பாஸ்கானுடைய பெயர்தான் முதன்மையாய்ப் பிரகாசிக்கும்.

பொதுக் காரியங்களுக்கு இவரை உதவி கேட்க வரும் தேசாபிமானிகளைக் கண்டால் ஜனசமூகத்தில் ஆசார சீர்திருத்தம் பரவாத வரை இக்காரியங்களெல்லாம் வீண் என்றும், நமக்குள் ஜாதிமத வேற்றுமையுடன், ஒற்றுமையும் கிடையாது என்றும், உத்தேசிக்கும் முதல் முழுதும் சேர்ந்தபின் தாம் ஏதாவது அளிப்பதாயும் இவ்விதம் எதையேனும் பேசிக் கையில் காலணுவு மளியாமல் தப்பித்துக்கொண்டு விடுவார். ஸ்ரீ தானே மோசஞ் செய்ததிலிருந்தே பாஸ்கரனுக்குச் செல்வப் பெருக்கு உண்டாயிற்று. லட்சாதிபதியான இவருக்கு ஆண் சந்ததியைக் கடவுள் அளிக்கவில்லை. நெடு நாள் தவமிருந்து ஒரு பெண் குழந்தை அவருக்கு பிறந்தது. பத்மினி என்ற இப்பெண் தகப்பன் குணத்திற்கு முழுதும் மாறுதலான நற்குணங்களைக் குழந்தைப் பருவத்திலிருந்து பெற்றிருந்தாள். பத்மினிக்குப் புத்தி தெரிந்ததிலிருந்து கிளியைக் கூட்டிலடைத்து வளர்க்கக்கூடாது என்று சொல்வாள். பிச்சைக்காரர் 'அம்மா தாயே' என்று கூவினால் தானே சென்று பிச்சையிடுவாள். இவள் நற்காலத்திற் கேற்றவாறு இவளுக்குப் பாடம் கற்பிக்க ஏற்பட்டிருந்த உபாத்தினியும் கல்வி அறிவு, நடவடிக்கை இவைகளிற் சிறந்து விளங்கியதால் பத்மினி விளையாடிக்கொண்டே பல அரிய விஷயங்களைக் கற்றுணர்ந்தாள்.

தமக்கு லோபகுணம் மிகுந்திருந்தும் செல்வப் பெண் பத்மினி விஷயத்தில் பாஸ்கரன் தாராள சிந்தையுடனிருந்தார். பத்மினிக்குப் பன்னிரண்டு வயது நிறைந்ததும் தக்க வரனைத் தேடி விவாகம் முடிக்க வேண்டுமென்ற கவலை பாஸ்கரனுக்கு உண்டாயிற்று. பத்மினியின் தாய்க்கு மட்டும் தன் குழந்தையின் நற்குணத்திற்குத் தக்க புருஷனைக் கடவுள் அளிப்பார் என்ற நம்பிக்கையுண்டு.

வீட்டில் பாடங் கற்கும் சமயங்கள் போக மற்ற நேரத்தைப் பகற்பொழுதில் பத்மினி தனது தந்தையின் பஞ்சாலையிற் கழிப்பாள். வேலையாட்கள் யாரேனும் கிழிந்த வஸ்திரமணிந்துகொண்டிருந்தால் புதிது வாங்கித் தருவாள்; கடுமையான வேலைகளில் சிறுவர்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது என்று மன்றாடுவாள்; அப்பிள்ளைகளுக்கு மிட்டாய்ப் பட்சணங்கள் வாங்கி வயிறார அளிப்பாள்; வீட்டிலிருந்து புறப்படும்பொழுது இவளுக்குத் தந்தையால் கொடுக்கப்படும் பணத்தைப் பிச்சைக்காரர்களுக்கும் எளிய பிள்ளைகளுக்கும் கொடுத்து உதவுவாள்; விலையுயர்ந்த ஆடை வாங்கிக்கொள்ளவேண்டுமென்பதாகக் காரணங் கூறித் தந்தையிடமிருந்து பணம் பெற்று அதை ஏழைப் பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்கிக் கொடுப்பதில் உபயோகிப்பாள்.

பத்மினி தக்க வயதடைந்து பஞ்சாலைக்கு விசேஷமாய் வரத் தொடங்கியதிலிருந்து அவ்விடம் வேலை செய்யும் கூலியாட்களுக்கு நல்ல காலம் பிறந்ததென்பதில் ஆட்சேபமில்லை. பத்மினி தனக்குத் தெரியாத விஷயங்களைத் தனது உபாத்தினி மூலமாகத் தெரிந்துகொண்டதால் தன் வயதுக்கு மீறிய உபகாரச் செயல்களைச் செய்ய இவளுக்குச் சந்தர்ப்பமேற்பட்டது. புத்தி தீட்சணியமுள்ள பத்மினி, தன் தந்தை தொழிலாளிகளைக் கடுமையாய் நடத்திவருகிறார் என்பதை நன்குணர்ந்தாள். அவள் தந்தையின் மனங் கோணாமல் பேசி தான் நினைத்தபடி காரியங்களை முடிக்காமல் விடாள். காலாந்தரத்தில் கேசவன் என்ற கூலிக்காரனும் அவன் மனைவியும் ஒரே நாளில் உயிர் துறந்ததையும் அவர்கள் இறந்த விஷயமாகவோ அவர்களின் குழந்தைகளைப் பற்றியோ தன் தந்தை சிறிதும் கவனிக்கவில்லையென்பதையும் பத்மினி தெரிந்துகொண்டாள்.



தன் தந்தை ஊர் முழுதும் பாபி என்ற நாமம் படைத்திருந்த தறிந்து இவள் விசனித்தாள். ஏழைத் தொழிலாளிகளின் பரிதாப நிலைமையைக் காணப் பத்மினிக்குத் தான் சுகமாகக் காலங் கழிப்பதிலும் விலை யுயர்ந்த ஆடையாபரணங்கள் அணிவதிலும் மெத்த வெறுப்புண்டாயிற்று.

நம்பிக்கைத் துரோகத்தையே அஸ்திவாரமாகக் கொண்டு தன் தந்தை தேடிவைத்திருந்த ஐசுவரியத்தில் பத்மினிக்குப் பிடித்தமுண்டாகவில்லை. தகப்பன் கலியாணத்திற்காக வரன் தேடுவதைக்கண்டு பத்மினி தனக்கு விவாகம் செய்துகொள்ள இஷ்டமில்லை என்பதாக ஜாடையாய்த் தெரிவித்தாள். அவள் மனம் திருந்தும் வரையில் கலியாண முயற்சியை நிறுத்திவைப்பதே சிலாக்கியமென்று பாஸ்கரனும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஒரு நாள் பாஸ்கரன் பஞ்சாலையிலுள்ள இயந்திரம் ஒன்று வெடித்துவிட்டதால் சிறுவர் பெரியோர்கள் உள்பட ஏழெட்டுப் பேர்கள் மரணமடைந்தார்கள். பஞ்சாலையில் அபாயம் நேர்ந்துவிட்டதென்றறிந்த மறு நிமிஷத்திலேயே பத்மினி அவ்விடம் வந்துவிட்டாள். கணவனை யிழந்த மனைவியும் மகனை யிழந்த தாயும் சகோதரனைப் பறி கொடுத்த சகோதரியும் தந்தையை யிழந்த மைந்தனும் அலறியழுங் காட்சி பத்மினிக்குப் பயங்கரமாக விருந்தது. இவ்வளவு ஆபத்து நடந்தும் தந்தை வீட்டில் உட்கார்ந்து கணக்குகளைப் பரிசோதிப்பது கண்டு பத்மினி மனம் பதைத்தாள்.

அங்குள்ளவர்களுக் கெல்லாம் தைரியம் கூறிப் பத்மினி வீட்டிற்கு வேகமாய் வந்து தந்தை காலில் விழுந்து ஓவென்று அழுதாள். பாஸ்கரன் அலறியழும் பெண்ணைச் சமாதானப்படுத்தி உட்காரச்செய்து என்ன விசேஷமென்றார்.



பத்மினி :—அப்பா, நமது கூலியாட்களில் பலர் அநியாயமாய் மாண்டுவிட்டனரே !

பாஸ்கரன் :—ஆம், அதற்கென்ன செய்வது? வேலை செய்யுமிடத்தில் கஷ்ட நிஷ்டூரங்கள் இல்லாம லிருக்குமா?

பத்.:—இனி இறந்தவர்களின் மனைவி மக்களைக் காப்பாற்றுவார் யார்?

பாஸ்.:—அவர்கள் தங்கள் உழைப்பைக் கொண்டு ஜீவித்துக்கொள்ளவேண்டியது தான்.

பத். :—அவ்வுயிர்கள் நம்மாலன்றோ நஷ்டமடைந்தன !

பாஸ்.:—இதற்கு நாம் பாத்தியமாகக் கூடுமா? வயிற்றிற் கில்லாது வேலை செய்ய வருபவர்களுக்கு இவ்விதம் நேர்ந்தால் நாம் என்ன செய்யலாம்?

பத்.:—நமது லாபத்திற்கு ஆதாரமாயிருந்து நமது தொழிற்சாலையிலேயே உயிர் துறந்தவர்களின் குடும்பங்களுக்கு நாம் தான் உதவி புரியவேண்டும்.

பாஸ்.:—நல்லது, அவர்கள் வீட்டார் வேலை செய்வதானால் நான் கூலி கொடுக்கத் தடை சொல்லவில்லையே.

பத்.:—அல்ல, அல்ல. அவர்கள் கண்ணீர் விட்டுப் பசியால் வருந்தாமல் சிறிதளவேனும் பணம் உதவவேண்டுமென்பதே என் எண்ணம்.

பாஸ்.:—வெகு நன்றாயிருக்கிறது! ரொம்ப லட்சணம்! தொழிற்சாலை வைத்து நடத்துவோர்களெல்லாம் நான் இவ்விதம் செய்தால் என்னைச் சும்மா விடுவார்களா? தொழில் முறையில் பின்னடைந்திருந்த நம் தேசம் முன்னேற்றமடைய விருக்கும் இச்சமயத்தில் தொழிலாளிகளை நாம் அடக்கி யாளவேண்டியதை விடுத்து இடங் கொடுப்போமானால் தொழிற்சாலை வைத்துக் குட்டிச்சுவராய்ப்

போகவேண்டியது தான்! சற்று இடம் கொடுத்துவிட்டால் தொழிலாளர் நம் தலையில் உட்கார்ந்துவிடமாட்டார்களா?

பத்.:—அப்பா, நீங்கள் இவ்விதம் நினைப்பது தவறு என்பதை வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் தொழிலாளிகளை அன்பாய் நடத்திப் பொருளீட்டல் நியாயமன்றி, ஏழைகளின் நெற்றித் தண்ணீருடன் கண்ணீரும் பூமியில் விழச்செய்வது தர்மமாகுமா? தொழிலாளிகளை நாம் கவனியாத வரையில் அவர்களுக்கு நம்மிடம் விசுவாசமும் நம்பிக்கையும் பற்றுதலும் உண்டாகவே மாட்டா.

பாஸ்.:—நித்திய தரித்திரங்களுக்கு உழைப்பிற்கேற்ற கூலி கொடுப்பதே தர்மம். இதைக் காட்டிலும் என்ன செய்ய முடியும்?

பத்.:—நமது பஞ்சாலையின் அபாயத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்குச் சிறிது உதவி செய்தல் முக்கியம்.

பாஸ்.:—இவ்வாறு செய்வதென்றால் நெடு நாட்களாய்ச் சேர்த்த பணத்தை ஒரு நிமிஷத்திலேயே தொலைத்துவிட நேரிடும்.

பத்.:—பணத்தைத் தாங்கள் சேர்ப்பதற்குத் தொழிலாளிகளின் உழைப்புதானே காரணம்! அப்பணத்தை அவர்கள் விஷயமாகவே செலவழிப்போமானால் நமது தொழிற்சாலை முன்னிலும் அதிக லாபம் தருமன்றோ! தவிர, நீங்கள் பணம் சேர்த்திருப்பது யாருக்காக?

பாஸ்.:—எல்லாம் உனக்காகத் தான்.

பத்.:—நமது செல்வத்தின் தொகை எவ்வளவிருக்கும்?

பாஸ்.:—சுமார் எழுபத்தைந்து லட்சம் இருக்கிறது.

பத்.:—இவ்வளவு பணத்தையும் வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது?

பாஸ்.:—நல்ல கணவனை மணந்து சௌக்கியமாயிருப்பதற்கு அது உபயோகப்படும்.

பத்.:—எழுபத்தைந்து லட்சம் திரவியம் ஒரு பெண்ணுக் கில்லாவிடில் தாங்களுரைத்த நன்மைகள் கிடைக்கமாட்டாவோ? ஆனால் உலகிலுள்ள ஒவ்வொரு பெண்ணும் எழுபத்தைந்து லட்சமுள்ளவளாகவா இருக்கிறாள்?

பாஸ்.:—பிரபுவின் மகளாகிய நீ காலங் கழிப்பதற்கு இது மிகச் சிறிய தொகை என்பதே என் கவலை.

பத்.:—நான் எல்லாரையும்போல் சாமானியமாய் உண்டு உடுத்துக் காலங் கழிக்கக்கூடாதென்ற நிர்ப்பந்தமென்ன?

பாஸ.:—பாஸ்கரன் என்றால் அறியாதாரில்லை. அவ்விதமிருக்க, என் மகளாகிய நீ இவ்வித அந்தஸ்திற்குக் குறைந்து இருந்தால் என் பெயருக்கே அழிவுண்டாய் விடும்.

பத்.:—அப்பா, உலகில் மனிதனுக்குப் புகழ் உண்டாவது செய்கையினாலன்றிப் பணத்தினால் உண்டாகவே மாட்டாது. தேசோபகாரிகளுக்கும் பிற நலம் நாடுவோருக்கும் அழியாப் புகழ் ஏற்படுகிறது. தனவந்தர்களின் புகழ் அவர்களின் உயிர் உள்ள வரையில் சுய நலவாதிகளான சிலரால் போற்றப்படுமன்றி அப்புகழ் உண்மையானதல்ல. தாங்கள் புகழை விரும்புவதாயிருந்தாலும் ஐசுவரியத்தை எதிர்பார்ப்பதாயிருந்தாலும் இப்பொழுது நீங்கள் கொண்டுள்ள கொள்கையை முழுதும் மாற்றிவிடல் அவசியம்.

இவ்வார்த்தை கேட்டதும் பாஸ்கரனுக்கு ஒரு புதிய உணர்ச்சி உண்டாயிற்று. இதுவரையில் இல்லாத பச்சாத்தாபம் அவர் மனதில் தோன்ற வாரம்பித்தது. அவர் தம் அருமைக் குழந்தையை எடுத்து மடிமீது உட்காரவைத்துக் கொண்டு, "குழந்தாய், எனக்குத் தற்காலமிருக்கும் புகழ் சில சுயநலவாதிகளால் என் சந்தோஷத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பதாகும் என்பதை இன்று உன் வாய்மொழியால் தான் நான் அறிந்துகொண்டேன். உனக்குப் பதினைந்து வயதாகுமுன் இவ்வளவு புத்தி ஏற்பட்டிருப்பது எனது பாக்கியமே. ஜனங்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?" என்று பரிதாபத்துடன் வினவினார்.



பத்மினி:—"அப்பா! உங்களைப் பரம லோபி என்றும், கல் நெஞ்சரென்றும், தொழிலாளரைக் கடுமையாய் நடத்தும் பாபி என்றும் ஜனங்கள் சொல்லுகிறார்கள். தவிர, ஏழைக் கேசவனும் அவன் மனைவியும் ஒரே நாளில் இறக்க, அவர்கள் குழந்தைகளை நீங்கள் ஆதரிக்கவில்லையாம். இதைக்காட்டிலும் அபகீர்த்தி வேறு என்ன இருக்கிறது?"

என்று கூறி வாய்விட்டு அழத்தொடங்கினாள்.

கேசவன் என்ற பெயரைக்கேட்டதும் பாஸ்கரன் உடல் நடுநடுங்கியது. அவன் தமது மோட்டார்க்கடியில் அகப்பட்டு உயிரிழந்ததை நினைத்தார். மூடிய கண்களும் துவண்ட தலையுமாய்க் கேசவன் சரீரம் கண்முன் இருப்பதுபோல் அவருக்குத் தோன்றியது. அவன் மனைவி மரணத் தறுவாயிலிருக்குஞ் சமயத்தில் தாம் "ஏழைக்குப் பெண்டாட்டி ஒரு கேடா?" என்று கூறியது இவர் ஞாபகத்தில் வந்தது. கேசவன் குழந்தைகளிரண்டும் காப்பாற்றுவாரற்றுத் தம்முன் வாடிய வயிற்றுடன் அழுவது போலிருந்தது.

முழுத் தொகையையும் முந்திப்போட்டு, தொழிற்சாலையை நிலைப்படுத்திய ஸ்ரீதரனைத் தான் வஞ்சித்து ஓட்டியதை பாஸ்கரன் உணர்ந்தார். அவர் கைகால்கள் அசைவற்றுவிட்டன. இவ்வித நிலைமையிலிருக்கும் தந்தையைப் பத்மினி நெடுநேரம் ஆசுவாசபடுத்தியபின், பாஸ்கரன் சற்று மனந்தெளிந்து உட்கார்ந்தார். அவர் மகளை நோக்கி, "என் கண்மணியான குழந்தாய், நீ இனி எவ்விதம் சொல்லுகிறாயோ அவ்விதமே நான் நடப்பேன். இப்பொழுது ஆகவேண்டியவற்றை அச்சமின்றிக் கேளம்மா" என்று அன்போடு சொன்னார். பத்மினிக்கு ஆனந்தம் பொங்கிற்று. அவள் தந்தையை யழைத்துக்கொண்டு பஞ்சாலை சென்று அங்கு அபாயத்தால் உயிரிழந்தவர்களின் மனைவி மக்களை வரவழைத்து ஒவ்வொருவருக்கும் தைரியம் சொல்லி, வேலை செய்ய முடியாதவர்களுக்கு இதுவரை அவ்வீட்டு ஆளுக்குக் கொடுத்து வந்த சம்பளத்தை இனாமாகவும், வேலை செய்வோருக்கு இரட்டிப்பாகவும் கொடுப்பதாய் வாக்களித்தாள். அங்குள்ள ஏழைகளின் உள்ளம் உடனே குளிர்ந்ததுடன் "தாயே! பாக்கியலக்ஷ்மி! நீ நீடூழிகாலம் க்ஷேமமாய் வாழ்ந்து கொண்டிருக்கவேண்டும்" என்று அவர்கள் வாயார வாழ்த்தினார்கள்.

எட்டாவது அதிகாரம்.

தாசி காந்தாமணியைத் தன் வசப்படுத்திக் கொண்டு, ராஜசேகரனுக்கு மூர்ச்சை மயக்க வஸ்து அளித்து அவர் சொத்துக்களை எழுதிவாங்கிக் கொண்டு பிறகு அவரை விஷமிட்டுக் கொன்று விடுவதாகப் புருஷோத்தமன் நிச்சயித்தான். இவ்வேற்பாடு செய்து முடிப்பதற்கு ஒரு வாரம் முன்னர் காந்தாமணி ராஜசேகரன் மீது தனது முழு வலையையும் வீச வாரம்பித்தாள். தன்னுடனேயே அவர் இனி வசிக்கவேண்டுமென்று அவள் மன்றாடினாள். "உங்களை அரைக்கணம் காணாவிடில் என் உயிர் தரிக்கவே மாட்டாது" என்று ஜாலம் செய்தாள். காந்தாமணியின் ஒய்யாரநடையும் சிங்காரப்பேச்சும் மனோகரமான சங்கீதமும் கிழவரை முற்றிலும் மயக்கிவிட்டன. காந்தாமணி புருஷோத்தமனிடம் இதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததை அவள் சேவிசித் தாயாகிய மனோகரி

அறிந்து காந்தாமணியைத் தனியிலழைத்து "என்னடி, அவனுடன் பேசிக்கொண்டிருந்தாய்?'' என்றாள்.

காந்தாமணி:—கலப்பணமானாலும் கிழப்பிணம் கூடாதென்பது சரியாய்த் தானிருக்கிறது. உனக்கேன் வீண்விவகாரமும் வெட்டிவம்பும்?

மனோகரி:—அடி தேவடியாள் சிறுக்கி! அடி செருப்பாலே! அன்ன மிட்டவனைக் கொல்லவா பார்க்கிறாய்?

காந்தா.:—நீ என்னை எடுத்து வளர்த்தவளாயிற்றே என்றால் எவ்வளவு நாளைக்குத்தான் உன்னால் நான் இம்சைப்பட முடியும்? இனி என் வழிக்கு வாரதே, போ.

மனோ.:—அடி தடிச்சி! என்ன வீசுகிறாய்? உன்னை வளர்த்து ஆளாக்கிவைத்து எப்படியாவது நீ நன்றாயிருக்கவேண்டுமென்று பாடுபடும்போது என்னையா வெளியே போகச் சொல்லுகிறாய்?

காந்தா.:—அம்மா, உனக்கு ஒன்றும் தெரியாது. நீ கர்னாடகம்! எனக்குச் சௌகரியமான வழியை நான் தேடிக்கொள்வதில் உனக்கு ஆட்சேபமென்ன?

மனோ.:—அதைத்தான் இன்னதென்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

காந்தா.:—கிழட்டுப் பிணத்திற்கு மயக்க மருந்து கொடுத்து அதன் ஆஸ்தி முழுவதையும் எனக்கு வாங்கிக் கொடுப்பதாய்ப் புருஷோத்தமன் சொல்லுகிறான்.

மனோ.:—ஆமாம். கிழவனுக்குப் பிறகு விஷமிட்டு விடவேண்டுமென்று பேசிக்கொண்டீர்களே. அஃது எதற்கு?

காந்தா.:—புத்தி மாறிப்போய்ப் பத்திரத்தை மாற்றிவிட்டால் என்ன செய்கிறது?

மனோ.:—கிழவன் உனக்கு இப்பொழுதே ஏராளமாய்க் கொடுத்திருக்கிறான். இன்னும் நீ உன் வாயைத் திறந்து கேட்பாயானால் லட்சக் கணக்காகவும் கொடுப்பான். இதை விட்டு அவன் குழந்தைகளை எல்லாம் வஞ்சித்து முழு சொத்துக்களையும் எழுதி வாங்கிக்கொண்டு ஆளையும் கொன்று விடுவதென்றால் என் உடல் நடுங்குகிறதே. நாம் முந்தி மேல வீதியிலிருந்தபோது நமது பக்கத்து வீட்டு தாசி சித்திராங்கி இருந்தது உனக்குத் தெரியுமா? எவனோ முட்டாள் ஒருவன் அவள் வலையிலகப்பட்டுக்கொண்டு விழித்தானே. சித்திராங்கி அவனுக்கு விஷமிட்டுக் கொன்று அவன் கையடக்கமாய் வைத்திருந்த லட்சக்கணக்கான நோட்டுகளைத்திருடிக்கொண்டாள். மூன்றே முக்கால் நாழிகை அவள் மேற்கொண்ட ராங்கியையும் உடுத்த சேலைகளையும் பூண்ட வைரக்கல் நகைகளையும் நான் பார்த்துக்கொண்டுதானிருந்தேன். முடிவில் அவள் எல்லாவற்றையும் குடித்து அழித்துக் குடிக்கக் கஞ்சியற்றுக் கண்ணவிந்து குப்பைத்தொட்டிக் கருகில் விழுந்து கிடந்ததையும் இந்தக் கண்ணாலேயே கண்டேன். இதையெல்லாம் ஆலோசித்தே உனக்குப் புத்திமதி கூறலாம் என்று வந்தேன். தேசாபிமானமற்றவன், அநியாய வழியில் பொருள் தேடுபவன், பொது நலத்திற்கு உழைக்காதவன், பரோபகாரம் செய்யாதவன், ஆட்களை வருத்தி வேலைவாங்கிக் குறைந்த கூலியிட்டுப் பணம் சேர்ப்பவன் இவர்களுடைய சொத்துக்களெல்லாம் நமக்காக ஏற்பட்டிருப்பது நிச்சயமே. ஆனால் யாராயிருந்தாலும் பிள்ளை குட்டி இருப்பவனை மட்டும் நாம் முழுதும் கொள்ளையடிக்கக் கூடாது. இதுவும் போகட்டுமென்றாலும் நீ ராஜசேகரனுடைய உயிரை வாங்கிவிட நினைப்பதும் பரமபாதகச் செயலாகும். புருஷோத்தமன் ஏதோ சூது செய்வதாய் நான் எண்ணுகிறேன். இல்லாவிடில் கிழவனைக் கொல்லவேண்டுமென்று அவன் உனக்குச் சொல்லவேமாட்டான்.



இதைக் கேட்டதும் காந்தாமணிக்கு முன் இருந்த தீர்மானம் மாறிவிட்டது. "நல்லது, இருக்கட்டும். சொத்துக்களை எழுதி வாங்கிக்கொண்டு பிறகு விஷம் கொடுக்காமலிருந்துவிடுகிறேன். இது நல்ல யோசனை தான்'' என்று காந்தாமணி தனது செவிலித்தாய்க்கு உறுதிமொழி யளித்து அனுப்பினாள்.

இவர்கள் முன் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி குறித்த தினத்தில் புருஷோத்தமன் ராஜசேகரனை மாலை ஐந்து மணிக்கே காந்தாமணியின் வீட்டிற்கழைத்து வந்துவிட்டான். இரவு எட்டு மணி வரையில் காந்தாமணி சதிர்க்கச்சேரி நடத்தினாள். ராஜசேகரனுக்கு அன்று தன் கையாலேயே போஜனமளித்துத் தானும் கூடவிருந்து உண்டு காந்தாமணி பத்தியங்களைப் பாடியவண்ணம் தன்மீது சாய்ந்து கொண்டிருக்கும் ராஜசேகரனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தாள். வெற்றிலை மடிப்பிலிருந்த பிரயோகத்தினால் ராஜசேகரன் பிதற்றவாரம்பித்தார்.

இதுவே சமயமென்று புருஷோத்தமன் தன் மடியில் வைத்திருந்த காகிதச் சுருள் ஒன்றை எடுத்து அதில் ராஜசேகரனைக் கையெழுத்திடச் செய்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் ராஜசேகரன் பிரக்ஞை யற்றுத் தரையில் விழுந்துவிட்டார். புருஷோத்தமன் பரபரப்பாய் எழுந்து, "நான் தாராமணி படுத்திருக்கும் அறையில் நெருப்பிட்டு விடும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். நீ சீக்கிரம் விஷப் புட்டியை யெடுத்துக் கிழவன் மூக்கில் மூகரச் செய்துவிடு. இதோ நான் சிறிது நேரத்திற்கெல்லாம் வந்து விடுகிறேன்'' என்று காந்தாமணியிடம் கூறினான்.

காந்தா.:—பத்திரத்தில் கிழம் சரிவரக் கையெழுத்திட்டிருக்கிறதா? அதை யெடு. நான் பார்க்கிறேன்.

புரு.:—ஆகவேண்டிய காரியங்களை முடிப்பதற்கு முன் இதற்கென்ன அவசரம்? கிழவனுக்கு மயக்கம் தெளியும் நேரமாய்விட்டது. விடு என்னை.

காந்தாமணி பத்திரத்தைப் பார்க்கத்தான் வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். புருஷோத்தமன் இவளுடைய மிரட்டலிலும் நடிப்பிலும் மதிமயங்கித் தன்னிடமுள்ள பத்திரத்தைக் கொடுத்தான். அதில் சகல சொத்துக்களும் தம் சுயார்ச்சிதமென்றும், தம் பிள்ளை தேவதத்தனுக்குச் சிறிது மளிக்கத் தாம் இஷ்டப்படவில்லை என்றும், மருமகன் புருஷோத்தமனே தமது முழுசொத்துக்களையும் அடையவேண்டியதென்றும் கண்டிருந்தது. இதைப் படித்த காந்தாமணி தனக்கு வந்த கோபத்தை உள்ளடக்கிக்கொண்டு புன்சிரிப்புடன், "என் பேருக்கல்லவா எழுதி வாங்கப் போவதாய் என்னிடம் கூறினாய்?'' என்று புருஷோத்தமனைக் கேட்டாள்.

இவளினும் சாகசம் கற்றவனாகிய புருஷோத்தமன் தானும் புன்முறுவல் செய்து, "அடி, என் ஆசைக்கிளியே, அன்பிற்கிருப்பிடமே, ஆருயிர்க் காதலி, வஞ்சிக்கொடியே, வாடாத பூங்கொடியே, நான் இவ்விதம் செய்திருப்பது உன் நன்மைக்காகவே. வக்கீலை நான் யோசனை கேட்டதில் உன் பேரால் எழுதினால் தேவதத்தன் வழக்குத் தொடர இடமிருப்பதாய்த் தெரியவந்ததால் என் பேருக்கு எழுதி வாங்கியிருக்கிறேன். என் உயிர் உடல் இரண்டும் உன்னுடையவைகள் தானே! உன் பாதத்தின்கீழே தாசனாய் விழுந்து கிடப்பவனிடமுள்ள சொத்துக்கள் உனக்கன்றி வேறுண்டா? எங்கே என்னை நிமிர்ந்து பார். நான்

போய் வரட்டுமா? நீ சீக்கிரம் மேல் நடக்க வேண்டியதை முடித்து விடு. அடி, காந்தாமணி! என்னிரு கண்மணியே! அஞ்சாதே" என்று கூறி வேகமாய் வெளியில் சென்றுவிட்டான். காந்தாமணி ஒன்றும் தோன்றாது திகைத்துப்போய் நின்றாள். பக்கத்தறையிலிருந்த மனோகரி அவ்விடம் வந்து, "என்னடி, நான் சொன்னது நிஜமாயிற்றா? கருவேலன் முள்ளெடுத்து அம்மரத்தையே துளைக்க முடியுமா? எனக்கு நீ புத்தி கற்பிக்கவந்தாயே!" என்றாள்.

காந்தாமணி மனந் தெளிந்து ராஜசேகரனருகில் வந்து அவருக்கு மயக்கம் தெளியும்படி உபசாரம் செய்தாள். சிறிது நேரத்தில் ராஜசேகரன் கண் விழித்துக் கொண்டதும் காந்தாமணி அவரை நோக்கி, "ஐயா, புருஷோத்தமன் உமதிடம் மோசக் கையெழுத்துப் பெற்றுக்கொண்டு தாராமணியையும் தீக்கிரையாக்கிவிடச் சென்றிருக்கிறான். உடனே புறப்பட்டுச் சென்றாலொழியத் தாராமணியை உயிருடன் காணமுடியாது" என்று சொன்னாள்.

ராஜசேகரன் இது கேட்டுத் திகைத்து உடனே வண்டியேறி வழியில் போலீசாரையும் நெருப்பணைக்கும் இயந்திரத்தையும் அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

ஒன்பதாவது அதிகாரம்.

ராஜசேகரன் வீட்டில் நெருப்புப் பிடித்துவிட்டதென்ற சமாசாரம் ஊரெங்கும் பாவிற்று. தீயின் வெளிச்சம் ஊர்முழுதும் பிரகாசித்தது. ஜனங்கள் ஓடி வந்து ஜலத்தைக் குடங்குடமாக எடுத்து ஊற்றி அணைக்கலானார்கள். "குழந்தை தாராமணியை உயிருடன் காண்பேனா" என்று ராஜசேகரன் அலறினார். வீட்டிலுள்ள விலையுயர்ந்த பொருள்கள் தீயில் படார் படார் என்று வெடித்தன. நல்லவேளையாய் ராஜசேகரனுடைய தஸ்தாவேஜுகள் மட்டும் அவ்வீட்டில் இருக்கவில்லை. ரமாகாந்தன் அவைகளைத் தம் வீட்டிற்கு எடுத்துப்போய் ஓர் இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்திருந்தார். ஒரு வாரமாக ஊரிலில்லாதிருந்த ரமாகாந்தன் அன்று மாலை ஏழு மணிக்குத் தான் அமராவதி வந்தார் என்று அங்குள்ள வேலையாட்கள் தெரிவித்தார்கள். முன்கட்டிடத்திலுள்ள நெருப்பவிப்பதற்குள் சூரியோதயமாயிற்று. இன்னும் தாராமணி என்னவானாள் என்பது தெரியவில்லை. இச்சமாசாரம் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கும் பாவிற்று. அதிகாலையில் எழுந்து கடவுள் தியானம் செய்துகொண்டிருந்த பாஸ்கரன் இச்செய்தி கேட்டதும் பத்மினியையுமழைத்துக் கொண்டு ராஜசேகரன் வீடு வந்தார். கதறியழுது கண்ணீர் வடிக்கும் ராஜசேகரனை பாஸ்கரன் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்.

வீட்டின் பின்புறமாக ஆட்கள் வந்து பரிசோதித்ததில் ரமாகாந்தன் புகை தாளாமல் ஓர் மூலையில் மூர்ச்சித்துக் கிடப்பதைக் கண்டு அவனை யெடுத்துத் தக்க சிகிச்சை செய்யக்கூடிய வைத்தியனிட மனுப்பினார்கள். தாராமணி கிடைக்கவில்லையாதலின் எரிந்து குவிந்து கிடக்கும் முன் கட்டில் அகப்பட்டு இறந்துவிட்டாளென்று அங்குள்ளவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இதற்குள் தந்தையின் வீடு தீப்பற்றியதென்றும் தங்கை அதில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறாள் என்றும் கேள்விப்பட்ட தேவதத்தன் பத்து மைல் தூரத்தையும் லட்சியம் செய்யாமல் அமராவதிக்கு ஒரே ஓட்டமாய் ஓடிவந்தார். ராஜசேகரன் வாடி இளைத்துத் துரும்பு போலிருந்த தம் மகனைக் கண்டதும், "அப்பா மகனே! நான் உன் சொல் கேட்டுப் பரோபகாரம் புரிய மாட்டேன் என்று பிடிவாதம் செய்ததின் பலனை அடைந்துவிட்டேனடா!" என்று அலறி மூர்ச்சித்தார். தேவதத்தன் தந்தையைத் தேற்றிக்கொண்டு



இருக்கும் சமயம் யாரோ 'இதோ வருகிறாள் தாராமணி' என்று கூவினார்கள். சுமார் பதினேழு வயதுள்ள அழகிய வாலிபனொருவன் வழி விலக்கத் தாராமணி தந்தையிடம் வந்து, அங்கு நின்றிருக்கும் தமையனைக் கண்டு, அவர் காலில் விழுந்து அழுதாள். தாராமணி உயிருடன் எழுந்து வந்தது பற்றி ராஜசேகரன், பாஸ்கரன், பத்மினி, தேவதத்தன் முதலிய அனைவரும் ஆனந்தமடைந்தார்கள்.

ராஜசேகரன் தம் மகளை நோக்கி, "குழந்தாய், நீ எவ்விதம் பிழைத்து வந்தாய்?" என்று வினவினார்.

தான் மட்டும் வேலைக்காரியுடன் வீட்டிலிருந்ததாயும் முதல் நாள் மாலை ஏழு மணிக்குச் சிறுவன் ஒருவனை யழைத்துக்கொண்டு ரமாகாந்தன் வீட்டிற்கு வந்ததாயும், அச்சிறுவன் பேசும் வன்மையும் உரைக்கும் விஷயங்களும் அற்புதமாயிருந்தது பற்றி அவனைத் தன்னுடன் இருக்கச் சொன்னதாயும், இரவு ஒன்பது மணிவரையில் அவனுடன் கடவுள் வழிபாடு பரோபகாரமேயாகும் என்ற விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்துவிட்டுத் தான் தனது அறையில் தூங்கச் சென்றதாயும், வீட்டில் நெருப்புப் பிடித்துக்கொண்டதும் அச்சிறுவன் ஜன்னலின் வழியே குதித்து உள்ளே வந்து தன்னை யெழுப்பி வெளியிலழைத்து வந்து காப்பாற்றியதாயும், தனக்கு ஏற்பட்ட கலவரம் தெளியும் வரை ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து பொழுது விடிந்ததும் வந்து சேர்ந்ததாயும், தன்னைக் காப்பாற்றிய உபகாரி இவனே என்றும் தன் கூட இருந்தவனைத் தாராமணி சுட்டிக் காட்டினாள்.

ராஜசேகரன் தம் மகளைக் காப்பாற்றிய சிறுவனை யருகிலழைத்துக் கட்டி யணைத்து முத்திட்டுக்கொண்டு, "புத்திசாலிக் குழந்தாய்! உன்னாலல்லவா என் குழந்தை உயிர் தப்பினாள்! உனக்கு என்ன வேண்டுமோ கேள்" என்றார்.

பாஸ்கரன் இச்சிறுவனது முகவொளியையும் கம்பீர சுபாவத்தையும் கண்டு 'இவனைப் பிள்ளையா யடைந்த புண்ணியசாலிகள் யாரோ, எந்தப் பிரபுவோ?' என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். தேவதத்தனுக்கு இவனைக் கண்டதிலிருந்து மனதில் ஏதோ கலவரமுண்டாயிற்று. தேவதத்தன் மிகவும் இளைத்து முன்னிலும் கிருசமாயிருந்ததால் பலராமனுக்கும் அடையாளம் தெரியவில்லை. அங்குள்ளவர்களெல்லோரும் தமக்குள்ள ஆச்சரியத்தாலும் சந்தோஷத்தாலும் நெடு நேரம் பேசாமல் மௌனமாயிருந்தார்கள். அச்சமயம் ரமாகாந்தன் மூர்ச்சை தெளிந்து தாராமணியைக் காணவேண்டுமென்று அவ்விடம் வந்தான். ரமாகாந்தனை பாஸ்கரன் அருகிலழைத்து, "இப்பிள்ளை யார்?" என்று ரகசியமாய் வினவினார். "என் குழந்தையைப் பிழைப்பித்த பாக்கியவான் யார்?" என்று ராஜசேகரன் ரமாகாந்தனைக் கேட்டார். தேவதத்தன் ஒன்றும் பேச முடியாமல் சித்த சுவாதீனமற்றவனைப் போல் உருள மிரள விழித்துக்கொண்டிருந்தார்.

ரமாகாந்தன் எல்லோரையும் அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்றான். அவ்விடம் அனைவரும் காலை ஆகாரம் புசித்ததும் ரமாகாந்தன் அச்சிறுவனைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

தான் ராஜசேகரனிடம் வேலைக்கமர்ந்ததும், தாராமணி தமையனைக் குறித்து விசனித்ததும், பலராமனையும் மாதவியையும் திருடி வந்ததும், அவர்களைத் தன் தாயுடன் இரத்தினபுரியில் வைத்துக் காப்பாற்றியதும், வழக்கம் போலத் தான் இரத்தினபுரி சென்று அதற்கு முதல்நாள் திரும்பிவரும்பொழுது பலராமன் தன் கூட வருவதாக நிர்ப்பந்தம் செய்ததும், இரவில் வீடு தீப்பற்றியதறிந்து தான் ஓடி வந்ததும், புகையிலடிபட்டு விழுந்துவிட்டதும் விவரமாகக்

கூறி, அச்சிறுவன் ஏழைக் கேசவன் மகன் என்றும், தேவதத்தனால் காப்பாற்றப்பட்டவனென்றும் ரமாகாந்தன் விவரமாய் எடுத்துரைத்தான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த பாஸ்கரனும் ராஜசேகரனும் தம்மை யறியாமல் கண்ணீர் பெருக்கிய வண்ணமாயிருந்தார்கள். தேவதத்தன் மூர்ச்சித்துக் கிடந்தார். பலராமன் ஓடிச் சென்று 'அப்பா' என்று தேவதத்தனை எடுத்து மடியிற் படுக்கவிட்டுக் கொண்டு தேற்றினான். பலராமன் இவனென்றறிந்ததும் தாராமணி இரத்தினபுரிக்கு மோட்டாரை யனுப்பிக் குழந்தை மாதவியை உடனே அழைத்து வரச்செய்து தான் நேரில் சென்று தமையன் மனைவியாகிய வித்யாவதியை யழைத்து வந்தாள். தேவதத்தனும் வித்யாவதியும் தம் குழந்தைகளைக் கண்டு ஆனந்தக் கண்ணீர்விட்டார்கள். ராஜசேகரன் மருமகளைக் கிட்ட அழைத்து " அம்மணி, நான் யாரைப் பச்சாத்தாபமின்றிக் காலாலுதைத்துத் தள்ளினேனோ அவனாலேயே என் மகள் காப்பாற்றப்பட்டிருக்கிறாள். ஐசுவரிய மதத்தில் ஆழ்ந்துகிடந்த எனக்குப் பரோபகார சிந்தை எள்ளளவு மற்றிருந்ததால் பாபம் புண்ணியம் பச்சாத்தாப மென்ற குணங்கள் என்னிடம் எள்ளளவு மில்லாமலிருந்தன. இப்பொழுதே எனக்கு அகங்காரம் தொலைந்தது. அமைதியுண்டாயிற்று. நான் செய்த பிழைகளை மன்னித்து நீங்களிருவரும் என்னுடன் கூட வசிக்கவேண்டும்" என்று கூறினார். தேவதத்தன் தந்தையின் காலைப் பிடித்துக்கொண்டு தமது குழந்தைகளை மனப்பூர்வமாய் அங்கீகரித்துக் கொள்ளவேண்டுமென்று மன்றாடியதும் பலராமனும் மாதவியும் இனித் தமது குழந்தைகள் தான் என்று ராஜசேகரன் உறுதிமொழியளித்தார்.

பலராமனுக்கு எதைப் பரிசளிக்கலாமென்று ராஜசேகரன் வினவினார்.

தம் பெண்ணின் நோக்கத்தை நன்கறிந்திருந்த பாஸ்கரன் தம் பெண் பத்மினியை யளிப்பதாகக் கூறியதும் அனைவரும் அதிசயித்தார்கள்.

பாஸ்கரன் ரமாகாந்தனை ராஜசேகரனுக்கருகிலழைத்துச் சென்று தமது கூட்டாளியாயிருந்து கால வித்தியாசத்தினால் நஷ்டமடைந்த ஸ்ரீதரனின் பிள்ளையாகிய ரமாகாந்தனுக்குத் தாம் பாதி சொத்துக்களை யளிப்பதாயும், அவனைக் கிருகஸ்தனாகச் செய்வது ராஜசேகரன் கடமை என்றும் கேட்டுக்கொண்டார். ராஜசேகரன் தாராமணியின் இஷ்டத்தை யறிந்துவரும்படி வித்யாவதியிடம் தெரிவித்தார். ரமாகாந்தனைப் புருஷனாக ஏற்கனவே தாராமணி வரித்திருந்ததால் தாராமணியை ரமாகாந்தனுக்களிப்பதாய் நிச்சயமாயிற்று.

மாதவி தன்னை வளர்த்த அன்னையாகிய வித்யாவதியின் மடியிலுட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். ஆபத்தெல்லாம் நீங்குவதற்கு உதவி புரிந்த தாசி காந்தாமணிக்கும் தேவதத்தன் நன்றியறிதலைக் காட்டும் நிமித்தம் அவளைத் தம் வீட்டிலேயே வசிக்கச் செய்தார். தாசி காந்தாமணி இப்பொழுது ஒரு தபஸ்வினியாக மாறிவிட்டாள். ரமாகாந்தனுக்கும் தாராமணிக்கும், பத்மினிக்கும் பலராமனுக்கும் ஒரே முகூர்த்தத்தில் விவாகம் சிறப்பாய் நடந்தேறியது. இந்நால்வரும் தொழிலாளிகளின் விஷயமாக மெத்த சிரத்தை எடுத்து அவர்களுக்குக் கல்வி அறிவு, அடக்கம், அமைதியான வாழ்வு, சச்சரவற்ற குடும்ப வாழ்க்கை, சந்தோஷமான நிலைமை இவைகள் ஏற்படுவதற்கான வழிகளைச் செய்துவந்தார்கள். இதனால் பாஸ்கரன் பஞ்சாலையில் அளவற்றலாபமும் கிடைக்கவாரம்பித்தது. வேலையாட்கள் நன்றியறிவுடன் காலத்தைக் கணக்கிடாமல் அவ்விடம் தங்கி மெத்த வணக்கத்துடனும் பிரியத்துடனும்



சுறுசுறுப்புடனும் உழைப்புடனும் வேலை செய்யலானார்கள். தொழில் அபிவிருத்தியில் தம் முதலைப் போட்டுத் தொழிற்சாலை நடத்த முன்வரும் தனவந்தர்களுக்கெல்லாம் பாஸ்கரனுடைய தொழிற்சாலை நல்வழியையும் புத்தி மதியையும் அபிவிருத்தியையும் நன்குவிளக்கிக் காட்டுவதாயிருந்தது.

தேவதத்தன் தாம் நடத்திவந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தை உயர்தர சுதேச கலாசாலையாக்கி அதில் மாணவர்களுக்குத் தற்காலம் வேண்டிய விஷயங்களையும் மதபோதனைகளையும் நன்கு போதிக்கச்செய்தார்.

ரமாகாந்தன் பொது ஜனங்களுக்கும் ஏழைத் தொழிலாளிகளுக்கும் உபயோகமாகும்படி பலவிடங்களில் புத்தகசாலைகளை ஸ்தாபித்தார். வித்யாவதியின் யோசனையின்படி பெண்மக்களுக்கென்று தனியான புத்தகாலயங்கள் ஏற்பட்டதுடன் கிராமங்கள்தோறும் புத்தகங்களை யனுப்பிப் பெண்மக்கள் ஒழிந்த நேரங்களில் வீட்டிலேயே படிக்கும்படி உற்சாகப்படுத்தினார். வீரனும் பவானியும் தேவத்தனிடமே இருந்தார்கள். பவானியின் மகன் விநோதன் இப்பொழுது பாஸ்கரன் தொழிற்சாலைக்கு மானேஜராயிருக்கிறான்.

வாசகர்களே, முடிவில் உங்களிடம் விக்ஞாபனம் செய்துகொள்ளவேண்டிய விஷயமொன்றிருக்கிறது. அதாவது, ராஜசேகரரின் வீட்டிலிருந்து பத்திரத்துடன் வெளிப்பட்ட புருஷோத்தமன் இருக்குமிடம் இன்று வரையில் தெரியவில்லை.

இதைப் படிப்பவர்களில் எவரேனும் புருஷோத்தமனை ஒருகால் காணும் பட்சத்தில் ராஜசேகரன் அவனை மன்னித்துவிட்டதாயும், பெருந்தகைமையும் பச்சாத்தாபமும் உருவாகக் கொண்டிருக்கும் தேவதத்தன் புருஷோத்தமனுக்கு ஆதரவுகாட்டச் சித்தமாயிருப்பதாயும் தயவுசெய்து அவனிடம் தெரிவிப்பீர்களாக.

# இல்லறம்.

## (ஆணும் பெண்ணும்.)

இல்லறம் இன்புற நடைபெற வேண்டுமானால் ஆணும் பெண்ணும் ஒத்துப்போகவேண்டுமென்று சொல்ல வேண்டுவதில்லை. இதற்கு மனைவியும் கணவனும் ஒருவருடைய மன இயல்பை மற்றவர் உணர்ந்தவராயிருத்தல் இன்றியமையாததாகும். எனவே, ஆண் பெண் மனோபாவங்களைப்பற்றி டாக்டர் பெர்னார்டு ஹாலண்டர் என்பார் கூறுவனவற்றை இங்கே மொழிபெயர்த்துத் தருகிறோம்:—

கோபம், அகங்காரம் முதலிய வலிய உணர்ச்சிகளைப் பொறுத்தவரை ஆணின் மூளை மிகவும் வலிமை பொருந்தியது. அன்பு, ஆசை முதலிய மிருது உணர்ச்சிகளைப் பொறுத்தவரை பெண்ணின் மூளையே மிகவலிமை பொருந்தியது.

* * * *

சண்டையிடும் இயந்திரமாக ஆண் மகன் உடலமைப்புப் பெற்றான். ஜீவனோபாயந் தேடுவதற்கு வேண்டிய பலமும், தைரியமும் அவனுக்குண்டு. பெண்மணியோ ஆண்மகனின் சிந்தையைக் கவருவதற்கான வனப்பும் இனிமையும் பெற்றாள். இதனால் மெல்லியலாள் என்னும் பெயரையும் அடைந்தாள்.

* * * *

சாதாரணமாக, ஆண்மகன் போர்க்குணமுடையவன் ; பெண் பணிந்து போகும் குண

முடையவள். ஆணின் தைரியம் எதிர்த்துத் தாக்கத் தூண்டுவது; பெண்ணின் தைரியம் தற்காப்புக்குதவுவது. ஆண் உறுதி படைத்தவன்; பெண் பிடிவாதமுடையவள். ஆணுக்குச் சாமர்த்தியமுண்டு; பெண்ணுக்குச் சகிப்புத்தன்மையுண்டு. ஆணுக்குச் செயல்திறன்; பெண்ணுக்குப் பொறுமை. ஆணின் ஆட்சி ஆணையினால் நிலவுவது; பெண்ணரசு அன்பினால் நடப்பது.

* * * *

ஆண் வாயால்பேசிப் பிச்சை கேட்கிறான்; பெண் கடைக்கண் பார்வையால் இரக்கிறாள். ஆண்மகனின் சட்டங்களைக்காட்டிலும் பெண்மணியின் பார்வைக் கதிக சக்தியுண்டு. ஆணின் வாதங்கள் பெண்ணின் கண்ணீரின் முன்பு வலியிழந்ததாகும். ஆணுக்குச் சுயநலமே பிரதானம். பெண்ணின் தாய்மை உணர்ச்சியானது அவளைச் சுயநலத் தியாகியாய்ச் செய்துவிடுகிறது. ஆணின் உள்ளம் தனது சுகசௌகரியங்களைப்பற்றியே பெரிதும் சிந்தித்துக்கொண்டிருக்கும். பெண் தாயாகும்போது அவளுடைய எண்ணங்களெல்லாம் குழந்தையைப் பற்றியதாகவே இருக்கும்.

* * * *

பெண் பிறருடைய உணர்ச்சிகளை எளிதில் அறிந்துகொள்வாள். இரக்கம் என்பது பெண்ணுக்கே சிறப்பான குணம். பெண் நுட்ப உணர்ச்சி உள்ளவளாதலின் அவளுக்கு இன்பமு மதிகம்; துன்பமு மதிகம். பிறருடைய துக்கங்களை அவள் வெகு எளிதில் கண்டுகொள்வாள். வெளிப்படையான அறிகுறிகள் எதுவுமில்லாத போதும் அவள் பிறருடைய மனோ நிலையை அறிந்து கொள்வாள். ஒரு மனிதன் காரியம் ஜயமடைந்திருக்கிறதா, அபஜயமடைந்திருக்கிறதா, அவன் கவலைப்படுகிறானா, மகிழ்ச்சி யடைந்திருக்கிறானா என்றும், முக்கியமாக அவனுக்கு தன்னிடமுள்ள அன்பு குறைந்திருக்கிறதா என்றும் பெண் எளிதில் அறியக் கூடும். நோ யாளியின் அறையில் பெண்ணின் பணி விடைக் குள்ள சிறப்பு இதனால் ஏற்பட்டதுதான்.

* * * *

பெண் உள்ளத்தில் எண்ணங்களைவிட உணர்ச்சிகளே முதன்மையா யிருக்கின்றன. எனவே, பெண்கள் பழைமையில் அதிக பற் றுக்கொண்டவர்கள். பழக்க வழக்கங்களை அவர்கள் எளிதில் மாற்றிக் கொள்வதில்லை.

* * * *

சாதாரணமாக ஸ்திரீகள் எத்தகைய மா தலையும் வெறுக்கிறார்கள். புதிய சட்டங்கள் விதிகள் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. வகுப்பு அந்தஸ்து வேற்றுமைகளை அவர்கள் அதிகப் பாராட்டுகிறார்கள். வாழ்க்கையில் எல்லா நிலை மைகளிலுமுள்ள ஆண் மக்கள் ஓரிடத்தில் கூடு வார்கள். ஆனால் பெண்மக்கள் அவ்வாறு இலேசில் செய்யார்கள். ஆணின் குறைகள் பலத்தினின்றும் உண்டாவன; பெண்ணின் குறைகள் பலவீனத்தினின்று எழுவன. முரட்டு சுபாவமுடைய ஆண்மகன் சில சமயங் களில் பெண்ணின் நுட்ப உணர்ச்சியை அறிந்து கொள்கிறானில்லை. பெண்கள் சில சமயம் அற்ப புத்தியுடன் நடந்துகொள்வ தாகத் தோன்றும். ஆனால் அவர்கள் தங் ளுக்கு உடல் வலிமையில்லை என்னும் உணர்ச் யினால் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ள அத்தகைய முறைகளைக் கையாள வேண்டி யிருக்கிறதேயன்றி வேறில்லை. இதை ஆண்மகன் உணர்ந்து நடந்தால் தொல்லை யில்லை.

* * * *

ஆணின் கோபம் நீடித்தது. பெண்ணின் கோபம் விரைவில் எழுந்து விரைவில் மறை



வது. பெண் ஆணைப்போல் உடல் வலிமை படைத்தவளல்லள். அவள் தன் கோபத்தை வெளியிட மிருக சக்தியைக் கைக்கொள்ள முடியாது. பேச்சினால் தான் வெளியிட முடியும். பெண்ணின் வாயாடும் இயல்புக்குக் காரணம் இதுதான். "பெண்ணின் நா மூன்று அங்குல நீளமே யுள்ளதாயினும் கோபம் வரும் போது ஆறடி உயரமுள்ள மனிதனை அந்நாவினால் கொன்று விடுவாள்" என்று சொல்லப் பட்டிருக்கிறது.

* * * *

பொதுவாகக் கோபம் முதலிய மிருககுணங்கள் ஆணிடமே அதிகம். ஆதலின் ஆணே உலகில் குற்றங்கள் அதிகமாகச் செய்கிறான்.

* * * *

ஆண் மக்கள் காரியம் செய்வதில் ஒழுங்கு முறைப்படி செய்வார்கள். பெண்கள் சாதுரியமாகவும் அழகாகவும் செய்வார்கள். அலங்காரத்தில் பெண்களுக்குப் பிரியம் அதிகம்.

* * * *

ஆணின் உணர்ச்சிகளைவிடப் பெண்ணின் உணர்ச்சிகள் தீவிரமானவை. ஆண் மகன் மனிதர்களையோ பொருள்களையோ விரும்புவதும் வெறுப்பது முண்டு. ஆனால் பெண் மக்கள் ஒன்று அன்பு செலுத்துவார்கள்; அல்லது துவேஷிப்பார்கள். அவர்கள் அன்பு செலுத்தும் பொருளில் குறை எதையுங் காண மாட்டார்கள். அவர்கள் துவேஷிக்கும் பொருளில் நன்மை எதுவும் அவர்கள் கண்களுக்குப் புலனாகாது. தாங்கள் அன்பு செலுத்தும் பொருளிலுள்ள குறைகளுக்கு ஆயிரம் சமாதானம் அவர்களே தயாரித்துக் கொண்டு திருப்தி யடைவார்கள். இதே காரணத்தினால்தான், பெண்கள் சாதாரணமாய்ப் பொய் சொல்வதே கிடையாது. ஏனெனில், அவர்கள் சொல்லப்போவது உண்மையே யென்று அவர்களே முதலில் உறுதி கொண்டு விடுகிறார்கள்!

* * * *

பெண்களிடம் இரகசியம் தங்காது என்பது முழு உண்மை யன்று. பெண்கள் தங்கள் இரகசியங்களைப் பத்திரமாய்ப் பாதுகாப்பார்கள். பிறருடைய இரகசியங்களைத்தான் அவர்களால் ஒரு கணமும் வைத்திருக்கமுடியாது!

* * * *

ஆண் பெயரளவில் அரசன்; பெண் உண்மையில் ஆட்சி நடத்தும் மந்திரி. ஆண் தலைமை வகித்து முதலில் செல்லக்கூடும்; ஆனால் யோசனை சொல்லி வழி காட்டுபவள் பெண்ணே யாவள். ஆண் திட்டம் போடுகிறான்; அதை நிறைவேற்றத் தைரியங் கொடுப்பவள் பெண். ஆண் பெண்ணைக் கொடுமைப்படுத்தலாம்; ஆனால் முடிவில் அவள் விருப்பத்தின் படியேதான் காரியம் நடக்கிறது.

* * * *

ஆண் குடும்பத்தின் தலை; பெண் குடும்பத்தின் இதயம். பெண்ணின் அறிவு அவள் இதயத்துக்குட்பட்டது. ஆணின் இதயம் அறிவுக்கடங்கியது. ஆணின் அன்பிற்கும் பெண்ணின் அன்பிற்கும் நிரம்ப வேற்றுமையுண்டு. ஆண் பெண்ணின் அன்பிற்கு ருசுக்கள் கேட்பதில்லை. தனக்கு இணங்கிவிட்ட தொன்றே அவனுக்குப் போதுமான ருசு. பெண்ணோ நாள் முழுவதும் ஆணின் அன்பைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறாள். ஒரு நாளில் நூறு முறை அவளிடம் அன்பு கொண்டிருப்பதாய் ஆண்மகன் உறுதி கூறினாலும் அவள் போது மென்று திருப்தியடைவதில்லை.

* * * *

ஆண்மகனின் அன்பு நிரம்ப அவசரமானது. அவன் ஒரே யடியாக எல்லாப் படிகளையும் தாண்டிவிட விரும்புகிறான். பெண்ணோ ஒவ்வொரு படியிலும் சிறிது தாமதித்துப் போக விரும்புகிறாள். ஆணின் அன்பு சொற்பமானது; ஆனால் அவன் அடிக்கடி அன்பு

கொள்கிறான். பெண் அருமையாகவே காதலிக்கிறாள். அவளுடைய காதல் மகத்தானது. பெண் தன் அன்பிற்குரியவனுக்காக உயிரைத் திரணமாகக் கருதுவாள். ஆண் மகனோ தான் உலகத்தில் முன்னேறுவதற்காகத் தன் காதலியைத் தியாகம் செய்துவிடுவான். பெண் இடைவிடாது அன்புசெய்கிறாள். ஆணின் அன்பில் இடைவெளிகள் உண்டு. ஏனெனில் அவன் உலகில் சுற்றித் திரிந்து வேறு பல காரியங்களில் கவனஞ் செலுத்த வேண்டியவனாயிருக்கிறான்.

* * * *

ஆண், பெண் மனோநிலை வேற்றுமைகளை நன்கு அறிந்திருந்தால் இல்வாழ்க்கையின் இன்பம் எவ்வளவோ அதிகமாகும். எவ்வளவோ மனத்தாங்கல்களுக்கும் சச்சரவுகளுக்கும் இடமில்லாமற்போகும். மணவாழ்க்கையின் இன்பம், கணவனும் மனைவியும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஒத்துப் போவதையே பெரிதும் பொறுத்திருக்கிறது. ஒருவருடைய மன இயல்பை இன்னொருவர் அறிந்திராவிடின் இஃது அசாத்தியமாகும்.

நவசக்தி.

# அன்பு.

ஓர் சகோதரி

சுசீலா :—என் பிரிய சகி! நாம் இவ்வளவு ஒற்றுமையாயிருந்தும், நெடுநாளாய் என் மனதிலிருக்கும் ஓர் எண்ணத்தை உனக்கு அறிவிக்கத் தயங்குகிறேன்.

விமலா :—"சுசீலா! என்ன அது? உனக்கு மறைக்க என்னிடம் யாதுளது? என் வாழ்க்கையில் உன்னிடம் கூறமுடியாத ரகசியம் தான் என்ன கிடக்கிறது?" எனச்சொல்லி சற்றே வருத்தமான பார்வையுடன், சுசீலாவின் கையைப் பிடித்துக்கொண்டு, கடற்கரையில், மணற்றரையில் அதிகமான ஜனக்கூட்டமில்லாத ஓர் இடத்தில் உட்கார்ந்தாள்.

சுசீலா:—"விமலா! நானும் உன்னுடன் சில வருஷங்களாய் மிகவும் நெருங்கிப் பழகுகிறேன். ஆனாலும் நீ உன் சொந்த விஷயத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட என்னிடம் பேசினது கிடையாது. நீ எவ்வளவுதான் உன் புத்திசாலித்தனத்தினால் வெளிக்குக் காட்டாமலிருந்தாலும், உன் உள்ளூர மனவருத்தம் இல்லாமலிருக்குமா? ஏதாவது உன்னைக் கேட்கலாமென்றால் அதினால் உனக்குப் பிரியமின்மையும் வருத்தமும் உண்டாகுமோவென்றஞ்சுகிறேன். ஆனால் என்னால் வரவர எப்படியாவது உன்னைக் கேட்கவேண்டுமென்ற கருத்தை அடக்க முடியாமலிருக்கிறது. ஆகையால் உன்னிடம் அவ்விஷயமாய்ப் பிரஸ்தாபிக்க இன்று நினைத்துள்ளேன். நான் வினவுவது உனக்கிஷ்டமா? விடையளிக்கச் சம்மதிப்பாயா? அப்படிச் சொல்ல உனக்கு விருப்பமில்லையென்னும் பட்சத்தில் நான் நிறுத்திக்கொள்ளுகிறேன். அதனால் எனக்கு வருத்தமில்லை."

விமலா :—"என் மனமார்ந்த சுசீலா! நானும் எவ்வளவோ பெயர்களுடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். ஆனால் அவர்களுக்கு என்னைப் பற்றிக் கேட்க நான் இடம் கொடுத்ததே கிடையாது. அன்னியரிடம் என்விஷயமாய்ப் பேச எனக்கிஷ்டமுமில்லை. ஆனால் என் மனதுக்கினிய தோழியாகிய உன்னிடம் சொல்ல எனக்கென்ன தடையுள்ளது!"



சுசீலா :—உன் படிப்பு இன்னும் எவ்வளவு வருஷமிருக்கிறது?

விமலா :—(சிரித்துக்கொண்டு) ஓகோ! இது உனக்குத் தெரியாதா? நான் அவசியம் சொல்லவேண்டியது தான். நான் தவறாமல் தேர்ச்சி யடைந்தேனானால் இன்னும் ஒன்றரை வருஷம்தான் படிக்கவேண்டும். நீயும் அச்சமயம் பீ. ஏ. பாஸ் செய்துவிடுவாய்.

சுசீலா :—சரி! உன் படிப்பை முடித்துக்கொண்டு என்ன செய்வதாக உத்தேசம்?

விமலா :—நன்று! இதுவும் சரியான கேள்வி. படிப்பின் பலனை அனுபவிக்க உத்தேசம்.

சுசீலா :—எப்படி? சுயமாய்ச் சொந்தத்தில் டிஸ்பென்சரி வைத்துக்கொள்வதாகவா? அல்லது கவர்ன்மெண்ட், முனிசிபல் ஆஸ்பத்திரிகளில் சம்பளம் பெற்று வேலை செய்வதாகவா?

விமலா :—தற்காலத்திய சௌகரியத்தை எண்ணுங்கால் திடீரென்று சொந்தத்தில் ஆஸ்பத்திரி வைக்க என்னாலியலாது. சம்பளம் பெற்றுத்தான் வேலைசெய்ய நினைத்திருக்கிறேன். பின்னிட்டு, காலத்தின் போக்கு எப்படி இடம் கொடுக்குமோ அவ்விதம் நடக்கும்.

சுசீலா :—நீ வேலைக்குப் போனவுடன் உன் தாயார் உன்னிடம் வந்துவிடுவார்களல்லவா?

விமலா :—என்னவோ நிச்சயமில்லை.

சுசீலா :—ஆனால் நீ எவ்விதம் ஒண்டியாயிருக்கக்கூடும்? உனக்குச் சாப்பாடு முதலிய விஷயங்களுக்கு உதவி செய்ய யாரிருக்கிறார்கள்?

விமலா :—(சற்றே வருத்தத்தைத் தாத்தக்க சிரிப்புடன் கூடியவளாய்) அம்மா, என்னை ஒண்டியாகவே இருக்கவேண்டுமென்று சிருஷ்டித்த கடவுள் அதற்குவேண்டிய சௌகரியத்தைச் செய்து வழி காட்டாமலிருப்பாரா? ஆகையால் அவர் உதவி செய்வாரென்ற நம்பிக்கையுடனிருக்கிறேன்.

சுசீலா இதைக் கேட்டவுடன் "ஏனம்மா, நீ இதற்கு வேறு பரிகாரம் செய்துகொள்ளக் கூடாதா?" என்று வருத்தமுடன் கேட்டாள்.

விமலா பதில் சொல்லாமல் மௌனமாயிருந்தாள்.

சுசீலா :—(வேறு வார்த்தைக்குத் திரும்பினவள் மாதிரி) உன் தகப்பனார்தானே உன்னைப் படிக்கவைத்தார்?

விமலா :—ஆமம்மா! என் அன்னையும் அவரும் தான்.

சுசீலா:—அவர் காலமாகி எவ்வளவு நாட்களாயின?

விமலா:—சுமார் ஆறு வருடங்களாகின்றன.

சுசீலா:—அவருக்கு விதவாவிவாகத்தில் மனமில்லையா?

விமலா:—இருந்திருக்கலாம்.

சுசீலா:—இருந்திருந்தால், உன்னைப் படிப்பிக்க வேண்டுமென்று நினைத்த அவர் உன்னை உனக்கு மற்றொரு விஷயத்தில் சந்தோஷத்தைத் தரக்கூடியதான காரியத்தைச் செய்ய அவர் மனமொப்பி முயற்சிசெய்யவில்லையா? அவருக்கு அவ்வுத்தேசமில்லையா?

விமலா:—அவருக்கு இருந்திருக்கலாம்.

சுசீலா:—ஆனால் உனக்கு.

விமலா மௌனம் சாதித்திருந்தாள்.

சுசீலா:—(வேறுவழிக்குத் திரும்பி[illegible]ளாய் தன் வார்த்தையை மாற்றி) அன்று கூடிய ஸ்திரீகள் மகாநாட்டிற்கு நீ போயிருந்தாயல்லவா?

விமலா:—ஆம்! போயிருந்தேன். உன் தேக சுகம் இடம் கொடுக்காததால் அன்று நீ வரவில்லை.

சுசீலா:—உண்மை தான். அந்த நடவடிக்கைகளில் உன் அபிப்பிராயமெப்படி?

விமலா:—எவ்விஷயத்தில்?

சுசீலா:—பெண்கள் விவாகவயது நிர்ணயத்தில்.

விமலா:—பெண்கள் கலியாணவயதை 18 ஆக உயர்த்துவதில் எனக்குப் பரம சந்தோஷம். அவ்விதம் செய்வதில் அப்பெண்கள் முக்கியமாய் மூன்று விஷயத்தில் மெத்த நன்மையை யடையக்கூடும்.

சுசீலா:—அதை விவரமாய்ச் சொல்.

விமலா:—பாபம்! உனக்கொன்றும் தெரியாது, என்னைக்கேட்கிறாய். சரி, சொல்லுகிறேன். பெற்றோர்கள் 18 வயதுக்கு முன் தங்கள் பெண்குழந்தைகளுக்கு மனம் புரிவதில்லையென்று ஏற்படுத்திக் கொண்டார்களானால், அது பரியந்தம் அக்குழந்தைகளை விருதாவாய் வீட்டில் வைத்துக்கொண்டிருக்க மனம் வராமல் அவர்களைப் படிக்கவைப்பார்கள். இதனால் ஸ்திரீகளின் படிப்புக்கு வசதி உண்டாகும். இரண்டாவது 'பால்ய விதவை' என்ற மகத்தான ஆபத்துக் கிடங்கொடாமல் தப்ப வழி ஏற்படுகிறது. மூன்றாவது தாங்கள் குழந்தைகளாகயிருக்கும் போதே அவர்கள் தாய்மாராகித் தங்கள் சரீரமும் பலமும் கெட்டுத் தங்கள் குழந்தைகளின் க்ஷேமமும் பாதிக்கப்பட்டுத் தகுந்தபடி ஆரோக்கியத்துடன் வாழக் கூடாமல் போவதையும் நிவர்த்திக்க மார்க்க மூண்டாகிறது. ஆதலால் விவாக வயதை உயர்த்துவதில் நான் அத்தியந்த பிரேமையுள்ளவளாகயிருக்கிறேன்.

சுசீலா:—சரி அதற்கடுத்த விஷயத்தில்?

விமலா:—(சற்றே மௌனம். பின்பு சமாளித்துக்கொண்டு) அதுவும் நியாயம் தான்.

சுசீலா:—ஏன் இதற்குப் பதிலளிக்க நீ தயங்க வேண்டும்? அதன் நோக்க மென்ன?

விமலா:—ஆம் சுசீலா! சற்று யோசிக்கவேண்டியிருந்தது.

சுசீலா:—குற்ற மற்ற பரிதாபமான நிர்கதியான குழந்தைகளின் நன்மையான விஷயத்தில் நீ ஏன் பதில் சொல்ல பின்னடைந்தாய்?

விமலா கண்களில் நீர் ததும்ப மௌனமாருந்தாள்.

சுசீலா:—பிரிய விமலா! நாம் அன்று விதவா ஆசிரமத்தைப் பார்வையிடச் சென்றோமே! அச்சமயம் அவ்விடம் எவ்வளவு இளம் பிராயமுள்ள பால்யக் குழந்தைகளைப் பார்த்தோம். அக்குழந்தைகள் தங்கள் விதியைப் பிறரால் நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதையும் அறியாமல் அதிக சந்தோஷத்துடன் விளையாடிக்கொண்டிருந்ததைக் கவனித்தோமல்லவா. அத்தோஷமற்ற குழந்தைகளைக் கண்டு உன் மனம் மிகவும் வாடி, முகம் குன்றினதை நான் கவனிக்கவில்லையோ! உன் கண்களிலிருந்து வெளிவந்த கண்ணீரை அடக்க முடியாமல் நீ கஷ்டப்பட்டதை நான் பார்க்க வில்லையோ! திரும்பிவருங்கால் அக்குழந்தைகளை நோக்கி, "உங்கள் பெற்றோர்கள் கூப்பிட்டாலும் நீங்கள் வீட்டுக்குப் போகாமல் இவ்விடமே இருந்து படித்துக் கொண்டிருங்கள். இதில் தான் உங்கள் பிற்கால வாழ்வுக்கு நற்கதி கிடைக்க வழி அடங்கியுள்ளது" என்று சொல்லி வரவில்லையா! அப்பேர்ப்பட்ட நீ அவர்கள் மறு விவாக விஷயத்தில் ஏன்—

விமலா:—சரிதான் 'சுசீலா'. நான் அதை மறைத்தேனா? அல்லது மறந்தேனா? உல கில் ஆயிரத்தில் ஒருபங்கு குழந்தைகள் கூட அந்தவிடுதிக்கு வந்திருக்கமாட்டார்களே. கேவலம் அக்குழந்தைகள் பிற்காலத்தில் சற்றும் ஸ்வதந்திரமற்று, அன்னியருக்கடிமையாய், பலவித மாறுதலுடன் கூடியவர்களாய், தங்கள் வாழ்நாளெல்லாம் அர்த்த



மில்லாமல் துக்கப்பட்டுக்கொண்டிருப்பார்களே என்று அடிக்கடி நான் நினைக்கிறேன். அந்தோ பரிதாபம்! அக்குழந்தைகளின் வாழ்க்கை மிகவும் கொடிது.

சுசீலா:—நல்லது, அப்படியிருக்க நீ அக்குழந்தைகளுக்கிருக்கும் பரிகாரமாகிய புனர் விவாகத்தில் சரியான பதிலுக்குப் பின்னடையும் காரணமென்ன? ஏன் உனக்கு இவ்வளவு தயக்கம்?

விமலா:—தயக்கமொன்றுமில்லை. (ஆனால், மேலே பேசமுடியவில்லை. மௌனம்.)

சுசீலா:—என் அருமை விமலா! பரவாயில்லை. நானின்று உன்னை வெகுவாய் விசனத்துக்காளாக்கி விட்டேன். இச்சம்பாஷணையை இன்று இத்துடன் நிறுத்திக் கொள்வோம். நேரமும் ஏழரைமணி ஆய்விட்டது. இருளும் சூழ்ந்து விட்டது. நாம் வீட்டுக்குப் போகலாம். நாளை, மறுநாள், அல்லது மற்றுமொரு நாள் இவ்விஷயமாய்ப் பேசி முடித்துக் கொள்ளலாம். எழுந்திரு, சீக்கிரம்.

விமலா:—இல்லை, எனக்கு யாதொரு வருத்தமும் இல்லை. உன்னிடம் எதைப்பற்றிப் பேசுவதென்றாலும் எனக்கு மகிழ்ச்சிதான் வா போகலாம்.

இப்படிச் சொல்லி இருவரும் கடற்கரையிலிருந்து வீட்டுக்குத் திரும்பினார்கள். அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்து போஜனம் செய்து, தங்கள் பாடங்களைப் படித்து விட்டுப் படுக்கைக்குச் சென்றார்கள். ஆனால் இருவரும் தூங்கவேயில்லை. மாலையில் நடந்த சம்பாஷணையிலேயே அவர்கள் மனம் கவரப்பட்டிருந்தது.

இதன் நடுவில் இவர்களைப் பற்றிய பூர்வோத்திரத்தைச் சற்று எடுத்துக் கொள்வோம். சுசீலா ஓர் ஏழைவீட்டுப் பெண். அவளுக்குக் கல்யாணமாய்விட்டது. அவள் படிப்பில் வெகு கெட்டிக்காரியாதலால்தன் 18-ம் வயதில் பீ.ஏ. வகுப்பில் முதல் வருஷப் படிப்பைப் படிக்கத் தொடங்கியிருக்கிறாள். அவளுக்குப் பாடசாலையில் உபகாரச் சம்பளம் கொடுத்து வருகிறபடியாலும், அவள் புருஷனின் அனுமதியின் பேரில் படித்து வருவதாலும், அவள் தகப்பனார் அவளைக் கவலையின்றிப் படிக்கவைக்கிறார். அவள் கணவன் இன்ஜினியரிங் காலேஜில் கடைசிவருஷப்படிப்பிலிருக்கிறார். தன்படிப்பு முடிந்தாலும் சுசீலாவின் பீ.ஏ. படிப்பு முடிந்தபின் தான் அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொள்வதாக உறுதி கொண்டிருக்கிறார். ஆகவே அவள் இன்னும் புருஷன் வீடுசெல்லாத சிறுமியாகவே இருக்கிறாள். அவள் தன் பெற்றோருடன் சென்னையில் வசித்து வருகிறாள்.

விமலாவைக் கவனிப்போம். அவள் ஓர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுக்கு வயது 24 ஆகிறது. சுசீலாவுக்கு அவள் சற்று நெருங்கிய பந்து. அவள் பால் மணம் மாறாக் குழந்தையிலேயே அவளுடைய பெற்றோர் அவளுக்குச் செல்லக் கல்யாணம் செய்துவைத்தார்கள். சில நாட்களுக்கெல்லாம், அச்செல்வ மருமகன் சிவபதம் அடைந்து விட்டான். அச்சமயம் விமலாவின் தாய் தகப்பன் அடைந்த துக்கத்தையும் கஷ்டத்தையும் வீணில் நாம் ஏன் எழுதி விஸ்தரிக்க வேண்டும். ஆனால் நல்ல வேளையாய் நம் விமலா சந்தோஷமுடனே இருந்துவிட்டாள். அந்தோ! அக்குழந்தை என்ன கண்டது? தன் பெற்றோர்கள் அழுவதைக் கண்டால், "ஏன் உங்களைத் தேள்கடித்து விட்டதா? வயிறுவலிக்கிறதா?" என்று கேட்டுவிட்டு விளையாடப் போய் விடுவாள். அப்படியே காலம் கடந்தது. விமலாவை அவள் எட்டாவது வயதில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைத்தார்கள். 11-ம் வயதில் 3-ம் வகுப்புப் படிக்கலானாள். அவளுக்கு அதுகாறும் தனக்குக் கல்யாணம் நடந்திருப்பதாகத் தெரியாது. அவள் பெற்றோர்

இந்த சந்தோஷ சங்கதியை அவளிடம் என்ன சொல்லக் கிடக்கிறது, ஆனால் அவளுடன் படிக்கும் பெண்களுக்கெல்லாம் அவளைப் பற்றி நன்கு தெரியும். கடைசியாய் தட்டிமுட்டி விமலா தான் விவாகமாய்ப் புருஷன் மரித்துப் போகப்பட்ட விதவை என்று அறிந்து கொண்டாள். ஆனால் அவளுக்குச் சரியான விவரம் தெரியாமலே இருந்தது. தன் தாயாரை எப்படி அவள் கேட்கக் கூடும்? காலசக்கரம் சுழன்று கொண்டே போயிற்று. விமலா தன் 18-ம் வயதில் ஸ்கூல்பைனல் பரீட்சையில் தேறலானாள். அவள் படிப்பில் இன்னும் பிரபல்யம் அடையவேண்டுமென்றும், அவள் சம்மதத்தின் மேல் அவளுக்கு மறுமணம் செய்யவேண்டுமென்றும் அவள் பெற்றோர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில் விமலாவின் தகப்பனார் திடீரென்று பரலோகப் பிராப்தமடைந்து விட்டார். தாயும் பெண்ணும் மிகுந்த துக்கத்துக்காளானார்கள். ஆனாலும் அவர்கள் தைரியத்தை இழந்துவிடாமலிருந்து வந்ததால், விமலா இண்டர்மீடியட் பாஸ் செய்து விட்டு, சென்னையில் மெடிகல் காலேஜில் சேர்ந்து நான்காவது வருஷ வகுப்பில் படித்துவருகிறாள். சுசீலாவின் அன்னைக்கும் விமலாவின் தாய்க்கும் இருந்த மிகுந்த அன்பினால், விமலாவை சுசீலாவின் தாயார் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டாள். இதனால்தான் சுசீலாவும் விமலாவும் அதிகம் நெருங்கிப் பழகி, அத்தியந்த சிநேகிதிகள் ஆனார்கள். இவர்கள் மனம் மிகவும் ஒன்றுபட்டு விட்டது. சுசீலாவுக்கு விமலா மறுமணம் செய்துகொள்ளவேண்டுமென்ற விருப்பம் அதிகம். தான்தன் படிப்பை முடித்துக் கொண்டு புருஷன் வீடு செல்லுவோமே. அவளுக்கு அந்த சந்தோஷமில்லையே என மனம் நொந்து வெதும்புவாள். அவளை இவ்விஷயமாய் எப்படிக் கேட்பது என்று நெடுநாளாய் யோசித்துக் கொண்டிருந்தாள். கடைசியாய் ஒரு நாள் தாங்கள் தினசரி உலாவப் போகும் வழக்கம்போல் போன அன்று இதைப்பற்றி சுசீலா பிரஸ்தாபிக்கத் தொடங்கினாள். விமலா வெகு அடக்கமுள்ளவளாகவும் சாந்தகுணமும் அன்பும் மரியாதையும் ஒருங்கே அமையப் பெற்றவளாகவும் காணப்பட்டாள். இதுதான் அவர்கள் பூர்வோத்திரம்.

மறுநாள் பொழுது விடிந்தது. விமலையும் சுசீலையும் தங்கள் பாடசாலைக்குப் போகலானார்கள். அவர்கள் வீட்டில் பிறர் முன்னிலையில் அதிகம் பேசவேமாட்டார்கள். இப்படி ஒரு வாரம் சென்றது. மற்றைய நாளிருவரும் கடற்கரைக்குச் சென்றார்கள் ஓர் ஏகாந்தமான இடத்தில் உட்காரலானார்கள். விமலா சென்ற வாரத்தில் நிறுத்திவிட்ட சங்கதியை இன்று திரும்ப எழுப்பலாமா எனக் கேட்டாள் சுசீலா.

விமலா :—அதில் ஒரு விசேஷமும் காணேம். அதற்கென்ன சொல். எனக்குத் தெரிந்த பதிலைச் சொல்லுகிறேன்.

சுசீலா:—புருஷன் வீடு செல்லாத குழந்தைகள் மறுமணம் புரிந்துகொள்வதில் என்ன தப்பிருக்கிறது? இவ்விஷயமாய் உன்னிஷ்டத்தை நிச்சயமாய்ச் சொல்.

விமலா:—இதில் என்ன சொல்லக் கிடக்கிறது? பால்ய விதவைக் குழந்தைகள் ஏதோ தங்கள் பெற்றோர்கள் கலியாணம் செய்து வைத்தார்களாம். புருஷன் இறந்துபோய் விட்டானும் என்று பிறரால் சொல்லப்பட்ட காரணத்துக்காக, ஒருபாபமு மறியாத அச்சிறுமிகள், தங்கள் வாழ் நாள் பூராவும் கேவலம் அர்த்தமில்லாத வழிகளில் பிறருக்கடிமையாகவே இருந்து கஷ்டப்பட்டுவருவதைத் தடுப்பதை யார் தான் ஒப்பமாட்டார்கள்! எவர்மனம் தான் பின்வாங்கும்! அர்த்தமில்லாத தாங்கள் சொல்லும் சொல்லுக்கு எதிரில்லையென்ற அகம்பாவம் கொண்டவர்களும் வழக்கம் வழக்கமென்ற கொடிய கரும்பிசாசுக்கு ஆட்பட்டவர்களும்தான் அதை மறுப்பார்கள்.



சுசீலா :—சரி, அப்போது உனக்கு உன்னைப் பொறுத்தமட்டில் அவ்விவாகத்தில் சம்மதம் தானே?

விமலா :—(சற்று தடுமாறி) அக்கொள்கையில் எனக்குச் சம்மதமே.

சுசீலா :—என்ன? எனக்குச் சரியாய் விளங்கவில்லையே. சற்று தெளிவாய்ச் சொல்.

விமலா :—நான் இன்னும் என்ன சொல்லவேண்டும்?

சுசீலா :—அக்குழந்தைகள் பெரியவர்களான பிறகு, மறுமணம் புரிந்துகொள்வது உனக்கிஷ்டம் தானே?

விமலா :—பெண்ணும் அவளை மணக்க விரும்பும் புருஷனும் அவர்கள் பெற்றோர்களும் ஒருமிக்க மனமொத்து மணஞ் செய்துவைப்பது ரொம்ப நல்லது. அதற்கடுத்தபடி, பெண்ணும் புருஷனும் நிச்சயமான அன்பினால் கட்டுப்பட்டவர்களாயிருந்தால் அதுவும் சிலாகிக்கத் தக்கதுதான்.

சுசீலா :—ஏன்? ஸ்திரீயும் புருஷனும் மனமொற்றுமையுடன் மணம் செய்துகொண்டால் போதாதா? பெற்றோரின் சம்மதம் இவர்களை எவ்விதம் பாதிக்கும்?

விமலா :—இல்லை சுசீலா! அது சரியல்ல. இது சற்று சிக்கலான விஷயம். தவிர இவ்விவாக விஷயம் சிலரால் பரிகசிக்கவும் செய்யப்படுகிறது. ஆண் பெண்ணாகிய இருதாரப்பினரிலும் சிலர், கூட்டங்களில் இவ்விஷயங்களில் வெகு உருக்கமுடனும் அன்புடனும் பேசியும் இத்தீர்மானங்களுக்குச் சாதகமாய்த் தங்கள் வாக்கைக் கொடுத்தும் வீட்டுக்கு வந்தபிறகு, இதே விஷயங்களில் ஏளனமாய்ப் பேசுவதும் கைகொட்டிச் சிரிப்பதும் உண்டு. என்னே இவர்கள் மனச்சாட்சி! பின்னும் சில படித்த வாலிபர்கள் இப்பரிதாபமான பெண்களின் வாழ்க்கைக்காக மனம் நொந்தவர்களாய் அப்பெண்களை மணம் புரிவதாக முன்வருவதுண்டு. பின்னிட்டுத் தங்கள் பெற்றோர்களால் தடுக்கப்பட்டு, தைரியமற்றவர்களாய் அவர்களுக்குடன்பட்டு விடுபவர்களுமுண்டு. சிலர் தங்கள் பெற்றோர் சொல்லை மீறிக் கலியாணம் செய்துகொண்டு, பின்னிட்டு அதனால் சில விஷயங்களில் வருத்தமும் கஷ்டமும் அடைவதுண்டு. அப்போக்கொத்த குடும்பத்தில் வாழ்க்கைப்படும் அப்பெண்ணுக்கு என்ன சுகமும் சந்தோஷமும் இருக்கும்? அவள் பின்னும் விசனத்துக்குத்தான் ஆளாகவேண்டிவரும். அதைவிட அவள் தனித்திருப்பதே மேலாகும்.

சுசீலா :—சரிதான். ஓர் நல்லவயது வந்தவளாகவும் படித்தவளாகவுமிருந்து, அவளுக்குத் தகுந்தாப் போல் அந்தஸ்துள்ள புருஷன் கிடைக்கும் பட்சத்தில் ஏன் அவள் மணம் செய்துகொள்ளக் கூடாது? இவர்களின் பெற்றோர்கள் அசம்மதம் கூட இவர்களைப் பாதிக்காதே.

விமலா :—ஆம். அது உண்மைதான். அது அப்பெண் மனதைப் பொருத்ததல்லவா? அவளுக்கிஷ்டமில்லாவிடில் அவளை நிர்ப்பந்திப்பதில் யாதொரு பயனுமில்லையே.

சுசீலா :—அவளுக்கதில் நன்மையிருப்பதால் அதை அடையும்பொருட்டு அவள் பெற்றோர்கள் ஏன் அவளை நிர்ப்பந்திக்கக் கூடாது?

விமலா :—வயது வந்த பெண்ணாயிருப்பதால் அந்நன்மையின் பலாபலனை அப்பெண்ணும்

அவர்களைப் போல் ஏற்கனவே அறிந்திருக்கக்கூடுமல்லவா.

சுசீலா :—பெரியவர்களுக்கிருக்கும் அனுபவம் அச்சிறுமிக்கில்லாமலிருக்கலாம்.

விமலா :—அவளுக்குத் தூய்மையும் உறுதியுமிருக்குமானால் உலக அனுபவம் அவளை ஒன்றும் செய்யமாட்டாது.

சுசீலா :—அவள்மீதில் அபாண்டமாய்ப் பழி யாராவது சொல்லக்கூடுமானால் அவளுக்கு அதனால் வருத்தம் நேராதா?

விமலா :—(சிரிப்பான பார்வையுடன்) பொய்யான அபவாதம் வருமென்றஞ்சி ஒரு பெண் அதற்காகத் தனக்கிஷ்டமில்லாத வேலையைச் செய்ய மனம் ஒப்பக்கூடுமா ? தவிர, புருஷனுடன் கூடிவாழும் ஓர் பெண்ணை மெய்யான அபவாதம் நெருங்காதோ என வினவினவளாய்க் கடவுளுக்குப் பொதுவாய் நடந்து கொள்ளவேண்டியதைத் தவிர வீண் வருத்தத்திற்காளாக வேண்டிய அவசியமில்லை.

சுசீலா :—சரி இருக்கட்டும். உன்னைப் பொருத்தமட்டில் கடைசியாய் நான் ஒன்று சொல்லுகிறேன். உன் படிப்பை முடித்துக் கொண்டு நீ வேலைக்குப் போகப்போகிறாயல்லவா ? நீயோ ஓர் லேடி டாக்டர். அதிலும் சம்பளம் பெற்று வேலை செய்யப் போகிறாய். வியாதியஸ்தர்களுக்கு சிகித்சை செய்ய வேண்டியதே உன் தொழில். அதற்காக யார் கூப்பிட்டாலும் நீ செல்ல வேண்டியது உன் கட்டாயமான கடமையாகிறது. அனேகமாய் டாக்டர்கள் புருஷர்களாலேயே தான் அழைக்கப்படுவார்கள். அடுத்திருக்கும் ஊர்களுக்கும் போகவேண்டி யிருக்கும். தவிர, இரவு பகலாய்ச் செல்லவேண்டி நேரலாம். அப்படியிருக்கையில் நீ புருஷனில்லாமல் தனித்து வீட்டிலிருப்பது உனக்குச் சில சமயங்களில் தொந்திரவாயிருக்காதா ? ஆதலால் நீ ஏன் உனக்கு எல்லா விதத்தாலும் தகுந்த அந்தஸ்துள்ள ஓர் உத்தம புருஷனை மணந்து வாழக்கூடாது ?

தான் இப்படிச் சொன்னதால் அவள் என்ன நினைப்பாளோ வென்றஞ்சினவளாயும், நெஞ்சம் படபடத்துத் திடுக்கிட்டவளாயும் விமலாவைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளலானாள் சுசீலா.

(விமலா சுசீலாவின் ஸ்திதியைக் கண்டு அவளைத் தழுவிப் பிடித்துக்கொண்டு, அவளைத் தேற்றி) நீ இவ்வளவு கலங்கும்படியாக நான்ஒன்றும் சொல்லவில்லையே. என் மீதிருக்கும் அன்பினால், 'விமலா! நீ மறுமணம் செய்துகொள்' என்று ஒரு வார்த்தையில் முடிக்க வேண்டிய விஷயத்தை இவ்வளவு தூரம் விஸ்தரித்து நீட்டி முடித்தாய். அதற்காக நீ வருத்தப்படாதே. உன் மனதை நான் நன்கு அறிவேன். விதவா விவாகவிஷயத்தில் பொதுவில், மொத்தத்தில் எனக்குப் பிரியம் உண்டாயினும், என் சொந்தத்தில், என்னைப் பொருத்தமட்டில் எனக்கிஷ்டமில்லை. கடவுள் என்னை சம்சாரத்தில் புகவிட இஷ்டப்படாததால், என் பெற்றோர்கள் அதைச் செய்தும் கூட தெய்வம் விலக்கிவிட்டது. (அச்சமயம் அவளை அறியாமலே கண்ணீர் வடிந்தது. உடனே சமாளித்துக் கொண்டு) அப்படி யிருக்கக் கடவுள் செயலுக்கு விரோதமாய் ஏன் சம்சாரத்தில் நான் புகவேண்டும்? ஒரு கால் அதற்கு தண்டனையாய்த் திரும்பவும் எனக்கு வைதவ்யம் கிடைத்து விட்டால் அப்பொழுது நான் என்ன செய்யக் கூடும்? புருஷர்களுக்குத் தான் எவ்வளவு தடவை வேண்டுமானாலும் விவாகம் புரிந்துகொள்ளலாம்.



தங்குதடையின்றி 60 வயதுக்கிழவரும் 5 வயதுப்பெண்ணை வேண்டுமானாலும் அழகாய் மணம் புரிய இடம் இருக்கிறதாம். சாஸ்திரம் அதற்கனுகூலமாயிருக்கலாம். வீணில் பிறர் அபாண்டமும் அநீதியுமான சொற்களைச் சொல்வார்கள் என்பதை எடுத்துக்கொண்டு அதைத் தடுப்பதற்காக நான் குடும்பியாவதில் என்ன அர்த்தம்? அதில் யாது பயன்? அப்படி மணம் புரியும் அப்பெண்ணின் கால்வித்தியாசத்தால், அவள் புருஷனே அவள் மீதில் சந்தேகம் அடைவானாகில் அதற்கென்ன விமோசனம்? ஆஸ்ட்ரேலியாவில் விவாகமான லேடி டாக்டர் ஒருவள் இருந்தாள். அவளுக்கு வரும் கடிதங்களை அவள் உத்தரவின்றி அவள் மீதிலுள்ள சந்தேகத்தினால் அவள் புருஷன் உடைத்துப் பார்ப்பாராம். அவளுக்கது விருப்பமில்லை. தன் பேஷண்டைச் சேர்ந்தவர்களிடமிருந்து தனக்குக் கடிதங்கள் வருமென்றும், அதைத் திறந்துபார்க்கக்கூடாதென்றும் சொல்லி, அதே வியாஜமாய் ஒருவர்க்கொருவர் மனஸ்தாபப்பட்டுக் கடைசியில் விவாகரத்து செய்துகொண்டு விட்டார்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன். இது உண்மையாய் சமீபத்தில் நடந்தது. கேவலம் கலியாணத்தில் என்ன சுகமிருக்கிறது? நான் இப்படிச் சொல்வதால் நீ அதை எடுத்துக் கொள்ளாதே. இவ்வார்த்தை எனக்குத் தான் பொருந்தும். இந்த ஜன்மத்தில் கடவுள் என்னை இந்த வழியிலேயே செல்லவிட்டிருக்கிறார். ஆதலால் நான் புனர்விவாகத்தில் மனதைச் செலுத்தவில்லை. ஆனால் எல்லாரும் என்னைப்போல் இருக்க வேண்டுமென்று நான் பிரியப்படவில்லை. நான் வேலைக்கு ஆரம்பித்தபின் வெளிச் செல்லவேண்டிய காலங்களில் தகுந்த துணையுடனும் மிகுந்த ஜாக்கிரதையுடனும் இருக்கச் சரியான வழி தேடிக் கொள்வேன். ஆகையால் நீ வருத்தப்படவேண்டியதில்லை. நான் முதலில் உபாத்தினிவேலைக்குப் போகலாமென யோசித்தேன். பின்பு வியாதியஸ்தர்களுக்கு நம்மால் கூடிய உதவியைச் செய்யலாமெனக் கருதியவளாய் இவ்வழிக்குத் திரும்பினேன்.

சுசீலா:—நீ விலக்கித் தள்ளுவதை நான் அனுபவிக்க வேண்டியிருக்கிறதல்லவா?

விமலா:—ஆமம்மா! அது தெய்வ ஆக்ஞை, அதை நம்மால் மீற முடியாது. மீறப் பார்ப்பதும் அழகல்ல.

சுசீலா:—சரி. ஆனால் உன் எண்ணத்தை நீ மாற்றிக்கொள்ளக் கூடுமென்று நான் எதிர்பார்க்க வேண்டாமா?

விமலா:—இல்லை, வேண்டியதில்லை. இது நிச்சயம். இதைத் தவிர்த்து நீ என்ன சொன்னாலும் கேட்கத் தயாராயிருக்கிறேன்.

சுசீலா:—இதை விட எனக்கு வேறு என்ன சொல்லக்கிடக்கிறது. இவ்விஷயம் ஒன்று தான் என் மனதை வெகு நாளாய்க் கவர்ந்து கொண்டிருந்தது. அதை அதிருப்தியான வழியில் நீ இன்று முடித்து விட்டாய். சத்தியமாய்க் கூறுகிறேன் கேள். என் வாழ்க்கையில் எனக் கெவ்வளவு சந்தோஷமுண்டானாலும், உன்னைப்பற்றிய ஓர் குறை என்னுள்ளத்திலிருந்து கொண்டு தானிருக்கும். அது ஒரு விநாடியும் என்னைவிட்டு நீங்காது. இது நிச்சயம்.

விமலா :—சுசீலா, அவ்வெண்ணத்தை அகற்றிவிடு. நீங்காத விஷயத்தில் குறைப்படுவது சுத்தத்தப்பு. நீ என்ன, தெரியாத பெண்ணா? நமக்கு அபாரமான கஷ்டங்கள் நேர்ந்தாலும் அதைத் தாங்கிக்கொள்ள நமக்கு ஸ்வாமி ஆற்றலை அளித்திருக்கிறாரல்லவா? கேவலம் இதற்கு ஏன் நீ மனமுடைய

வேண்டும்? ஆகவே உன் பயனற்ற துக்கத்தை அறவே ஒழித்துவிடு.

இதைச் செவியுற்ற சுசீலா பதில் கூறுவதின்னதென்றறியாமல் மிகவும் வருத்தத்தால் பீடிக்கப்பட்டாள். அவள் மனம் தடுமாறிக் கை கால்கள் சோர்வடையப் பெற்றாள். அவள் தலை கிறுகிறுத்தது. மெய் நடுங்கலாயிற்று. இவ்வித அவஸ்தையுடன் அவள் மூர்ச்சையடைந்து தன்னுயிரென மதிக்கும் விமலாவின் மடியிற் சாய்ந்து விட்டாள். உடனே விமலை வெகு ஜாக்கிரதையாய் அவளை கவனித்துத் தேற்றி மெதுவாய் வீட்டுக்கழைத்துச் சென்றாள்.

சுசீலாவும் உணர்வுற்றுச் சற்று மன மாறுதலுடன் வீட்டை அடைந்தாள். இவ்விஷயங்கள் மற்று யாருக்கும் தெரியாது. பகல் இரவாகி, நாட்களாகி, நாட்கள் வாரமாகி, வாரம் மாதமாகி, மாதம் வருஷமாகியதால், அவ்வுத்தம சிநேகிதிகளின் அன்பு ததும்பி நிறையப் பெற்ற சம்பாஷணை முடிந்து இரண்டு வருஷகாலமாகிவிட்டது. காலா காலத்தில் விமலையினுடையவும் சுசீலையினுடையவும் படிப்பு முடிவடைந்துவிட்டது. சுசீலாவின் மனதில் இன்னமும் விமலையின் மனம் மாறுதலடையுமோ வென்ற எண்ணம் ஒரு புறம் இருந்துகொண்டேயிருந்தது. ஆனால் நம் விமலாவோ அவளுடைய எண்ணத்திற்கு விரோதமாய் ஒரே உறுதியான மனோபாவத்துடனிருந்து விட்டாள். அவள் தாயாரைக்கொண்டு அவளைத் திருப்ப முயன்று பார்த்தாள். எதற்கும் விமலா அசையவில்லை. தன் தூய்மையான எண்ணத்தை அவள் ஒரு நிமிஷமும் நழுவவிடவில்லை. பின்பு விமலா வேலையினிமித்தம் சுசீலாவை விட்டுப் பிரிந்து வேற்றூருக்குப் போகவேண்டியவளானாள். தாங்கள் பிரிந்துபோக வேண்டியதற்காக அவர்கள் மிகவும் துக்கிக்கலானார்கள். ஆனால் என் செய்வது? போகாமல் முடியுமோ. விமலாவைக்காட்டிலும் சுசீலாதான் அதிக வருத்தத்துக்காளானாள். அதன் பின் சுசீலாவும் தன் கணவன் வீடு சென்றாள். சிநேகிதிகளிருவரும் அடிக்கடி சந்திப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். சுசீலாவுக்கு சகல விதமான சந்தோஷமிருந்தாலும், தன்னுயிரினுமினிய விமலையின் விஷயமாய்ச் சற்று மனத்தாங்கலுடனேதான் தன் வாழ்நாளைக் கழிக்கலானாள். விமலா எவ்வளவோ சாமர்த்தியமுடன் அவ்வெண்ணத்தை மறக்கடிக்கும்படியான வழிகளைச் செய்தாலும் அவள் அதில் ஈடுபடவே இல்லை. தன் இருதயமாகிற கோவிலில் விமலையாகிற மனுஷ்ய பிம்பத்தை ஸ்தாபிதம் செய்யப்பட்டவள் போல் சதாகாலமும் அவள் நினைவாகவே இருந்தாள். ஏன், அதிகம் சொல்வானேன். தன் உத்தம பதியின் மேலுள்ள அன்பைக் காட்டிலும், ஒருபடி அதிகமாகவே தன் விமலையை விசுவாசித்து வந்தாளெனக் கூறுவது முக்காலும் மிகையாகாது. என்னே அவளுடைய அன்பு! இவ்வளவு மிகுதியான அன்புக்குடன்பட்ட தன் அருமை மனைவியை அவள் புருஷன் அவளுடைய ஒப்பற்ற நட்புக்காக வியந்து, அப்பேர்ப்பட்ட உத்தமத்தோழிகளின் சந்திப்பை அடிக்கடி ஏற்படுத்தத் தகுந்த விதமாய் உதவி செய்தார். சுசீலா கடவுளை வணங்குந்தோறும், பால்ய விவாகத்தை அறவே ஒழிக்கவும், பெண்கள் கல்வியில் அபிவிருத்தி அடையவும், பால்ய விதவைக் குழந்தைகளை வயது வந்தபின் மறுமணம் செய்து கொடுக்கவும் வேண்டிய புத்தியை நம் தேசமக்களுக்கு அளிக்கவேண்டுமென்று கண்ணும் கண்ணீருமாய் மனப்பூர்வமாய் வேண்டி வணங்கிவந்தாள்.

இது நிற்க. விமலையின் தாயாரும் காலமாய் விட்டாள். ஆகையால் வீட்டில் அவளுக்குச் சரியானபடி உதவி செய்ய மனுஷ்யாளில்லாமல் போயிற்று. அதனிமித்தம் சில சமய...



கஷ்டத்துக்காளானாள். ஆகிலும் அவள் சகலத்தையும் கடவுளிடம் ஒப்படைத்து விட்டுச் சந்தோஷமாகவே பார்வைக்குக் காணப்பட்டாள். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் விமலையின் மனம் மாறுதலடையுமோ வென்று வெகு ஆவலுடன் அதிசூட்சமமாய் சுசீலா கவனித்து முடிவில் ஏமாற்றமடைவாள். இச்சமயங்களில் சுசீலா தன் சந்தோஷவாழ்க்கையை வெறுத்து மனம் தாளாமல் அழுது விடுவாள். விமலா அவளைச் சமயத்துக்குத் தகுந்தாப் போன்ற வசனங்களைக் கொண்டு தேற்றி வெகு சாதுர்யமாய் வேறு வழிக்குத் திருப்பி விடுவாள்.

விமலா தன் வைத்தியத் தொழிலில் வெகு சீக்கிரத்தில் தேர்ச்சியடைந்து அதிகப்பிராபல்யமடைந்து விட்டாள். அவளிடம் சிகிச்சை செய்து கொள்வதென்றால் சிறு குழந்தைகள் முதல் விருத்தாப்பியர்கள் வரை யாவருக்கும் சந்தோஷமே. அவள் எல்லோர் மனதையும் வசீகரிக்கும்படியான நற்குணங்கள் அமையப்பெற்றவள். அவள் பரந்த முகமும், விரிந்த பார்வையும், கூர்ந்த நாசியும், அன்பும் பரிவும் ததும்பியொழுகும் அமுதினுமினிய வசனங்களின் துவனியும், சாந்தமும், அடக்கமும் ஒருங்கே கூடி அமையப்பெற்ற எழில் வாய்ந்த வனப்பும் அமையப் பெற்றவள். அவள் தர்மசிந்தனையுடனும், தெய்வ வழி பாட்டுடனும், நல்லோராகிய பெரியோரை பூஜிக்கும் வந்தனையுடனும் தன் காலத்தைக் கழித்து வந்தாள்.

விமலா அடிக்கடி சுசீலாவுடன் கூடிப் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பலபொதுக்கூட்டங்களைக் கூட்டி அதில் பால்ய விவாகத்தைத் தடுக்கவும், பெண் குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் பெற்றோர்கள் அதிக அக்கறை காட்ட வேண்டுமென்றும் பிரசங்கம் செய்து வருவாள். அநேகம் பெற்றோர்கள் அவளது வார்த்தைக் கிணங்கி நன்மையடைந்ததுமுண்டு. அவள் தன் வாழ்க்கையில் வீண் ஆடம்பரமற்றுக் காணப்பட்டாள். அவள் தன்னுடைய வருவாயில் தனக்கு அவசியம் வேண்டியதை எடுத்துக்கொண்டு, மீதியைத் தர்மத்திற்காகவே சேமித்துவைத்தாள். ஏழை, அனாதை விதவை இவர்களின் உபகாரார்த்தமாகவும் பொதுவில் பெண்களின் படிப்பு முன்னேற்றத்திற்காகவும் அத்திரவியத்தை உதவுவதாகத் தன்னுள் தீர்மானித்துக்கொண்டாள். தன்னுயிர்த்தோழியாகிய விமலையின் உதாரகுணத்திற்காக சுசீலா மிகவும் மனமகிழ்ந்தாள். ஆயினும் அவள் மனத்தாங்கல் மாத்திரம் மாறவேயில்லை. 'என்னுடைய தாயாரும் தகப்பனாரும் என்னைப் படிக்கவைக்காமலிருந்திருந்தார்களானால், என்னுடைய சாண்வயிற்றுச் சோற்றுக்காக, நான் யார் வீட்டில், எவருக்கடிமையாய், கஷ்ட துக்க வெட்கங்களுக்காளாகி என் வாழ்நாளைக் கழித்துக்கொண்டு வருவேனோ' என அடிக்கடி தன்னுள் சொல்லிப் பெருமூச்சு விடுவாள். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் மூதுரையை அவள் மிகவும் பணிந்து போற்றுவாள். 'ஈச்வரா! என்னை இவ்வளவு தூரம் நன்மையான வழியில் செல்லவிட்டீரே! அப்பேர்க்கொத்த உமது திருவுள்ளம் என்னால் மிகவும் உவக்கத்தக்கது' எனச் சொல்லி மெத்தவும் பணிந்து வணங்குவாள். உத்தம சிநேகிதிகள் நட்பு நாளுக்கு நாள் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து கொண்டே வந்தது. அவர்கள் எல்லாம் வல்ல முழு முதற் கடவுளின் அருளால் சுகமே வாழ்ந்து வருகிறார்கள்.

சுபம்.

# சாருமதியின் சௌபாக்கியம்.

(ஸ்ரீமதி வி. கே. ராஜம்மாள்.)

புண்ணியபூமியாகிய இப்பாதகண்டத்தில் முற்காலத்தில் ஏகசக்கிராதிபதியாய் மனுநீதி வழுவாது ராஜ்யபாரம் செய்து வந்த ஸத்தியஸந்தனென்னும் ஒரு சக்கரவர்த்திக்குச் சகல பாக்கியங்களும் இந்திர போகத்துக்கும் மேலாகப் பொருந்தியிருந்தும் புத்திரப்பேறில்லாத பெருங்குறையால், மனதிற்குச் சந்தோஷமில்லாது, மிகவும் வருந்தினன். தன் குறையைக் குருவிடத்திலும், பல பெரியோர்களிடத்திலும் கூறி வணங்கித் தன்னைப் புத்தென்னும் நரகத்தினின்றும் காப்பாற்றித் தனக்குப் பின் தனது ராஜ்யத்தை வகிக்கும் உத்தம புத்திரனை அடையும்படி ஆசீர்வதித்து அனுக்கிரகிக்கும்படி வேண்டிய சக்கரவர்த்தியை அப்பெரியோர்கள் கருணை மிகுந்த நல்வசனங்களால் தேற்றி உமாகாந்தனை உள்ளன்போடு பூஜித்து அனேகவிதமான தானதருமங்களையும் செய்தால் புத்திரோத்பத்தி யுண்டாகுமென்று அனுக்கிரகித்தார்கள்.

அப்பெரியோர்களின் வாக்கியத்தை அவ்வாசன் அணுவளவும் பிசகாது யதேஷ்டமான தானதருமங்களைச் செய்து தனது பட்டமகிஷியுடன் பார்வதி பரமேசுவரர்களை மெய்யன்புடன் உள்ளமுருக தினமும் பூஜித்துப் போற்றி வரும் நாளில், பெரியோர்களின் ஆசீர்வாதங்களும், புண்ணியபலமும் பழுத்து முதிர்ந்தது போல் உமாகாந்தனருளால் பட்ட மகிஷிக்குப் புத்திரோத்பத்தியுண்டாகி நல்ல சுபமுகூர்த்தத்தில் சர்வலட்சணங்களும் பொருந்திய ஒரு உத்தம புத்திரனைப் பெற்றாள்.

தனக்குப் புத்திரன் பிறந்தானென்னும் அமிர்த மொழியைச் செவிமடுத்து உண்ட ஸத்தியஸந்தன், அளவற்ற ஆநந்தமடைந்து இச்சுபசமாசாரத்தைத் தனது ராஜ்யத்திலுள்ள எல்லோரும் கேட்டு ஆநந்திக்க யானைமேல் முரசறைவித்து சாக்கறையையும் தனசாலையையும் ஏழுநாள் வரைக்கும் சூறையாடச்செய்து, ஏழை யெளியவர்களைத் தரித்திரக்கடலினின்றும் கரையேற்றுவித்து, அரண்மனைமுதல் அகதிகள் குடிசைவரை தன் பட்டணத்து ஜனங்களெல்லோரும் அளவற்ற சந்தோஷத்துடன் உற்சவாதிகள் கொண்டாட, குழந்தைக்கு ஜாதகர்ம நாமகரணச் சடங்குகளைக் குறைவறச் செய்து தருமசீலன் எனப் பெயரிட்டான்.

நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்து வரும் தருமசீலனுக்குக் கிரமமாய் சௌள உபநயன சம்ஸ்காரங்களையும் செய்வித்தான். யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை, அஸ்திரவித்தை முதலிய சகல வித்தைகளிலும் தேர்ச்சிபெற்றுத் தன் நிகரில்லாது விளங்கும் புத்திரசிகாமணிக்குத் தகுந்த கன்னிகா ரத்தினத்தைத் தேடி விவாகம் செய்து களிக்க நினைத்த ஸத்தியஸந்தன், ஸபையோருடன் ஆலோசித்துச் சகலதேச ராஜாக்களுக்கும் தங்கள் தங்கள் கன்னிகைகளின் உருவப் படத்தை அனுப்பும்படி திருமுகம் அனுப்பினான்.

சக்கரவர்த்தியின் ஆக்ஞைபின்படி எல்லா ராஜாக்களும் தங்கள் கன்னிகைகளின் உருவப் படங்களை அனுப்பினார்கள்.

அப்படங்களில் சர்வ லட்சணங்களும் பொருந்திய ஒரு உத்தம கன்னிகையைத் தன் குமாரனுக்கு விவாகம் செய்ய நிச்சயித்து அக்கன்னிகையின் தாய் தந்தையருக் கறிவிக்க,



அவர்களும் மிகுந்த ஆனந்தபரிதர்களாய்த் தங்கள் கன்னிகையுடன் சகலமான பந்து ஜன சமூகத்துடன் ஸத்தியஸந்தன் ராஜ்யத்தை வந்தடையவும், தருமசீலனுக்கு விவாக முகூர்த்தத்திற்கு நாள் நிச்சயித்து சகலதேச ராஜாக்களுக்கும் மணவோலை அனுப்பி, தனது ராஜ்யம் முழுவதும் பொன்னகரம் போல் அலங்கரித்து, குபேரபவனம் போன்ற தனது அரண்மனையில் துந்துபி முதலிய மங்களவாத்தியங்கள் பேரொலி முழங்க, முகூர்த்தம் நாளையென முதல் நாள் செய்யவேண்டிய சுபச்சடங்குகளைச் செய்துமுடித்தான். மறுநாள் ராஜகுமார தம்பதிகளை விவாகமண்டபத்தில் காணவேண்டுமென்று சகலமான ஜனங்களும் மிகுந்த ஆவலுடன் இருப்பதை அறிந்த ஆதித்யன் தானும் மறு நாள் வருவதாகச் சொல்வது போல் தனது சிவந்த கிரணங்களைப் பரப்பிக் கொண்டு அஸ்தமனகிரியை அடைந்தான்.

அதுவரை ஒடுங்கியிருந்து தனது பகைவன் மறையவே, அட்டகாசத்துடன் கவிந்து கொண்ட இருள்படலத்தை, ஞானிகள் மாயாமயமான அக்ஞானாந்தகாரத்தை தங்கள் ஞானச் சுடரால் தகித்து விடுவதுபோல், நகரத்தில் எப்பாகத்திலும் கோடிசூரியப்பிரகாசமாய் ஜெ லித்துக்கொண்டிருக்கும் தீபச்சுடர்கள் வெருட்டியடித்தன. சகலமான ஜனங்களும் உண்டு களித்து ஆடல் பாடல்களில் மிகவும் களைத்து நித்திரா தேவியால் கொஞ்சம் ஆச்வாசம் செய்யப்பட்டார்கள்.

ராஜகுமாரனை தருமசீலனும் தனக்குக் கடவுளால் அளிக்கப்பட்ட இல்லத்துணைவியின் மெல்லிய கரத்தை நாளை உதயத்தில் பிடித்து மகிழலாமென்னும் சந்தோஷத்தினால் வெகுநேரம் நித்திரையில்லாமலிருந்து கடைசியில் தனது மஞ்சத்திற் படுத்து சிறிது நித்திரை போனான்.

ஆயிற்று, அந்தகாரத்தின் அஸ்தமனம். ஆதித்யனைத் திருப்பள்ளியெழுச்சி பாடித் துதிப்பதுபோல் அழகிய பாத்துவாஜபட்சிகள் தங்களது இனிய குரலில் கொஞ்சிக் கொஞ்சி ஒலித்துக் கொண்டிருந்தன. நாராயணமூர்த்திக்கு முன் சென்று மறை மொழிகளால் துதிக்கும் வாலகில்யரைப் போல், பட்சிஜாலங்கள் ஏகமாய் கூவின. அரண்மனையில் அண்டமதிரும்படி முரசவாத்தியங்களும் மங்கள பேரிகைகளும் முழங்கின. சகலமான ஜனங்களும் விவாகமகோற்சவத்தில் பரபரப்புள்ளவர்களாய் ஆண்களும், பெண்களும் அலங்கரித்துக் கொண்டு அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தார்கள்.

ராஜதம்பதிகளும் தங்கள் அருமைக்குமாரனின் திருமணத்தைக் காணும் சந்தோஷத்தினால் சர்வாலங்காரத்துடன் புரோகிதர்களைத் துரிதப்படுத்தி, தங்களது புத்திரசிகாமணிக்கு மங்களஸ்நானம் செய்து அழைத்துவரும்படி சேடியர்களை அனுப்ப, அவர்கள் ராஜகுமாரனின் சயன அறையிற் சென்று அந்திமாதர்களால் மெதுவாகப் பாடுவித்தும் எழுந்திராமல் அசைவற்றுச் சயனித்திருப்பதைக்கண்டு திடுக்கிட்டுச் சற்று அருகில் சென்று பார்க்கவும் சுவாசமில்லாமல் சவமாய்ப் படுத்திருக்கும் அலங்கோலத்தைக் கண்ட அங்கிருந்த யாவரும் பிரக்ஞையற்றுப் பேய் போல் அலறிக் கூக்குரலிட்டார்கள். இவ்வமங்கள ஒலியைக் கேட்ட அரண்மனையிலுள்ளோர் யாவரும் கும்பு கும்பாய் வந்து தருமசீலனின் கோலத்தைக் கண்டு அலறினார்களே யல்லாது ஒருவர்க்கொருவர் யாதும் மொழிந்தார்களில்லை.

இவ்வமளியின் காரணமறியாத ஸத்தியஸந்த மகாராஜனும் அவன் மனைவியும் தங்கள் குமாரன் சயன அறையில் உண்டான பேரொலியால் திகிலடைந்து, அங்கே சென்று பார்க்க,

யாதொரு குமாரனை மங்களஸ்நாநம் செய்வித்து மங்கள வேதிகையில் தம்பதி சமேதராகப் பார்த்து மகிழ நினைத்திருந்தார்களோ அச்செல்வக்குமாரனே தனது படுக்கையில் தனியனாய், மிருதனாய்க் கிடக்கக்கண்டார்கள்.

ஆகா! அக்காலத்தில் விருத்தர்களாகிய அத்தாய் தந்தையரின் சோகத்தை என்னென்று வருணிப்பது! (புத்ரசோகோ நிரந்தர :) புத்திர சோகத்தில ஈடுபட்டவர்களுக்கு சாந்தியும் உண்டோ? புத்திர சோகமென்னும் ஆறாப்புண்ணுக்கு மருந்தும் உண்டோ? அடியற்ற மரம் போல் சாய்ந்தார்கள். மண்ணுலகையாளும் சக்கரவர்த்தியும், சக்கரவர்த்தினியும் தேயும் மண்மேல் கிடந்து புரண்டார்கள். எல்லோரும் சோகத்திலாழ்ந்து கிடந்தபடியால் தேற்றுவாரற்றுக் கிடந்தார்கள். இச்சங்கதி பட்டணம்முழுவதும் விஷக்காற்று போல் பரவியது. மந்திரிமார்கள், குருமார்கள் யாவரும் இதைக் கேட்டுத் திடுக்கிட்டு அந்தப்புரம் வந்து இக்கோரக்காட்சியைக் கண்டு துடித்த மனதினராய் ராஜதம்பதிகளின் பரிதாப நிலையைப் பார்த்துச் சகிக்கமாட்டாமல் அவர்களிடம் வந்து தேற்ற வெண்ணிக் குளிர்ந்த நீரால் முகத்தைத் துடைத்துத்தெளிவுண்டாகச்செய்து யாவரும் புலம்பி யழுதார்களே யல்லாது ராஜகுமாரன் இறந்த காரணமின்னதென்று எவரும் அறியக் கூடவில்லை.

என்னே காலன் செய்யுங் கொடுமை! விவாகமகோற்சவத்தில் மகிழ்ந்திருந்த இளங்குமாரனை ஒரு நிமிஷத்தில் தன் வசமாக்கிக் கொண்டு ஆநந்த சாகரத்தில் அழகாய் மிதந்து கொண்டிருந்த பட்டணத்தை துக்கக் கடலால் முழுகடித்து அமங்களமாக்கினான்.

செல்வமும் சந்தோஷமும நிலையாமையைப் பற்றியே மகா யோகிகள் இதைத் துச்சமாய் எண்ணித் தள்ளிவிட்டார்கள். இதை யறிந்தும் ஜனங்கள் மேலும் மேலும் இவ்வனித்திய போகத்திற்கு ஆசை வைத்துச் சுகமென்று தோற்றும் துக்கத்தையே அனுபவிக்கிறார்கள். இவையனைத்தும் அம்மாயா சக்தியின் வல்லமையே. இம்மாயாசக்தியை ஜயித்து உஜ்ஜீவிக்கக் கருணாகரமூர்த்தியாகிய ஜகதீசனின் திருவடித் தியானமாகிற சாணைக்கல்லால் ஞான ரத்தினத்தைப் பிரகாசிக்கச் செய்து அதன் ஒளியால் மாய இருளைத் துரத்தலாமல்லாது வேறு வழியில்லை.

நிற்க, அரண்மனையில் எல்லோரும் கதறியும், பதரியும், சோகித்தும், மூர்ச்சித்தும் தேறினார்களே யல்லாது இறந்து போன இளங்குமாரனுக்கு இவைகளால் கிஞ்சித்தும் பிரயோஜனமில்லை. கலியாணம்செய்து கொள்ள வந்த கன்னிகையும், தாய் தகப்பன், பந்துக்களும் ஒருவருடனும் சொல்லாமல் தங்கள் சொந்த தேசத்துக்குப் புறப்பட்டுப்போய் விட்டார்கள்.

புத்திரசோகத்தினால் துடித்துக் கொண்டிருக்கும் ராஜ தம்பதிகளை அரண்மனைப் புரோகிதராகிய பெரியவர் சமீபத்தில் வந்து அமிர்தமயமான ஞானமொழிகளால் அவர்களைத் தேற்ற வெண்ணிச் சொல்லுகிறார் :—

“ஏ! சக்கரவர்த்தியே! சோகித்தது போதும்; எழுந்திரு. விருத்தையாயும், அபலையாயும், பத்து மாதம் சுமந்து பெற்ற வயிர் துடிக்க வருந்தும் உன் பாரியாளைத் தேற்று! இக்காலம் வரை உங்களுக்கு மிக்கான போகத்தையும் அளவற்ற சந்தோஷத்தையும் அளித்த கடவுளுக்கு உங்கள்மீதில் கோபமா? இல்லை, இல்லை. சுகத்திற்கோ துக்கத்திற்கோ ஒரு எல்லையுண்டு. நீங்கள் இதுவரைக்கும் சுகத்தையே அனுபவித்து இன்று துக்கத்தின் எல்லையை மிதித்திருக்கிறீர்கள். கடவுள் நமக்கு துக்கத்தையளிப்பது தான் அனுக்கிரகம். சோகத்தை அறியாதவன் யோகியல்ல. துக்கத்தை அறியாதவன் ஞானி



யாகமாட்டான். எப்பொழுது ஆதித்யன் உதிக்கின்றானோ அதற்கடுத்தது அந்தகாரமும் அந்தகாரத்திற்கடுத்தது சூரிய உதயமும் விசதமல்லவா? அதுபோலவே ஜனனத்தில் மரணமும் மரணத்தில் ஜனனமும். உன் குமாரன் இதற்கு முந்திய ஜன்மங்களில் எத்தனை தாய் தந்தையர்கள் வயிற்றிற் பிறந்து சுகத்தையும், இறந்து துக்கத்தையும் கொடுத்தானோ? அதே மாதிரி உனக்கு சோகத்தையும் ஜனனத்தால் இன்னொரு தாய் தந்தையருக்கு சுகத்தையும் கொடுத்திருக்கிறான். ஆகையால், நீங்கள் சோகத்தை மறந்து மேல் நடக்க வேண்டியதை யோசிக்க வேண்டும்” என்று பலவிதமான நன்மொழிகளால் தேற்றினார்.

அம்மொழிகளால் ஸத்தியஸந்தனுக்குக் கிஞ்சித்துத் தெளிவு தோன்றிச் சில வசனங்கள் சொல்லலுற்றான். “எனது குலதெய்வம் போன்ற குரு மூர்த்தியே! எனது அருமைக் குமாரன் இறந்து போன துக்கத்தைக் கொஞ்சம் தேற்றிக் கொண்டாலும் விவாக மகோற்சவத்தில் ஆவலுடனிருந்த கருமசீலனுக்கு விவாகமில்லாமல் சிதையில்வைக்க நான் தாளமாட்டேன். ஆகையால் இறந்த என் குமாரனுக்குப் பெண்ணை விவாகம் செய்து கொடுப்போருக்கு என் ராஜ்யத்தில் பாதியளிப்பேனென்று ராஜ்யத்தில் எங்கும் பறை சாற்றுவித்துக் குழந்தையின் சரீரம் கெடாமலிருக்க ஏற்பாடு செய்யும்படி தகுந்த மருத்துவர்களுக்கு ஆக்ஞாபிக்கவும். தாங்களும் இக்காரியங்களைக் கூடவிருந்து நடத்திவைக்கவேண்டும்” என்று பிடிவாதமாய்க் கூறினான்.

சக்கரவர்த்தியின் வார்த்தையைத் தடுக்க முடியாதவராய் முதல்மந்திரியுடன் ஆலோசித்து வள்ளுவன் மூலமாய் நானாதேசங்களில் பறை யறைவித்து இறந்துபோன ராஜகுமாரனுக்குக் கன்னிகையை விவாகம் செய்துகொடுப்பவருக்குப் பாதி ராஜ்யம் அளிக்கப்படுமென்று தெரிவித்தார்கள்.

நிற்க, அவ்விராஜ்யத்தில் ஒரு மூலையில் ஒரு சிறிய கிராமத்தில் வசித்துவந்த ஒரு விருத்தப் பிராமணருக்கு ஐந்து பெண் குழந்தைகள் இருந்தார்கள். அவர்களில் ஐந்தாவது பெண்ணாகிய சாருமதி யென்னும் பெண்மணி சர்வலட்சணங்களும் பொருந்தி சாந்தமும் கருணையும் நிரப்பிவைத்த பொற்பேழை எனப் பொலிந்து விளங்கினாள்.

தாரித்திரக் கடலுக்குக் கரைகாணாது தவிக்கும் அவ்வேதியருக்கு இப்பறையோசையின் விவரம் தெரியவும், தனக்குள் யோசித்துத் தமது ஐந்து குமாரத்திகளுள் ஒருத்தியை இவ்வரசனுக்குக் கொடுத்துவிட்டால் இத்துஷ்ட தாரித்திரியத்தைத் தகித்துவிட்டுக் கஷ்டமில்லாமல் மற்றோருடன் இஷ்டபோகங்களை அனுபவித்துச் சுகிக்கலாமென்று மனதில் நிச்சயித்துக் கொண்டு தன் குமாரத்திகளுள் முதல்வளிடம் இதைச் சொல்ல அவள் அதற்குச் சம்மதிக்காததுடன் தன் தகப்பனின் கடின சித்தத்தை வெறுத்துப் புன்மொழிகளால் பலவாறு ஏசினாள். இவ்வாறே மற்று மூவரும் கூறிவிட்டார்கள்.

ஐந்தாவது குமாரத்தியாகிய சாருமதியென்பவள் தன் தமக்கைமார் தந்தையைக் கடிந்து பேசியதையும், தன் தந்தை வாடிய முகத்துடனிருப்பதையும் பார்த்துத் தன் மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு, தந்தையருகில் வந்து நாணத்துடன் தலை குனிந்து வணங்கிப் புன் சிரிப்புத்தோன்றிய முகத்துடன் கிளிமொழிபோன்ற இனிய வசனங்களால் தந்தைக்கு மகிழ்வுண்டாக இவ்வாறுரைக்கின்றாள்:—

“அன்புள்ள பிதாவே! ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ என்னும் பெரியோர் வாக்

இன்படி மக்களுக்குத் தாய்தந்தையரே பிரத்யட்ச தெய்வமல்லவா? பிரபஞ்சத்தில் சராசராத்மகமான சகல ஜீவராசிகளையும் அவலீலையாய்ப் படைத்து ரட்சித்துக் காக்கும் கருணைக் கடலாகிய கடவுளுக்குக் கைம்மாறு செய்ய எப்படி ஒருவருக்கும் இயலாதோ, அவ்வாறே மக்களைப் பெற்று வளர்த்து அளவிலாத் துன்பங்களை அன்பினால் சகித்து, கருணை மிகுந்த பிரேமையோடு போற்றி வளர்த்தாதரிக்கும் தாய் தந்தையருக்குக் கைம்மாறு செய்ய மக்களாலியலாது; ஆயினும் பேதையாகிய இவ்வேழைச் சிறுமியின் விண்ணப்பத்தை ஏற்று இவ்விராஜபடர்களிடம் என்னை ஒப்புவித்து சவமான ராஜகுமாரனுக்கு என்னை விவாகம் செய்து கொள்ளும்படி அனுப்பி வைத்து அதனால் தங்களுக்குக் கிடைக்கும் அளவற்ற ஐசுவரியத்தால் தாங்களும் எனது சகோதரிகளும் கொடுந் துன்பமாகிய தாரித்திரியத்தினின்றும் விடுதலை பெற்று, சுகத்தை யனுபவிப்பீர்களாகில் தங்களால் போற்றி வளர்க்கப்பட்ட இச்சரீரத்தால் நான் கிஞ்சித்தாவது பயனடைந்தவளாவேன். ஆகையினால் என்னை அனுப்பிவைக்கும்படி கிருபை செய்யவேண்டும்'' என்று வினவிய அழகிய சிறு பெண்ணின் மழலைமொழியைக் கேட்டு மனமுருகிய அவ்வேதியர் தன்னையும் நொந்து, தன் வறுமையையும் கடிந்துகொண்டு ஒன்றும் தோன்றாமல் தயங்கியிருக்கும் பொழுது, அச்சிறுமி எழுந்து வெளியில்வந்து ராஜபடர்களிடம் தான் தன் தந்தையால் அனுப்பப்பட்டு வந்ததாகவும், தனக் குவியல்களையும், பாதிராஜ்யத்தையும் தன் தந்தையிடமளிக்கும்படியும் வேண்டவே, ராஜபடர்கள் குதூகலித்தவர்களாய் அக்கன்னிகைக்கு ராஜமகிஷிக்குச் செய்யும் மரியாதைகளுடன் பல்லக்கிலேற்றிக் கொண்டு தனக் குவியல்களையும், ராஜ்ய சாசனத்தையும் அந்தணரிடம் அளித்துச் சாருமதியைச் சக்கரவர்த்தியின் திருமாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள்.

செல்லவும், கண்டோர் கேட்டோர் யாவரும் இச்சிறுமியின் விதியின் கோலத்தைக் கண்டு வருந்தித் தவிக்க, ராஜாக்ஞையின்படி உயிரற்ற தருமசீலனுக்கும் சௌபாக்யவதி சாருமதிக்கும் விவாக மகோற்சவம் வெகு விமரிசையாய் நடந்து முடிந்தது.

'கலியாணமும், கல்லெடுப்பும்' என்று கலந்து சொல்லும் வாக்கியத்தை மெய்ப்படுத்தியது போல், உடனே ராஜகுமாரனுக்குப் பிரேதச் சடங்குகள் செய்ய புரோகிதர்கள் யத்தனம் செய்யவே அரண்மனை எங்கும் அல்லோல கல்லோலமாய் அழுகுரலோசையும் ஆரவாரமும் அண்டம் பிளக்க, அரசகுமாரனின் அகால மரணத்தைக் குறித்து வருந்துவோரும் அன்னை தந்தைகளின் ஆருத்துயரத்தைக் கண்டு வருந்துவோரும், அழகிய சாருமதியின் அகால வைதவ்யத்தைக் கண்டு உருகுவோருமாய் நகரமெங்கும் சோக சமுத்திரத்தில் மூழ்கியிருந்தது.

அக்காலையில் குணவதியாகிய சாருமதி இக்கோலத்திற்கெனத் தன்னைப்படைத்த கடவுளைத் தொழுது மாமி, மாமன்மார், பெரியோர்களையும் நமஸ்கரித்துத் தன் பதியுடன் தானும் சககமனம் (உடன்கட்டை) செய்யத்தனக்குஉத்திரவு கொடுக்கும்படி வேண்ட யாவரும் இதைக்கேட்டு திடுக்கிட்டு அவ்வாறு செய்ய வேண்டாமென்று பலவிதமாய்த் தடுத்து அவ்விராஜ்யத்திற்கு அரசியாயிருந்து ராஜ்யத்தைப் பரிபாலிக்கவும், புத்திர சோகத்தால் வருந்தும் மாமி, மாமன்மார்களுக்குத் தேறுதலாயிருக்கவும் வேண்டுமென்று எல்லோரும் வருந்தியுரைத்தும் கேளாமல் துக்கத்தால் நிறைந்த மனம் மிக்கத்துடிக்க மெத்தவும் கம்பீரமாய் உத்தமியான சாருமதி உரைக்கின்றாள். "அறிவிற் சிறந்த பெரியோர்



களே! அதிருஷ்ட தேவதையை ஹதம்செய்து அமங்களமே உருவாய் ஜனித்த இப்பாப தேகத்திற்கு ராஜ்யபோகமும் தகுமோ? பெண் ஜன்மமே மிகவும் கடையானது. அதிலும் நான் புருஷனிறந்த கைம்பெண். உலகத்தில் மாதருக்கு எவ்வளவு சீக்கிரத்தில் வைதவ்யம் வந்தாலும் தன் புருஷன் கரத்தால் மங்கள சூத்திரம் தரிக்கும் வரையிலாவது மங்களகரமிருக்கும். அதுகூடயில்லாமல் விவாகம் செய்து கொள்ளும் போதே வைதவ்யமும் கூடக் கலந்த மாதரைக் கேட்டு இருப்பீர்களா? இவ்வளவு துரதிருஷ்டமுள்ள இத்தேகத்தை நமது பாரத பூமியின் வீரப்பெண்களால் சந்தோஷமாய் அனுஷ்டிக்கப்பட்ட சககமன மென்னும் அக்கினியில் புடம் போட்டுப் பரிசுத்தம் செய்து கொண்டு எனது உத்தம பர்த்தாவுடன் சுவர்க்கத்தைச் சேர அனுமதி கொடுக்க வேண்டும்'' என்று சொல்லி மிகவும் பிடிவாதமாய் உறுதியோடிருக்கும் இச்சிறு பெண்ணைக் கண்டு கல்லுங்கரைந்துருக, யாவரும் இறைந்தழுதார்கள். அரசனின் அறியாமையை நினைத்துத் தூற்றினார்கள். விதியின் வலியை வெறுத்தார்கள்.

பிறகு வேறு வழியில்லாது செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றிச் சந்தனக்கட்டைகளால் ஜதையடுக்கி ராஜகுமாரனையும், பக்கத்தில் சாருமதியையும் வைத்து, மஞ்சள் வஸ்திரம் தரிக்கச்செய்து, மங்களக்கோலம் பூண்டு மந்தகாசத்துடன் பஞ்சணை மெத்தைமேல் சயனித்திருப்பதைப் போலிருக்கும் சாருமதியைக் கண்டு ஆச்சரியத்துடனும், அடக்கொணாத் துக்கத்துடனும் புஷ்பங்களை வாரியிறைத்தார்கள். புகைமிகுக்கும் பதார்த்தங்களால் நிறைந்த ஜதையின்மேல் அக்கினி பகவானை ஆவாகனம் செய்து, ஆகாயமளாவப் புகைவதைக் கண்டு சகிக்க முடியாதவர்களாய் யாவரும் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள்.

சிறு பெண்ணாகிய சாருமதி பயத்தினாலும், சோகத்தினாலும், சகிக்க முடியாத புகையின் திணரலாலும் மிகவும் கலங்கிக் கருணைக் கடலாகிய ஜகதீசனை நினைத்துத் துதிக்கின்றாள். "ஹே கருணாநிதியே! அனாதரட்சகா! ஆபத்பாந்தவா! தீனசரண்யா! உமையொருபாகா! எள்ளுக்குள் எண்ணைபோல் இவ்வண்ட சராசர மெங்கும் நிறைந்து விளங்கும் பரிபூரணவஸ்துவே! பாலனைக் காக்கக் காலனையுதைத்த கருணைக் கடலே! தேவர்களின் துன்பந்தீர்க்கக் காளகூட விஷத்தை யுண்ட நீலகண்டனே! ஜ்வாலை மிகுந்த தாபாக்கினியில் தவிக்கும் இவ்வேழையின் துன்பம் நீயறியவில்லையா? அறிந்தும் இப்பாபியின்மேல் இரக்கம் வரவில்லையா? சொல்லவொண்ணா வல்வினையின் தொல்லையா? என்னையனே! என் ஆவியை வதைக்கமேல் தகித்து வருத்தும் கோரநெருப்பின் கொடுந்துன்பம் என்னால் பொறுக்க முடியவில்லையே!'' என்று கதறினாள். 'உமை யொருபாகா! அபயமபயம்' என்றோலமிடும் சிறுமியின் முறைக் கிரங்கிக் கருணா மூர்த்தியாகிய சிவபெருமான் அன்புருவாய் அருள் மழைபொழிய வெண்ணி, மூர்த்தி ஆகாசத்தில் மேகம்கறுத்து மின்னல் இடியுடன் பெருமழை பொழியச் செய்து, கடு நெருப்பை அணைத்து, மரித்த கணவனுடன் விரித்த ஜதையில் படுத்து மாளவிருந்த கறுவிழிச் சிறுமியைக் குளிரச் செய்து அடுத்துத் தானும் ஒரு வனசரனைப்போல் அப்பெண்மணியின் எதிரில் தோன்றினார்.

(தொடரும்)

# ராவீந்திரநாத் தாகூரின் கல்விச் சிறப்பு.

### கவிஞரின் போற்றுதற்குரிய திருவிளையாடல்கள்.

ஸ்ரீமான் அ. நா. சிவா, "கலைமகள் சங்கம்."

உதயச்சந்திரன்.

நீலகண்ட சாது, குழந்தை தொட்டிலுள் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்ற போழ்து, தெய்வ கற்பனைகளைப் பற்றிய ஞானக் கேள்விகள் அவனது இதயத்துள் உதயமாயிற்று. அருகிலிருந்த சன்னியாசியைப்பார்த்து வினவினன்:—

"ஓ! பெரியோரே! குழந்தைகளின் கண்களுள் நிலவுந் தூக்கம் எங்கிருந்து வருகின்றது என்பதை அறிந்தவர்கள் யாருமுளரோ?"

சன்னியாசி:—ஓ நீலகண்ட! ஆம்!! நான் அறிவேன். வனதேவதைகள் சஞ்சாரஞ் செய்யும் கானகத்துள் மினிமினிப்பூச்சிகள் பெரிதும் வதிகின்றன. அவண் மாந்தரீகம் மயக்கம் வாய்ந்த இரண்டு பூக்கள் புட்பிக்கப்படுகின்றன. அப்பூக்களிலிருந்து, தூக்கம் பிறக்கின்றது. அத்தூக்கம் குழந்தைகளின் கண்களை முத்தமிடும் பொருட்டு ஒவ்வொரு வீடாக நுழைந்து உலவுகின்றது.

நீலகண்டன்:—ஓ! பெரியோரே! தூங்கும் பொழுது குழந்தைகளின் வாயில் உதயமாகும் புன்னகைச் சிரிப்பு எங்கிருந்து வருகின்றது?

சன்னியாசி:—கற்பு நிறை வாய்ந்த பெண்கள் ஆடவர்களின் வெகுளியை விலக்கி அவர்களது முகத்தில் கடைக்கண் நாட்டத்தைத் திருப்புவதுபோல் குளிர்ச்சி யுற்ற சந்திரன் மாரிகாலத்து மேகத்தை விலக்கி, உலகத்தைப் புன்னகையோடு பார்க்கின்றான். பனி நிறைந்த இரவில் அச்சந்திரனின் வெண்ணகை பொதிந்த பார்வையிலிருந்து புன்னகைச் சிரிப்பு உதயமாகின்றது. அச்சந்திரனின் புன்னகைச் சிரிப்பு பரிசுத்தமான குழந்தைகள் உறக்கத்திலிருக்கும் போழ்து அன்னைக்கு அறியாமல் அக்குழந்தைகளின் இதழைத் தொட்டுத் முத்தமிடுகின்றது என்று உலகம் முழங்குகின்றது.

நீலகண்டன்:—குழந்தையின் மேனியைத் தொடுவதினால் ஏற்படும் ஆசைப்பெருக்கும் அக்குழந்தையின் மேல் தோற்றமாடும் வனப்பும் அக்குழந்தை பிறப்பதற்கு முன்னர் எங்ஙனம் ஒளிந்திருந்தன?

சன்னியாசி:—குழந்தையைப் பெற்ற அன்னை வனப்பு வாய்ந்த கன்னிகையாகவிருந்த போழ்து, மேற்கூறிய இனிப்புற ஆசைப்பெருக்கும் குழந்தையின் மேற் தோற்றமாகும் பல வண்ணம் பொழிந்த அழகும், அவ்வன்னையின் அன்பின் சுழலுளடங்கி, பொறுமை, ஆசை, பக்தி, உண்மை எல்லாப் பொருட்களோடு கலந்து அவளது இதயத்துள் உறைந்து கிடந்தது. இப்பொழுது அத்தகைய இனிப்புற ஆசைப் பெருக்கு, அன்பின் மிளிர்ச்சி, பக்தியின் கிளர்ச்சி, உண்மையின் உணர்ச்சியாகிய பொருட்கள் மிகுதியும் கூட்டுறவு முதிர்ச்சி பெற்று மிருதுவாகிய தோற்றத்தோடு குழந்தை யுருவமாக வெளி வந்திருக்கின்றன.

மேக மண்டலக் காட்சி.

அன்னையின் மடி மேலிருந்து பாலருந்திக் கொண்டிருந்த பாலகன் அன்னையின் முகவிலாசத்தை உற்று நோக்கினன்.

"ஓ! அன்புற்ற அன்னாய்! ஒவ்வொரு நாளும் தங்கச்சுடர் வாய்ந்த சூரிய வெளிச்சத்திலும்



வெண்மை பொழிந்த சந்திர வெளிச்சத்திலும் நான் விளையாடிக் களிப் பெய்துகின்றனன். மேகமண்டலத்துள்வழி பாலர்கள் விளையாடும் பொருட்டு என்னை அவர்கள் கூப்பிடுகின்றனர்கள். நான் எப்படி மேகமண்டலத்துள் கலந்து கொள்வதுஎன்று அவர்களைக்கேட்டேன். "நான் பூமியின் மேல் எழுந்து நின்று இரண்டு கரங்களையும் மேற்றூக்கி வானத்துக்கு வாழ்த்துக் கூறினால் நான் மேகமண்டலத்துள் அழைத்துக் கொள்ளப்படுவேன்" என்று அவர்கள் கூறினார்கள். "எனது அருந்தவ அன்னை எனது வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருப்பாள், அவளைத் தனியாக விட்டு நான் எப்படி, எங்ஙனம் பிரிந்து வருவது' என்று வினவினேன். இச்சொற்களை அறிந்த மேகமண்டலத்தவர்கள் புன்னகை செய்து திரும்பிப் போந்தனர்கள்."

"ஓ! அன்னாய்! சாமளவர்ணம் பொழிந்த மேகமண்டலத்துள் சென்று விளையாடுவது ஆனந்தக்களிப்பாக விருப்பினும் அன்னையைத் தனியேவிட்டுப் பிரிந்து சந்தோடமனுபவிக்கும் குழந்தைகள் இயற்கைச் சிறப்பிற்கு உரித்தானவர்கள் அல்லவெனும் நீதி வாசகம் என்னைப் பற்றுகின்றது."

"ஓ! அன்னாய்! நான் பானுலகம் சென்று விளையாடுவதைவிட மற்றொரு நூதன விளையாட்டுக் கண்டு பிடித்திருக்கின்றனன். நமது வீட்டு உச்சிக் கூரையைப் பலவண்ணம் பொழிந்தவானமாகவும், உங்களை அதன் நடுவில் காணங்குஞ் சந்திரனாகவும் நியமித்திருக்கிறேன்."

"நான் மேகம்போல் நிலவி உங்களைச் சூழ்ந்து விளையாடிக் களித்தோங்கும் பெற்றியடையவே மிகுதியும் விரும்புகின்றனன்."

சமுத்திர அலைகளின் காட்சி.

"ஓ! அன்னாய்! சமுத்திர அலைகளுள் வாழும் மனுக்கள் களியாட்டத்துக்கு என்னை அழைக்கின்றனர்கள்."

"நான் எப்படி சமுத்திர அலைக் கூட்டத்துள் கலந்துக் கொள்வதென்று அவர்களைக் கேட்டனன். அவர்கள் 'நீ கடற்கரை யோரத்தில் வந்து நின்றுகொண்டு கண்களை மூடிக்கங்கா தேவிக்கு வாழ்த்துப் பாடினால் நீ சமுத்திர அலைகளுள் கூட்டுறவு பெறுவாய்' என்று சொன்னார்கள்."

"'மாலைப்பொழுது நெருங்கியவுடன் எனது அன்னை எனது வருகையை ஆவலோடெதிர் பார்த்திருப்பாள். நான் எப்படி, எங்ஙனம், அவ்வம்மையை விட்டகன்று வருவேன்?' என்று பகர்ந்தனன். அவர்கள் எனது வாசகத்தைச் செவியுற்றுத் திரும்பிச் சென்றனர்."

"ஓ' அன்னாய்! சமுத்திர விளையாட்டைவிட நான் ஓர் உயரிய விளையாட்டுக் கண்டுபிடித்திருக்கின்றனன். சமுத்திரத்தை அடக்கியாளும் கரையாக உங்களை நியமித்து, நான் சமுத்திர அலையாக இருக்க விரும்புகிறேன். அலைகள் நாதம் பாடிக் கரைமேல் மோதுவனபோல் நான் உங்கட்கு வாழ்த்துப் பாடி விளையாடி வந்து உங்களது மடிமேல் போதிக் களிப்பெய்ய விரும்புகிறேன்."

"இத்தகைய விளையாட்டுள் நற்றொண்டாற்றி நான் எனது அன்னைக்கு அன்பின் முதிர்ச்சியை வெளியிடும் பொழுது இவ்வுலகில் நற்றொண்டாற்றுபவருள் என்னைவிட மற்றெவரும் சந்தோஷமெய்த முற்படார்கள் என்பது எனது சிற்றறிவின் துணிவு."

"ஓ! உழுவன்புற்ற அம்மையே! எனது ஊழியம் பிறிது யாதுள?"

(தொடரும்.)

# ஓர் சிறிய உபன்யாசம்.

(ஸ்ரீமதி S. R. ஜயம்மாள்.)

என் பிரிய சகோதரிகளே!

வீடு, வாசல், நகை, நட்பு, பூமி, நாணயம், பசு, குதிரை முதலியவைகளை 'சொத்து' என்பார்கள். ஆனால் இச் சொத்துக்கள் இன்றைக்கு இருக்கும், நாளைக்குக் கண்ணுக்குத் தெரியாமற் போய்விடும். இவைகள் ஒரு சாசுவதமான சொத்தல்ல. இவைகளை எவராவது திருடிக் கொண்டு போய்விடலாம். ஆதலால் புத்திசாலியானவன் யாராலும் திருடமுடியாததும், என்றைக்கும் அழியாப் பொருளாயும், எந்த வரியையும் கட்டத்தகாததாயும் கடைசி வரையில் தன் சகோதரனுக்குக் கூடப் பங்கில்லாமலிருக்கும், நமக்கு அபாரமான சௌக்கியத்தை யளிக்கும் சொத்தை அடையும் உத்தியோகத்தைச் செய்யவேண்டும்.

கல்வி பயின்றவளே இந்த உலகத்தில் பரம சௌக்கியம் அடைந்தவள். அக்ஞானமென்னும் இருட்டில் சிக்கிக்கொண்டிருக்கும் பொழுது கல்வி என்னும் சூரியன் வெளிச்சத்தைக் கொடுக்கிறான்.

மனிதனுக்கு இந்த உலகில் கல்வி யில்லாமல் ஆயிரம் கண்களிருந்தாலும் பிரயோஜனமில்லை. இந்தக் கண்களில்லாமல் முக்கியமான ஒரு கண் இருந்தாலும் அவன் இந்த உலகத்திலிருப்பவைகளை யெல்லாம் தன் அகக்கண்ணால் கண்டு களிப்பான். இக் கண் எது வென்றால் ஞானமென்பது. ஞானத்தின் தாய் கல்வி என்பவள். இந்தக் கல்வி என்பவளை நாம் அடையாவிட்டால் ஞானமென்னும் குழந்தை நம்மிடம் எப்படிப் பிறப்பாள்? இந்தக் கல்வி என்பதிருந்தால் நாம் எவ்வளவு தரித்திரமாகவே இருந்தாலும் நமக்கு அனேக கஷ்டகாலங்களில் உதவுவாள். அதுவுமல்லாமல் இந்தக்கல்வி யென்பது இந்த மண்ணுலகைத் தவிர்த்து சுவர்க்கத்திற்கும் வாசலாயிருக்கிறது.

ஞானமும் சுபுத்தியுமே நம் பக்கத்து வெள்ளியென்றும் அதில் நாம் அடையும் அனுபவமே தங்கம் என்றும் அனேக புலவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அதனால் கல்வி என்பது உலகத்தில் ஸ்திரீ புருஷர் என்னும் இரண்டு வகுப்பினருக்கும் முக்கியமாக வேண்டியது.

வித்தியாவந்தரின் மனது எப்பொழுதும் சாந்தமாகவே இருக்கும். எவ்வளவு கஷ்டங்கள் நெருங்கினாலும் தடுத்துக் கொள்வார்கள். பிரபஞ்சத்தில் எவன் மனதை சௌக்கியமாய் வைத்துக்கொள்கிறானோ அவனே சுகியாவான். வெளியில் எவ்வளவு சௌக்கியமிருந்தாலும் உள்ளே சௌக்கியமில்லாமலிருந்தால் அது ஒரு சௌக்கியமாகுமா? காலில் செருப்புப்போட்டுக் கொண்டு முள்ளின்மேல் நடந்தால் நம் காலுக்கு ஒரு பாதகமும் இல்லை. அதை விட்டுக் காலில் முள் தைத்துக்கொண்டிருக்கும் பொழுது பட்டுமெத்தையின் மேல் படுத்துக் கொண்டால் வலி போய் விடுமா? ஆதலால மனதைச் சுகமாய் வைத்துக் கொள்ள ஞானத்தைச் சம்பாதிக்கவேண்டும். ஞானத்தைச் சம்பாதிக்கக் கல்வி வேண்டும். அதனால் அட்சய பாத்திரம் போலிருக்கும் இந்தக் கல்வியைச் சம்பாதித்து விட்டால் இதனால் ஞானம் உண்டாகிக் கடைசியில் சுவாமியைக் கண்டு களிக்கும் வழியைக் கூடக் காண்பித்துக் கொடுக்கிறது. ஈசுவரனைக் கண்டு களிக்கும் ஆனந்தத்தில் இந்த உலகத்தின் சௌக்கியங்களை எல்லாம் உதைத்துத்தள்ளி விட்டு எப்பொழுதும் அந்த சௌக்கியத்திலேயே இருக்கும் ஞானிகள் நம்மை விடப்



புத்தியில்லாதவர்களா? பாருங்கள்! உங்கள் முன் ஒரு பவுன் நிறைந்த பையையும், ஒரு வாழைப் பழம் நிறைந்த கூடையையும் வைத்தால், அப்பொழுது நீங்கள் பவுன் நிறைந்த பைதான் விலை மதிக்கப்பட்டதென்று அதை எடுக்கப் போவீர்களல்லவா? அந்தவிதம் இந்த உலகத்தில் நடக்கும் சுகங்களைவிட தெய்வசுகங்களே நல்லதென்று ஞானமுடையவன் அதைப் பின்பற்றுவான். அதைப் பின்பற்றுபவனுக்கு இந்த உலகில் எவ்வளவோ கஷ்டங்கள் வந்தாலும் தெய்வசுகத்தின் பேரிலேயே ஞானம் போவதால் இந்தக் கஷ்டங்கள் மனதிற்கு ஊன்றாது.

ஸ்திரீக்கு நகைகள் அணிந்து கொண்டால் காந்தி என்னமோ வருகிறது. ஆனால் அழகில்லாதவளுக்கு எவ்வளவு நகைகள் பூட்டினாலும் நன்றாக இருப்பதில்லை. எப்பொழுது அழகு போகிறதோ அப்பொழுது நகை போட்டுக் கொண்டாலும் அதின் தேஜசு போய் விடுகிறது. நகையும் அழகும் ஸ்திரமல்ல. ஆகலால் கல்வி என்னும் அழியாப் பணத்தினால் சுகம், ஞானம் என்னும் நகைகளை தரித்துக் கொள்ள முயர்ச்சி செய்யவேண்டும். இந்த நகைகளைக் குருடன், நொண்டி, செல்வவான், ஏழை, குழந்தை முதலியவர்களில் எவர் தரித்துக்கொண்டாலும் நன்றாய் விளங்கும்.

ஸ்திரீகளுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பது கெடுதியென்று நம் தேசத்திலல்லாமல் பலர் ஜெர்மனி முதலிய தேசங்களிலும் நம்பியிருந்தனர். அப்புறம் அத் தேசங்களில் பெண்கள் மூடர்களாயிருந்தால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் தாயின் புத்தியையே அனுசரித்து நடந்து கடைசியில் அவர்களும் மூடர்களாகி விடுவார்கள்; இவ்விதமே பிரபஞ்சம் முழுவதும் குழந்தைகளெல்லாம் வளர்ந்து வந்தால் தேசம் முன்னேற்ற மடையுமா என்பதை ஆலோசித்து அவர்களையும் கல்வி கற்க விட்டனர். ஆதலால் அவர்களில் எல்லா ஸ்திரீகளும் கல்விப் பயிற்சியுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

அதுவுமல்லாமல் இப்பொழுது மிகவும் புத்திசாலியும் கல்விமானும் ஆன ஒரு மனிதன் மிகவும் புத்தியில்லாதவளும் கல்வியற்றவளும் ஆன ஒரு பெண்ணை மணந்தால் அச்சம்சாரம் எப்படியிருக்கும் என்பதை நீங்களே ஊகித்துப் பாருங்கள். சம்சாரம் என்பது ஒரு ராஜ்யமேயாகும். அதில்தம்பதிகள் இருவரும் ராஜனும் மந்திரியும் போல் ஆவார்கள். இப்பொழுது ராஜனுக்குத் தன் ராஜ்யத்தை ஆளத் தகுந்த யோசனை சொல்ல ஒரு நல்ல மந்திரியில்லாவிடில் அவன் பாடென்னவாகும் பாருங்கள்! அவனே இருவரின் காரியங்களையும் நடத்திக் கொண்டு மிகவும் கஷ்டபடுவானல்லவா? அவ்விதமே சம்சாரமென்னும் ராஜ்யத்தை யாதொரு இடையூறமின்றிச் சரிவர நடத்த ராஜனுக்குத் தகுந்த மந்திரியைப் போல், மனிதனுக்குத் தகுந்த மனைவிவேண்டுமல்லவா? இவ்விதமான மனைவி வேண்டுமானால் அவள் நன்றாகக் கல்வி பயின்றிருக்க வேண்டு மல்லவா? கணவனுக்குத் தகுந்த மனைவியில்லாமல் அவன் சம்சாரத்தை நடத்தப் போவனேயானால் ஒரு வண்டிக்கு ஒரு குதிரையையும், மாட்டையும் கட்டினால் அவை எவ்வளவு நன்றாக அவ்வண்டியை இழுத்துக் கொண்டு செல்லுமோ அவ்வளவு நன்றாக அச்சம்சாரம் நடைபெறும்.

நம் குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்புவதால் வீண் அரட்டை அடிப்பது, பொய் சொல்வது முதலிய கெட்டகுணங்களைக் கிஞ்சிற்றேனும் விட்டொழித்து அங்கு கற்றுக் கொடுக்கும் நல்ல குணங்களில் எள்ளளவாவது கற்றுக் கொண்டு வருவார்கள் என்பதில் கிஞ்சிற்றும் சமுசயப்பட வேண்டியதில்லை. ஆதலால் குழந்தைகளைக் பள்ளிக்கூடம் அனுப்பி எழுதப் படிக்கப் கற்றுக் கொடுங்கள். வெறும் படிப்பதும் எழுதுவதும் மாத்திரமே கல்வியென்று அல்ல.

இது கல்வி கற்க ஒரு சிறிய உபாயமே ஒழிய நாம் வீட்டில் செய்யும் சிறிய வேலைகள்—தைப்பது, கோலம் போடுவது, சமைப்பது, சித்திர வேலை, குழந்தைகளைச் சரியாய் பார்த்துக் கொள்வது, பாடுவது, கணக்குப் போடுவது முதலிய வேலைகளுக்குக் கல்வி யென்றே பெயராகும். மேற் கூறிய இந்தவேலைகள் இல்லறம் நடத்தி வரும் நம் பெண்மணிகளுக்கு வேண்டிய கல்விகளில் முக்கியமாய் வேண்டிய சிலவற்றை எடுத்து கூறியுள்ளேன்.

"எனக்குக் கல்வி வருகிறது, எனக்குக் கல்வி வருகிறது" என்று சதா புஸ்தகமும் கையுமாய் இருந்து விட்டால் கல்விவந்தபடி இல்லை. தன் சம்சாரத்தைச் சரிவர நடத்திக்கொண்டு மாமி, நாத்தி முதலியவர்களிடம் ஒத்து நடந்து கொண்டு கணவனுக்குத் தன்னால் எத்தனை விதத்தில் சகாயம் செய்ய முடியுமோ அத்தனை விதத்தில் அவருக்குச் சகாயம் செய்து அவரைச் சந்தோஷசாகரத்தில் முழுகவைத்துக் குழந்தைகளுக்கு தேகம் சௌக்கியமாய் இருக்கும்படி பார்த்துக் கொண்டு அவர்களுக்கு எப்பொழுதும் நல்ல விஷயங்களையே போதித்துக் கொண்டு, இந்த வேலைகளெல்லாம் ஆனபின்பு மீதி நாழிகையில் தையல் வேலையோ, படிப்பதோ, பாடுவதோ முதலிய காரியங்களைச் செய்து கொள்ள வேண்டும். இவைகளும் ஒரு விதக் கல்வியே ஆகும். நாம் இப்படி சரிவர நடந்து கொண்டால் நம் குழந்தைகளும் நாம் செய்வதை யெல்லாம் நம் பக்கத்திலே இருந்து பார்ப்பதால் அவர்களும் கொஞ்சமும் சோம்பற் படாமல் தாங்களும் ஏதாவது நல்ல காரியங்களையே செய்து கொண்டு பெரியவர்கள் ஆக ஆக இன்னும் அநேக நல்ல காரியங்களைச் செய்து உலகப்பிரசித்தி அடைவார்கள்.

முன் காலத்தில் நம் இந்தியாவில் புருஷர்கள் ஸ்திரீகளை வேலைக்காரர்களைப்போல் எண்ணிக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் ஸ்திரீகளுக்கு ஞானோபதேசம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை அலட்சியம் செய்யாமல் நல்ல மரியாதையுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நல்ல புத்தி புகட்டிக் கொண்டு கல்விகற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகையால் சீதை, சுகன்யை, சாவித்திரி முதலிய ஸ்திரீரத்தினங்கள் அவ்வளவு தேஜஸ்விகளாயும், பதிவிருதைகளாயும் இருந்தனர் அப்பேர்பட்ட பெண்மணிகளுக்குச் சத்தியசீலனும், மகாதேஜஸ்வியும், மகா பலமுடையவனுயு முள்ள குழந்தைகள் பிறந்து உலகப்பிரசித்தி அடைந்தனர். இப்பொழுதும் ஸ்திரீகளை நன்றாய்க் கல்வி கற்கசெய்தால் அவர்களுக்கும் நல்ல குணங்களுடைய குழந்தைகள் பிறந்து இந்த உலகத்தில் முன் பிரஜைகளாகி தேசத்தை முன்னேற்றம் செய்வார்களென்பதற்கு யாதொரு சமுசயமும் இல்லை. இதற்கு உதாரணமாய் நம் சுமித்திரை, விதுலை, குந்தி முதலிய பெண்மணிகளை எடுத்துக் கொள்வோம். லட்சுமணன் தன் தாயான சுமித்திராதேவியிடம் சென்று ராமன் காட்டிற்குப் போகும் பொழுது தானும் அவனுடன் போக உத்திரவு அளிக்கவேண்டுமென்று கேட்க அதற்கு சுமித்திரை 'என் சக்களத்தி பிள்ளை எப்படியாவது போகட்டும்; நீ என்னுடன் சௌக்கியமாகவிரு' என்று சொல்லாமல் காடே அயோத்தியை என்றும், சீதையே தாயென்றும், ராமனே தசரதனென்றும் எண்ணிக் கொண்டு போய் விட்டுத் திரும்பிவா என்றும் சொல்லி அனுப்பித்தாள். அவள் கல்வி கற்காவிடில் அவ்வளவு நல்ல புத்திரனை பெற்றெடுப்பாளா? அல்லது தன் பிள்ளைக்குப் புத்திமதி கூற அவளுக்குத் தெரியுமா? ஆகையால் பெண்கள் நன்றாய்க் கல்வி பயின்று குணவதிகளாக இருந்தால் அவர்களே அவர்கள் குழந்தைகளை நல்வழியிற் பிரவேசிக்கச்செய்து உலகத்தை உத்தாரம் செய்வார்கள். ஆகலால் சகோதரிகளே! இனியாகிலும் நம் பெண் குழந்தைகளுக்கு நன்றாகக் கல்வி கற்பித்து நம்தேசத்தை முன்னேற்றுவீர்களென்று மிகவும் நம்பியுள்ளேன்.

# பணம்.

(ஒரு சகோதரி)

பணம், பணம், எல்லாவற்றிற்கும் முதன்மையானதென மனிதர்களால் கருதப்படும் பணம், தன்னுடைய வெளித் தோற்றத்தால் மனிதனுடைய உள்ளத்தைக் கவர்ந்து பித்தனாகச் செய்யும் வல்லமையுடைய பணம், தானிருக்கும் இடத்தில் அதிருஷ்டசாலி என்கிற பதத்தை உச்சரிக்கச்செய்து, மீளாக்கர்வத்திற்குள் மனிதனை உட்படுத்தி மதிமயங்கச் செய்யும் பணம், வசீகரம் நிரம்பிய பணம், கொலை, களவு முதலிய கொடிய செய்கைகளாலும் தன்னை அடைவதில் வாழ்நாட்களைச் செலவிடும்படி ஒரு மனிதனை செய்யும் பணம், உலகானுபவ சுகம் என்கிற சகல விதமான கைங்கரியங்களையும் விலைக்கு வாங்கும்படியான சக்தியையும் அவர்கள் விரும்பியபிரகாரம் எல்லாவித எண்ணங்களையும் பூர்த்தி செய்து வைக்கும் பணம், உப்பு, புளி, மிளகாய் இவைகளை விற்பனைக்கு வாங்குவதுபோல் கௌரவம், கண்ணியம், பட்டம் ஆகிய இவைகளை மேலாக நினைக்கும் உலகத்தாரால் விலைக்கு வாங்கும் சக்தியுடைய பணம், அறிவு, ஞானம், கொள்கை ஆகிய இவைகளை ஓட ஒளியும்படி செய்து நலத்தைக் கெடுதலாகவும் கெடுதலை நலமாகவும் ஒரு மனிதனுடைய மனதில் பதிவுறும் வண்ணம் செய்துவைக்கும் பணம்.

தானிருக்குமிடத்தில் தன்னைக் காட்டிலும் பெறக்கூடிய வஸ்து, அதாவது எல்லாவற்றையும் இயக்கியும் அசைவித்தும் வருகிற கடவுள் என்கிற சக்தி, இருக்கிற தென்பதை நினைக்காதிருக்கவேண்டித் தன்னையே மேலாகக் கருதும்படி ஒரு மனிதனை வஞ்சித்து நாடகமேடையில் வேஷதாரிகள் நடிப்பதுபோல் பூலோகமாகிய இவ்வுலகத்தில் நடிக்கச் செய்யும் பணம்.

நம்பிக்கையில்லாததில் நம்பும்படியாகவும், மரணத்தின் மத்தியில் ஜீவிக்கிறோம் என்பதை அறவே மறந்துவிடும்படியும் மனிதனை வசீகரிக்கும் தன்மையுடைய பணம்.

ஆ! என்ன ஆச்சரியம்! பிறந்த பொழுது இறப்பு நிச்சயம் என்று நன்றாய் அறிந்திருந்தும் அறியாத மூடர்கள்போல் மனிதர்கள் இருப்பானேன்?

நம் மனதில் நம்பிக்கையில்லாததில் நம்பிக்கை இருக்கவேண்டிய காரணம் என்ன? வசீகரத்திலும் தோற்றத்திலும் பொலிவிலும் தேர்ச்சி பெற்ற பணம் பூமியிலிருந்து உண்டாகிறபடியால் பூமியில் உள்ளவைகளை நம்பும்படியாக ஒரு மனிதனைச் செய்கிறதுபோலும்.

ஆ! அதனுடைய அற்புத சக்தியைப்பற்றி யாரால் தான் பேசமுடியும்!

ஒரு மனிதன் பிறக்கிறான், இறப்பு என்பது அவனைப் பின் தொடருகிறது. சர்வ சாதாரணமாகக் கண்ணால் கண்டும், காதால் கேட்டுமிருந்தும் பொய்யுருவாக இருக்கும் இவ்வுலகமே சாசுவதமென நினைத்து இருமாந்து சுகபோகங்களில் அவர் விரும்பியவற்றைக் கொடுத்து, சிநேகிதன்போல் நடித்து அவன் விரும்பிய எல்லாவற்றையும் நிறைவேற்றி வைக்கும் பணமே உன்னுடைய மகிமையே மகிமை!

சகோதரிகளே! பணத்தைப் பசுத்தோல் போர்த்திருக்கும் புலி என்று சொல்லலாம். எப்படி யென்றால் பணம் பூமியிலிருந்து, மண்ணிலிருந்து உண்டாகிறபடியால் பூமியினிடம் இருக்கப் பெற்ற எல்லாசிருஷ்டி வர்க்கங்களையும் தன்னுடைய அதிகாரத்தில் அடக்கியாளும் தன்மையுடையது.

கடவுள் சிருஷ்டி செய்தவைகளில் மேன்மையான சிருஷ்டிவர்க்கம். மனிதசாதி அத்தகைய மனிதவர்க்கத்தைப் பணம் தன்னுடைய ஆட்சியில் வைத்து அவர்களின் இஷ்டக்கோறிக்

கைகளை ஏற்றி அவர்களைத் தன் வசப்படுத்தித் தன்னை நம்பும்படி செய்து அவன் பாபத்தைப் பெருக்கக் காரணமாக அமைந்து நிராநரகத்திற்குள்ளாக்கி ஆட்டிவைக்கும் பசுவினுடைய தோல் போர்த்த புலியாகிய பணம்.

தன்னையுடையவன் இறந்த பிறகு இன்னொருவரிடம் சென்று இவ்விதமாக பூமியில் சுழன்று திரியும் பணம். அறிவோ மேலிருந்து பரிசுத்தமானதும் கடவுளால் அவருடைய திருவருளால் கிருபாகடாட்சத்தினால் மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

மனிதர்களால் பணத்தாலும் விலைக்கு வாங்க முடியாதது. முயற்சி என்பது அதை விருத்தி செய்யும்வழி. பணமோ அள்ளக்குறையும். அறிவோ தீவிரமான முயர்ச்சிக்குத் தகுந்தபலனைக் கொடுக்கும். ஒரு சிறிய தீபம் தானிருக்கும் இடத்தை எவ்விதம் பிரகாசிக்கச் செய்கிறதோ அவ்விதமே என்றும் அழியாததும் உள்ளதுமாய் மனிதர்களுடைய மன இருளைப்போக்கி ஸ்படிகமாயும் இன்பமயமாயும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் வண்ணம் செய்யும் சக்தியுடையதாயிருப்பது அறிவு.

கடவுளிடமிருந்து வந்தபடியால் கடவுளை நம்பும்படி செய்து அழிவில்லாப் பொருளை அறியப்படுத்துகிறது அறிவேயாகும்.

# ஒரு சந்யாசி சொல்வது.

(ஸ்ரீமதி ராகவன்)

*சகோதரனே!*

உன் முக்கியமான கடமை, நான் முன்னே சொன்னபடி உன் தேசத்தின் கடமையே. நீ முதலில் மானிடனென்று நினை. இந்த நினைப்பின் பின்னர் தான், நீ தகப்பனோ, உத்தியோகஸ்தனோ தனிகனோ, இதெல்லாம் பின்னர்தான். உன் உண்மையான தன்மையை அறியாமலிருந்தால் உன் அன்பானது உன் மானிட ஜன்மமெடுத்த எல்லா ஜீவன்களையும், எல்லாரையும் பாராட்டாமலிருந்தால், மானிட ஜன்ம மறிந்து தத்துவமான இந்த ஒரு தன்மையினாலேயே பூலோகத்தில் சர்வஜனங்களும் உன் சகோதர சகோதரிகள் என்று கருதாவிட்டால் உன்னுடைய பிறவி இயற்கையான கட்டளையை நிறைவேற்றாமல் மானிடத் தன்மையை இழந்தவனாகிறாய். மானிட ஜன்மமெடுத்த ஒவ்வொரு ஜீவனுக்கும், உன் சுற்றத்தார் எல்லோருக்கும் பிதா கடவுள். அவர் கட்டளையைக் கீழ்படிந்து நிறைவேற்றுவதற்காகவே நாம் எல்லோரும் இவ்வுலகில் வந்தவர்கள். இதை அறியாதவன் அவிவேகி. இத்தன்மையான சகோதரபாவனை உதித்து விட்டால் எங்கெங்கே எந்த ஆத்மாவானது தபிக்கின்றதோ, எங்கெங்கே ஒரு பாகத்தார் மற்றொரு பாகத்தாரை சிறை பிடித்துத் துன்புறுத்துகின்றார்களோ, எங்கெங்கே மிக அற்புதமான இம்மானிட வாழ்க்கை சாம்பிராஜ்யத்தை மண்ணில் அழுக்கி, கேவலம் மிருகத் தன்மை ஆழ்ந்திருக்கிறதோ, எங்கெங்கே பொய், பித்தலாட்டம், ஜம்பம், இருமாப்பு, மதம்பிடித்த சக்தி, தெய்விகத் தன்மையைப் போக்கடித்து எல்லோருக்கும் பிதா ரூபமான சர்வேசுவரனுடைய கட்டளையை மறக்கச் செய்து, துற்புத்தி, கொலை, களவு பரவியிருக்கின்றதோ, அங்கெங்கெல்லாம் நீ உதவி செய்ய முயலாமலிருந்தால் நீ ஜன்ம மெடுத்ததற்குப் பொய்யானாய். உன் தெய்விகத்தன்மையை, போக்கடிக்கிறாய், மரணத்திற்கு அஞ்சி சுயநலத்தைக் கருதி மானிட ஜன்மத்தைப் [illegible]



பிரித்துப் பரிதவிக்கிறாய். பிரபஞ்சத்தின் உண்மை அறியாத தர்மமிழந்த தரித்திரனாவாய்.

கவனி, நான் சொல்லுவது வீணாகாது. மனிதனுடைய ஜீவிய சரித்திரமானது ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு காலத்திலும், சந்தர்ப்பத்திலும் இந்த மாதிரியே சம்பவித்திருக்கின்றது.

நான் பிரசங்கம் செய்கிறேனென்று நினைக்காதே. ஆனால் எனக்கு நன்றாய்த் தெரியும், தனியாக நீங்கள் ஒவ்வொருவரும் ஒன்று செய்ய இயலாது. உங்கள் சக்தியானது ஒரு இயக்கத்தில் சேர்ந்து பலமடையாமல் தனித்து நிற்கும்போது காற்றுக்கு சமானமானது. ஒரு நொடியில் பறந்துபோம். தனியாக ஒவ்வொருவரும் தன் தன் நிலைமையை மேன்மைப்படுத்தச் சக்தியற்றிருக்க சமூக நன்மையை அடையமுடியுமா? தனித்தனியாக நீங்கள் யார்? உனக்கு மற்றொருவன் விரோதி. அவன் கீழடைந்தால் நீ முன்வரலாம். எல்லோரும் பட்டாளத்தில் படைபோல் ஒரு சரியாக ஒரு வரம்பில்லாமல் வர வேண்டுமானால் இந்த தனிமைத்தனம் நீங்க வேண்டுமல்லவா? நீ வேறு, நான் வேறு என்ற எண்ணம் ஒழிய வேண்டுமல்லவா? எப்பொழுதாவது ஒரு வேளை நீங்கள் ஒவ்வொருவரும் தனியாக இருந்துகொண்டும் தனியாக பாவித்துக்கொண்டும், தனியே முயற்சி செய்துகொண்டிருக்கும்போது எல்லோரும் ஒன்று சேர்ந்தால் நன்மை உண்டாகுமென்றும் வேற்றுமையை மறக்க வேண்டுமென்றும் சொல்லலாம். அவ்வளவு தான். உங்களில் சிலர் சொல்லுவதைக் காட்டிலும் இன்னும் ஒரு அடிகூடப் போய் ஒற்றுமை கட்டாயம் வேண்டுமென்று ஒரு இயக்கத்தை ஏற்படுத்தலாம். ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கலாம். ஆனால் இது எவ்வளவு தூரம்செல்லும்? ஒற்றுமை உண்டாக்கச் சங்கங்களா தேவை? சகோதரப் பான்மை உண்டாக்கச் சட்டங்கள் வேண்டுமா? பிரசங்கங்கள் வேண்டுமா? உங்களில் சிலர் தேசத்தைப் பற்றியும் நினைக்கக்கூடும். இன்னும் சிலர் நினைப்பதைக் காட்டிலும் செயல்களில் ஈடுபட்டு அடிக்கடி தபித்துக் கொண்டிருக்கும் தேசத் தொண்டருக்கு உதவி செய்திருக்கலாம். ஆனால் கேவலம் தானமாவது தர்மமாவது எதிர் காலத்தில் கொள்கையல்ல. தானத்திலாவது தர்மத்திலாவது, எந்த தேசமும் முன்னேற்றம் அடைந்ததில்லை. இனிமேல் வரும் தலைமுறைகள் தானத்திலும் தர்மத்திலும் நம்பிக்கையற்றவர்கள். செயல் ஒன்றே பிரதானம். எண்ணம், நோக்கம், பேச்சு, எதிர்ப்பேச்சு இவைகள் ஒரு பக்கம். கருமம் தீர்க்கமாகவும், தீவிரமாகவும் செய்து முடியும் செயல்கள் ஒரு பக்கம். இவ்விரண்டில் இந்நாடு விருத்தியடையவேண்டுமானால் எதைக் கண்டுபிடிக்க வேண்டும்? இரண்டும் வேண்டியது தான் என்று சொல்லும் தத்துவம் விருத்தாப்பியத் தன்மை. இதுவரையில் எண்ணம் ஒன்றே பிரதானமாயிருந்ததால் இந்த ஸ்திதிக்கு வந்திருக்க நேரிட்டது. இப்பொழுது, கருமம் என்ற ஒரே ஆக்கிரகம் போதாதா? நமக்கு எண்ணம், யோசனை எல்லாம் என்னவென்று தெரியும். இரண்டாயிரம் வருஷமாக யோசனையிலேயே இருந்தோம். இருநூற்றைம்பது வருஷமாக, 'நம் கருமங்களையும், செயல்களையும், நம் கடமைகளையும், பிறர் செய்யப் பார்த்துக் கொண்டிருந்தோம்.' இனிமேல் என்ன வருவது?

இனிமேலிருப்பது நம் ஜன்மத்திலேயே நம்பிக்கை தான். நாம் மனிதர்களாகப் பிறந்திருக்கிறோம். பிராணிகளாக ஜீவித்துப் புழுக்களாக மரிக்கமாட்டோமென்று ஒரு தைரியம் வருகின்றது. நம் தேசத்தின் நன்மை என்ற ஒரே நோக்கம் தான் நம்முடைய தேசத்தின் நன்மையைத் தேடப்போகிறது. இந்த லட்சி

கை

ஒரு நரி இக்குக்ருகூகு என்ற சப்தத்தைப் பல முறை கேட்கவே, ஏதோ ஒரு சேவல் வழி தப்பி இங்கு வந்துள்ளது. இது நம் காலை உணவுக்கு மிக்க உகந்ததாகுமென எண்ணி, அக்குக்ருகூகு வென்ற சப்தத்தை நாடியே வந்தது. சிறிது நேரத்திலேயே ஒரு மாத்தின் மீது ஒரு அழகிய சேவலிருப்பதை கண்டு "ஓ நண்பனே! உம்முடைய சப்தத்தைக் கேட்டு நான் இங்கு வந்தேன். உமது வம்சத்தினர் என்னைக் காலையில் எழுப்பி விடுவதில் மிக்க நண்பாக இருந்தனர். அவர்களைப் பிரிந்து மிக்க நாளாயிற்று. கீழ் இறங்கி வாரும், சற்று குதூகலித்து வார்த்தையாடலாம்" என்றது. இதைக்கேட்ட சேவல் "ஆம் பிரிய மித்திரனே! நான் இவ்வில்லத்திலிருந்து இறங்குவது எப்படி? இம்மாத்தின் அடிவாரத்தில் இவ்வீட்டின் சேவகன் படுத்துறங்குகிறான். அவனைத் தயவு செய்தெழுப்பினால் அவன் இவ்வில்லத்தின் கதவைத் திறப்பான். நானும் கீழிறங்கி வரலாகும். சில நேரம் களிப்புற்றும் இருக்கலாம்" என்றது. 'அப்படியா' எனச் சொல்லி, சேவலைக் காலை உணவாக்கிக் கொள்ளலாமென்ற அவசரத்தில் முன்பின் யோசிக்காமல் தன் தந்திரங்களை யெல்லாம் மறந்து மாத்தின் அடிவாரத்தில் சென்று சேவலின் சேவகனை எழுப்பப் பதபதைத்து ஓடவே அந்நாய்விழித்துக் கொண்டிருந்ததால் ஒரே பாய்ச்சலில் நரியைக் கீழ் வீழ்த்தி வேட்டையாடி விட்டது.

---

4. ஒரு வெள்ளாடு ஒரு நாள் ஒரு பாறையின்மீது மேய்ந்துகொண்டிருப்பதைக் கண்ட ஒரு நரி இவ்வெள்ளாடு நம் மத்தியான உணவுக்கு மிக்க நல்லதாயிற்றே என எண்ணி இதை எங்ஙனம் இக்கற்பாறையிலிருந்து கீழ் இறக்குவதென ஆலோசிக்கவே, ஒரு உபாயம் தோன்றிற்று. உடனே "ஓ நண்பனே! உமது சகாக்கள் என்னுடன் பல வருடம் நட்பைக் கொண்டிருந்தனர்; நானும் அவர்களும் இக்காட்டின் அரிய பசும் புற்களை மேய்ந்து களித்துக் குதூகலித்து வாழ்நாட்களைக் கழித்து வந்தோம். ஆனால் நீர் என்னமோ என் நண்பர்களின் வம்சத்தினரைப் போலவே தோன்றுகிறீர்; அழகிய கொம்புகளையும் சிறிய தாடியையும், நீண்ட கால்களையும் கொண்டுள்ளீர். எனினும் இந்நாட்டின் வளப்பங்கள் உமக்கு நன்கு தெறியாதெனவே நான் கூறுவேன். ஏனெனின் நீர் இங்கிருக்கும் மேய்ச்சல், செழிப்புகளை விட்டுவிட்டு ஏதோ ஒரு மலையுச்சியில் சூரிய வெப்பத்தில் வதங்கிக் கருகி செழித்த முளைகளில்லாத புல்லைத் தேடித் திரிகின்றீர். வாரும்! கீழிறங்கும்" என்றது. இவைகளைச் செவியுற்ற வெள்ளாடு "நீர் சொல்வதும் என்னை அழைத்து வரவேற்க முயலுவதும் நான் அப்பசும் புல்களை மேய்வதற்கல்ல; உம்முடைய மத்தியானப் பசிப்பிணியைத் தீர்த்துக் கொள்ளவே. இவ்விதமான நட்பு இராகங்களைப் பாடுகின்றீர். உம்மையும் உமது வம்சத்தின் தூராக்கிரமங்களை நான் நன்கறிவேன்" என்று சொல்லிற்று.

---

5. கடும் வெப்பநாள் ஒன்றில், ஒரு சிம்மமும் ஒரு பன்றியும் படிக்கட்டுள்ள ஒரு கிணற்றண்டை தம் தாகத்தை ஆற்றிக் கொள்ள ஓரே சமயத்தில் வந்தன. "இப் படிக்கட்டுகளில் நான் இறங்கித் தண்ணீரருந்தி வருகின்றேன். அதுவரை நீ இங்கேயிரும்" என்று சிம்மம் சொல்லிற்று. இதைக்கேட்ட பன்றி, "அது அப்படி? நான் என்ன உன்னை விடக் குறைந்தவனா? எனக்கும் உன்னைவிட அதிகமான [illegible] கூர்மையான கொம்புகளுள்ளன. உன் [illegible] எச்சலையா நான் அருந்துவது. என்னுடைய [illegible]

அம்மனம் ஆகாது. நான் முன் வந்தனன். எனவே நான்தான் முன் சென்று தண்ணீர் அருந்தித் திரும்புவேன். நீ இங்கேயே இரு" என்று பன்றி சொல்லிற்று. "நான் மிருகங்களின் அரசன். என்னை மிருக ராஜனென்பர். ஆகவே எனக்கு நீ அடங்கி என் பேச்சைக் கேட்க வேண்டும்" எனச் சிம்மம் வற்புறுத்திற்று. "இல்லை நீ வனராஜனென்றால், நான் வயல் ராஜன். காய்ந்த பொட்டல்களில் தான் உமது அட்டகாசங்கள் ஆனால் எனக்குச் சேறு, சக்தி, பொடல் எல்லாவற்றிலும் வலிமைகள் உண்டு" என்று சொல்லிக் கொண்டே அக்கிணற்றண்டையிருந்த மாத்தைப் பார்க்க, ஏராளமான கழுகுகள் இவ்விருவரின் போரில் கீழ் வீழ்த்தப்பட்டதை நல்லுணவாக்கலாமெனக் காத்துக் கொண்டிருந்ததைக் கண்டு, "ஓ சிம்மமே! என்ன பைத்தியம்! நாம் இருவரும் இங்கு [illegible]ர்தாடிச் சண்டையிட்டுக் கொண்டால் நம்மை ஒரு பெரும் விருந்தாக்கிக்கொள்ள அதோ பார்! எத்தனை கழுகுகள் அந்தமாத்திலமருகின்றன?" என்று காண்பிக்கவே சிம்மம் பார்த்து "ஆம், ஆம். நாம் இருவரும் சச்சரவு இட்டுக் கொள்கின்றோமெனவே ஒருங்கு கூடியுள்ளார். ஏன் வீண் வாதம்? சரி நீரோ தண்ணீர் அருந்தித் திரும்பும். பின்னர் நான் செல்கின்றேன்" என்றது.

---

6. ஒரு காட்டில் வாழ்ந்து கொண்டிருந்த இராஜ கிரிக்கும் சுண்டெலிக்கும் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டுப் பெரும் காலமாக ஒற்றுமை ஏற்பட்டபாடில்லாமலிருந்தது. இராஜகிரிகளே வெற்றி கொள்ளவும் சுண்டெலிகள் பல நாள் இழக்கவும் ஆகிவந்தது. ஒரு நாள் இச்சுண்டெலிகள் ஒரு கூட்டம் கூடி 'நமக்குத் தலைவர்களும் தளகர்த்தர்களுமில்லாததினாலேயே [illegible] போன்ற ஒரு சிறிய இனமாகிய இராஜகிரியுடன் வெற்றிகொள்ள முடியாமல் இழக்கின்றோம்' என ஆலோசித்தன. பின்னர் தம்மில் படையை அணிவகுத்துக் கம்பெனிகளாகவும், பட்டாலியன்களாகவும் செய்து கொண்டு பல சுண்டெலிகளைக் காப்தன்களாகவும், சேனாதிபதிகளாகவும் ஏற்படுத்திக் கொண்டன. சற்று பின்னர் இவர்களுக்கு ஒரு தீவிர ஆலோசனை உண்டாயிற்று. "நம்தலைவர்களுக்கும் சேனாபதிகளுக்கும் சின்னங்களில்லாவிடில் நம் பட்டாலியன்களினதும் படைகளினதும் கம்பெனிகளினதும் வீரர்கள் இவர்களுக்குக் கண்ட விடங்களில் மரியாதைகள் எவ்விதம் அளிப்பதெனக் கருதி இத்தலைவர்கள் எல்லோரும் சிறு வைக்கோல்களைத் தம் தலைகளில் கட்டி வைத்துக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தன." தளகர்த்தர்களும் இதை மிக்க ஆவசியகமென மெச்சி அணிந்து கொள்ளலாயினது. ஒரு நாள் படையெடுப்பும் ஏற்பட்டன. அணிவகுப்புகளாகச் சுண்டெலிகள் தலைவர்களும் அரங்க மேகினர். இராஜ கிரிகள் தாக்க முயலவே இவைகள் சிதறி இங்கும் அங்குமுள்ள வளைகளில் சுண்டெலிகள் புகுந்து கொண்டன. தலைவர்கள் தலையில் வைக்கோற்பிரியைக் கொண்டிருந்ததினால் வளைகளில் நுழையக் கூடாதவைகளாக இம்சிக்கப்பட்டு மாண்டன.

---

7. ஒரு சுண்டெலி ஒரு தவளையைத் தன் நண்பனாகக் கொண்டிருந்தது. இச்சுண்டெலி தன் வயல் வளப்பத்திலும், தவளை தன் தடாக வளப்பத்திலும் பெருகி நல்வாழ்வுகளைக் கொண்டிருந்தன. ஒரு நாள் இத்தவளைக்கு இச்சுண்டெலி ஒரு விருந்தளித்தது. தவளை மிக்க சந்தோஷகரமாகிச் சுண்டெலிக்கும் ஒரு விருந்து தம் தடாகத்தில் அளிக்க வேண்டுமென்று ஒரு [illegible]

களைத் தயாரித்துக்கொண்டு, சுண்டெலியை அழைப்பதற்கெனத் தவளை வந்து சுண்டெலிக்குச் சொல்லி இட்டுச் செல்ல முயலுகையில் 'நண்பனே நீ நிலவளப்பங்களைக் கொண்டுள்ளவன். நானோ நீர் வளப்பங்களைக் கொண்டுள்ளவன். நானும் உமக்கு விருந்தளித்து விட்டேன், நீரும் சம்மதித்துக் கொண்டீர். ஆனால் நீ எப்படி என் தடாகத்தில் விருந்துண்ணச் செல்வீர்?' என்றது. இதைக்கேட்ட சுண்டெலி பின் என் செய்யல் வேண்டுமென வினவ தவளை 'ஓ நண்பா! ஒரு சிறு கயிறு கொண்டு வந்து என் காலிலும் உமது காலிலும் கட்டிக் கொள்ளலாம். தண்ணீரில் என் முதுகில் நீர் ஏறிக் கொண்டால், சுகமாக என் இருப்பிடம் செல்லலாம்' என்றது. இதற்குச் சுண்டெலியும் இணங்கிக் கட்டிக்கொண்டது. சற்று தூரம் செல்லவும் தடாகத்தில் குதித்துச் சுண்டெலியை முதுகில் ஏறிக் கொள்ளச் சொல்லச் சுண்டெலியும் ஏறிக்கொண்ட போதிலும் தண்ணீர் வளப்பங்களை அறியாதிருந்தமையால் தண்ணீரை அதிகமாகக் குடிக்கத் தத்தளித்துத் தண்ணீரில் மிதக்கலாயிற்று. தவளை தன் நண்பனின் பளு ஜாஸ்தியாக இல்லையென சந்தோஷமாய் நீந்தியது. ஒரு பருந்து அத்தடாகத்தின் மேல் பறந்து கொண்டிருந்தது. இதைக் காணவே கீழிறங்கி, காலில் பற்றி மேலே பறக்கலாயிற்று. தவளையாரும் தம் நீர் வளப்பம்விட்டு வாயு வளப்பத்தைக் காணவுட் தலை கீழாகத் தொங்கவும் ஆனார். அப்போது 'ஆ! என்ன மோசம்! நம் வளப்பங்களெங்கே? விருந்துகளெங்கே?' [illegible] ஏங்கித் தியங்கமானார்.

15-2, 28.5.34

8. அகஸ்மாத்தாக, ஒரு பெரும் மரத்தை ஆதாரவாகக் கொண்டு ஒரு கழுகு, ஒரு பூனை, ஒரு பன்றி மூன்றும் [illegible]யின. ஒரே சமயத்தில் இம் [illegible] தன் குஞ்சு குட்டிகளை வளர்க்க, இம்மரத்திலேயே இடம் தேடிக்கொண்டன. கழுகு மரத்தின் உச்சிக் கொம்பில் ஒரு கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொறித்தது. பூனை இம் மரத்தின் கிளைப்பிரிவில் சில துணிகளை வைத்துக் குட்டிபோட்டு வளர்க்கலாயிற்று. பன்றியும் இம் மரத்தின் அடிவாரத்தில் ஒரு புதரை ஏற்படுத்திக் கொண்டு குட்டிகளைப் போட்டு வளர்க்கமுற்பட்டது. ஒருநாள் இப்பூனை இப்பன்றியின் அழகிய குட்டிகளைக் கண்டு பொருமை கொண்டு, இப்பன்றிக்குத் தீங்கிழைக்க வேண்டுமெனக் கருதி மரத்தின் மீதேறி உச்சிக் கொம்பில் தன் குஞ்சுகளுடனிருந்த கழுகைப் பார்த்து 'ஓ கழுகே! எனக்கும் உனக்கும் தீமைகளை விளைவிக்க இம்மரத்தின் அடிவாரத்தில் புதர்களைச் செய்துள்ள பன்றி யோசித்துள்ளதென எனக்குத் தெரி[illegible]ளது. இப்புதருகள் பெருகப் பெருக இம் மரம் கீழ்சாய்ந்து விடும். நாம் நம் குஞ்சு குட்டிகளுடன் வீழ்த்தப்படுவோம். என் செய்வது?' எனச் சொல்லவே, கழுகும் மதிமயங்கி ஆழ்ந்த சிந்தனையில் அமிழ்ந்து, கோபமாகி, யோசிக்கலாயிற்று. உடனே இப் பூனை மரத்தின் கீழ் இறங்கிப் பன்றியைக் கண்டு, 'நண்பனே! என் செய்வது, நீ இரைதேட வெளிச் சென்றவுடன் உன் குட்டிகளை இக்கழுகு கொன்றுவிடயோசித்துள்ளது. இதற்கு வேண்டிய உபாயத்தைத் தேடிக்கொள். நானும் என் குட்டிகளுக்கென வேண்டிய உபாயத்தைத் தேடிக்கொள்ள யோசித்துள்ளேன்' என்றது. இதைக்கேட்ட பன்றியும் மிகப் பயங்கொண்டு என் செய்வதென யோசிக்க, கழுகைப்போலச் சிந்தனையில் மூழ்கியது. இவ்வமயம் பன்றி கழுகை மரத்தின் மீது காணவே மிக்க பயங்கொண்டு, இரைதேடச் செல்லாமலே தன் குட்டிகளைப் பாதுகாத்துக் கொண்டே இடந்தது. கழுகும் இரை தேடச் செல்லாமலிருந்தது. ஆனால் பூனை இரவுகளில் மெல்லச் சென்று இரைதேடி வந்து பால் ஊட்டித் தன் குட்டிகளை வளர்க்கலாயிற்று. நாளா வட்டத்தில் பூனைக் குட்டிகள் பெருகலாகி, ஆடிஓடி, இவ்விரு[illegible]களையும் தம் உணவுகளாக்க முற்பட்டன.

190384

## ...EMBERS.

| | | |
|---|---|---|
| | ...l., | Singapore. |
| | ...anu Avl., | " |
| | ...ah Avl., | " |
| | ...ayam Kanakasabai Avl., | " |
| | ...oapati Avl., | " |
| | ...avendra Avl., | " |
| | ... Doss Sabastian Avl., | " |
| | ... R. Ponnaiya Avl., | " |
| | ...Ry., C. Kanakasabai Avl., | Johor Bahru. |
| | " P. M. Mylvaganam Avl., | " |
| | Mrs. G. Vaithyalingam Avl., | " |
| | M.R.Ry. V. Velayudam Avl., | " |
| ... | Mrs. Chinnathangam Ponnambalam Avl., | " |
| 182. | Mrs. M. D. Ratnam Avl., | " |
| 183. | Mrs. Ella A. Samuel Avl., | " |
| 184. | M.R.Ry. S. Vaithyalingam Avl., | " |
| 185. | Mrs. V. Murugesu Avl., | Kluwang. |
| 186. | Mrs. Nagammal Chellaiya Avl., | " |
| 187. | Mrs. W. M. Joshua Avl., | Batu Pahat. |
| 188. | Dr. N. S. Nather Avl., | " |
| 189. | Mrs. M. S. Selvadorai Avl., | " |
| 190. | Mrs. V. S. Muthaiya Avl., | " |
| 191. | Mrs. V. V. Muthaiya Avl., | " |
| 192. | Mrs. A. Nataraja Avl., | " |
| 193. | M.R.Ry. W. K. Pillai Avl., | Muar. |
| 194. | Mrs. K. Velu Pillai Avl., | " |
| 195. | M.R.Ry. S. V. Pillai Avl., | Gimas. |
| 196. | " K. Doraiyappa Avl., | Lapis. |
| 197. | Mrs. S. Bhupalan Avl, | Malacca. |
| 198. | Mrs. Woodhull Avl., | Segamat. |
| 199. | M.R.Ry. C. Ponnambalam Avl., | Labis. |
| 200. | " S. Ponnambalam Avl., | Tenang. |
| 201. | " M. T. Chellaiya Avl., | Bathu Anam. |
| 202. | " T. Chellaiya Avl., | " |
| 203. | " K. A. V. Pillai Avl., | Segamat. |
| 204. | " K. Selvadorai Avl., | " |
| 205. | " K. S. Maniam Avl., | Singapore. |
| 206. | " T. K. Sheik Dawood Avl., | " |
| 207. | Janab M. A. Namazi Avl., | " |
| 208. | Dr. A. Dorai Avl., | " |
| 209. | Mrs. Saraswati Apparaju Avl., | " |
| 210. | Mrs. S. Thillaimuthu Avl., | Penang. |

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras,
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras.—5,000.—7-12-1928.

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| அபோத ராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்) | ... 130 |
| பெண்கள் விவாக வயதும் வாதட்சிணையும் (பத்திராதிபர்) | ... 131 |
| சந்திரவர்மா (ஓர் நாடகம்) (ஸ்ரீமான் R. நாராயணசாமிராவ், B.A.) | ... 133 |
| ஆத்ம சிந்தனை (ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்) | ... 150 |
| சந்திரா (ஸ்ரீமான் வெ. நாராயணன் | ... 152 |
| குற்றாலம் என்னும் திருத்தருத்தி க்ஷேத்திரம் (ஸ்ரீமான் T.K.R. சர்மா) | .. 172 |
| பிரஹ்லாத விஜயம் (ஸ்ரீமான் K. நடராஜய்யர்) | ... 174 |
| பதுமினி (ஓர் சிறு கதை) (ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமணியன்) | ... 185 |
| பெண்களும் புலால் உண்ணுமையும் (ஸ்ரீமதி கு. கமலாம்பிகை அம்மாள்) | |
| தேச சேவை (சிறு கதை) (ஸ்ரீமதி சகோதரி வி பாலம்மாள்) | ... |
| இல்லறம் (ஆணும் பெண்ணும்) | ... |
| அன்பு (ஓர் சகோதரி) | ... |
| சாருமதியின் சௌபாக்கியம் (ஸ்ரீமதி வி. கே ராஜம்மாள்) | ... |
| ரவீந்திரநாத் தாகூரின் கல்விச் சிறப்பு (ஸ்ரீமான் அ. ந சிவா, "கலைமகள் சங்கம்") | ... 244 |
| ஓர் சிறிய உபன்யாசம் (ஸ்ரீமதி S. R. ஜயம்மாள்) | ... 246 |
| பணம் (ஒரு சகோதரி) | ... 249 |
| ஒரு சந்யாசி சொல்வது (ஸ்ரீமதி ராகவன்) | ... 250 |
| சிறுவர்க்கான சிறு கதைகள் (ஸ்ரீமான் அற்புதானந்தர்) | ... 253 |


"சிந்தாமணி" ஆபீசு, மைலாப்பூர், சென்னை, 3—12—1928.

## சிந்தாமணி அபிமானிகளுக்கு.

சகோதர சகோதரிகளே!

மலாய் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த நமது பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள் 23—11—28-ல் ரோஜா கப்பலில் சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள் என்ற சந்தோஷச் செய்தியைத் தெரிவிக்கின்றோம். வைத்திய நிபுணரின் ஆலோசனைப்படி சகோதரியார் சில வாரங்கள் பரிபூரணமாக ஓய்வெடுக்க வேண்டியிருத்தல்பற்றித் தமது அனபார்ந்த சகோதர சகோதரிகளுக்குத் தமது க்ஷேம சமாசாரத்தை இக்கடிக மூலமறிவிக்கின்றார். சந்தா பாக்கிகளையும் கடிதங்களையும் சென்னை சிந்தாமணி ஆபீசு விலாசத்திற்கே அனுப்புமபடி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

சிந்தாமணி மானேஜர்.

அன்புள்ள சகோதரியே! சைகோன், 15—6—1928.

தங்களின் சிந்தாமணி என்னும் பத்திரிகையை வாசித்து மகிழ்வடைந்தேன். நம் தாய்நாட்டில் பெண்மக்களுக்கென்று ஓர் பத்திரிகையில்லாதிருந்து வந்த குறையை நீக்கவும், பெண்களின் உரிமையை எடுத்துக்கூறி முன்னேற்ற மடையும மார்க்கத்தைக் காண்பிக்கக் கூடியதாகவும் உள்ள தங்களின் உயர்ந்த நோக்கத்தைத் தெரிவிக்கும் இப்பத்திரிகையை பொதுவாக மேன்மக்கள் யாவரும அன்புடன் ஆதரிக்கக் கடமைப் பட்டவர்களாயிருக்கிறார்கள். பெண்களின் க்ஷேமத்தை நாடி அன்னிய தேசங்கள் சென்று சிரமங் கருதாது உழைத்துவரும் உங்களின் அரிய தேச சேவைக்கு என் மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறேன். சிந்தாமணி என்னும் அருமைப் பெயர்வாய்ந்த தங்கள் பத்திரிகை மேன்மேலும கீர்த்தி ஓங்கித் தன் சந்தாதாரை மகிழ்விக்கச் செழித்து நீடூழி வாழ்ந்திருக்கவும். இந்த சிரமமான காரியத்தை மேற்போட்டு உழைத்துவரும் தங்களுக்கு நல்ல தேகாரோக்கியத்துடன் கூடிய நீண்ட ஆயுளைத் தந்து காக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக. இங்ஙனம், மதாம் ஜோஸப் அதிசயம்.

லுங்கள். இந்நகருக்குத் தென்புறம் மதிற்சுவற்றை யொட்டின தோட்டத்திலிருக்கும் குடிசையில் வசிப்பது தாங்கள் தானே?

ஸதாநந்தர்:—ஆம், மகாராஜ்! எளியோனை என்னைப் பற்றி மகாராஜா விசாரிக்க நான் என்ன பாக்கியம் செய்தேனோ தெரியவில்லையே!

பீமசிங்:—தங்களுக் கேதாவது குழந்தைகளுண்டா?

ஸதாநந்தர்:—அந்த பாக்கியத்தைப் பெற நான் கொடுத்து வைக்கவில்லை.

பீமசிங்:—அப்படியெனில் தங்கள் கிரகத்தில் தாங்களும் தங்கள் பத்தினியும் தான் இருக்கிறீர்களோ?

ஸதாநந்தர்:—ஆம் மகாராஜ்! நாங்கள் மிகுந்த ஏழைகள். தினம் புல்லரிசியைச் சேகரித்து வந்து உண்பது வழக்கம். இன்று அதுகூட இல்லாமற் போய்விட்டது! பாபம் குழந்தை கமலரேகைகூடப் பட்டினியாயிருக்கிறாள்.

பீமசிங்:—யார் பட்டினியாயிருக்கிறாள்?

ஸதாநந்தர்:—குழந்தை கமலரேகை.

பீமசிங்:—யார் அது? உமக்குத்தான் குழந்தைகளே கிடையாதென்றீரே!

ஸதாநந்தர்:—மகாராஜ்! எங்களுக்குக் குழந்தைகளில்லையென்னும் குறையைத் தீர்த்தற்பொருட்டுக் கடவுள் என்னிடமனுப்பிய கமலரேகையை நாங்கள் எங்கள் குழந்தையாகப் பாவித்து வளர்த்து வருகிறோம். அவள்......

பீமசிங்:—நீர் சொல்வது விளங்கவில்லையே!

ஸதாநந்தர்:—மகாராஜ்! நான் சுமார் ஒரு மாதத்திற்கு முன் ஒருநாள் வழக்கம் போல் பிராதக்காலையில் ஸ்நாநம் செய்வதற்காக சமுத்திர தீரத்திற்குச் சென்றபொழுது, கமலரேகை கரையில் அலைகளால் மோதப்பட்டு மூர்ச்சித்துக் கிடந்ததைப் பார்த்தேன். அவளை எங்கள் கிரகத்திற்கெடுத்து வந்து அவளுடைய மூர்ச்சையைத் தெளிவித்தோம். அந்நாள் தொட்டு அவள் எங்கள் கிரகத்திலேயே வளர்ந்து வருகிறாள்.

பீமசிங்:—சரி இருக்கட்டும். அவள் யாரென்பதைப் பற்றி விசாரித்தீர்களோ?

ஸதாநந்தர்:—தன் விருத்தாந்தத்தைப் பற்றி அவள் எங்களிடம் ஒன்றுஞ் சொல்லவில்லை. நாம் ஏதாவது கேட்டாலும், பாபம், குழந்தை ஓ வென்று அழ ஆரம்பிக்கிறாள்! அவள் கதை மிகவும் பரிதாபமானதாக இருக்குமென்று தோன்றுகிறது. ஏதாவது கேட்டால், தான் வீடு, வாசல், தாய், தந்தை ஒன்று மற்ற அநாதையென்கிறாள். அவள் பட்டினியாயிருப்பதைப் பார்க்கவும்....

பீமசிங்:—அவள் கடற்கரையில் மூர்ச்சித்து விழுந்திருக்கக் காரணமென்ன? அவள் எப்படி அங்கு வந்தாள்?

ஸதாநந்தர்:—ஏதோ கப்பலேறிக் கொண்டு பிரயாணஞ் செய்து கொண்டு இருந்தாளாம்; நள்ளிரவில் கப்பல் உடைந்து விட்டதாம். பிறகு ஓர் பாய்மரத்தைப் பிடித்துக் கொண்டு சமுத்திரத்தில் தத்தளித்துக் கொண்டிருந்ததுதான் ஞாபகமிருக்கிறதாம். ......என் கிரகத்திற்கு வந்தபிறகுதான் அவளுக்கு பிரக்ஞை வந்தது.

பீமசிங்:—ஸதாநந்தரே! நேற்று நான் அவளைப் பார்த்தேன்! அவள் அழகிலும் யௌவனத்திலும் ரதியை யொத்திருக்கிறாள்! அவள் ஓர் இராஜகுமாரி யென்பதில் ஐயமில்லை. ஆகையால் அவள் உம்முடைய கிரகத்தில் வாழ்தல் கூடாது! அதிருக்கட்டும். அவளுக்குப் பருவகாலமாயிற்றே. உம்முடைய வீட்டில் அவளை வைத்துக் கொண்டிருக்க முடியுமா? அவளுக்கு மணஞ் செய்து வைப்பதைப் பற்றி என்ன ஏற்பாடு செய்தீர்?



ஸதாநந்தர்:—மகாராஜ்! அவளுடைய கலியாண விஷயத்தைப் பற்றிப் பேசினால் அவள் கண்ணீர் விடுகிறாள். பாபம், குழந்தை என்னையே தன் தந்தையாகவும், என் பத்தினியையே தன் அன்னையாகவும் பாவிக்கிறாள். தனக்குக் கலியாணமே வேண்டியதில்லையென்றும், எந்நாளும் எங்களைவிட்டுப் பிரிய மாட்டேனென்றும் உறுதியாய்ச் சொல்லுகிறாள். அவள் பட்டினியாயிருப்பதாற்றான்—

பீமசிங்:—ஸதாநந்தரே! இதென்ன பேதமை! ஓர் யௌவன சுந்தரியை நீர் எவ்வளவு காலந்தான் உம்முடைய கிரகத்தில் வைத்துக் கொண்டிருக்க முடியும்? அதெல்லாம் இயலாத காரியம். அவள் கட்டாயம் ஓர் இராஜகுமாரியாகத்தானிருக்க வேண்டும். அவள் உம்முடைய வீட்டிலிருந்து பட்டினியாய்க் கிடத்தல் கூடாது! ஆகையால் அவளை உடனே நம் அரண்மனைக்கு அனுப்பிவிடும். உம்முடனேயே பல்லக்கு அனுப்புகிறேன். அவளை அரண்மனைக்கழைத்துவர நம் கார்பாரியையும் தோழிகளையும் அனுப்புகிறேன். உமக்கும் வேண்டிய திரவியமளிக்கிறேன்!

ஸதாநந்தர்:—மகாராஜ்! கோபித்துக் கொள்ளக் கூடாது. என் வீட்டிற்கு மகாலக்ஷ்மியைப் போல் தானாகவே வந்த ஸ்ரீதேவியை விட்டு நாங்கள் எவ்வாறு பிரிவது? அவளை எங்கள் உயிரினும் மேலாக நாங்கள் நேசிக்கிறோம்... மேலும்...

பீமசிங்:—ஸதாநந்தரே! என்ன சொன்னீர்? நாம் ஓர் காரியத்தைச் செய்ய வேண்டுமாய் உமக்கு ஆக்ஞையிட்டால் அப்படிச் செய்ய முடியாதென்று சொல்லுகிறீர்!

ஸதாநந்தர்:—மகாராஜ்! கோபித்துக்கொள்ளக் கூடாது. குழந்தை எங்கள் கிரகத்தை விட்டுச் செல்ல இஷ்டப்படாள்...எங்களுக்கும் குழந்தை குட்டிகளில்லை. அவளை மகாராஜா அரண்மனைக்கழைத்து வந்துவிட்டால் எங்கள் கிரகம் பாழடைந்து விடும்...

பீமசிங்:—அவள் அரண்மனைக்கு வராவிட்டால் அரண்மனை பாழடைந்து விடுமே! அதெல்லாமிருக்கட்டும். நீர் இப்பொழுது முடியாதென்று சொல்லுகிறீர்! பரமதரித்திரரான உமக்கு இராஜாக்ஞையை மறுத்துரைக்க அவ்வளவு துணிவா? நான் சொல்லுமாறு செய்யாவிட்டால் உம்மை என்ன பாடுபடுத்துவேன் தெரியுமா?

ஸதாநந்தர்:—(நடுநடுங்கி) மகாராஜ்! தாங்களே இப்படிச் சொன்னால் எளியோனை நான் என்ன செய்வது? கமலரேகையை நாங்கள் எங்கள் உயிரினும் மேலாக நேசிக்கிறோம். அவளை விட்டு நாங்கள் ஓர் கணமேனும் பிரியோம்!—அப்படி மகாராஜா அவளையும் எங்களையும் பிரிப்பதெனில், அதற்கு முன் மகாராஜா என்னையும் என் பத்தினியையும் கொன்றுவிடுங்கள்!

பீமசிங்:—ஓய்! நிறுத்தும்! என்ன பிதற்றுகிறீர்! என்னைக் கொலையாளியென்று நினைத்தீர்!......யாரடா சேவகா!

(ஸதாநந்தர் நடுநடுங்கித் தங்கப் பெட்டியைக் கீழே போட்டுவிடல்)

பீமசிங்:—ஆ! என்ன அது! சூரிய கிரணங்களையும் பழிக்கும்படியான காந்தியுடைத்தான இப்பெட்டி உமக்கேது? பரம தரித்திரரான நீர் எவ்விதம் இப்பெட்டியை அடைய முடியும்? உண்மையைச் சொல்லுகிறீரா என்ன?

ஸதாநந்தர்:—மகாராஜ்! கோபம் கொள்ளக் கூடாது! இன்று கடலில் மாலுமியின்றி மிதந்துவந்த ஓர் படகில் இப்பெட்டி மாத்திரம் இருந்தது. அதை மகாராஜாவிடம் விற்று—